
# வரலாறு

## தரம் 10





### துணைப்பாடநூல்
### பாடங்களும் பயிற்சிகளும்







ஆக்கம்

கமலா குணராசா

மீள் பார்வை

கலாநிதி க. குணராசா

# வரலாறு

## தரம் 10

### துணைப்பாடநூல்
### பாடங்களும் பயிற்சிகளும்

ஆக்கம்:

**கமலா குணராசா**

மீள்பார்வை:

**கலாநிதி க. குணராசா**

விற்பனையாளர்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை,

யாழ்ப்பாணம் : கொழும்பு

நூல் : வரலாறு - தரம் 10
முதலாம் பதிப்பு : ஜூன் 2007
ஆசிரியர் : கமலா குணராசா
மீள்பார்வை : கலாநிதி க. குணராசா
உரிமை : திருமதி கமலா குணராசா
75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
அச்சுப்பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13.
தொலைபேசி: 2330195.
விலை : 200 ரூபா.

Book : History - Grade 10
First Edition : June 2007
Author : Mrs. Kamala Kunarasa
Re-Editing : Dr. K. Kunarasa
Copyright : Mrs. Kamala Kunarasa
75/10 A, Brown Road, Jaffna.
Price : Rs. 200 /=
Printed : Unie Arts (Pvt) Ltd.,
48B, Bloemendhal Road, Colombo 13.
Tel: 2330195.

## உள்ளடக்கம்

பக்கம்

1. வரலாறு என்றால் என்ன? 01
2. ஆரியரின் இந்திய வருகை 09
3. இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட யுகம் தொடக்கம் பொலநறுவையுகத்தின் முடிவு வரை 21
4. இலங்கையின் நீர்வள நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் 57
5. 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் பதினாறாம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை 74
6. மத்தியகால ஆசியா 86
7. மத்தியகால ஐரோப்பாவின் அரசியல் பொருளாதார, கலாசார வளர்ச்சி 94
8. ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றம் 109
9. இலங்கையும் மேலைத்தேசநாடுகளும் 114
10. கைத்தொழிற்புரட்சி 143
11. ஐரோப்பாவில் புதிய அரசியற் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி 148

**விற்பனையாளர்:**
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம், கொழும்பு.


அத்தியாயம் : 1

# வரலாறு என்றால் என்ன?

## 1. வரலாறு என்றால் என்ன?

(அ) வரலாறு என்பது மானிடர்களின் கடந்த காலம் பற்றிய படிப்பாகும். வரலாறு என்பது அரசர்கள், அவர்கள் புரிந்த போர்கள் என்பன பற்றி மட்டும் விபரிப்பதெனச் சிலர் எண்ணியுள்ளனர். வரலாறு என்பது இவற்றிலும் பார்க்கப் பரந்தது. சமூகத்தின் பண்பாடு, பொருளாதார வாழ்க்கை முறை, அவர்களது பொழுது போக்கு முறைகள், அரசியல் நிகழ்வுகள் போன்ற பல்வேறு அம்சங்களையும் பல்வேறு காலங்களில் வைத்து விபரிக்கின்றது. புராதன காலத்தில் இருந்து இன்று வரை பல்வேறு கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன., அவற்றால் மனிதர்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் பலவாகும். இவற்றினை வரலாறு விபரிக்கும். நேற்றைய மானிடனின் பிரதான செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் வரலாறு பதிவு செய்துள்ளது.

(ஆ). வரலாற்று ஆசிரியர்கள், பழைய சம்பவங்களைப் பதிவு செய்து ஆராய்வதன் மூலம் புதிய ஆவணப் பதிவுகளைச் செய்கிறார்கள். இப்பதிவு ஏடுகள் தரும் செய்திகள் பொதுவாக வரலாறு எனப்படுகின்றது. கடந்த காலம் ஏராளமான தடயங்களை விட்டுச் சென்றுள்ளது. அவற்றோடு பரம்பரை வழக்கங்கள், நாட்டார் கதைகள், ஓவியங்கள் போன்ற கலை வெளிப்பாடுகள், தொல்லியற் பொருட்கள், நூல்கள், எழுதப்பட்ட அறிக்கைகள் என்பனவும் வரலாற்றினைப் பதிவு செய்ய உதவியுள்ளன. இவ்வாறான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ஆசிரியர்களால் வரலாறு எழுதப்படுகின்றது.



ஹெரடோரஸ்

(இ) கிரேக்கத்தில் வாழ்ந்த ஹெரடோடஸ் (கி.மு.484 – 430) என்பவரே வரலாற்றின் தந்தையாவார்.

அவர் ஸ்ரோறியா (Istoria) என்று பயன்படுத்திய சொல்லிலிருந்து ஹிஸ்ரரி (History) என்ற பதம் உருவாகியது.

(ஈ) மனிதச்செயற்பாடுகள் தொடர்பாக முறையான காரணகாரிய அடிப்படையில் கட்டியெழுப்பப்படும், கால ஒழுங்கில் முன்னெடுத்துச் செல்லப்படும் உண்மையான சம்பவங்களின் ஒரு தொகுதியாக வரலாறு இருந்து வருகின்றது. 'புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தைக்கற்பது தான் வரலாறு ஆகும்' என்கிறார் ஸ்டுவார்ட் பிகொட் என்பவர்.

(உ) 'வரலாறு என்பது ஒரு யுகத்தில் எழுதிப்பாதுகாத்து வைக்குமளவிற்குப் பெறுமதிமிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகமொன்றிலிருந்து தேடிக் கண்டு பிடித்துக் கொள்வதாகும்' என்கிறார் பேர்க் ஹாட் என்பார்.

**2. வரலாற்றிலிருந்து எவற்றைக் கற்றுக்கொள்கின்றோம்?**

(அ) பழைய காலம் பற்றிய அறிவு நிகழ் காலத்தைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. நிகழ் காலம் என்பது இறந்த காலத்தில் நாம் செய்தவற்றின் பெறுபேறு. எதிர் காலம் என்பது நாம் இன்று செய்பவற்றின் பெறுபேறு.

(ஆ) வரலாற்றில் இருந்து நம் முன்னோர்கள் விட்ட தவறுகளை அறிந்து கொள்ளலாம். அதே போல மாபெரும் மனிதர்கள் ஆற்றிய பணிகளையும் அறிந்து கொள்ளலாம்.

(இ) வரலாற்றில் இருந்து எங்களது சமூகப் பழக்க வழக்கங்கள், கலாசாரம் என்பன காலத்திற்குக் காலம் மாறி வந்திருப்பதை அறிந்து கொள்ளலாம்.

(ஈ) வரலாற்றில் இருந்து எம்முன்னோர்களின் சாதனைகளை அறிந்து கொள்ளலாம். அவர்கள் பாரிய நீர்ப்பாசனக் குளங்கள், உயர்ந்த தாதுகோபங்கள், சிற்பங்கள் நிறைந்த கோயில்கள் என்பனவற்றினை அமைத்தார்கள். அவற்றை அறிவதன் மூலம் அவற்றினைப் பாதுகாக்கும் உணர்வு பெறுவோம்.

(உ) இன்று போல அன்றும் பல இன, பல மத, பல மொழி பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்தனர். வரலாற்றின் மூலம் மானிடத் தொடர்புகள் விருத்தியடைந்த விதத்தை அறிந்து கொள்ளலாம்.

(ஊ) மனிதர்கள் உலகின் அதி உயர் கலாசார அடையாளத்தை வரலாற்றின் மூலம் அடைந்துள்ளனர். சமயங்கள், தத்துவங்கள், மொழி, இலக்கியம், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், மனப்பாங்குகள் போன்ற பல்வேறு துறைகளையும் சார்ந்தவையாக அவை இருந்து வருகின்றன.



## 3. வரலாற்றினை எவ்வாறு அறிகின்றோம்?

(அ) வரலாற்றினை அறிவதற்குப் பல்வேறு மூலாதாரங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. வரலாற்றுக்கட்டிடங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், தொல்பொருட்கள், இலக்கியங்கள், மண்தட்டுகள், கல்லாயுதங்கள், மட்கலசங்கள், பொற்சாசனங்கள், செப்புச்சாசனங்கள், பண்டைய மட்பாத்திரங்கள், சிலைகள், சிற்பங்கள், செதுக்கல்கள், மண்டை ஓடுகள், எலும்புகள், ஓவியங்கள், உலோக உபகரணங்கள், குளங்கள், கால்வாய்கள், அணைகள் என அப்பட்டியல் நீளும்.

(ஆ) இன்று 'கார்பன் 14' என்ற ஒருநவீன முறையுள்ளது. இதன் பிரகாரம் ஒரு தொல் பொருள் எக்காலத்தைச் சேர்ந்ததென்று கூறிவிடமுடியும்.

(இ) வரலாற்றை அறிவதற்கு உதவும் சாதனங்கள் - எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற பல் வகைத் தடயங்களிலிருந்து வரலாற்றினை அறிந்து கொள்ளலாம். அத்தடயங்களிலிருந்து வரலாற்றினை வரலாற்றறிஞர்கள் பதிவு செய்து தந்துள்ளனர். வரலாற்றினைத் தெரிந்து கொள்ள உதவும் தடயங்கள் வருமாறு:


(1) சிதிலம் அடைந்து எஞ்சியிருக்கும் வரலாற்றுக்காலக் கட்டிடங்கள். (ஞாபகச் சின்னங்கள்) அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா, நல்லூர் பிரதேசங்களில் காணலாம்.


**வரலாறு கூறும் கட்டிடங்கள்**


(2) இன்றும் அழிவுறாது காட்சி தரும் கட்டிடங்கள். தாஜ்மகால், பிரமிட், சாய்ந்தகோபுரம், பிக்பென் கடிகாரம் போன்றவை.

(3) வணக்கத்தலங்கள் - உடைவுற்றிருப்பனவும் இன்றும் நிலைத்திருப்பனவும். ருவான்வெலிசாய தாதுகோபம், தஞ்சைப் பெருங்கோயில், பொலநறுவைச் சிவன்கோயில்கள், நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்றவை.



**சாய்ந்த கோபுரம்**





**வரலாறு கூறும் சிற்பங்கள்**

(4) சிற்பங்கள் - மாமல்லபுரச் சிற்பங்கள், கல்விகாரைச் சிற்பங்கள், இசுருமுனி யாச்சிற்பங்கள் போன்றவை.

(5) செப்புச் சாதனங்களும் கல்வெட்டுக்களும் -

(6) பயணக் குறிப்புகள் - பாஹியான், மார்க்கோப்போலோ, கொலம்பஸ் போன்றோரின் குறிப்புகள்.

(7) தொல்லியல் சான்றுகள் -

(அ) அகழ்வின்போது அகப்பட்ட மட்பாண்ட ஓடுகள்.

(ஆ) கருங்கல் சிலைகளும் வெண்கலச்சிலைகளும்


(இ) பழைய கால நாணயங்கள்


(ஈ) ஆயுதங்கள் - கல்லாயுதங்கள், உலோக ஆயுதங்கள்

(உ) முதுமக்கள் தாழிகள் (சடலப் பானைகள்)


(ஊ) பிராமி எழுத்துக்களுடனான மட்பாண்ட ஓடுகள்

(எ) புராதன கருவிகள் - என்பனவற்றிலிருந்தும் வரலாற்றினை அறிஞர்கள் ஆராய்ந்து எழுதுகிறார்கள்.






**வரலாறு கூறும் கல்வெட்டுகள்**



வரலாறு கூறும் குகை ஓவியங்கள்


**4. வரலாற்றினை எடுத்துக் கூறும் இலக்கிய மூலாதாரங்கள் எவை?**

(அ) இலக்கிய நூல்கள், கற்பனைக் கதைகள், தேசசஞ்சாரிகளின் குறிப்புகள், வம்சக்கதைகள் முதலானவை வரலாற்றினை எடுத்தோதுகின்றன. இராமாயணம், மஹாவம்சம், தீபவம்சம், சூளவம்சம், பூஜாவலிய, ராஜவலிய முதலானவை இலங்கை வரலாற்றினை அறிய உதவுகின்றன. இவற்றிலிருந்து அக்கால சமூக முறை குறித்த கருத்துக்களையும் ஆட்சி வரலாற்றையும் அறிந்து கொள்ள முடிகின்றது.



வரலாறு கூறும் கல்லாயுதங்கள்

(ஆ) பாஹியான், மார்க்கப்போலோ, இபன்பத்தூதா



வரலாறு கூறும் நாணயங்கள்


போன்ற தேசசஞ்சாரிகளின் பயணக்குறிப்புகளிலிருந்தும் இலங்கை வரலாற்றுத் தகவல்களைப் பெறமுடியும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்பாரது குறிப்புகளிலிருந்தும் வரலாற்றுத் தகவல்களைப் பெறமுடியும்.




வரலாறு கூறும் மட்பாத்திரம்

**5. கிரேக்கர்கள் இலங்கையை மிக ஆதிகாலத்திலேயே அறிந்திருந்தார்களா?**

(அ) ஆம். இக்காலத்தில் அறிந்திருந்த உலகத்தைப் படமாகக் கிரேக்கரான தொலமி வரைந்திருக்கிறார்.




தப்பிரபோன்



போர்த்துக்கேய இலங்கைப்படம்


அப்படத்தில் இலங்கையையும் கீறியுள்ளார். இலங்கையை அப்படத்தில் தாபிரபோன் எனப் பெயரிட்டு இலங்கையின் முக்கியவிடங்களைக் குறித்துக்காட்டியுள்ளார்.

**6. வரலாற்றினைக்கூறும் சான்றாதாரங்கள் சிலவற்றினைக் கூறுக.**

(அ) குகைகளில் எழுதப்பட்டிருக்கும் பிராமிக்கல்வெட்டுகளிலிருந்து அக்கால மொழியையும் தகவல்களையும் அறிந்து கொள்ளமுடியும். குகைகளைத் தானமாக வழங்கும்போது பிராமியக்கல்வெட்டுகள் எழுதப்பட்டன. மட்பாண்ட ஓடுகளிலும் இவை எழுதப்பட்டுள்ளன. பூநகரியில் 'ஈழ' என்றொரு மட்பாண்ட ஓடும், ஆனைக்கோட்டையில் 'தத்தவின் பாத்திரம்' என்றொரு மட்பாண்டஓடும், கந்தரோடையில் 'குணி'என்றொரு ஓடும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


(ஆ) புனிதத்தலங்களுக்கு எதிரே எழுப்பப்படும் தூண் கல்வெட்டுகள் முக்கியமானவை. நாலந்தா தூபி, காஞ்சி தூபி முகப்பு என்பன குறிப்பிடத்தக்கன.

(இ) அஜாந்தா ஓவியம், சிகிரியா ஓவியம் என்பன அக்காலச்சிறப்பினை எடுத்தோதும் கலை ஓவியங்களாகும்.



காஞ்சி தூபி முகப்பு


(ஈ) கல்லால் உருவாக்கப்பட்ட தட்டையான ஒரு பலகையில் பொறிப்பது கற்பலகைக் கல்வெட்டாகும். இவை மதகுருமாருக்குச் செய்யப்பட்ட தானங்கள், மதகுருமார் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் என்பன பற்றி விபரிக்கின்றன. பொலநறுவைக் காலத்தில் அவ்வகையான கல்வெட்டுக்களைக் காணலாம்.



**சிகிரியா ஓவியம்**


(உ) வல்லிபுரத்தில் தங்கச்சாசனம் ஒன்று அகப்பட்டது. அது வசபமன்னனின் காலத்தில் அவனது ஆட்சி யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் பரவியிருந்தது எனக் கூறுகிறது.

(ஊ) பனாகடுவவவில் அகப்பட்ட செப்புச்சாசனத்திலிருந்து முதலாம் விஜயபாகு மன்னனின் காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் பற்றி அறியப்படுகின்றது.




கல் புத்தகம்

(எ) பப்பிரஸ் புல் காகிதத்தில் எழுதப்பட்ட எகிப்திய சித்திர எழுத்துக்கள், சுமேரியர் களிமண் தட்டுகளில் எழுதிய சித்திர எழுத்துக்கள் முதலியன அக்கால வரலாற்றினைக் கூறுகின்றன.



**பப்பிரஸ் காகித எழுத்து**



**களிமண் தட்டெழுத்து**

**பயிற்சிகள்:**

1. 'வரலாற்றைக் கற்பதற்கு முன்னர் வரலாற்றாசிரியரை இனங்கண்டு கொள்ள வேண்டும்' என்ற கூற்றினைக் கூறிவர்:

(1) ஈ.ஆர்.கார் (2) ஹெரடோடஸ்

(3) ஸ்டுவார்ட் பிகொட் (4) பேர்க் ஹாட்

2. தொல் பொருள் மூலாதாரம் அல்லாதது:

(1) முதுமக்கள் தாழிகள் (2) பண்டைய நாணயங்கள்

(3) இலக்கிய நூல்கள் (4) புதையுண்டு அகப்பட்ட சிலைகள்

3. வல்லிபுரச்சாசனம் :

(1) கல்லில் பொறிக்கப்பட்டது (2) செப்பில் பொறிக்கப்பட்டது

(3) தங்கத்தட்டில் பொறிக்கப்பட்டது (4) களிமண் தட்டில் பொறிக்கப்பட்டது

4. வரலாறு குறித்து அறிஞர்கள் தெரிவித்திருக்கும் சில வரைவிலக்கணங்களைக் கூறுக.

5. வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கான மூலாதாரங்கள் குறித்த அட்டவணை ஒன்றை தயாரிக்க.


16. கார்பன் 14 என்றால் என்ன?

(விடைகள் - 1 (1), 2 (3). 3 (3), 4,5 (நூலிலுள்ளன). 6 விஞ்ஞான ரீதியான கால நிர்ணய முறை.)

**அத்தியாயம் 2**

# ஆரியரின் இந்திய வருகை

**1. சிந்துச்சமவெளி நாகரிகம் குறித்துச் சுருக்கமாக விபரிக்க.**




1. இந்து நதிப் பள்ளத்தாக்கில் வளர்ந்திருந்த நாகரிகத்தினை ஹரப்பா-மொஹஞ்சதாரோ நாகரிகம் என்பர். இவ்விரு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாய்வுகள், இந்து நதியின் உயர் நாகரிகத்தினை காட்டி நிற்கின்றன.


2. உயரம் குறைந்த மதிற் சுவர்களினுள் பிரதான கட்டிடங்களைக் கொண்டிருந்த நகரங்கள் அமைந்திருந்தன. மதில்களுக்கு வெளியே சாதாரண குடிமக்கள் வாழ்ந்தனர் என அறியப்படுகிறது. உலர்ந்த செங்கற்களும் சுட்ட செங்கற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் உள்நகரம், வெளிநகரம், என்ற அமைப்புகளைக் கொண்டிருந்தன.

3.இந்த நாகரிகத்தில் விவசாய மக்களும், கைவினைஞர்களும் வாழ்ந்துள்ளனர். கோதுமை, வாற்கோதுமை, அரிசி, எள் என்பன பயிரிடப்பட்டுள்ளன. தானியக்களஞ்சியம் இருந்துள்ளது. ஆட்டிறைச்சி, பன்றியிறைச்சி, மீன், முட்டை, பால் என்பனவற்றினைத் தானியத்தோடு உண்டனர். நெல் பயிரிடப்பட்டமைக்கு ஆதாரமுள்ளது.


4. பருத்தியினாலான ஆடைகளை அதிகம் அணிந்தனர். பருத்திச்செடி வளர்க்கப்பட்டது. கம்பளி ஆடைகளையும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, செம்பு, யானைத்தந்தம் என்பவற்றிலான ஆபரணங்களை அணிந்தனர்.

5.மிகவுயர்ந்த நாகரிகம் இந்துநதி நாகரிகத்தில் காணப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகள், சிறுவீதிகள், கால்வாய்கள் என்பன நவீன முறைக்கு ஏற்ப

அமைக்கப் பட்டிருந்தன. நகரத்திட்டமிடல் மிகச்சிறப்பாக அங்கு இருந்தது. மொஹஞ்சதாரோ நகரிலும் ஹரப்பா நகரிலும் முறையே 30 ஆயிரம் மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.




6.வீதியின் இரு மருங்கும் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அவை சுட்ட செங்கற்களால் ஆகியவை. தனியான கிணறுகளும் குளியலறைகளும் பெரும் பாலான வீடுகளில் காணப்படுகின்றன. 55மீற்றர் நீளமும் 33 மீற்றர் அகலமும் கொண்ட பெரிய ஒரு ஸ்நானப் பொய்கை இங்கு கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.




ஸ்நானப் பொய்கை

7. மொஹஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகத்தில் கைவினைக்கலை நன்கு வளர்ந்திருந்துள்ளது. செங்கல் தயாரிப்போர், நகை செய்வோர், தச்சு வேலை செய்வோர், கற்தச்சர், ஆகியோர் இருந்துள்ளனர். களிமண் வண்டி ஒன்று இந்தப் பள்ளத்தாக்கில் அகப்பட்டது. உலோக வேலைகள் புரிவோர் இருந்துள்ளனர். பல்வேறு வகை யான சிலைகள், பொம்மைகள் இங்கு அகப்பட்டுள்ளன. இந்து நதிப் பள்ளத் தாக்கில் கண்டெடுத்த இலச்சினைகள் கலையம்சம் வாய்ந்தவை. ஒரு இலச் சினையில் படகு ஒன்றில் உருவ முள்ளது. அதனால் இவர்கள் படகு களையும், வர்த்தகக் கப்பல்களையும் வைத்திருந்தனர் என ஊகிக்கலாம்.




8. மனங்கவர் மட் பாண்டங்களைப் பயன்படுத்தினர். கடுஞ்சிவப்பு வர்ணம் தீட்டி, மத்தியில் கறுப்பு நிறத்தில் வேலைப் பாடுகளைக் கொண்ட மட்பாண்டங்கள் உள்ளன. வெண்கலத்தினாலும் உயிர்த்தன்மை வாய்ந்த சிலைகளைச் செய்தனர். மதகுரு ஒருவரினதும் நடனமாது ஒருத்தியினதும்

சிலைகள் இவற்றுள் முக்கியமானவை.



9. செம்பினாலும் வெண்கலத்தினாலும் செய்யப்பட்ட கோடரி, வேல், அரிகருவி என்பன செய்யப்பட்டுள்ளன.



10. இந்து நதிப்பள்ளத்தாக்கு மக்கள் பல தெய்வங்களை வழிபட்டுள்ளனர். மூன்று தலைகளுடன் கூடிய பசுபதி (சிவா), எருது, புலி, பாம்பு என்பனவற்றினை வழிபட்டுள்ளனர். பெண் தெய்வங்களும் வழிபடப்பட்டுள்ளன.



11. இந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரிக மக்களிடம் எழுத்துக்கள் பற்றிய அறிவு இருந் துள்ளது. அங்கு கண்டெடுக் கப்பட்ட 2000 துக்கு மேற்பட்ட மாடு, யானை, புலி, மான், காண்டாமிருகம் என்பன பொறிக்கப்பட்ட இலச்சினைகளின் விளிம்புகளில் எழுத்துக்களை காணலாம். இன்னும் வாசிக்கப்படவில்லை.



**2.ஆரியர் என்போர் யார்?**

(அ) மத்திய ஆசியாவின் கஸ்பியன் கடலைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழ்ந்த ஓரின மக்கள் ஆரியராவர். அவர்கள் விவசாயம் தெரிந்தவர்களாகவும் மந்தை மேய்ப்போராகவும் இருந்தனர். அவர்களின் குடிப்பெருக்கம், அதிகரித்தமை, கால்நடைகளுக்கான

புல்நிலங்களின் தேவை அதிகரித்தமை போன்ற காரணங்களால் பல்வேறிடங்களுக்கும் இடம் பெயர்ந்தனர்.

(ஆ) தென் திசையில் குடிபெயர்ந்த ஆரிய மக்கள் இந்துக்குஷ் மலைத்தொடரிலுள்ள கைபர் கணவாய் ஊடாக இந்தியாவிற்கு வந்தனர். இம்மக்களது சமூக வாழ்க்கை குறித்து வேத நூல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. ஆரியரின் மொழி சமஸ்கிருதமாகும். ஆரியர் என்பதன் அர்த்தம் உயர் குலத்தவர் என்பதாகும். இருக்கு வேதம், யசூர் வேதம், சாம வேதம், அதர்வவேதம் என நான்கு வேதங்கள் ஆரியர்களின் பிரதான நூல்களாகும்.

(இ) பஞ்சாப் பிரதேசத்தில் அங்கு வாழ்ந்த திராவிடரைத் துரத்திவிட்டு ஆரியர்கள் ஆரம்பத்தில் குடியேறினார்கள். கிராமங்கள் தோன்றின. கிராமத்தலைவன் காமினி எனப்பட்டான். பல கிராமங்கள் இணைந்து இராச்சியங்கள் தோன்றின. இவற்றின் ஆட்சியாளன் ராஜன் எனப்பட்டான்.

(ஈ) ஆரியர்கள் ஆகாயம், சூரியன், நட்சத்திரங்கள், மழை, மரங்கள், மலைகள் முதலான இயற்கையை வழிபட்டனர். மழைக்குக் கடவுள் இந்திரன் எனவும், நெருப்புக்குக் கடவுள் அக்கினி எனவும், ஆகாயத்திற்குக் கடவுள் வருணன் எனவும் வழிபட்டனர்.


(உ) சமூகத்தில் நான்கு வருணங்களை ஆரியர் உருவாக்கினர். அவை பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்பனவாம். பிராமணர்கள் மதக்குருமாராக விளங்கினர். சத்திரியர்கள் அரசராகவும், போர் வீரர்களாகவும் விளங்கினர். பயிர்ச்செய்கை, மந்தை மேய்த்தல் போன்ற சாதாரண வேலைகளை வைசியர்கள் ஆற்றினர். ஏனைய தொழில்களைச் சூத்திரர்கள் ஆற்றினர். அவர்கள் அடிமைப்பட்டவர்களாக விளங்கினர். பிராமணர்களே சமூகத்தில் உயர் நிலையிலிருந்தனர்.

(ஈ) ஆரியர் சமூகம் தந்தை வழிச் சமூகமாகும். விவசாயத்தோடு மந்தை மேய்த்தல் முக்கியம் பெற்றிருந்தது. ஆடு, மாடு, செம்மறியாடு, குதிரை என்பன வளர்க்கப்பட்டன. செம்பின் உபயோகத்தினை அறிந்திருந்தார்கள் என்பதை இருக்கு வேதத்திலிருந்து அறிய முடிகின்றது.

(உ) ஆரியர்கள் சிறந்த போர் வீரர்கள். இரும்பின் உபயோகத்தை அறிந்திருந்தனர். அவர்கள் கிழக்கே வங்காளம் மட்டும் பரவினர். குருசேத்திரம் அவர்களின் பிரதான மையமாக விளங்கியது.

**3. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த பிரதான குடியேற்றங்கள் எவை?**

(அ) அக்காலத்தில் 16 குடியேற்றங்கள் இருந்தன. அவை அங்கதம், மகதம், காசி, கோசலை, வஜ்ஜி, மல்ல, குரு, பாஞ்சாலம், மத்சயம், சூரசேன, வத்சய, அவந்தி, அஸ்காமம், சேதி, காந்தாரம், காம்போஜம் என்பனவாம்.


காம்போஜம்
காந்தாரம்
குரு
மத்சயம்
பாஞ்சாலம்
மல்ல்
சூரசேன
கோசலை
வஜ்ஜி
வத்சய
சேதி
காசி
அங்கதம்
மகதம்
அவந்தி
அஸ்காமம்
ஆரியரின் 16
ஆரம்பக் குடியிருப்புகள்

(ஆ) இவற்றில் கோசலை, மகதம், வத்சயம், அவந்தி ஆகியன நான்கும் பெரிய இராச்சியங்களாகக் கருதப்பட்டன. மகத இராச்சியத்தினக் தலைநகராக பவுளுப் நகரமும், வத்ளய இராச்சியத்தின் தலைநகரமாக கௌசாம்பி நகரமும், அவந்தி இராச்சியத்தின் தலைநகரமாக உஜ்ஜினி நகரமும் விளங்கின. இச்சிறிய அரசுகளிடையே அடிக்கடி யுத்தங்கள் நடந்தன.




மஹா அலெக்சாண்டர்

(இ) கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இந்த இராச்சியங்களில் மகதம் முக்கிய விடத்தைப் பெற்றிருந்தது. ரஜஹக நகரம் அதன் தலைநகரமாக விளங்கியது. அவ்வேளை பிம்பிசார மன்னன் அசந்த இராச்சியத்தின் மன்னாக விளங்கினான். இக்காலத்திலேயே புத்தபெருமான் அவதாரம் நிகழ்ந்தது.

(ஈ) பிம்பிசாரனின் பின்னர் அவனது மகனான அஜாதசத்ரு மகதத்திக் அரசனானான். ஆவன் பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகத் தெரிந்து கொண்டான்.அவன் பின்னர் மகத இராச்சியம் நந்தவம்சத்துக்குரியதாகியது. நுந்தவம்சத்தின் முதலாவது மன்னாக மகாபத்ம நந்தன் என்பான் அமைந்தான். இவன் காலத்தில் புகழ் பூத்த கிரேக்க மன்னனான மஹா அலெக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்து வந்தான்.

(ஊ) நந்த வம்சத்தின் இறுதி மன்னன் தனநந்தன் ஆவான். அவனைத் துரத்திவிட்டு மௌரிய அரச வம்சம் ஆட்சியை ஏற்றுக் கொண்டது.

(எ) கபிலவஸ்து என்றொரு சிற்றரசின் மன்னனாக சுத்தோதனன் என்பான் விளங்கினான். அவன் மனைவி மாயாதேவி. அவர்களுக்கு மகனாகச் சித்தார்த்தர் பிறந்தார். அவரைத் தனக்குப் பின்னர் பெரும் அரசனாக்கச் சுத்தோதனர் விரும்பினார். ஆனால் சித்தார்த்தம் உலக வாழ்வைத் துறந்து புத்தராக விளங்கினார். அவர் தன் வாழ்வில் சந்தித்த வயோதிபர், நோயாளி, சடலம், சந்நியாசி ஆகிய துயரங்கள், அவரைப் புத்தராக மாற்றின. பௌத்த மதத்தின் மூலவராக விளங்குகிறார். பௌத்தமதம் ஆசியாவின் சீனா, இலங்கை, யப்பான், பர்மா, மலேசியா, நேபாளம் முதலான நாடுகளில் நிலைத்துள்ளது.



கௌதமபுத்தர்

**4. மௌரிய அரச வம்சம் குறித்து சுருக்கமாக விபரிக்க.**


(அ) நந்த வம்சத்தினை ஆட்சியிலிருந்து நீக்கி மௌரியப் பேரசை நிறுவியவன் சந்திரகுப்தனாவான். தனநந்தனின் முதலமைச்சராக விளங்கிய கௌடில்யன் (சாணக்கியன்) தனநந்தனால் அவமதிக்கப்பட்டபோது, சபதம் எடுத்த சாணக்கியன் சந்திரகுப்தனைப் போர்க்கலையில் வலிமைபெற வைத்து. கி.மு.321 இல் அரச கட்டிலேற்றுவித்தான். மேகதனிஸ் என்ற கிரேக்க தூதுவர் சந்திரகுப்தனைப் பற்றி நிறைய எழுதியுள்ளார்.



தர்மசக்கரமும் நான்கு திசைச் சிங்கங்களும்.

(ஆ) சந்திரகுப்தனின் பின்னர் அவனது மகனான பிந்துசாரனன் ஆட்சி பீடமேறினான். பிந்துசாரனின் பின்னர் அவனது மகனான அசோகன் கி.மு.269 இல் அரசனானான்.

(இ) பிந்துசாரனின் புகழ்பூத்த மகனே அசோகனாவான். அசோகன் தன்னாட்சிக் காலத்தில் கடும் யுத்தங்களில் ஈடுபடநேர்ந்தது. கலிங்கப் போரில் ஏற்பட்ட மரணங்களைக் கண்ட அசோகன், யுத்த பேரிகைக்கு பதிலாக தர்ம பேரிகை முழங்க வேண்டுமென முடிவு செய்தான். அதனால், பௌத்தமதத்தைத் தழுவிக் கொண்டான். தனது எண்ணக் கருத்துக்களை கற் சாசனங்களில் பொறிப்பித்தான். அசோகனின் பெரிய தொண்டாக விளங்கியது பௌத்த மதத்தைப் பிற நாடுகளில் பரப்புவதற்காக பௌத்த தூதுக் குழுக்களை எகிப்து, சிரியா, கிரிஸ் ஆகிய நாடுகளுக்கு அனுப்பிய மையாகும். அசோகனின் மகன் மஹிந்ததேரர் இலங்கைக்கு வந்து இங்கு பௌத்ததர்மத்தை நிலை பெறவைத்தார்.




அசோக ஸ்தம்பம்

(ஈ) அசோகமன்னனின் சமயம் மற்றும் கட்டளைகள் என்பன எழுதி வைத்திருக்கும் அசோகத் தூண்கள் மிக முக்கியமான கலைப்பாரம்பரியங்களாகும். ஸ்தம்பத்தின் உச்சியில் தர்மசக்கரமும் நான்கு திசைகள் நோக்கிய சிங்கங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இன்று இந்தியாவின் அரச இலட்சினையாக இது விளங்கி வருகின்றது.

(உ) கி.பி.640 இல் இந்தியாவுக்கு விஜயம் செய்த ரியூங் சாங் என்ற தேசசஞ்சாரி இந்தியா எங்கினும் அசோகனால் உருவாக்கப்பட்ட தூபிகள், கோபுரங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அசோகமன்னரால் உருவாக்கப்பட்ட சாஞ்சி தாதுகோபம் சிறந்ததொரு கலைப்படைப்பாகும்.

**5. குப்தப்பேரரசு குறித்துச் சுருக்கமாகக் கூறுக.**



சாஞ்சி தாதுகோபுரம்

(அ) அசோகனுக்குப் பின்னர் மௌரிய இராச்சியம் வீழ்ச்சி யுற்றது. குஷான இராச்சியம் எழுச்சியுற்றது. கனிஷ்சன் என்ற மன்னன் காலத்தில் கலைகளும் இலக்கியமும் வளர்ச்சி பெற்றன. பௌத்தமதத்தில் மஹாயானம் என்ற பிரிவு தோன்றியது. அயல் நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளும் ஏற்பட்டன. குஷான இராச்சியத்தின் பின்னர் குப்தவம்சம் இந்திய ஆட்சியை ஏற்றுக் கொண்டது. குப்த மன்னர்களில் சந்திரகுப்தன் ஆற்றல் மிக்கவனாக விளங்கினான். தென்னிந்தியாவையும் கைப்பற்றினான். இவனுடைய காலத்தில் சமஸ்கிருத மொழி, இலக்கியம், இந்து மதம், பல்வேறு கலைகள் என்பன வளர்ச்சியுற்றன.

(ஆ) சந்திரகுப்தனுக்குப் பின்னர் அவனது மகனான சமுத்திரகுப்தன் ஆட்சிக்கு வந்தான். (கி.பி.335 – 414) இவன் தன் பேரரசை விரிவாக்கிக் கொண்டான். இவன் காலத்தில் குப்தப்பேரரசுமேற்கே பஞ்சாப்பிலிருந்து கிழக்கே வங்காளம் வரை, வடக்கே இமயமலை தொடக்கம் தெற்கே விந்தியமலை வரை வியாபித்திருந்தது.இவன் இந்து மதத்தவனாயினும் ஏனைய மதங்களையும் போற்றினான். இவன் இசைப்பிரியன் என்பதற்கு இவன் வெளியிட்ட நாணயத்தில் இவன் வீணை வாசிப்பது போன்றுள்ள சின்னம் உதாரணமாகும்.

(இ) சமுத்திரகுப்தனின் பின்னர் அவனது மகனான சமுத்திரகுப்த விக்கிரமாதித்தன் அரசனானான். இவன் பலம் பொருந்திய மன்னன். மேற்கே அராபிக் கடல் வரை தனது இராச்சியத்தை விரிவு படுத்தினான். சிறந்த தங்க நாணயங்களை வெளியிட்டான்.


(ஈ) குப்தர்களின் ஆட்சிக்காலம் (கி.பி 320 தொடக்கம் 530 வரை) இந்திய வரலாற்றில் பொற்காலமெனப்படுகின்றது. சமுத்திரகுப்த விக்கிரமாதித்தனைத் தொடர்ந்து அரச கட்டிலேறிய குமாரகுப்தன், ஸ்கந்தகுப்தன் ஆகியோர் இப்பேரரசை பெருடைப்படுத்தினர். ஸ்கந்தகுப்தனின் ஆட்சியின்போது இந்தியாவின் வடமேற்கில் ஆக்கிரமிப்புச்செய்த ஹூணர்கள் காரணமாகக் குப்தப்பேரரசு சீர்குலைந்தது.

(உ) சீனாவிலிருந்து வந்த பாகியான் என்பான் பாடலிபுத்திரத்தில் மூன்றாண்டுகள் தங்கியிருந்தான். அவனது குறிப்புகளிலிருந்து குப்தர் கால மக்கள் சுகபோக வாழ்க்கை நடாத்தி வந்துள்ளனர். தொழில்களை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு நிலவியது. உயர் குலத்தவர்களாக

மதிக்கப்பட்டவர்கள் நகரத்திற்குள்ளும் ஏனையோர் நகரத்திற்கு வெளியிலும் வசித்தனர். குப்த மன்னர்கள் இந்துக்களாக விளங்கிய போதிலும் பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் முக்கியம் வழங்கினர். பிராமணர்களும் பிக்குகளும் சமாதானமாக வாழ்ந்து வந்ததாகப் பாகியான் குறித்துள்ளார்.

**6. குப்தர் கால சமயநிலை எவ்வாறிருந்தது?**

(அ) இந்து, பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் சமூகத்திலிருந்தன. மன்னர்கள் இந்து சமயத்தவர்களாக விளங்கினர். பிரம்மா, சிவ, விஷ்ணு வழிபாடுகள் இருந்தன. பௌத்தத்தில் தேரவாதம், மகாயாணம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். சமண சமயத்தல் வெள்ளை ஆடை அணிகின்ற ஸ்வேதாம்பர சமணர், ஆடைகளே அணியாத நிகாம்பர சமணர் என இரு பிரிவினர் இருந்தனர். இக்காலத்தில் சமய ஒற்றுமை காணப்பட்டது.



சமாதிப்புத்தர்

**7. குப்தர் கால கலை இலக்கியம் பற்றி விளக்குக.**

(அ) இந்தியக் கலை இலக்கிய வரலாற்றில் குப்தர் காலம் முதன்மையானது. இக்காலகட்டத்தில் பாரிய அளவில் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டன. சாரணாத்புத்தர் சிலை முக்கியமானது. இலங்கையிலும் இவ்வகையான சமாதிப்புத்தர் சிலைகள் உருவாகின.

(ஆ) குப்தர் காலத்தில் ஓவியக்கலை சிறப்புற்றிருந்தது. அஜாந்தாக்குகை ஓவியங்கள் பிரபல்யமானவை. இந்த ஓவியங்களின் வர்ணங்கள் இன்றும் மங்காதுள்ளன. இலங்கையின் சிகிரியா ஓவியங்கள் இத்தகையவை.



அஜாந்தா ஓவியம்


(இ) இந்தியா இலக்கியச் செழுமை வாய்ந்த நாகரிகத்தினைக் கொண்டது. நான்கு வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பன இங்கு யாக்கப்பட்டுள்ளன. இராமாயணம், மகா பாரதம், மேகதூதம், இரகுவம்சம், குமாரசம்பவம், சாகுந்தலம் என இலக்கிய நூற்பட்டியல்களாகும் அர்த்தசாஸ்திரம் சிறந்ததொரு அரசியல் நூலாகும். திருக்குறள் தன்னிகரில்லாத சமுதாய வழிகாட்டி நூலாகும். இந்தியர்கள் பண்டைக்காலந்தொட்டு விஞ்ஞான வைத்திய அறிவு படைத்தவர்களாகவும்,

வானியலில் சிறந்து அறிவுடையோராகவும் விளங்கினர். 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியபட்டர் என்பார் சிறந்த வானியல் அறிஞராக விளங்கினார். கணித சாஸ்திரம் இந்தியாவில் சிறந்து விளங்கியது. ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களையும், பூச்சியத்தையும் பயன்படுத்தி தேவையான எண் பெறுமதியைக் கணிக்கும் முறையை இந்தியர்களே கண்டறிந்தனர்.

(ஈ) குப்தர்காலத்தில் கல்வி சிறப்புற்றிருந்தது. நாளந்தா, தக்ஷீலா,விகிரமசிலா என்பன அக்காலப் பல்கலைக்கழகங்களாக விளங்கின. உண்ணாட்டு மாணவர் மட்டுமன்றி வெளிநாட்டு மாணாக்கரும் இங்கு கல்வி கற்றுள்ளனர். ஹியுங்சாங் என்ற சீனப்பிக்கு இங்கு மூன்றாண்டுகள் கல்வி பெற்றுள்ளார்.

**8. அக்கால இந்தியா எவ்வாறிருந்தது?**

(அ) தென்னிந்தியாவில் மிகப்புராதன காலந்தொட்டு சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். சோழ மன்னர்களில் ராஜராஜசோழன், ராஜேந்திர சோழன் என்போர் முக்கியமானவர்கள். கடற்படையைக் கொண்டிருந்தனர். இலங்கையையும் கைப்பற்றி ஆண்டுள்ளனர். இக்காலத்தில் இந்து சமயம், திராவிடக்கலைகள், தமிழிலக்கியம் என்பன வளர்ச்சி கண்டன.



**நாளந்தா பல்கலைக்கழகம்**

(ஆ) ஆரியர் குடியேறிய போது இந்தியாவில் காணப்பட்ட கிராம அமைப்பு, தொடர்ந்து பேணப்பட்டது. நதிக்கரையோரங்களிலும், கிணறுகள் போன்ற நீர்நிலைகளைச் சூழ்ந்தும் கிராமங்கள் உருவாகின. மாளிகைகள் தலைவர்களுக்கும், அரசர்களுக்கும் உரியதாகவிருந்தது.

(இ) மந்தை வளர்த்தல், விவசாயம் என்பன மக்களின் பிரதான தொழில்களாக இருந்தன. கலப்பை, எருதுகள் என்பன நிலம் உழப்பயன்பட்டன. நீர்ப்பாசனவசதி செய்யப்பட்டிருந்தது. கோதுமை, வாற்கோதுமை, நெல், சோளம், தினை வகைகள் பிரதான தானியங்களாக இருந்தன. கிராமங்களுக்கிடையே பண்டமாற்று முறை நிலவியது.


(ஈ) கிராமங்கள் படிப்படியாக, வாரணாசி, ராஜகிருகம், பாடலிபுத்திரம், உஜ்ஜயினி, இந்திரபிரஸ்தம், கௌசாம்பி, சிரவஸ்தி போன்ற நகரங்களாக மாற்றமடைந்தன. வீதிகள் மதில் சூழ்ந்த நகரத்தினுள் அமைந்தன.

(உ) இந்திய மக்கள் புராதன காலந்தொட்டே பல்வேறு விழாக்களையும், சடங்குகளையும் கொண்டிருந்தனர். பகடை, பந்தாட்டம், மல்யுத்தம் போன்ற விளையாட்டுக்களும் சங்கீதம், நாடகம் என்னும் கலைகளும் மக்களால் நடாத்தப்பட்டன.

(ஊ) பருத்தி ஆடைகள், ஆபரணங்கள் முதலான ஆடையணிகளை இந்திய மக்களணிவர். நெற்றிப்பட்டங்கள், குண்டலங்கள், மூக்கணிகள், வளையல்கள், கழுத்தணிகள், சதங்கைகள் போன்ற ஆபரணங்களை அணிந்தனர்.

(எ) மிகப்புராதன காலந்தொட்டே இந்தியர்கள் கட்டிடக்கலையில் சிறப்புப் பெற்றிருந்தனர். மாளிகைகள், கோயில்கள், தூபிகள், தம்பங்கள் என்பன இன்றும் கட்டிடக்கலையின் சிறப்பினை எடுத்துக் கூறிவருகின்றன. தென்னிந்தியாவின் உயர்ந்த கோபுரங்களுடன் கூடிய கோயில்கள் திராவிடக் கலையின் சிறப்பினைக் கொண்டுள்ளன.

(ஏ) சிற்பம், சித்திரம், ஓவியம், இசை, நாட்டியம் போன்ற துறைகளிலும் இந்தியக் கலைஞர்கள் சிறந்து விளங்கினர். கோயிற் சிற்பங்கள், மலைக்குன்றுகளைச் செதுக்கிய கோயில்களும் சிற்பங்களும், விக்கிரகங்கள், கல்லால் அமைக்கப்பட்ட தோரண வாயில்கள் முதலியன குறிப்பிடத்தக்கன. குகைகளில் வரையப்பட்ட அஜந்தா ஓவியங்கள் இலங்கையின் சிகிரியா ஓவியங்களுக்கு நிகரானவை.



**மாமல்லபுரம்**

## பயிற்சிகள்:

1. நான்கு வேதங்கள் அல்லாதது:
   (1) இருக்கு, யசூர் (2) சத்திரியர் (3) சாமம் (4) அதர்வம்
2. ஆரியர் உருவாக்கிய சமூக வருணங்கள்:
   (1) இருக்கு, யசூர், சாமம், அதர்வம்
   (2) அரசன், சேனாதிபதி, மந்திரி, காமினி
   (3) பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன்

3. பின்வரும் வாக்கியங்கள் சரியா தவறா?

(அ) வேதங்கள் சமஸ்கிருதமொழியில் எழுதப்பட்டன. (,,,,,,,,,,,,,,,)

(ஆ) மத்திய ஆசியாவிலிருந்து குடிபெயர்ந்த ஆரியர் ஐரோப்பிற்குள்ளும் சென்றனர். (,,,,,,,,,,,,)

(இ) ஆரியர்கள் ஒரு கடவுளை நம்பினர் (,,,,,,,,,,,,,,,)

(ஈ) ஒரு கிராமத்தின் தலைவன் ராஜா ஆவான் (,,,,,,,,,,,,,,,)

(உ) ஆரியர் இரும்பு ஆயுதங்களைப் பயன்படுத்தினர் (,,,,,,,,,,,,,,,)

4. வளர்ச்சி பெற்றிருந்த 16 குடியேற்றங்களில் வலிமையானது

(1) மகதம் (2) வத்சயம்

(3) அவந்தி (4) கோசலை

5. பின்வரும் சொற்களை உரிய இடங்களில் இட்டு வாக்கியங்களைப் பூர்த்தி செய்க

(கௌடில்யன், அசோகன், சந்திரகுப்தன், சுத்தோதனன், கௌதமர், சித்தார்த்தர் கலிங்கம், மகிந்தர்,)

(அ) ........................மௌரியப்பேரரசைத் தோற்றுவித்தார்.

(ஆ) மன்னர் அசோகன் .................... போரினால் கடுந்துயருற்று யுத்தத்திற்குப் பதிலாக அகிம்சை வழியை ஆரம்பித்து வைத்தார்.

(இ) சந்திரகுப்தன் அரசனாவதற்கு ........................ என்ற அரசியல் அறிஞன் காரணமாக இருந்தான்.

(ஈ) கௌதம புத்தரின் தந்தை........................ ஆவார்.

(உ) இலங்கைக்குப் பௌத்தத்தை ................ தேரர் கொண்டு வந்தார்.

6. A நிரலையும்; B நிரலையும் பொருத்தமாக இணைக்குக.

| A நிரல் | B நிரல் |
|---|---|
| (1) அஜாந்தா | (அ) சாணக்கியன் |
| (2) கௌடில்யன் | (ஆ) குகை ஓவியம் |
| (3) ஹியூங் சாங் | (இ) சமணசமயப்பிரிவு |
| (4) ஸ்வேதாம்பர | (ஈ) தேசசஞ்சாரி |
| (5) மகாயாணம் | (உ) காளிதாசன் |
| (6) மேகதூதம் | (ஊ) பல்கலைக்கழகம் |
| (7) நாலாந்தா | (எ) பௌத்தசமயப்பிரிவு |
| (8) தன்வந்திரி | (ஏ) காவியம் |
| (9) சாகுந்தலம் | (ஐ) குப்தப்பேரரசின் எதிரிகள் |
| (10) ஹூணர் | (ஒ) மருத்துவத்துறை |

விடைகள்:

1 (2), 2 (3), 3 (அ) சரி, (ஆ) சரி, (இ) சரி), (ஈ) சரி),(உ)சரி, 4 (1), 5 (அ) சந்திரகுப்தன், (ஆ) கலிங்கம், (இ) கௌடில்யன், (ஈ) சுத்தோதனன் (உ)' மகிந்தர் 6 (1) (ஆ), (2) (அ), (3) (ஈ), (4) (இ), (5) (எ), (6) (உ), (7) (ஊ), (8) (ஒ). (9) (ஏ). (10) (ஐ).

அத்தியாயம்: 3

# இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட யுகம் தொடக்கம் பொலநறுவையுகத்தின் முடிவு வரை

**1. இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தகவல்களை எவற்றிலிருந்து பெறலாம்?**

(அ) தொல்பொருள் ஆய்வுகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இலங்கையின் பல்வேறுபகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த எலும்புக்கூடுகள், கல்லாயுதங்கள், மட்பாண்ட ஓடுகள், சுடுமண் உருவங்கள், முதுமக்கள் தாழிகள், சடலங்களைப் புதைத்த முறைகள், (ஈமச்சின்னங்கள்) பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டஓடுகள் என்பனவற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

(ஆ) பலாங்கொடைப்பகுதியில் அகழ்வாய்வின்போது புராதனமனிதனின் எலும்புச் சுவடுகள் கிடைத்தன. இவை நியாண்டல்தல் மனிதனின் சுவட்டை ஒத்தவை.


(இ) இலங்கையின் ஆதிக்குடிகளுக்குரிய கலாசாரம் பெருங்கற்காலக் கலாசாரம் எனப்படும். இறந்தோரை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப்பயன்படுத்தி ஈமச்சின்னங்களைப் படைத்ததால் அப்பெயர் பெற்றது. கல்லறைகள், கல்பட்டங்கள், கல்மேசைகள், நடுகற்கள் போன்றவை ஈமச்சின்னங்களாக அமைந்தன.

(ஈ) இவற்றைவிட தாழி அடக்கமுறை திராவிடரது கலாசாரத்தில் ஒன்றாகும். மரணமடைந்த தலைவனின் சடலத்தைப் பெரியதொரு பானைக்குள் (தாழி) இட்டு, அவன் உபயோகித்த பொருட்களையும் கூடவே வைத்து புதைக்கின்ற முறை இலங்கையில் இருந்துள்ளது. இத்தகைய ஈமத்தாழிகளை புத்தளத்தில் பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, பரந்தன், இப்பன்கடுவ, கல்மனை, கித்துல்கல், குருவித்தை, பத்ததொம்பலென்ன முதலான பகுதிகளில் அகழ்ந்தெடுத்துள்ளனர். இம்முதுமக்கள் தாழிகள் திராவிட கலாசாரத்தின் பழைமையைப் பறை சாற்றுவதால் சிங்கள் ஆய்வாளர் முதுமக்கள் தாழிக்கு முதன்மை வழங்காது விட்டுள்ளனர்.

(உ) கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோகன் ஆட்சியுடன் பிராமி என்ற வரிவடிவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இலங்கையில் இதுவரை 1500 க்கு மேற்பட்ட பிராமிச்சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் வடபிராமி, திராவிடபிராமி என இருவகைகள் காணப்படுகின்றன.

கந்தரோடையில் ததஹபத (தத்தவின் பாத்திரம்), குணி (பிக்குணி). ஆனைக் கோட்டையில் கோவே(ந்)தன், பூநகரியில் ஈழ, ஏனைய விடங்களில் ஆய், வேள் எனப் பலவாறாகப் பிராமியச் சாசனங்கள் கிடைத்துள்ளன.

(ஊ) அகழ்வாய்வின்போது பண்டைய மனிதர் பயன்படுத்திய கல்லாயுதங்கள் கிடைத்துள்ளன. ஆவர்கள் உண்ட உணவு வகைகளின் எச்சங்கள் கிடைத்துள்ளன.



கல்லாயுதங்கள்

**2. இலங்கையின் தொல்காலத்தகவல்களைத் தெரிவிக்கும் அகழ்வாய்வு நிகழ்ந்த பகுதிகள் எவை?**

பொம்பரிப்பு, குருகேகுகை, இப்பன்கடுவ, பாகியான்கல, இராவணஎல, பலாங்கொடைக்குகை, பெல்லன்பதிபெலஸ்ஸ, குருவிட்ட பட்டதொம்ப குகை, மாந்தோட்டை, புந்தள, இரணைமடு, அலுவென, கந்தரோடை, ஆனைக்கோட்டை

**3.இவற்றிலிருந்து யாது தெரிகின்றது?**

(அ) ஆரியர் வருகைக்கு முன்னரே இந்நாட்டில் சுதேச மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

(ஆ) உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்நாட்டில் ஒரு நாகரிகம் நிலவி வந்தமைக்குச் சான்றுகளுள்ளன.


(இ) எமது மூதாதையர் பற்றிய தகவல்கள் நாட்டின் அனைத்துப்பிரதேசங்களிலும் கிடைத்திருப்பதால் அவர்கள் நாடெங்கிலும் சிதறி வாழ்ந்துள்ளனர்.

**4. ஆரியர் என்போர் யார்? அவர்கள் இலங்கையில் குடியேறிய இடங்கள் எவை?**


(அ) மத்திய ஆசியாவில் வாழ்ந்த மக்கள். அவர்கள் இந்துக்குஷ் மலைத் தொடரிலுள்ள கைபர் கணவாய் ஊடாக இந்தியாவிற்கு வந்தனர். வட

இந்தியாவிலிருந்து மேற்குக் கரையூடாகவும் கிழக்குக் கரையூடாகவும் பயணம் செய்த ஆரியர் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் குடியேறினர்.

(ஆ) இலங்கையின் நதிக்கரையோரங்களில் ஆரியர் தம் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். அருந்துவதற்கும் விவசாயத்திற்கும் நீர் அவசியம். அவற்றிற்கு நதிக்கரையோரங்கள் வாய்ப்பாக இருந்தன. மல்வத்து ஓயா (அருவி ஆறு, கதம்பநதி), கால ஓயா (கோணா நதி), களனி கங்கை (கல்யாணி நதி), மகாவலி கங்கை (மஹாகங்கை), வளவை கங்கை (வனவாகினி நதி), மாணிக்க




**ஆரியர் இலங்கைக்கு வந்த மார்க்கங்கள்**




கங்கை (சுப்பகந்தார நதி), கிரிந்தி ஓயா,(கரந்தை நதி) கும்புக்கன் ஓயா என்பன ஆரியர் குடியேறிய நதிக்ரையோரங்களாகும்.

(இ) மஹாதீர்த்தம (மாந்தை), உபதிஸ்ஸகமம், அனுராதகமம், (அனுராதபுரம்) உருவெல, விஜித, உஜ்ஜனி, பொன்பரிப்பு, சேத்தியகிரி, மஹியங்கணை, தீகவாவி, கோகர்ணம், (திருகோணமலை) மகாகமம், சித்தலம்பத்தை என்பன ஆரிய குடியேற்றங்களாக விளங்கின.

**5. மகாவம்சம் கூறுகின்ற ஆரியக் குடியேற்றங்களுக்கு முன்னரே**

**அவர்கள் இலங்கையில் அவ்வப்போது தொடர்பு கொண்டிருந்தமைக்கான ஏதுக்களைக் கூறுக.**

(அ) புத்தபெருமான் பரிநிர்வாணநிலை அடைவதற்கு முன்னரே தபசு, பல்லுக என்ற வியாபாரிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்கள் வழங்கிய புனிதபொருட்களை வைத்து திரியாய் என்றவிடத்தில் ஹிரிகடுசாய தாதுகோபம் அமைக்கப்பட்டது.

(ஆ) சீதையைக் கவர்ந்து இராவணன் இலங்கையில் சிறை வைத்துள்ளான். இராமாயணம் வால்மிகி என்பவரால் வடமொழியிலும், கம்பரால் தமிழிலும் பாடப்பட்ட காவியமாகும். செல்வத்துக்கு அதிபதியான குபேரன் என்பவன் இயக்கருடன் இலங்காபுரி என்ற நாட்டினை உருவாக்கினான். அந்நாட்டின் அரசனாகக் குபேரனின் சகோதரன் இராவணன் விளங்கினான். அவன் அயோத்திய இளவரசன் இராமனின் மனைவி சீதையைக் கவர்ந்து கொண்டதால், இராமன் பெரும்படையுடன் இலங்கை வர நேர்ந்தது. இராவணனை வெற்றி கொண்டு, அவன் தம்பி விபீஷணனை இலங்கையின் அரசனாக்கினான்.

(இ) புத்தர் ஞானம் பெற்று ஒன்பது மாதங்களுக்கு பின்னர் இலங்கைக்கு வந்தார். இங்கு வாழ்ந்த இயக்கர்களை அங்கிருந்து அகற்றிய பின் இலங்கையின் பௌத்த சமயத்தை வளம்படுத்தி விரும்பினார். மஹியங்கனையில் மகாநாகா என்று ஒரு தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தில் குறித்த ஒருநாளில் இலங்கை எங்கும் வாழ்ந்த இயக்கர் ஒன்று கூடுவர். மகாநாகா தோட்டத்தில் இயக்கர்கள் கூடியிருந்த போது அங்கு வந்த புத்தர் பயங்கரச் சூறைக்காற்றை அவர்களது தலைக்கு மேல் தோற்றுவித்தார். பயமும் வெருட்சியுமடைந்த இயக்கர்கள் அவரிடம் தங்களைக் காக்குமாறு வேண்டினர். 'இலங்கை முழுவதையும் தருகின்றோம்'. என்றனர் .

புத்தர் குளிரையும் இருளையும் சூறையையும் அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டு, இயக்கர்களை மலைநாட்டிற்கு (கிரிதீபம்) துரத்திவிட்டார்.

(ஈ) ஓர் இரத்தினச்சிம்மாசனத்திற்காக மகோதரன், குலோதரன் என்ற இருநாக மன்னர்கள் யுத்தம் புரிந்தனர். இந்த யுத்தத்தை நிறுத்தும் பொருட்டு புத்தர் நாகதீபத்திற்கு வருகைதந்தார் முன்னர்போல திடீரென இருள் சூழவைத்து, பின்னர் ஒளிபரவவைத்து, நாகமன்னர்களைப் பயங்கொள்ள வைத்தார். நாக மன்னர்கள் இரத்தினச் சிம்மாசனத்தினை புத்தருக்கே வழங்கிவிட்டனர்.


**6. ஆரியர்கள் இலங்கைக்கு வந்த மூன்று துறைகள் எவை?**

(அ) இந்தியாவின் மேற்குப்பிரதேசங்களிலிருந்து மாதோட்டத்தைச் சுற்றி புத்தளப்பகுதியான தாமிரபரணிக்கு வந்தனர். (விஜயனின் வருகை)

(ஆ) இந்தியாவின் கிழக்குப்பிரதேசத்திலிருந்து கோகர்ணம் (திருகோணமலை) ஊடாக இலங்கைக்கு வந்தனர் (பத்தகச்சானா)

(இ) வடஇந்தியாவிலிருந்து வடதுறையான ஜம்புக்கோளத்திற்கு (காங்கேசன்துறை) வந்தனர்.(சங்கமித்தை தேரி)

**7.ஆரியர்கள் இலங்கையில் எங்கு தமது குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்?**




(அ) ஆரியர்கள் நதிக்கரையோரங்களிலேயே தமது குடியிருப்புக்களை நிறுவிக் கொண்டனர். அருந்துவதற்கும், விவசாயத்திற்கும் நீர் அவசியம், அவற்றிற்கு நதிக் கரையோரங்கள் வாய்ப்பாக இருந்தன. மல்வத்துஓயா (அருவியாறு), கலாஓயா, கல்யாணிநதி (களனி கங்கை), மகாவலிகங்கை, வளவைகங்கை, கிரிந்திஓயா, மாணிக்ககங்கை, கும்புக்கன்ஓயா என்பன ஆரியர் குடியேறிய நதிக்கரைகளாம்.

(ஆ) மஹாதீர்த்தம், உப திஸ்ஸகமம், அனுராதா கமம், உருவெல, விஜித, உஜ்ஜனி, பொன்பரப்பு, சேத்தியகிரி, மஹியங்கனை, தீகவாவி, கோகர்ணம், காஜரகமம், மகாக மம், சித்தலம்பத்தை முதலியன ஆரிய குடியேற்றங்களாக விளங்கின.

**8. இலங்கையின் சுதேச மக்கள் யார்?**

(அ) இலங்கையின் மிகப்புராதன மக்கள் நாகர், இயக்கர் எனும் மக்கட் கூட்டத்தினராவார். இராமாயணம், மகாவம்சம், தீபவம்சம் முதலான நூல்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகளுள்ளன.

(ஆ) ஆரிய மொழிபேசிய மக்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே நாகர், இயக்கர் என்று அழைக்கப்பட்ட மக்கள் இலங்கையில் வாழ்ந்து வந்தார்கள்.

(இ) மகாவம்சத்தின்படி, புத்தபெருமான் இலங்கைக்கு வந்த போது இங்கு இயக்கர் என்ற கூட்டம் வாழ்ந்ததென அறியப்படுகிறது.

(ஈ) புத்தர் ஞானம் பெற்று ஐந்தாண்டுகளுக்கு முன் இலங்கை வந்து இரு நாக மன்னர்களுக்கு இடையிலான பிணக்கினைத் தீர்த்து வைத்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது.

(உ) ஆரிய மொழி பேசிய விஜயனும் தோழரும் இலங்கைக்கு வந்த போது குவேனி என்ற தலைவியின் கீழ் இயக்கமக்கள் வாழ்ந்ததாக அறியவருகிறது.

(ஊ) இலங்கையின் ஆதிக்குடிகளான நாகர் குடியிருப்புகள் நாவலந்தீவு, குருந்தன்குளம், திரிகூடம், மாந்தை, குதிரைமலை, நாகர்முனை, கல்யாணி முதலான பகுதிகளில் காணப்பட்டன. இயக்கர் குடியிருப்புகள் பொம்பரிப்பு, தாமிரபரணி, சிலாபம், கிறிஸ்தவஸ்து, மகியங்கனை முதலான பகுதிகளிலும் காணப்பட்டன.

**9. ஆரியக்குடியேற்றத்தின் முதல்வனாகக் குறிப்பிடும் விஜயனின் வரலாற்றினைச் சுருக்கமாக விபரிக்க.**

இந்தியாவில் லாலா என்ற நாட்டினை ஆட்சி செய்த சிங்கபாகுவுக்கு சிங்கசீவிலிக்குப் பிறந்த இரண்டு புதல்வர்களில் ஒருவன் விஜயன்; மற்றவன் சமித்தன். விஜயன் துட்டனாகவும், லாலா நாட்டு மக்களுக்குப் பல துயரங்களை விளைவிப்பவனாகவும் இருந் தான். மன்னன் அவனையும் அவனது 700 தோழர்களையும் கப்பலேற்றி நாடு கடத்திவிட்டான். இறுதியில் இவர்கள் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் தம்பபண்ணி அல்லது தாமிரபரணி என்ற இடத்தினை வந்து அடைந்தனர். தம்பபண்ணி என்றால் செம்பு நிறமான மண் என்று அர்த்தம். விஜயன் நிலத்தில் கைகளை ஊன்றியபோது அது செம்புநிறமாகவிருந்ததால் இப்பெயரினை பெற்றது. தம்பபண்ணியில் குவேனி என்றொரு இயக்கப் பெண்ணை மணந்து கொண்டான். அவளுடைய உதவியோடு ஏனைய இயக்கத் தலைவர்களைக் கொன்று இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டான். விஜயனின் அமைச்சர்கள் வெவ்வேறிடங்களில் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர்.

அனுராத - அனுராதகமம்
உபதிஸ்ஸ - உபதிஸ்ஸகம்
உறுவெல - உறுவெலகமம்
விஜித - விஜிதகமம்

இலங்கைக்கு அரசனாக முடிசூடவேண்டி வந்ததால், விஜயன் தனது மனைவி குவேனியையும் இருபிள்ளைகளையும் துரத்திவிட்டு பாண்டி நாட்டிலிருந்து இளவரசி ஒருத்தியையும் 700 பாண்டியப் பெண்களையும் வரவழைத்து மணந்து கொண்டனர்.

**10. இலங்கையில் நிகழ்ந்த மூன்று முக்கிய ஆரியக்குடியேற்றங்கள் எவை?**

1. விஜயனும் 700 தோழர்களும் முதன் முதல் குடியேறினர்.
2. மதுரைப் பாண்டிய இளவரசியும் 700 பெண்களும் பரிவாரங் களும் குடியேறினர்.
3. பத்தகச்சானாவின் சகோதரர்கள் தமது பரிவாரங்களுடன் குடியேறினர்.

**11. ஆரியர்களின் அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?**

(அ) அரசன் இராச்சியத்தின் தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தான். கமிக அல்லது காமினி கிராமத்தின் தலைவர்களாக இருந்தனர்.

(ஆ) விவசாயமே பிரதான சீவனோபாயமாக இருந்தது. சாதி முறையை அடிப்படையாகக் கொண்டு மக்கள் தொழில்களில் ஈடுபட்டனர். கால்நடை வளர்ப்பு, வேட்டையாடுதல், கைத்தொழில்கள் என்பன இருந்தன. வர்த்தகம் பிரதானமாக நிலவியது. வர்த்தகத் துறைமுகங்களாக மகாதீர்த்தம், ஜம்புக்கோளம், கோகர்ணம் என்பன விளங்கின.

(இ) சாதி முறையை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு. பிராமணர் குருமாராக இருந்தனர். சத்திரியர் அரசனாகவும் போர் வீரர்களாகவும் இருந்தனர். வைசியர் விவசாயம் போன்ற தொழில்களைச் செய்தனர். சூத்திரர் அடிமைப்பணிகளைச் செய்தனர். கிராமங்களில் சுயதேவைப் பொருளாதாரம் நிலவியது.

**12. ஆரியர் வருகையால் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?**

(அ) இலங்கையில் நிரந்தரமான குடியேற்றங்கள் ஏற்பட்டன; கிராமங்கள் நகராக்கத்தன்மை பெற்றன.

(ஆ) விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். சிறுகுளங்களைக் கட்டி அவற்றைச் சுற்றி மக்களைக் குடியமர்த்தினர்.

(இ) பிராமணிய சமயத்தை அறிமுகப்படுத்தினர். அது இந்து சமயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

(ஈ) இரும்பு உபயோகத்தை அறிமுகப்படுத்தினர்.

(உ) ஆரிய மொழியான பாளியிலிருந்து சிங்கள மொழியும், விஜயனின் சந்ததியாகச் சிங்கள மக்களும் உருவாகினர்.

(ஊ) ஒழுங்கு முறையான ஆட்சியை ஏற்படுத்தினர்.

**13. பண்டுகாபயனின் சிறுபராயம் பற்றிக் கூறப்படும் கதைகளை விபரிக்க.**

(அ).விஜயனுக்குப் பின்னர் இலங்கையின் அரசகட்டிலில் அமர்ந்தவன் பண்டுவாசுதேவனாவான். இவனது பட்டத்து ராணி பத்தகச்சானா ஆவாள். இவர்களுக்கு 10 புதல்வர்களும் சித்திரா என்றொரு மகளும் இருந்தனர். அவள் மிக்க அழகி ஆதலால் உன்மத்தசித்திரா என அழைக்கப்பட்டாள். பத்தகச்சானாவிற்கு 9 சகோதரர்கள் இருந்தனர். அச்சகோதரர்களில் ஒருவன் தீக்காயு எனப்படுவான். தீக்காயுவின் மகன் திக்காகாமினி ஆவான்.

(ஆ). சித்திராவிற்குப் பிறக்கும் மகன் தன் மாமன்மாரைக் கொல்வான் என சோதிடர்கள் கூறியதால், ஒற்றைத் தூணில் அமைக்கப்பட்ட கோபுர அறையினுள் சித்திரா சிறை வைக்கப்பட்டாள். அரண்மனைச் சேவையில் இருந்த திக்காகாமினி, சித்திராவைக் காணும் சந்தர்ப்பம் கிட்டியது. அவள் மீது காதல் கொண்டு அவளைச் சந்தித்தான். அதனால் அவர்களுக்கு பண்டுகாபயன் என்றொரு மகன் பிறந்தான். குழந்தை பிறந்தவுடன் பண்டுகாபயனைப் பாதுகாப்பான ஓரிடத்திற்கு அனுப்பிவிட்டு, அன்றே பிறந்த ஒரு பெண் சிசுவை தம்முடன் வைத்துக் கொண்டனர்.

(இ). உன்மத்தசித்திராவுக்கு பிறந்தது ஆண் குழந்தை எனவும், குழந்தை இன்னமும் உயிருடன் இருக்கிறது என்பதை அறிந்த மாமன்மார் அக்குழந்தையைத் தேடிக் கொலை செய்யப் பல தடவைகள் முயன்றனர்.

(ஈ). ஏழு வயதில் அவன் நண்பர்களுடன் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது கொலையாளிகள் வந்தனர். அவன் நீருக்குள் சுழியோடி மரப் பொந்தொன்றில் ஒளிந்து கொண்டான். அவன் தப்பித்துக் கொண்டான். அவன் நண்பர்கள் கொலையுண்டனர்.

(உ. அவன் உயிருடன் இருப்பதை அறிந்த மாமன்மார் அவனை அழிக்க மீண்டும் ஒரு தடவை முயன்றனர். பன்னிரண்டு வயதில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது, நெருப்புக் கொண்டு வருவதற்காக பண்டுகாபயன் வீட்டிற்குச் சென்றிருந்தான். ஆதனால் மந்தை மேய்த்த எல்லாப்பிள்ளைகளும் கொல்லப்பட இளவரசன் தப்ப முடிந்தது.

(ஊ). இவற்றைக் கேள்விப்பட்ட அவனது தாய் சித்திரா, அவனை அக்கிராமத்திலிருந்து அகற்றி, பண்டுலன் என்ற பிராமணனிடம் வித்தைகள் பயில ஒப்படைத்தாள். அப்பிராமணனிடம் பல்வேறு கலைகளைக் கற்றுத் தேறிய இளவரசன், பண்டுலனின் மகன் சந்திரபாணுவுடன் சேர்ந்து, கசாகல என்ற இடத்தில் தங்கி, படை திரட்டத் தொடங்கினான்.

**14. பண்டுகாபயன் அரசனாகிய வரலாற்றினைக் கூறுக.**

(அ) பண்டுலன் என்ற பிராமணனின் பயிற்சிகளும், அவனது தோழன் சந்திராவின் சேவையும், சேத்தி என்ற திறமை வாய்ந்த பெண் குதிரை ஒன்றின் உதவியும் பண்டுகாபயனின் வெற்றிகளுக்கு உதவியாக அமைந்தன.

(ஆ). கிரித்தலை என்ற இடத்தில் கிரிகண்டசிவன் என்றொரு மாமன் முறையானவன் இருந்தான். கிரித்தலைக்குச் சென்றபோது, வழியில் சுவர்ணபாலி என்ற கிரிகண்டசிவனின் மகளைச் சந்திக்க நேர்ந்தது. அவளைத் தனதாக்கிக் கொண்டு, அழைத்துச் செல்லும்போது, கிரிகண்டசிவன் கோபத்துடன் படையுடன் எதிர் கொண்டான். களஹுகல என்றவிடத்தில் கிரிகண்டசிவனைத் தோற்கடித்தான்.


(இ). அதனைத் தொடர்ந்து சுவர்ணபாலியின் சகோதரர்கள் சண்டைக்கு வந்தனர். அவர்களை லோவாகல என்றவிடத்தில் தோற்கடித்தான். அதன் பின்னர் திம்புலாகல, ரிட்டிகல ஆகிய இடங்களில் தங்கிப் படை திரட்டிக் கொண்டு குடாநுவர என்றவிடத்தில் பாசறை அமைத்தான்.

(ஈ). அபயன் என்ற மாமன் மட்டும் பண்டுகாபயனுக்கும் அவனது தாய்க்கும் ஆதரவாக இருந்தான். அதனால் அவனைத் தவிர தன்னை எதிர்த்துப் படை நடாத்திய ஏனைய 8 மாமன்மாரையும் அவனது படை வீரர்களையும் கொன்றான்.

(உ). விஜயனும் பண்டுவாசுதேவனும் இருந்து ஆட்சிசெய்த இராசதானியை மாற்றி, முதன்முதலாக அனுராதகமத்தைத் தலைநகராக்கிக் கொண்டான்.

**15. பண்டுகாபயனின் நிர்வாக நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன? அவன் ஏற்படுத்திய நலன் புரிச்சேவைகள் யாவை?**

1. அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட முதல் அரசன் பண்டுகாபயன் ஆவான். மந்திரியாக தனது நண்பன் சந்திராவை நியமித்தான்.



2. அனுராதபுரத்தினை தக்கதோர் நகரமாக நிர்மாணித்தான். இலங்கை வரலாற்றில் முதன் முறையாக நகரம் இவன் காலத்திலேயே அமைக்கப்பட்டது.

(அ) நகரத்தினைச் சுற்றிப் பாதுகாப்பிற்காக மதில்கள் அமைக்கப்பட்டன.

(ஆ) நான்கு நுழைவாயில்கள் அமைந்தன.

(இ) மதில்களைச் சுற்றி நீர் நிறைந்த அகழி அமைக்கப் பட்டது.

(ஈ) நகர எல்லைகள் வகுக்கப்பட்டன.

(உ) நகர நிர்வாகம் பிறிதாக ஒழுங்கமைக்கப்பட்டது. அதனை நிர்வகிக்க நகரகுத்திகன் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டான். பண்டுகாபயன் தனது மாமனான அபயனை நகரகுத்திகனாக நியமித்தான்.

(ஊ) நகரத்தில் வைத்தியசாலை அமைக்கப்பட்டது.

(எ) நகரத்தைச் சுத்தமாக வைத்திருக்க கழிவகற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலாக நகர சுத்திகரிப்பாளர் நியமிக்கப்பட்டனர்.

(ஏ) சடலங்களைத் தகனம் செய்ய மயானங்கள் அமைக்கப்பட்டன.

**16. பண்டுகாபயனின் பின்னர் ஆட்சிப்பொறுப்பை எற்ற மன்னன் யார்?**

அனுராதபுரத்தில் இருந்து 70 ஆண்டு காலம் ஆட்சி செய்த பண்டுகாபயனின் பின் அவனது புதல்வன் மூத்தசிவன் அரசனாக முடி சூடினான். அனுராதபுரத்தில் மகாமேகவனம் என்ற பூங்காவை மூத்தசிவன் அமைத்தான். அவனுக்கு 10 ஆண் பிள்ளைகளும் 2 பெண் பிள்ளைகளும் இருந்தனர். இரண்டாவது மகனான தீசன் மிகவும் திறமை வாய்ந்தவன். அதனால் மூத்தசிவனின் பின்னர் அரச கட்டில் ஏறினான். அவனே பிற்காலத்தில் தேவநம்பியதீசன் என்ற பெயரில் பிரபல்யம் அடைந்தான்.

**17. தேவநம்பியதீசனுக்கும் அசோகனுக்குமிடையிலான உறவினை விபரிக்க.**

1. இலங்கைக்கு வட புறமாகவுள்ள நாடு இந்தியாவாகும். அதனை முற்காலத்தில் தம்பதீபம், பாரதம் என அழைப்பர். அடுத்த பக்கத்திலுள்ள தேசப்படத்தில் நிழற்றப்பட்ட பகுதி மௌரியப் பேரரசு ஆகும்.

2. அந்த மௌரியப் பேரரசின் அரசன் அசோகச் சக்கிரவர்த்தி ஆவான். அசோகன் கி.மு.270 இல் மௌரியப்பேரரசின் மன்னனாக முடிபுனைந்தான். அவன் கலிங்கப் போரில் வெற்றி வாகை சூடினான். எனினும் அப்போரில் இறந்தோர் தொகையை எண்ணி இனி யுத்தம் செய்வதில்லை என முடிவுசெய்தான். பௌத்த மதத்தில் சேர்ந்து அம்மதத்தினை உலகெங்கும் பரப்பும் எண்ணங்கொண்டான்.

3. அசோகனின் சமகாலத்தில் இலங்கையின் அரசனாக தீசன் விளங்கினான். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்ததில்லை. ஆனால் பரிசுப்பொருட்களையும் கடிதங்களையும் நீண்ட காலமாகப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

4. அரசுப் பொறுப்பினை ஏற்ற தீசன் தனது மருமகன் அரிட்டன் மூலம் முத்துக்கள், இரத்தினக்கற்கள் என்பனவற்றை அசோகனுக்குப் பரிசாக அனுப்பி வைத்தான். அரிட்டனை விருந்தினனாக உபசரித்த அசோகன், பட்டாபிஷேகத்திற்கான பொருட்களை தீசனுக்கு அனுப்பி வைத்தான். இராஜவெண்குடை, மங்கள வாள், நெற்றிப்பட்டி, ஆலவட்டம், மிதியடி, பாதணி, வலம்புரிச்சங்கு என்பன பட்டாபிஷேகப் பொருட்களாகும். அத்துடன் ஒரு முக்கிய செய்தியையும் அறிவித்தான். 'நான் புத்தரின் வழியைப் பின்பற்றுகின்றேன். நீங்களும் அதே வழியைப் பின்பற்ற வேண்டுகின்றேன்' என்பதே அச்செய்தி.

5. அசோகன் அனுப்பி வைத்த பட்டாபிஷேகப் பொருட்களை ஏற்றுக் கொண்ட தீசன் மீண்டும் ஒரு முறை மௌரிய முறைப்படி முடிசூடிக் கொண்டான். அத்துடன் மௌரிய மன்னர்கள் தமது பெயருடன் 'தேவனுக்குப் பிரியமான' என்ற பட்டத்தையும் சேர்த்துக் கொள்வர். அதன்படி தனது பெயரைத் 'தேவநம்பியதீசன்' என மாற்றிக் கொண்டான்.


6. பௌத்த மதத்தினை உலகெங்கும் பரப்பும் எண்ணங்கொண்ட அசோகன், தனது மகன் மகிந்த தேரரையும், தனது பேரன் சுமணசாமனேரர், மற்றும் பண்டுக என்போர் அடங்கிய ஒரு தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்தான். கி.மு.247 இல் மகிந்ததேரரும் அவரது தூதுக்குழுவினரும் இலங்கைக்கு வந்தனர். மிஹிந்தலை (மிசாகபர்வதம்) மலையை வந்தடைந்தனர்.

7. அசோகனின் புத்திரரான மகிந்ததேரர் தனது பரிவாரங்களுடன் இலங்கைக்கு பௌத்தமதத்தைக் கொண்டு வந்தார். இலங்கையின் முதலாவது பௌத்தமன்னன் தேவநம்பியதீசனாவான். இதனை அடுத்து பௌத்தமதம்

சிங்கள இனத்தின் ஒரு மரபுரிமையாக நாட்டில் வேரூன்றியது. அரசாட்சிக்கு பிக்குகளின் வழிகாட்டல் இன்றியமையாததாகியது.

**18. தேவநம்பியதீசனுக்குப் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் யாவர்?**


தேவநம்பியதீசனின் சகோதரர்களான உத்தியன், சூரதீசன், அசேலன் என்போர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செய்தனர். அசேலன் காலத்தில் ஒரு படையெடுப்பு நிகழ்ந்தது. இலங்கையின் வட பாகமான உத்தரதேசத் திலிருந்து தமிழ் மன்னனான எல்லாளன் படையெடுத்து வந்தான். அந்த யுத்தத்தில் எல்லாளன், அசேலனைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு அனுராதபுரத்தின் அரசனாகினான். எல்லாளனைத் தமிழ்நாட்டிலிருந்து வந்த சோழ இளவரசனாக மகாவம்சம் குறிப்பிடும்.




**அசோக சாம்ராச்சியம்**

**19. அருகிலுள்ள தேசப்படத்தில் இருந்து யாது விளங்குகிறது?**

(அ) எல்லாளன் கால இலங்கையை இத்தேசப்படம் விபரிக்கிறது. இலங்கையின் பெரும்பகுதி எல்லாளனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. களுகங்கையிலிருந்து மகாவலிகங்கையின் பிரதான போக்கினை இணைக்கில், இந்த எல்லைக்கு வடக்கே பரந்த பிரதேசம் எல்லாளனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. நாகதீபம், இராசரட்டை, மலையரட்டையின் மேற்குப் பகுதி என்பன எல்லாளனின் ஆட்சிப் பரப்பாக இருந்தது.



(ஆ) மேலே விபரித்த எல்லைக்குத் தெற்கேயுள்ள பகுதி உருகுணை எனப்பட்டது. அதனைச் சிங்கள மன்னனான கவந்ததீசன் (காக்கைவண்ணதீசன்) தன்னாட்சியின் கீழ் கொண்டிருந்தான். களனி (கல்யாணி) கங்கையை அடுத்த கல்யாணி என்ற பிரதேசத்தின் சிற்றரசனாக கல்யாணதீசன் விளங்கினான். அவனுடைய மகள் விகாரமாதேவி ஆவாள். அவள் உருகுணையின் அரசனான கவந்ததீசனின் மனைவியாக இருந்தாள். இவர்களுக்கு காமினி அபயன் (கைமுனு), சதாதீசன் என்றிரு புதல்வர்கள் இருந்தனர்.

**20. எல்லாளனின் நீதிதவறா ஆட்சிச் சிறப்பினைக் கூறுக.**

(அ) எல்லாளன் நீதிதவறாது 44 ஆண்டுகள் அனுராதபுரத்திலிருந்து செங்கோல் செலுத்தியுள்ளான். அவன் இந்து சமயத்தையும், பௌத்த சமயத்தையும் பாகுபாடின்றிக் பேணிப் பாதுகாத்துள்ளான்.

(ஆ) அவனுடைய படுக்கை அறையில் ஓர் ஆராய்ச்சிமணி தொங்கும். நீதி கோருவோர் எந்தநேரத்திலும் ஆராய்ச்சி மணியை இழுத்து அடிக்கலாம். எல்லாளனின் மகனின் தேர்ச்சில்லினுள் அகப்பட்டிருந்த கன்றிற்காக தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்ததாம். விபரமறிந்த மன்னன் அதே தேர்ச்சில்லின் கீழ் தன் மகனைப் படுக்கவைத்துக் கொன்றான் என மகாவம்சம் கூறும்.

(இ) சேத்திய பர்வதத்தின் ஒரு பக்கத்தினைத் தன் தேர் முட்டி சேதப்படுத்தியதற்காக, சேதமடைந்த பதினைந்து செங்கற்களுக்காகப் பதினையாயிரம் காகாப்பணங்கள் வழங்கித் திருத்துவித்தான்.

(ஈ) கி.மு. 145 தொட்டு கி.மு. 101 வரையிலான 44 ஆண்டுகள் தமிழ் மன்னன் எல்லாளன் ஆட்சிக் காலமாகும்.

**21. துட்டகைமுனுவின் இளமைக்காலத்தைச் சுருக்கமாக விபரிக்க.**

(அ)உருகுணை மன்னன் கவந்ததீசன் எனப்படும் காக்க வண்ணதீசனுக்கும், கல்யாணி அரசின் மன்னன் கல்யாணி தீசனின் மகள் விகாரைமாதேவிக்கும் பிறந்தவர்கள் காமினி அபயன். தீசன் ஆவர். மூத்தவன் தந்தையின் சொற்களைக் கேளாது நடந்தமையால் இவனைத் துட்டகாமினி எனப் பிற்காலத்தில் கவந்ததீசன் அழைத்தான்.

(ஆ) மகாவம்சம் துட்டகாமினியின் பிறப்பினை ஓர் அவதாரமாக விபரிக்கின்றது. சிறுவயதிலிருந்தே அவனது தாயாரான விகாரமகாதேவி தமிழருக்கு எதிரான கருத்துக்களைப் போதித்தாள். எல்லாளனை வெற்றி கொண்டு, அனுராதபுரச் சிம்மாசனத்தில் அவன் அமர வேண்டுமெனப் போதித்தாள்.

(இ) கவந்தீசன் தன்னிரு பிள்ளைகளிடம் மூன்று கோரிக்கைகளை முன் வைத்தான். அவை:

(அ) பௌத்தத்திற்கு விசுவாசிகளாக இருங்கள்.

(ஆ) சகோதரர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடக் கூடாது.

(இ) தமிழர்களுடன் ஒருபோதும் சண்டையிடக்கூடாது.

துட்டகாமினி தந்தையின் முதலிரு கோரிக்கைகளையும் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டான்; மூன்றாவது கோரிக்கையை ஏற்கவில்லை.

(ஈ) எல்லாளனுடன் போரிடுவதற்கு மூன்றாவது தடவையாகத் தந்தையிடம் அனுமதி கேட்டான். அனுமதி வழங்க மன்னன் மறுத்தான். 'நீர் பெண்' எனக் கூறி பெண்கள் அணியும் ஆடை அணிகளை அனுப்பி மன்னன்ன அவமரியாதை செய்து விட்டு, நாட்டை விட்டு வெளியேறி மலைப்பிரதேசத்தில் வாழ்ந்தான்.

**22. இலங்கையை ஒரு குடைக்கீழ் கொண்டு வருவதற்கு கவந்ததீசனின் பங்களிப்புகள் எவை?**

(அ). இக்காலத்தில் உருகுணை இராச்சியத்தில் மகாகமம், கல்யாணி, (களனி) கிரி, சேரு, சோமா எனப் பல சிற்றரசுகள் காணப்பட்டன. இவற்றில் துட்டகைமுனுவின் (காமினி அபயன்) தந்தையான கவந்ததீசன் ஆட்சி செய்த மகாகமம் பலம் கூடிய ஒரு சிற்றரசாக விளங்கியது.

(ஆ). இலங்கையை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டும் என்பதே கவந்ததீசனின் இலட்சியமாக இருந்தது. எல்லாளனின் அனுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்றிவிட ஆசைப்பட்டான். அதற்காகப் பல் உபாயங்களைப் பின்பற்றினான்.

(இ). கல்யாணி அரசின் மன்னனான களனிதீசனின் மகளான விகாரைமாதேவியை மணந்து கொண்டமை இலங்கையை ஒருமுகப்படுத்துவதற்கு முதற்படியாக அமைந்தது. அது ஒரு சுவையான கதை. ஒரு தடவை களனி இராச்சியத்தை கடற்கோள் தாக்கியது. கடல் நீர் தரைமேவியது. இது தெய்வக் குற்றத்தால் ஏற்பட்டதெனச் சோதிடர்கள் கூறினர். அதற்குப் பரிகாரமாக ஒரு பெண்ணைக் கடலுக்குப் பலி கொடுக்க வேண்டும் என்றனர். களனி அரசனின் மகள் தேவி தன்னைப் பலி கொடுக்க முன் வந்தாள். அதனால் அவளை ஒரு கப்பலில் ஏற்றிக் கடலில் விட்டனர். அக்கப்பல் மகாகமத்தின் கரையை அடைந்தது. அவளைச் சந்தித்த கவந்ததீசன் அவளை மணந்து கொண்டான். ஒரு விகாரைக்கு அருகில் அவள் கப்பல் தரை தட்டியதால் அவள் விகாரைமாதேவி என்றழைக்கப்பட்டாள்.

(ஈ). கவந்ததீசன் தன் சகோதரியான சோமாதேவியை கிரி பிரதேசத்தின் சிற்றரசனான அபயனுக்கு மணம் செய்து கொடுத்தான். அதன் பின்னர் தனது ஒரு மகனான காமினி அபயனை கிரி இராச்சியத்திற்கு அனுப்பிவைத்தான். அங்கு காமினியுடன் ஏற்பட்ட கருத்தி வேற்றுமையால் அபயன் தன் மனைவியுடன் சேருநுவர இராச்சியத்திற்கத் தப்பி ஓட நேர்ந்தது. அதன் பின் கிரி இராச்சியம் மகாகமத்துடன் இணைக்கப்பட்டது. இவற்றால் மகாகமத்தின் ஆட்சிப் பலம் கூடியது. தந்திர வழிகளைக் கைக்கொண்டு சேருநுவர, சோமா ஆகிய சிற்றரசுகளும் மகாகமத்துடன் இணைக்கப்பட்டன.

தனது இரண்டாவது மகனான சதாதீசனை தீகவாவிப் பிரதேசத்திங்கு விவசாய அபிவிருத்தி செய்வதற்காக அனுப்பி அப்பிரதேசத்தையும் மகாகமத்துடன் இணைத்துக் கொண்டான்.

(உ). இவ்வாறு உருகுணை இராச்சியத்தினை கவந்ததீசன் பலப்படுத்திக் கொண்டபின்னர் எல்லாளனை வெற்றி கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான் எனத் தெரிகிறது.

**23. துட்டகைமுனு இலங்கையை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்தமையை விபரிக்க.**

(அ). துட்டகைமுனு மலைநாட்டில் (கொத்மலை) இருந்த காலத்தில் கவந்ததீசன் இறந்தான். திகாமடுல்ல (தீகவாபி)வில் இருந்த சதாதீசன் விரைந்து மகாகமவிற்கு வந்து தன்னை மன்னனாக அறிவித்தான். அதன் பின்னர் தாய் விகாரைமாதேவியையும் பட்டத்துயானை கண்டுலனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தீகவாபி மீண்டான். எனினும் துட்டகைமுனு உடன் விரைந்து சென்று தன் அரசுரிமையை நிலைநாட்டினான். தாயையும் கண்டுலனையும் பெற சதாதீசனுடன் சண்டையிட நேர்ந்தது. பிக்குகள் சகோதரர்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தினர்.

(ஆ). அதன் பின்னர் இருவரும் இணைந்து எல்லாளன் மீது படையெடுக்க நடவடிக்கை எடுத்தனர். முதலில் சதாதீசன் தீகவாபிப்பிரதேசத்தில் அதிகஅளவு தானியங்களை உற்பத்தி செய்து பொருளாதார நிலையை வலுப்படுத்தினான். துட்டகைமுனு இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டான்.

(இ). திஸ்ஸமகாராம விகாரை மகாசங்கத்திடம் அனுமதி பெற்று எல்லாளன் மீது படையெடுத்தான். பிக்குகளும் தாய் விகாரைமாதேவியும் துட்டகைமுனுவின் படைகளுடன் சென்றனர். 'எனது படையெடுப்பு வெறும் அரசபோகங்களை அனுபவிப்பதற்கல்ல. மாறாக புத்தசாசனத்தின் விருத்திக்காகும்' என துட்டகைமுனு அறிவித்திருந்தான்.

(ஈ). எல்லாளனின் பல்வேறு அரண்களை துட்டகைமுனு வெற்றி கொண்டான். முதலில் மஹியங்கனையில் சண்டை நிகழ்ந்தது. அதில் வெற்றி கொண்ட துட்டகைமுனுவின் படை விஜிதபுரத்தை அடைந்தது. அங்கிருந்து அனுராதபுரத்தை அடைந்தது.

(உ). தலைநகரில் எல்லாளனைத் தனிச் சமருக்கு அழைத்தான் துட்டகைமுனு. அதில் எல்லாளன் மரணமடைந்து விழுந்தான். எல்லாளனின் உடலுக்கு அரச மரியாதைகளுடன் இறுதிக்கிரியைகள் செய்யப்பட்டன. அவ்விடத்தில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. 'இவ்விடத்தினைக் கடப்பவர்கள் இறங்கி மரியாதை செலுத்திச் செல்ல வேண்டும். வாத்தியங்கள் முழங்காது அமைதியாகச் செல்ல வேண்டும்' என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(ஊ). இவ்வாறு இராசரட்டையைத் துட்டகைமுனு கைப்பற்றித் தனதாக்கிக் கொண்டான். அனுராதபுரத்தில் முடிபுனைந்தான்.



துட்டகைமுனு எல்லாளன் யுத்தம்


**24. துட்டகைமுனுவின் சமயத்தொண்டுகளை விபரிக்க.**

(அ)'நான் அரச போகங்களுக்காக எல்லாளனுடன் யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத்திற்காகவே போர் தொடுக்கிறேன்' என்ற கவர்ச்சியான சுலோகத்தை முன்வைத்தான். அதன்படி தன்னாட்சிக் காலத்தில் பௌத்த மேன்மைக்காக உழைத்தான்.


(ஆ) துட்டகாமினி அனுராத புரத்தில் நிலவிய முதலாவது தூபி, திசாவாவிக்கு அண்மையில் அவன் கட்டிய மிரிசுவட்டி தாதுகோபமாகும். அதன் பின்னர் ஒன்பது மாடிகளைக் கொண்ட லோகபாசாத என்ற லோகமகாபாயா எனப்படும். உபோசத மண்டபத்தைப் பிக்குகளுக்காக கட்டுவித்தான். அது இன்று



மிரிசுவட்டி தாதுகோபுரம்



ஆயிரங்கால் மண்டபம் (லோகமகாபாயா)



ரூவான்வெலிசாயா

வெறும் ஆயிரம்கால் மண்டபமாக விளங்குகிறது. துட்டகாமினியின் மிகப்பெரிய பணியாகக் கருதப்படுவது மகாதூபி எனப்படும் ரூவான் வெலிசாயா என்ற தாது கோபத்தை அமைத்தமையாகும்.

**25. துட்டகைமுனுவின் பின்னர் அநுராதபுரத்தினை ஆட்சிசெய்த மன்னர்கள் யாவர்?**

துட்டகைமுனுவின் தம்பி சதாதீசன், அவன் பின் அவனது மகன் வலகம்பா,அதன் பின் மகாசேனன் என்போராவர்.


**26. தாதுசேனமன்னனின் பணிகள் யாவை?**

கி.பி. 455- தொட்டு 473 வரை இலங்கையை ஆண்ட மன்னனாகத் தாதுசேனன் விளங்கியுள்ளான். இந்திய ஆக்கிரமிப்பாளரான ஆறு தமிழ்த் தலைவர்களிடமிருந்து அனுராதபுரத்தை மீட்டு மன்னனாகினான். மக்களது சுபீட்சமான வாழ்க்கைக்கு வேண்டி விவசாய அபிவிருத்திகளில் கவனம் செலுத்தினான். பல சிறிய குளங்களைத் திருத்துவித்ததுடன் மிகப் பெரிய நீர்த்தேக்கமான கலா வாவியை இவன் கட்டுவித்தான். இது 51/2 கி.மீ. நீளமான அணையைக் கொண்டிருக்கிறது. இந்த வாவியின் நீரை அனுராதபுர நகருக்கு ஜயகங்கை என்ற கால்வாயை அமைத்து அதனை திஸ்ஸ வாவியுடன் இணைத்தான். கலாவாவி விகாரை, தக்கிணகிரிவிகாரை முதலான 28 விகாரைகளை அமைத்ததாக வரலாறு கூறுகிறது.

**27. காசியப்பனின் வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறுக.**

(அ) தாதுசேனனின் மகன் காசியப்பன், தனது தமையன் முகலனை இந்தியாவிற்குத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். (கி.பி. 473-491) உதவிப் படைதிரட்டுவதற்காக இந்தியாவிற்கு ஓடிய தமையன் முகலனிட மிருந்து தன்னைப் பாதுகாப்பதற்குரிய இடமாகச் சிகிரியாக் குன்றினைத் தேர்ந்தெடுத்தான்.


(ஆ) ஒன்றரை ஹெக்டேயர் பரப்புடைய சிகிரியாக்குன்றின் உச்சியில் ஒரு அரண்மனையைக் கட்டிக் கொண்டான். மலையின்



சிகிரியாக் குன்று


அடிவாரத்திலும் அவசியமான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டான்.

(இ) சிகிரியா மலை யின் மேற்குப் பகுதி யில் சீகிரிய ஓவியங் களை வரைவித் தான். அவற்றினை இன்றும் காணலாம். இவை உலக ஓவியங்களில் ஒன்றாகப் பேசப் படுவன.



**சிகிரியா ஓவியம்**

(ஈ) மலை உச்சிக்குச் செல்லும் பாதை, பிரமாண்டமான ஒரு சிங்கத்தின் முன்னங் கால்களிடையே, அமைந்த படிகளைக் கொண்டுள்ளது. அதனால் இம்மலை 'சிங்ககிரி' அல்லது 'சீகிரி' என அழைக்கப்பட்டு வருகின்றது.




**28. அநுராதபுரத்தின் இறுதி மன்னன் யார்?**

அநுராதபுரயுகத்தின் இறுதி மன்னன் ஐந்தாம் மகிந்தனாவான். இவனாட்சிக்காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தென்னிந்தியாவைச் சேர்ந்த கேரள, கர்நாடக, சோழ படையணிகளைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தம் பிரதேசங்களில் பிராந்திய நிர்வாகங்களை நடாத்தி வந்திருக்கவேண்டும். இம்மன்னனது பலவீனமான ஆட்சி,சோழர்கள் இந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற ஏதுவானது.

**29. அநுராதபுரத்தின் இறுதிக்காலகட்டத்தில் சோழரின் எழுச்சி பற்றி விளக்குக.**

(அ) கி.பி. 993 ஆம் ஆண்டு சோழமன்னனான முதலாம் ராஜராஜசோழன் அநுராதபுரத்தின் மீது படையெடுத்தான். அவ்வேளை அநுராதபுர மன்னனாக 5 ஆம் மகிந்தன் விளங்கினான். சோழரின் படையெடுப்புக்கு ஈடுகொடுக்க முடியாத மகிந்தன் உருகுணைக்குத் தப்பி ஓடி விட்டான்.

(ஆ) கி.பி. 1017 ஆம் ஆண்டு ராஜராஜசோழனின் மகன் ராஜேந்திர சோழன் பெரும் படையுடன் வந்து உருகுணையையும் ஆக்கிரமித்துக் கொண்டான். மகிந்தன் சிறைபிடிக்கப்பட்டான். மகிந்தனின் சிறைப்பிடிப்போடு இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாக மாறியது.



முதலாம் சிவ தேவாலயம்



இரண்டாம் சிவ தேவாலயம்

(இ) ராஜராஜனும், ராஜேந்திரனும் சோழ இராச்சியத்தின் எழுச்சிக்குக் காரணமான அரசர்கள். சோழ சாம்ராச்சியம் தென் இந்திய நிலப்பரப்புடன் இந்தோனேசியா, இலங்கை வரை பரவியிருந்தது. அவர்களிடம் பலமான கடற்படை இருந்தமை இதனைச் சாத்தியமாக்கியது.

**30. சோழராட்சியை முடிவுறுத்திய முதலாம் விஜயபாகுவின் இளமைக் காலம் குறித்து விபரிக்க?**

(அ) விஜயபாகுவின் இளமைப் பெயர் கீர்த்திகுமார ஆகும். தந்தை மொக்கொல்லா மகாமி, தாய் லோகிதா உருகுணையில் ஆட்சிக் குழப்பங்களும், சோழர் அடிக்கடி தாக்குதல்கள் மேற் கொண்டதாலும், கீர்த்திகுமார தனது சிறு பராயத்தை புத்தராஜ என்ற பிரதேசத் தலைவனின் பாதுகாப்பில் கழித்தான்.

(ஆ) உருகுணையின் அதிகாரத்தை லோகேஸ்வரன் கொண்டிருந்தான். உருகுணையின் ஆட்சிக்குப் போட்டியிட்ட கேசதாது, காசியப்பன் என்போரை அடக்கி அரசனானான். லோகேஸ்வரனை விரும்பாத பலர், கீர்த்திகுமாரவை அரசனாக்கச் சதி செய்து வெற்றி பெற்றனர். புத்தராஜ, போதிராஜ என்பவர்களினுதவியுடன் படைதிரட்டி உருகுணையை 1059 இல் வெற்றி கொண்டு விஜயபாகு என்ற நாமத்துடன் அரசனாகப் பதவி ஏற்றான். எனினும், சோழரின் படையெடுப்புகள் அடிக்கடி உருகுணையில் நிகழ்ந்ததால் மறைந்து வாழ நேர்ந்தது.

**31. விஜயபாகுவின் சோழருக்கு எதிரான போரினை விபரிக்க ?**


(1) சோழ நாட்டில் உள்நாட்டுக்குழப்பங்கள் தலை தூக்கியதால் சோழரால் இலங்கை மீது அதிக கவனம் செலுத்த முடியவில்லை. இந்த தருணத்தில் படைகளைத் திரட்டி விஜயபாகு, முதலில் பொலநறுவையைக் கைப்பற்றிய போதிலும், சோழர் பெரும்படையுடன் மீட்டுக் கொண்டனர்.

(2) தோல்வி கண்ட விஜயபாகு மனந்தளராது, பெரும் படையைத் திரட்டினான். மூன்று மார்க்கங்களில் தனது படைகளை பின்வருமாறு இராசரட்டை நோக்கி அனுப்பினான்.

அ. முதலாவது படை உருகுணை மகாநாககுல நகரிலிருந்து, மாயரட்டை வழியாக அனுராதபுரத்தை நோக்கிச் சென்றது.

ஆ. இரண்டாவது படை கிழக்குக் கரையோரமாகப் பொலநறுவைக்கு அனுப்பப்பட்டது.

இ. மூன்றாவது படைக்கு விஜயபாகுவே தலைமை தாங்கி வடக்கு நோக்கி மகியங்கனை ஊடாகப் பொலநறுவைக்குச் சென்றது.




**விஜயபாகுவின் படை நகர்வு**


(3) முதலாவது படையணி, இந்தியாவிலிருந்து சோழர்களுக்கு உதவி கிடைக்காது தடுக்கும் முகமாக மாந்தையில் நிறுத்தப் பட்டது. இவ்வாறான படை நகர்த்தல் மூலம் பொலநறுவையைக் கைப்பற்றிக் கொண்டான். 53 ஆண்டுகளாகச் சோழரின் ஆதிக்கத்தினுள் இருந்த இலங்கை, விஜயபாகுவின் கீழ் வந்தது.

(4) கி.பி. 1072 இல் பொலநறுவையை தலைநகரமாகக் கொண்டு கி.பி. 1110 வரை விஜயபாகு அரசாண்டான். அதற்குச் சோழரிட்ட பெயரான ஜனநாத மங்கலம் என்பதை, 'விஜயராஜபுரம்' என மாற்றியழைப் பித்தான்.

**32. விஜயபாகு நாட்டிற்கு ஆற்றிய தொண்டுகள் யாவை ?**

(அ) நீர்பாசனக் குளங்களையும் கால்வாய்களையும் புனருத்தாரணம் செய்வித்தான். எலஹராக் கால்வாயைப் புனர்நிர்மாணம் செய்து, மின்னேரியா, கவுடுல்ல, கந்தளாய் ஆகிய குளங்களை அதன் மூலம் இணைத்தான். நாச்சடுவை, மகாகணதராவ, மஹகல்கடவலை முதலான குளங்களைச் செப்பனிட்டான்.

(ஆ) சமயத் தொண்டுகளாக பௌத்தத்திற்கு பல ஆற்றினான். 'உபசம்பதா' என்ற சடங்கினை மீண்டும் நடாத்தினான். அரசமாளிகைக்கு வடக்கே தலதா மாளிகை (சுவாதாகே) யைக் கட்டுவித்தான். பௌத்த ஆலயங்களைச் செம்மைப்படுத்தினான்.



**தலதா மாளிகை - பொலனறுவை**

**33. விஜயபாகுவின் வெளிநாட்டுத் தொடர்புகளை விபரிக்க.**

1.சோழ இராச்சியத்திற்கு விரோதமான வெளிநாட்டு அரசுகளுடன் தொடர்பு கொண்டுள்ளான்.

2.கலிங்க இளவரசியான திரிலோகசுந்தரியைத் திருமணம் செய்து தனது இராணியாக்கிக் கொண்டான்.

3.விஜயபாகு மனது சகோதரியான மித்தாவைப் பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு திருமணம் செய்து கொடுத்தான்.

4.பர்மாவுடன் சமயத்தொடர்புகளைப் பேணினான்.

**34. விஜயபாகுவின் மரணத்தின் பின் யாது நிகழ்ந்தது?**


1. அரச வாரிசுரிமை தொடர்பாக எழுந்த பிரச்சினைகளால் நாடு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டது.

அ. இராஜரட்டை - கஜபாகு


ஆ. தக்கின தேசம் - மானாபரணன் / கீர்த்தஸ்ரீமேவன்

இ. தொலஸ் தாஸ்ரட்ட - கீர்த்தி ஸ்ரீ வல்லபன் (பன்னீராயிரம் நாடுகள்/ கிராமங்கள்)

ஈ. அட்டதாஸ்ரட்ட - ஸ்ரீவல்லபன் (எண்ணாயிரம் நாடுகள்/ கிராமங்கள்)



**35. பராக்கிரமபாகுவின் இளமைக் காலத்தினைச் சுருக்கமாக விபரிக்குக?**




1. தக்கின தேசத்தை ஆட்சி செய்த மானாபரணனின் மகன் பராக்கிரமபாகு ஆவான். முதலாம் விஜயபாகுவின் மகளான இரத்தினாவளி, பராக்கிரமபாகுவின் தாய், மானாபரணன் இறக்கும் போது பராக்கிரமபாகு சிறுவனாகவிருந்தான். அதனால் தக்கின தேசத்தின் ஆட்சியாளனாக பராக்கிரம பாகுவின் ஒரு சிறு தந்தையான கீர்த்தி ஸ்ரீமேவன் நியமிக்கப்பட்டான். அதேவேளை உருகுணை எனப்படும் தொலஸ்தாஸ்ரட்ட அரசின் மன்னனாக பராக்கிரமபாகுவின் இன்னொரு சிறிய தந்தையான கீர்த்தி ஸ்ரீவல்லபவன் விளங்கினான்.

2. சிறிய தந்தையரின் பாராமரிப்பிலேயே பராக்கிரமபாகு வளர்ந்து வந்தான். அரசியல் நுட்பங்கள், போர்க்கலை என்பவற்றில் பராக்கிரமபாகு பயிற்றுவிக்கப்பட்டான். இளம் பராயத்திலிருந்தே இலங்கை முழுவதற்கும் அரசனாக வேண்டுமென்ற கனவு பராக்கிரமபாகுவிடம் இருந்தது.

**36. பராக்கிரமபாகு இலங்கை முழுவதற்கும் எவ்வாறு அரசனானான்?**

1. தக்கின தேசத்தின் ஆட்சியாளராக விளங்கிய கீர்த்தி ஸ்ரீ மேவன் இறக்க, பராக்கிரமபாகு அத் தேசத்தின் மன்னனாகினான்.



2. தக்கின தேசத்தின் மன்னனாகியதும், இராஜரட்டையைக் கைப்பற்றும் விருப்புக் கொண்டான். இராஜரட்டை மன்னன் படைப்பலம் வாய்ந்தவனாக இருந்தான். அதனால் பராக்கிரமபாகுவுக்கும் கஜபாவுக்குமிடையிலான போர் நீண்ட காலம் தொடர்ந்தது. எனினும் கஜபாகு வயோதிபத்தினால் இறந்ததும், பொலநறுவையைப் பராக்கிரமபாகு கைப்பற்றிக் கொண்டான்.


3.உருகுணை மட்டும் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்குட்படாதிருந்தது. அதனை ஆட்சி செய்த மானாபரணன், கீர்த்தி ஸ்ரீ வல்லபனின் மகன். அவன் தொலஸ்தாஸ்ரட்டவையும், அட்டதாஸ்ரட்டவையும்

ஒன்றாக்கி உருகுணையை ஆண்டு வந்தான். அவனுக்குப் பக்கபலமாக அவனுடைய தாயார் சுகலாதேவி விளங்கினாள். எனினும், பராக்கிரமபாகு பலத்த யுத்தத்தின் பின் உருகுணையைக் கைப்பற்றி முழு இலங்கைக்கும் அரசனானான். இலங்கையை ஏகச் சக்கரவர்த்தியாக கி.பி. 1153 தொட்டு கி.பி. 1186 வரை முப்பத்திமூன்றாண்டுகள் ஆட்சி செய்தான்.

4.உருகுணையிலிருந்த தந்ததாதினை (பற்சின்னம்) பொலநறுவைக்கும் கொண்டு வந்தான். விஜயபாகு பொலநறுவையில் நிறுவிய தலதா மாளிகையில் வைத்தான். தந்ததாதினை வைத்திருப்பவனே இலங்கையின் ஆட்சியாளன் என்ற மரபின்படி பராக்கிரமபாகு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசனானான். அதன்பின் மகாபராக்கிரமபாகு என அழைக்கப்படலானான்.

**37. மகா பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள் எவை?**


1. இலங்கையின் வரலாற்றுக் காலம் பெரும் நீர்த்தேக்கமான பராக்கிரம சமுத்திரத்தை இவன் அமைப்பித்து விவசாயத்தை விருத்தியாக்கினான். தோபாவாவி, தும்புட்டுது வாவி, ஏரம்பது வாவி என்பனவற்றினை இணைத்து இப்பெரும் நீர்த்தேக்கத்தை அவன் அமைத்தான். 'வானிலிருந்து வீழ்கின்ற மழையில் ஒரு துளியை யேனும் கடலைச் சென்றடைய விட மாட்டேன்' என்பது பராக்கிரமபாகுவின் கொள்கை.


**மகா பராக்கிரமபாகு**


2. பொலநறுவையில் பல சமயக் கட்டிடங்களைக் கட்டிய பெருமை பராக்கிரம பாகுவிற்குரியது. லங்காதிலக விகாரை, சிலை வீடு, திவங்க சிலை வீடு, தூபராம கல் விகாரை, உத்தரவிகாரை, ஆலாபன பிரிவேனா, ஜேத்தவன ராம, கிரிவிகாரை என்பவற்றினை அமைப்பித்தான்.

3. பராக்கிரமபாகு வெளிநாடுகள் மீது படையெடுப்புக்கள் செய்துள்ளான். பராக்கிரம பாண்டியனுக்கு உதவ இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்குப் படை சென்றுள்ளது. பர்மா மீது படையெடுக்கப்பட்டுள்ளது.


**பராக்கிரம சமுத்திரம்**



கிரிவிகாரை



தூபாராம விகாரை

**38 பராக்கிரமபாகுவின் ஏனைய பணிகள் யாவை?**


(அ) குருநாகல் மாவட்டத்தில் பண்டுவாவியை விரிவாக்கி விவசாயத்திற்குத் தேவையான நீர் வசதிகளை ஏற்படுத்தினான்.

(ஆ) தெதுறுஓயாநதிக்குக் குறுக்கே மூன்று அணைக்கட்டுகள் அமைத்து கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனவசதிகள் ஏற்படுத்தினான்.

(இ) பஸ்துன்கோறளை சதுப்புநிலத்தை விவசாயத்திற்குப் பொருத்தமானதாக மாற்றினான்.

(ஈ) வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக கொழும்பு, சிலாபம், கற்பிட்டி முதலான துறைமுகங்களை அபிவிருத்தி செய்தான்.


(உ) அம்பன் கங்கையிலிருந்து அங்கமடில்ல கால்வாய் மூலம் பராக்கிரமசமுத்திரத்திற்கு நீர் கொண்டு செல்லப்பட்டது. எலஹராக்கால்வாய் சீர்செய்யப்பட்டு அதன் மூலம் மின்னேரியாவுக்கு நிர் கொண்டு செல்லப்பட்டது.



தாமரைப்பொய்கை

(ஊ) பராக்கிரமசமுத்திரத்திற்கு நடுவிலிருந்த தீவுத்திட்டில் வசந்தமாளிகை ஒன்றினைக் கட்டினான்.

(எ) நகரை அலங்கரிக்கும் பொருட்டு ஆங்காங்கு பொய்கைகள் அமைத்தான். தாமரை வடிவப் பொய்கை குறிப்பிடத்தக்கது.



தெமிழமகாசாயா

(எ) பொலநறுவ கதிகதாவ என்றபெயரில் பிக்குகளுக்கான ஒழுக்கநெறிக்கோவை ஒன்றினை எழுதுவித்தான். கல்விகாரையில் கல்வெட்டிலும் பொறிப்பித்தான்.

(ஏ) தென்னிந்தியப்போரில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களைக் கொண்டு தெமிழமகாசாயா (தமிழதூபம்) ஒன்யினைக் கட்டுவித்தான். அவர்களின் உழைப்பிற்கு மதிப்பளிக்கும் வகையில் அதற்கு அவ்வாறு பெயரிட்டான்.

**39. நிசங்கமல்லனின் ஆட்சியைச் சுருக்கமாக விபரிக்க?**

1. மகாபராக்கிரமபாகு வாரிசில்லாமல் மரணமடைய நேர்ந்தது. அரசுரிமை பற்றிப் பல பிரச்சினைகள் நிலவிய வேளையில் நிசங்கமல்லன் ஆட்சியைத் தனதாக்கி கொண்டான்.

2. நிசங்க மல்லன் கலிங்க நாட்டினைச் சேர்ந்தவன். ஆந்திரா, ஒரிஸா, பீகார் மாநிலங்களின் பகுதிகளைக் கலிங்க தேசம் உள்ளடக்கியிருந்தது. கலிங்க தேசத்திற்கும் இலங்கைக்கும் விவாக உறவுகள் இருந்துள்ளன. நிசங்க மல்லன் அவ்வகையில் பராக்கிரமபாகுவின் மருமகன் முறையினன்.

3. மகாபராக்கிரமபாகுவின் பின்னர் இலங்கையின் ஆட்சியை சிதறிவிடாது பாதுகாத்தவன் நிசங்க மல்லன், கி.பி. 1187 தொட்டு கி.பி. 1196 வரை ஆட்சி புரிந்துள்ளான்.

**40. நிசங்கமல்லனின் பணிகள் எவை?**

(அ) ரன்கொத் விகாரை, வட்டதாகே, ஏழு மாடிகளைக் கொண்ட சத்மஹல் பிரசாதய, நிசங்கலதா மண்டபம் என்பன முக்கியமானவை. வட்டதாகே ஒரு புதுமையான விகாரை, பிரமாண்டமான புத்தர் சிலைகளை அதில் காணலாம்.


றன்கொத் விகாரை


சத்மஹப்பிரசாதய


வட்டதாகே


(ஆ) தம்புளை விகாரையைப் புனரமைத்து அங்குள்ள புத்தர் சிலைகளுக்குத் தங்கமுலாம் பூசுவித்தான்.

(இ) நீர்ப்பாசன விருத்திக்காகப் பாண்டி விஜயகுளம் (கல்மடியானகுளம்) அமைப்பித்தான். பராக்கிரமசமுத்திரத்தைப் புனரமைத்தான்.

(ஈ) ஆகக்கூடிய கல்வெட்டுக்களை உருவாக்கிய மன்னன் நிசங்கமல்லனே. இவன் அமைத்த மிக நிளமான கல்வெட்டு

பொலநறுவையிலுள்ள கல்பொத்த ஆகும். இதில் புத்தசாசனத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தானங்கள் தொடர்பான விடயங்களையும் பொறிப்பித்துள்ளான்.

(உ) துலாபாரம் என்ற உடல் எடைக்கு எடை வழங்கும் தானத்தை வருடாவருடம் வழங்கி வந்துள்ளான்.



கல் புத்தகம்

**41. இலங்கை அரசுக்கும் தென்னிலங்கைக்குமிடையிலான படையெடுப்புகளை விபரிக்க.**

(அ) இலங்கை தென்னிந்தியாவுக்கு அருகில் அமைந்திருப்பதால் சேர,சோழ, பாண்டிய, பல்லவ அரசுகள் வலுவடையும்போது படையெடுத்தார்கள். இலங்கை மீது அரசியல் ரீதியான செல்வாக்கினைப் பிரயோகித்தார்கள்.

(ஆ) சூரதீச மன்னன் காலத்தில் சேனன், குத்திகன் என்ற இரு குதிரை வியாபாரிகள் இலங்கையைக் கைப்பற்றி ஆண்டனர்.

(ஆ) கி.மு.145 இல் எல்லாளன் என்பான், அசேலன் என்ற சிங்கள மன்னனை வெற்றி கொண்டு 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சிபுரிந்தான்.

(இ) கி.மு.103 இல் வட்டகாமினி காலத்தில் 7 தமிழர்கள் அநுராதபுரத்தினைக் கைப்பற்றினர். இதில் இருவர் இந்தியாவுக்குத் திரும்பிவிட எஞ்சியவர்களான புலகத்தன், பாகியான், பணயமாறன், பிளையமாறன், தாடிகன் என்ற பஞ்சதிராவிடர் ஒருவர்பின் ஒருவராக 14 வருடங்கள் ஆட்சி புரிந்தனர்.

(ஈ) கி.பி.8 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனான ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் இலங்கையைக் கைப்பற்றினான். இலங்கை மன்னன் சேனனிடம் திறைபெற்று மீண்டான்.

(உ) 5 ஆம் காசியப்பன், பாண்டிய மன்னனுக்கு உதவும் பொருட்டு சோழருக்கு எதிராகப் படையொன்றனுப்பினான். தோல்வி கண்ட பாண்டிய மன்னன் இலங்கையில் சரண் புகுந்தான். அதனால் முதலாம் பராந்தகன் இலங்கை மீது படையெடுத்து திரவியங்களைக் கொள்ளையிட்டு மீண்டான்.

(ஊ) இராஜராஜசோழன் இலங்கை மீது படையெடுத்து கைப்பற்றிக் கொண்டான். அதன்பின்னர் அவனது மகனான இராஜேந்திரசோழன் படையெடுத்து, 5 - ம் மகிந்தனைச் சிறைபிடித்துச் சென்றான். பொலநறுவை இலங்கையின் தலைநகரமாக மாறியது. மும்முடிச்சோழமண்டலம் என்றழைக்கப்பட்டது.

## பயிற்சி -1

1. வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்கின்ற இரு படிப்பினைகளைக் கூறுக.
2. பண்டைய வரலாற்றினை அறிய உதவும் நான்கு தடயங்களைத் தருக.
3. தொல்லியல் சான்றுகள் நான்கு தருக.
4. A நிரலையும் B நிரலையும் இணைக்குக.

| | A நிரல் | | B நிரல் |
|---|---|---|---|
| 1. | ஞாபகச்சின்னம் | (அ) | ஒரு பழையநாகரிகம் |
| 2. | பிராமி | (ஆ) | வரலாற்றுக்கட்டிடம் |
| 3. | கல்வெட்டு | (இ) | பழையகால எழுத்து |
| 4. | இந்துவெளி | (ஈ) | கல்லில் எழுதிய சாசனம் |
| 5. | இராமாயணம் | (உ) | வரலாற்று நூல் |
| 6. | மஹாவம்சம் | (ஊ) | இதிகாசம் |

5.இலங்கையில் வரலாற்றிற்கு முற்பட்ட ஐந்து இடங்களின் பெயர்களைக் குறிக்க.

6. ஆரியர்களின் அரசியல் முறை அல்லாதது?
   (அ) அரசன் இராச்சியத்தின் தலைவனாக இருந்தான்.
   (ஆ) சாதிமுறையைக் கொண்டு மக்கள் தொழில்களில் ஈடுபட்டனர்
   (இ) மக்களாட்சி முறைமை நிலவியது.
   (ஈ) காமினி என்பான் கிராமத்தை நிருவகித்தான்.

7. ஆரியர்களின் பொருளாதார நடவடிக்கைகள்:
   (அ) விவசாயமே சீவனோபாயமாக இருந்தது.
   (ஆ) கால்நடை வளர்ப்பு இருந்தது.
   (இ) வர்த்தகம் பொருளாதாரத்தில் உயரிடம் பெற்றிருந்தது.
   (ஈ) இவை அனைத்தும்.

(விடைகள்: 4 (1) ஆ, (2) இ, (3) ஈ, (4) அ, (5) ஊ, (6) உ.
5. பொம்பரிப்பு, இபன்கடுவ, குருகே, பலாங்கொடை, இராவணஎல
6 (இ), 7 (ஈ)

## பயிற்சி - 2

**1.தரப்பட்ட இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டப்பட்டவற்றின் பெயர்களை அடையாளம் காண்க.**


1. கதம்பநதி என்ற மல்வத்து ஓயாவைக் குறிக்கும் எழுத்து.
   (அ) A (ஆ) B (இ) C (ஈ) D
2. களனி கங்கை, மகாவலிகங்கை என்பனவற்றைக் குறிக்கும் எழுத்துக்கள்.
   (அ) B,C (ஆ) D,C
   (இ) E,G (ஈ) C,D

3. வளவை கங்கை, மாணிக்க கங்கை என்பனவற்றைக் குறிக்கும் எழுத்துக்கள்.
(அ) E,G (ஆ) A,B
(இ) E,F (ஈ) F,G

4. தாமிரபரணி, திகவாவி, கல்யாணி எனுமிடங்களைக் குறிக்கும் இலக்கங்கள்.
(அ) 1, 7, 6. (ஆ) 3, 4, 7.
(இ) 1, 3, 7 (ஈ) 2, 3, 4

5. உபதிஸ்ஸகமம், அனுராதகமம், விஜிதகமம் எனும் குடியிருப்புகளைக் குறிக்கும் இலக்கங்கள்.
(அ) 5, 6, 7 (ஆ) 3, 4, 5
(இ) 6, 7, 8 (ஈ) 4, 5, 6

6. (8) எனும் இலக்கம் குறிக்கும் இடம்
(அ) மஹியங்கணை (ஆ) திகவாபி
(இ) கல்யாணி (ஈ) அனுராதகமம்




(7) ஆரியர் இலங்கையில் குடியேறிய நதிப்பள்ளத்தாக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.
(8) ஆரியர் அமைத்துக் கொண்ட குடியிருப்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
(9) அனுராதகமம், உபதிஸ்ஸகமம், விஜிதகமம் ஆகிய குடியிருப்புகளை உருவாக்கியவர்கள் யாவர்?
(10) பத்தகச்சானா, பண்டுவாசுதேவா, உரோஹண, விஜயன். ஆகியோர் இலங்கையில் தரையிறங்கிய ஒழுங்கைத் தருக.
(விடைகள்: 1. (அ), 2. (ஆ), 3. (அ), 4. (அ), 5. (ஆ), 6. (அ).
7. கதம்பநதி, காலஓயா, மாணிக்க கங்கை.
8. தாமிரபரணி, அனுராதகமம், திகவாபி, கஜரகமம்
9. அனுராத, உபதிஸ்ஸ, விஜித
10. விஜயன், பண்டுவாசுதேவா, பத்தகச்சானா, உரோஹண)

**பயிற்சி - 3**

1. பண்டுகாபயனின் பெற்றோர் யார்?
(அ) சுவர்ணபாலி, தீகாயு
(ஆ) உன்மத்த சித்திரா, திக்காகாமினி
(இ) சந்திரபானு, பாலி

2.சித்திராவை மாமன்மார் ஏன் ஒற்றைத் தூண் கோபுரத்தில் தனிமைப்படுத்தி வைத்திருந்தனர்?

(அ) அவள் மிகுந்த அழகி என்பதால்.

(ஆ) அவளை மணப்பவனால் தங்களுக்கு ஆபத்து வரும் என்பதால்.

(இ) அவளுக்குப் பிறக்கும் மகனால் தங்களுக்கு மரணம் சம்பவிக்கும் என்பதால்.

3.பண்டுகாபயன் யாரிடம் சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான்?

(அ) பண்டுலன் (ஆ) சந்திரபாணு

(இ) கிரிகண்டசிவன் (இ) தீக்காயு

4.பண்டுகாபயன் முதன் முதல் படைதிரட்டத் தங்கியிருந்தவிடம்

(அ) லோவாகட (ஆ) திம்புலாகலை

(இ) லபுணோருவ (ஈ) கசாகலை

5.பண்டுகாபயனின் முதலாவது யுத்தம் எவருடன் நடந்தது?

(அ) கிரிகண்டசிவன் (ஆ) அபயன்

(இ) அசேலன் (ஈ) திஸ்ஸன்

6.பண்டுகாபய மன்னன் அரசகட்டிலேறிய இராசதானி எது?

(அ) தாமிரபரணி (ஆ) அனுராதகமம்

(ஈ) விஜிதகமம் (ஈ) மஹாகமம்

7.முதன் முதல் நகரம் நிர்மாணித்த பண்டுகாபயன் அதில் அமைக்காதுவிட்ட ஒன்று:

(அ) பாதுகாப்பிற்காக மதில்கள்

(ஆ) நகரைச் சுற்றி அகழி

(இ) தபால் கந்தோர்

(ஈ) நகரத்தில் வைத்தியசாலை

8.பண்டுகாபயன் தன்னாட்சியில் உருவாக்கிய புதிய பதவி யாது?

(அ) மந்திரி (ஆ) சேனாதிபதி

(இ) நகரகுத்திகன் (இ) நகர சுத்திகரிப்பாளர்

9.பண்டுகாபயனால் அமைக்கப்படாத ஆலயம்

(அ) காலவேலன் கோயில் (ஆ) சித்தராஜா கோயில்

(இ) வெசமுனி கோயில் (ஈ) சேத்தி கோயில்

10.திரியாயில் கட்டப்பட்ட தாதுகோபம் யாது?

(அ) கிரிஹடுசாய (ஆ) ரூவான்வெலிசாய

(இ) தூபராமம் (ஈ) ஆதின

11.பண்டுகாபயன் காலத்தில் அமைக்கப்படாத குளம் யாது?

(அ) அபயவாவி (ஆ) காமினி வாவி

(இ) மின்னேரியா (ஈ) ஜயவாவி

12.பண்டுகாபயன் காலத்தில் வழக்கத்தில் இருந்த தொழில்கள் அல்லாதது எது?

(அ) இரும்புத் தொழிலும் பருத்தி நெசவும்

(ஆ) பயிர்ச்செய்கையும் விலங்கு வளர்ப்பும்

(இ) மட்பாண்டம் வனைதலும் அணிகலன் செய்தலும்

(ஈ) பட்டுநெசவும், தங்க ஆபரணத்தொழிலும்

13. A நிரலில் உள்ளவை B நிரலில் உள்ளவற்றோடு ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தமுடையவை. சரியாக இணைக்கவும்.

| A | B |
|---|---|
| 1. பண்டுவாசுதேவன் | (அ) நகரகுத்திகன் |
| 2. சித்திரா | (ஆ) கிரிசடுசாய |
| 3. கிரித்தலை | (இ) வெசமுனி |
| 4. பண்டுலன் | (உ) பச்சகச்சானா |
| 5. பனைமரம் | (ஊ) திக்காகாமினி |
| 6. அபயன் | (எ) கிரிகண்டசிவன் |
| 7. தபசு | (ஏ) பிராமணன் |

(விடைகள்: 1 (ஆ), 2 (இ), 3 (அ), 4 (ஈ), 5 (அ), 6 (ஆ), 7 (இ), 8 (இ), 9 (ஈ), 10 (அ), 11 (இ), 12 (ஈ), 13 – 1 – (உ), 2 – (ஊ), 3 – (எ), 4 – (ஏ), 5 – (இ), 6 – (அ), 7 – (ஆ)

## பயிற்சி - 4

1. அசோகச் சக்கிரவர்த்தியின் இராச்சியம்

(அ) அனுராதபுரம் இராச்சியம் (ஆ) மௌரிய இராச்சியம்

(இ) பொலநறுவை இராச்சியம் (ஈ) பாண்டிய இராச்சியம்

2.முத்து, இரத்தினக் கற்கள் அடங்கிய பரிசுப் பொதியை தேவநம்பியதீசன் வழங்க அதனை அசோகனிடம் சேர்த்தவன்

(அ) அரிட்டன் (ஆ) உத்தியன்

(இ) மகிந்தன் (ஈ) சுமணன்

3.அசோகன், தேவநம்பியதீசனுக்கு அனுப்பி வைத்த முக்கிய செய்தி

(அ) பட்டாபிஷேகப் பொருட்களை அனுப்பி வைக்கிறேன். மீண்டும் பட்டாபிஷேகம் செய்து கொள்க.

(ஆ) நான் புத்தனின் வழியைப் பின்பற்றுகிறேன். நீங்களும் அவ்வழியில் வருவதை விரும்புகிறேன்.

(இ) மகிந்த தேரரை இலங்கைக்கு அனுப்பி வைக்கின்றேன்.

(ஈ) வெள்ளரசக்கிளை அனுப்பி வைக்கின்றேன்.

4.பட்டாபிஷேகப் பொருள் அல்லாதது

(அ) வெண்குடை (ஆ) மங்கள வாள்

(இ) ஆலவட்டம் (ஈ) இடம்புரிச்சங்கு

5.இலங்கைக்கு வருகை தந்த பௌத்த குழுவுக்குத் தலைமை தாங்கியவர் யார்,

(அ) சங்கமித்தை (ஆ) அரிட்டன்

(இ) மகிந்தர் (ஈ), சுமணர்

6.எவருடைய தலைமையில் வெள்ளரசுக்கிளை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது?

(அ) மகிந்ததேரர் (ஆ) சங்கமித்தை தேரி

(இ) அரிட்டதேரர் (ஈ) அனுலாதேவி

7.மகிந்ததேரர், தேவநம்பியதீசனைச் சந்தித்த இடம் யாது?

(அ) மிசாகபர்வதம் (ஆ) அனுராதபுரம்

(இ) மகாமேகவனம் (ஈ) தூபராம

8.பௌத்ததூதரும் அரசனும் சந்தித்த நாள்

(அ) பொசன் பௌர்ணமி (ஆ) போயா தினம்

(இ) உந்துவப் பௌர்ணமி (ஈ0 துமிந்த நாள்

9.மகிந்தர் தங்கியிருந்து போதனை செய்த இடம்

(அ) அனுராதபுரம் (ஆ) மகாமேகவனம்

(இ) மகாவிகாரை (ஈ) தூபராம

10.கௌதம புத்தரின் இலங்கை வருகையைக் குறிக்காத சம்பவம்

(அ) இயக்கரை அடக்க மஹியங்கனைக்கு வந்தமை

(ஆ) இரு நாக மன்னர்களுக்கு இடையிலான சிம்மாசனப் பிரச்சினையைத் தீர்க்க நாகதீபத்திற்கு வந்தமை

(இ) விஜயனுக்கு உதவ தாமிரபரணிக்கு வந்தமை

(ஈ) மணிஅக்கிதர் என்ற நாக மன்னனின் அழைப்பின் பேரில் களனிக்கு வந்தமை

**11. பின்வரும் பெயர்களை பயன்படுத்தி கீறிட்ட இடங்களை நிரப்புக.**

(1) அரிட்டதேரர் (2) தூபராம (3) சங்கமித்தை

(4) அனுலாதேவி (5) தேவநம்பியதீசன் (6) மகாமேகவனம்

(7) பொசன் பொளர்ணமி (8) துமிந்த வருகை

(9) மகாவிகாரை (10) படகம (11) ஜம்புக்கோள விகாரை

(12) அட்டுவா

(அ) இலங்கையின் முதலாவது தாதுகோபம்.......................ஆகும்.

(ஆ) ஸ்ரீ மகாபோதியில் வெள்ளரசக்கிளையை .........................நாட்டினார்.

(இ) இலங்கையில் பௌத்தமதத்தை முதன் முதல் தழுவி பிக்குவாகியவர் ...........................ஆவார்.

(ஈ) மகிந்ததேரர் தங்குவதற்கு அனுராதபுரத்தில் வழங்கப்பட்ட பூங்கா ..............................ஆகும்.

(உ) ......................................இலங்கையின் முதலாவது பௌத்த மன்னனாவான்.

(ஊ) மிகிந்தலையில் மகிந்ததேரர்..........................தினத்தில் காட்சி கொடுத்தார்.

(எ) இலங்கையின் முதலாவது பிக்குணி..........................ஆவார்.

(ஏ) சங்கமித்தாவால் வெள்ளரசக்கிளை கொண்டு வந்த நிகழ்வு........................எனப்படும்.

(ஐ) இலங்கையின் பௌத்த மைய நிலையமாக...................விளங்கியது.

(ஒ) பௌத்த இலக்கிமாக..........................விளங்குகிறது.

(ஓ) வடக்கே தேவநம்பியதீசன் அமைத்த சமய தலம்......... ..........ஆகும்.

(ஔ) மிகிந்தலையில்..................................நிறுவப்பட்டது

(விடைகள்: 1 (ஆ). 2 (அ), 3 (ஆ), 4 (ஈ), 5 (இ),6 (ஆ), 7 (அ), 8 (அ), 9 (ஆ), 10 (.), 11 (அ), (2), (ஆ) – (3), (இ) – (1), (ஈ) – (6), (உ) – (5),(ஊ) – (7), (எ) – (4), (ஏ) – (8), (ஐ) – (9), (ஒ) – (12), (ஓ) – (11), (ஔ) – (10)

## பயிற்சி – 5

1.அனுராதபுரத்தினை எம் மன்னன் ஆட்சி செய்தபோது எல்லாளன் வெற்றி கொண்டு அரசனாகினான்?

(அ) உத்தியன் (ஆ) சூரதீசன்

(இ) அசேலன் (இ) தேவநம்பியதீசன்

2. களுகங்கையில் இருந்து மகாவலிகங்கைப் போக்கிற்கு வடக்கே இருந்த இராச்சியம் யாது?

(அ) உருகுணை (ஆ) இராசரட்டை

(இ) நாகதீபம் (ஈ) மகாகமம்

3. மாகமத்தின் முதலாவது சிற்றரசன் யார்?

(அ) மகாநாகன் (ஆ) ஜத்தலாலாதீசன்

(இ) கோதாபயன் (ஈ) கவந்ததீசன்

4. உருகுணையிலிருந்த சிற்றரசுகள் எவை?

(அ) நாகதீபம், உத்தரதேசம், வன்னி

(ஆ) கிரி, சோமா, சேரு, கல்யாணி

(இ) களனி, இராசரட்டை, மகாகமம்

(ஈ) தீகவாபி, கோகர்ண, மாந்தை

5. கவந்ததீசனின் மனைவி யார்?

(அ) சோமாதேவி (ஆ) விகாரைமாதேவி

(இ) அனுலா (ஈ) சுவர்ணபாலி

6. கவந்ததீசனின் முதலாவது இலட்சியம் எதுவாக இருந்தது?

(அ) உருகுணையை ஒரு குடைக்கீழ் ஒருமுகப்படுத்துவது.

(ஆ) இலங்கையை ஒரு குடைக்கீழ் கொண்டு வருவது.

(இ) இராசரட்டையைக் கைப்பற்றுவது

(ஈ) அனைத்தும்

7. துட்டகைமுனுவின் இளமைப் பெயர் யாது.

(அ) சதாதீசன் (ஆ) காமினி அபயன்

(இ) மகாநாகன் (ஈ) தீசன்

8. புதல்வர்களிடம் கவந்ததீசன் பெற முயன்ற வாக்குறுதி அல்லாதது எது?

(அ) சகோதரர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

(ஆ) பிக்குகளுக்கும் புத்தசாசனத்திற்கும் விசுவாசமாக இருக்க வேண்டும்

(இ) எல்லாளன் மீது படை எடுக்க வேண்டும்.

(ஈ) தமிழர்கள் மீது படை நடாத்தக்கூடாது.

9. துட்டகைமுனு ஏன் தந்தையுடன் முரண்பட்டான்?

(அ) சதாதீசனுக்கு அரசைக் கொடுக்க முயன்றதால்.

(ஆ) தமிழர்கள் மீது போர் தொடுப்பதைத் தடுத்தலால்

(இ) மலைநாட்டிற்குத் தப்பி ஓடியதால்

(ஈ) பத்து மல்லர்களைப் படையில் சேர்த்ததால்

10. எல்லாளன் இலங்கையை எத்தனை வருடங்கள் ஆண்டான்?

(அ) 36 ஆண்டுகள் (ஆ) 44 ஆண்டுகள்

(இ) 41 ஆண்டுகள் (ஈ) 39 ஆண்டுகள்

11. துட்டகைமுனு மன்னன் அமைக்காத கட்டிடம்

(அ) ருவான்வெலிசாயா (ஆ) தூபராம

(இ) லோவாமகாபாய (ஈ) மிரிசுட்டி

12. பின்வரும் வாக்கியங்களை வாசித்து அவை சரியாயின் 'சரி' என்றும் பிழையாயின் 'தவறு' என்றும் குறிக்க.

(அ) துட்டகைமுனுவின் தந்தையின் பெயர் கவந்ததீசன். சரி / தவறு

(ஆ) லோவாமகாபாயாவை நிர்மாணித்தவன் கவந்ததீசன் சரி / தவறு

(இ) உருகுணை எல்லாளனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சரி / தவறு

(ஈ) களனிதீசனின் மகள் விகாரைமாதேவி சரி / தவறு

(உ) ருவான்வெலிசாயாவை மகாதூபி என்பர் சரி / தவறு

(விடைகள்: 1 (இ), 2 (ஆ), 3 (அ), 4 (ஆ), 5 (ஆ), 6 (அ), 7 (ஆ), 8 (இ), 9 (ஆ), 10 (ஆ), 11 (ஆ). 12 (அ) சரி, (ஆ) தவறு, (இ) தவறு, (ஈ) சரி, (உ) சரி,

**பயிற்சி – 6**

கீறிட்ட இடங்களில் பொருத்தமான வாக்கியங்களை இடுக.

1.வடஇந்தியாவின் மௌரிய வம்ச அரசன் ..................... உடன் தேவநம்பியதீசன் நட்புக் கொண்டிருந்தான்.

2. அசோகனால் ..................... எனும் பட்டப்பெயர் தீசனுக்கு வழங்கப்பட்டது.

3. இலங்கைக்கு ................ பௌத்த மதத்தைக் கொண்டு வந்தார்.

4. சங்கமித்தை ..................... இலங்கைக்குக் கொண்டு வந்தார்.

5. துட்டகைமுனு மன்னனின தந்தை பெயர் .................. ஆகும். தாயின் பெயர் ...................... ஆகும்.

6. ..........................,லோவமஹாபாயா என்பன துட்டகைமுனு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட புனிதத்தலங்களாகும்.

7. எல்லாள மன்னன் ...................... வம்சத்தைச்சேர்ந்த மன்னனாவான்.

8. இவன் ................. ஆண்டுகள் அநுராதபுரத்தை நல்ல முறையில் ஆட்சி செய்தான்.

**பயிற்சி – 7**


1. இலங்கையிற் செல்வாக்குச் செலுத்திய நான்கு இந்திய இராச்சியங்களைக் குறிப்பிடுக.

2.இவற்றுள் இலங்கைக்கு அண்மை யிலிருந்த இராச்சியம் எது?

3.தென்னிந்திய அரசுகளின் உதவி பெற்று, அரச உரிமை பெற்ற இரண்டு இலங்கை மன்னர்களைக் குறிப்பிடுக.

4. முதலாம் சேனன் காலத்தில் இலங்கை மீது படையெடுத்த தென்னிந்திய மன்னன் யார்?


5. அருகே உள்ள இலங்கை- இந்திய வரைபடத்தில் பின்வருவன வற்றைக் குறித்துப் பெயரிடுக.



| | | | |
|---|---|---|---|
| (அ) | சேர நாடு | (ஆ) | சோழநாடு |
| (இ) | பாண்டி நாடு | (ஈ) | பல்லவநாடு |
| (உ) | இலங்கை | (ஊ) | இந்தியா |
| (எ) | அனுராதபுரம் | (ஏ) | பொலநறுவை |
| (ஐ) | காவேரி நதி | | |

பயிற்சி – 8

**1.பின்வரும் விளக்கப்படத்தினை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடைதருக.**




1.A என்ற எழுத்திட்ட நாடு யாது?

1. பாண்டிநாடு 2.சோழநாடு 3.சேரநாடு

2. B என்ற எழுத்துக் குறிக்கும் நாடு யாது?

1. பாண்டிநாடு 2. சோழநாடு 3.சேரநாடு


3. C என்ற எழுத்துக் குறிக்கும் நாடு யாது?

1 பாண்டிநாடு 2 சோழநாடு 3 சேரநாடு

4. D என்ற எழுத்துக் குறிக்கும் நதியாது?

1. காவேரி 2. கிருஸ்ணா 3. தாமிரபரணி

**2. பின்வரும் இலங்கைப்படத்தில் குறிக்கப்பட்டவை எவை எனக் காண்க.**




1.அனுராதபுரத்தினைக் குறிக்கும் எழுத்து யாது?

(1). A (2). B (3). C (4) .D.

2.பொலநறுவையைக் குறிக்கும் எழுத்து யாது?

(1). A (20. B (3). C (4). D

3. மஹியங்கனையைக் குறிக்கும் எழுத்து யாது?

(1). A (2). B (3). C (4). D

4. மாந்தைத்துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்து யாது?

(1) A (2) B (3) C (4) D

5 மகாவலிகங்கையைக் குறிக்கும் எழுத்து யாது?

(1) E (2) F (3) G

6.அருவியாற்றினை/மல்வத்து ஓயாவைக் குறிக்கும் எழுத்து யாது?

(1) E (2) F (3) G

பயிற்சி – 9

1. **சிகிரியா என்றதும் நமக்கு நினைவில் வருவது.**
   (அ) சிகிரியா இலங்கையின் ஒரு தேசிய சொத்து
   (ஆ) சிகிரியா ஒரு கோட்டை மட்டுமல்ல ஒரு கலையகம்
   (இ) சிகிரியா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை
   (ஈ) அவை அனைத்தும்

2. **சோழரை இலங்கையிலிருந்து துரத்தி பொலநறுவைக்கு விஜயராஜபுரம் என்றுபெயரிட்ட மன்னன்:**
   (அ) பராக்கிரமபாகு (ஆ) நிசங்கமல்லன்
   (இ) விஜயபாகு (இ) காசியப்பன்

3. **இடைவெளிகளை நிரப்புக.**

முதலாம் விஜயபாகு மன்னனின் தந்தை பெயர் ............ ஆகும். தாயின் பெயர் ............ ஆகும். சிறுவயதில் அவன் ..................... என்று பெயரில் அழைக்கப்பட்டான். சோழர்களுடன் போரிட்டு முதலில் அவன் தப்பி ஓடிய இடம் ........... ஆகும். பொலநறுவையின் முதலாவது சிங்கள மன்னன் .................. ஆவான். முதலாம் விஜயபாகு மன்னன் பௌத்த மதத்தை மேம்படுத்துவதற்கென ....................... இருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்தான்.

4. **பராக்கிரமபாகுவின் தென்பிரதேசப்பணிகள் என,**
   (அ) ஹெட்டிப்பொலவைப் பராக்கிரமபுரமாக்கியமை.
   (ஆ) பண்டுவஸ்நுவரவில் அரசமாளிகையும், பண்டவாவியையும் அமைத்தமை
   (இ) களுத்துறைச் சதுப்பு நிலப்பிரதேசத்தில் நிரை வெளியேற்றி சாகுபடி நிலமாக்கியமை
   (ஈ) அவை அனைத்தும்

5. **மகாபராக்கிமபாகுவின் மிகப்பெரிய இலட்சியம் எது?**
   (அ) இலங்கையை ஐக்கியப்படுத்துவது
   (ஆ) வானத்திலிருந்து விழும் ஒரு துளி நிரையேனும் பயன்படுத்தாது கடலுக்கு அனுப்பக்கூடாது.
   (இ) பராக்கரமசமுத்திரத்தின் மத்தியில் ஒரு வசந்தமாளிகை கட்டுவது
   (ஈ) நகரத்தை அலங்கரிக்கும் பொருட்டு ஆங்காங்கு பொய்கைகள் அமைப்பது.

(விடைகள் - 1 (ஈ), 2 (இ), 3 மொக்கல்லன், லோஹிதா, கீர்த்தி, வாக்கிரிகல, விஜயபாகு, பர்மா, 4 (ஈ), 5 (ஆ).

பயிற்சி – 10

கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. இலங்கையில் ஆகக்கூடிய கல்வெட்டுகளை நிறுவிய மன்னன் ................ ஆவான்.

2. இலங்கையின் மிகப்பெரிய கல்வெட்டு .................... ஆகும்.

3. குறிப்பிட்ட நபரின் எடைக்கு நிகராக வழங்கப்பட்ட தானம் ..............என அழைக்கப்பட்டது.

4. நிசங்கமல்லமன்னன் ........................................................ முதலான தலங்களுக்கு யாத்திரை சென்றான்.

5.தென்னிந்தியாவில் ........................................................ ஆகிய நான்கு இராச்சியங்கள் பலம் வாய்ந்தனவாகவிருந்தன.

6. அநுராபுர இராச்சியத்தின் இறுதிச் சிங்கள மன்னன் .................... ஆவான்.

7. முதலாம் சேனன் .......................... மன்னனுக்குத் திறை செலுத்தி மீண்டும் அரசாட்சியைப் பெற்றுக் கொண்டான்.

8. ......................... மன்னன் சோழர்களால் சிறை பிடிக்கப்பட்டு தென்னிந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

(விடைகள்- 1. நிசங்கமல்லன், 2 கல்பொத்த, 3 துலாபாரம், 4 மஹியங்கணை, களனி, சிவனொளிபாதம், 5 சேர, சோழ, பாண்டிய, பல்லவ, 6 ஐந்தாம் மகிந்தன், 7 பாண்டிய , 8 ஐந்தாம் மகிந்தன்.)

அத்தியாயம்: 4

# இலங்கையின் நீர்வள நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

**1. நீர்வளநாகரிகம் என்றால் என்ன?**

இலங்கை மக்களின் பெரும்பாலான செயற்பாடுகள் நீரை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அதனை நீர்வள நாகரிகம் என்பர். கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் நாகரிகம் நீர் நிலைகளை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

**2. இலங்கையில் நீர்வள நாகரிகத்தின் அடிப்படைகள் யாவை?**

(அ) இலங்கை மக்களின் பிரதான சீவனோபாயமாக விவசாயம் விளங்கியது. குடித்தொகை அதிகரித்து வந்தமையால் விவசாயத்தை விரிவாக்க வேண்டியிருந்தது. அதற்கு நீரைச் சேகரித்து வைத்து விநியோகிக்க வேண்டிய தேவையும் இருந்தது.

**3. நீர்வள நாகரிகத்தின் ஆரம்பம் எவ்வாறிருந்தது?**

(அ) இலங்கை ஒரு விவசாய நாடு ஆகையால் நீர்ப்பாசனம் மிக அத்தியாவசியம். இலங்கையில் நீர்ப்பாசன நாகரிகம் ஆரியருடன் ஆரம்பமாவதாகக் கூறப்படுகிறது. மழைநீரை நம்பி ஒரு போகம் மட்டும் பயிர்செய்வதால் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது. சனத்தொகை அதிகரிப்பு, போதியளவு மழை கிடைக்காமை, மழையின் நிச்சயமற்ற தன்மை, நீண்ட வறட்சி என்பன காரணமாக நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாயிற்று.

(ஆ).ஆரம்பத்தில் இலங்கையில் சிறிய கிராமியக் குளங்களே அமைக்கப்பட்டன. அவை மழை நீரைத் தேக்கி வைத்து நீர்ப்பாசனம் செய்ய உதவின. இப்பணியில் ஈடுபட்ட கிராமியத் தலைவர்களை கமிக, பருமக, உத்தர, அடித்தர என்ற பெயர்களால் அழைத்தனர்.

(இ) விஜயனுடன் வந்த அனுராத ஒரு குளத்தை அமைத்தான். பண்டுகாபயன் காலத்தில் அபயவாவி, ஜயவாவி, காமினி வாவி என்பன கட்டப்பட்டன. தேவநம்பியதீசன் திசாவாவியை அமைத்தான். துட்டகைமுனுவின் சகோதரன் சதாதீசன், தீகவாபிப் பிரதேசத்தில் 18 குளங்களைக் கட்டினான்.

(ஈ) நடுத்தரக்குளங்கள் அமைக்கப்பட்டமை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் நடுத்தரக் குளங்கள் கட்டப்பட்டன. கிராமியச் சிறிய குளங்களால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனம் போதியதாக அமையாமை, காலநிலைத் தாக்கங்கள், நீர்வரவு அதிகரித்தமை என்பன காரணமாக நடுத்தரக்குளங்கள் அமைக்கப்படலாயின.

(உ). மகாவில்லாச்சி, மானக்கட்டி, நொச்சிப்பொத்தானை, கிரிவடுனை, ஊரு, மாகமவாவி முதலான 11 நடுத்தரக் குளங்களை வசபன் என்ற மன்னன் கட்டுவித்தான். எலகராக்கால்வாய் முதலான 12 கால்வாய்களையும் அமைப்பித்தான். நடுத்தரக் குளங்களை அமைத்த பெருமை வசபனையே சாரும்.

(ஊ). இலங்கையின் பொருளாதாரத்துறையிலும் சமயத் துறையிலும் மகாசேனனின் காலம் (கி.பி.274 – 302) மிக முக்கியமானது. அனுராதபுர யுகத்தில் பாரிய குளங்களை அமைத்த பெருமை மகாசேனனைச் சாரும். இவன் 16 குளங்களைக் கட்டியுள்ளான். மின்னேரியா, ஹூருளுவாவி, மாமினியா வாவி, மகல்லவாவி, மஹாகணதாராவ வாவி, கடுலு ஆகிய குளங்களையும், பப்பந்தக் கால்வாயையும் அமைப்பித்தான். மின்னேரியாக் குளம் 4000 ஏக்கர் பாப்பிற்கு நீர்ப்பாய்ச்சுகின்றது. அதனால் மகாசேனன், மின்னேரியா தெய்யோ, (தெய்வம்), மகாசேன தெய்யோ என அழைக்கப்படுகின்றான்.

(எ) எனவே, இரண்டாம் நூற்றாண்டளவில் இலங்கையில் மூன்றுவகையான குளங்கள் இருந்தன. அவை

1. கிராமக்குளங்கள் (கமிகவாவி)
2. நடுத்தரக்குளங்கள்
3. பாரியகுளங்கள் (மகாவாவி)

பெரிய குளங்களுக்கு நீர்வழங்கும் தனவ்வாவிகள் என்றழைக்கப்படும் குளங்களும் இருந்தன.

**3. தாதுசேனமன்னனின் பணிகள் .யாவை,?**

கி.பி.455 தொட்டு 475 வரை ஆண்ட தாதுசேனமன்னன் மக்களது சுபீட்சமான வாழ்க்கைக்கு வேண்டி விவசாய அபிவிருத்திகளில் கவனம் செலுத்தினான். மிகப்பெரியநீர்த்தேக்கமான கலாவாவியை இவன் கட்டுவித்தான். இந்த வாவியின் நீரை அனுராதபுர நகருக்கு ஜயகங்கை என்ற கால்வாயை அமைத்து வழங்கினான். அதனை திஸ்ஸ்வரியுடன் இணைத்தான். பலலுவாவி, பதுளுவாவி, மானாமத்துவாவி(கட்டுக்கரைக்குளம்), மானாமடு என்னும் குளங்களைக் கட்டுவித்தான். மகாகங்கை, ஜயகங்கை, யோதஎல என்ற பெயர்களால் அழைக்கப்படும் கால்வாயைக் கட்டுவித்தான். இது 87 கி.மீ.நீளமானது.


**4. இலங்கையின் நீர்வளநாகரிகத்தை முன்னெடுத்து நீர்ப்பாசனக் குளங்களைக் கட்டிய ஏனைய மன்னர்கள் யாவர்?**

(அ) 2ம் முகலன் (கி.பி.535 – 555) – பதவியாக்குளம், நச்சடுவாக்குளம்

(ஆ) 1ம் அக்கபோதி (கி.பி.571 – 604) – மாமடுவ, சிறிவட்டமானக, குருந்தி முதலான குளங்கள் மற்றும் மினிப்பே அணைக்கட்டு,

(இ) 2ம் அக்கபோதி (கி.பி.604 – 641) – கந்தளாய், கிரித்தலை முதலான குளங்கள்

(ஈ) 1ம் பராக்கிரமபாகு (கி.பி.1153 – 1186) – பராக்கிரமசமுத்திரம்




**5. இலங்கையின் பண்டைய நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தினை விபரிக்க.**

(அ) பண்டைய நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்தின் மேன்மைகளை நவீன பொறியியலாளர்கள் வியந்துள்ளனர். அணைகள் கட்டப்பட்ட முறைமை (காலஓயா, திசாவாவி), கால்வாய்கள் அமைக்கப்பட்ட முறைமை, அக்கால்வாய்களின் சாய்வு நுட்பம் (ஜயகங்கைக் கால்வாய், மினிப்பே கால்வாய்) என்பன வியத்தற்குரியன.

(ஆ) 1. ஒரு பிரதேசத்தினூடாகப் பாயும் நதியின் போக்கில் இரு மலைகளுக்கு இடையேயுள்ள பகுதிகளை இணைத்து அணைகட்டி அதில் நீரைச் சேகரிப்பர். அதனால் மேட்டுப்பகுதியில் குளம் அமையும். குளத்தில் இருந்து கால்வாய் மூலம் பள்ளமான வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுவர்.


2. ஆற்றிற்குக் குறுக்கே இரு மலைகளை அல்லது குன்றுகளை அணைத்துக் கட்டப்படும் அணை குளக்கட்டு எனப்படும்.

3. குளக்கட்டைப்பாதுகாப்பதற்காக குளத்தின் உட்புறமாக குளத்தைச் சுற்றிக் கருங்கல் பதிவை அலைதாங்கி என்பர்.

4. குளக்கட்டில் ஏற்படும் அமுக்கத்தைக் குறைத்து நீரை மெதுவாக வெளியேற்ற உதவும் ஆழமான சதுரக் கிணற்றினை கலிங்குத் தொட்டி என்பர்.

5. குளத்து நீரைக் கால்வாய் ஊடாக வெளியேற்றும் நீர்ப்பாசன வாயிலை மடைவாயில் என்பர்.

6.. குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றும் பகுதி கலிங்கு எனப்படும் (குளக்கட்டு அணைக்கட்டு எனப்படும். அலைதாங்கி சிங்களத்தில் சலாபனாவ எனப்படும். கலிங்கல் என்பது நீரைவெளியேற்றும் மடைவாயில் ஆகும். இதனை அலமார்க்ய என்பர். குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றும் சொரவ்வ (சுருங்கை) எனப்படும். தமிழில் கலிங்கு பாய்தல் என்பர். கலிங்கு எனப்படும்.)




அனுராதபுரக்கால நீர்ப்பாசனம்

**7. நீர்வள நாகரிகத்தில் கால்வாய்களின் அமைப்பு குறித்து விபரிக்க.**

(அ) கால்வாய்களின் நிர்மாணம் நிர்ப்பாசனத் தொழில் நுட்பத்தின் சாதனையாகும். தாதுசேனன் 54 மைல்கள் நீளமான ஜயகங்கைக் கால்வாயை காலவாவியிலிருந்து திசாவாவிக்கு நீரை எடுத்துச்செல்ல அமைத்துள்ளான்.

மகாபராக்கிரமபாகு 3910 கால்வாய்களை அமைத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. அம்பன்கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு ஆகாசகங்கை என்ற கால்வாயூடாக நீர் கொண்டு செல்லப்படுகின்றது. வசபமன்னன் சுரங்க வழிகளூடாக நீரை எடுத்துச் சென்றதாக கூறப்படுகின்றது.




**8. நீர்வள நாகரிகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு எவ்வாறிருந்தது?**

(அ) மன்னராட்சி நாட்டில் நிலவியது. அரசனே ஆட்சியில் முக்கியமானவன். மக்களைப் பாதுகாத்தல், பௌத்தமதத்தைப் பாதுகாத்தல், நீர்ப்பாசனங்களைப் பாதுகாத்தல் என்பன அவனது முக்கிய பணிகளாகவிருந்தன. கிராமத்தலைவர்களுக்கு ஆரம்பத்தில் வழங்கிவந்த காமினி என்ற பெயர் பின்னர் மன்னர்களின் பெயர்களுடன் சேர்ந்து வழங்கியது.

(ஆ) இராசரட்டை, தக்கணதேசம், உருகுணுரட்டை, மலையரட்டை என பண்டைய இலங்கையில் ஆட்சிப்பிரிவுகள் இருந்தன. இராசரட்டைப்பிரிவு உத்தரதேசம், பஸ்ஸிமதேசம், பாச்சினதேசம் எனப்பிரிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசகுடும்பத்தின் மூத்த சகோதரனுக்கு அரசுரிமை கிடைத்தது. சகோதரர்கள் இல்லாதிருக்கும்போது மூத்த சகோதரின் மூத்தமகன் பட்டத்திற்குரியவனாகினான். தந்தையிடமிருந்து மகனுக்கு அரசுரிமை கிடைக்கும் சம்பிரதாயம் பிற்காலத்தில் தோன்றியது.

(ஈ) அரசசபை ஒன்று மன்னனுக்கு ஆலோசனை வழங்கியது. தலைமைப் புரோகிதன் (குரு), சேனாதிபதி, அமைச்சரவை, அரசனின் ஆவணங்களுக்குப் பொறுப்பான மஹலே என்ற அதிகாரி, திறைச்சேரிக்குப் பொறுப்பான படகாரிக என்ற அதிகாரி முதலானோர் இருந்தனர்.


(உ) கிராம நிர்வாக முறைமை இருந்தது. கமிக, காமினி, கம்லத்தா எனப்பலவாறு கிராமத்தலைவன் அழைக்கப்பட்டான். இராஜகாரிய முறை இருந்தது. கிராமசபையே சிறிய நீதி மன்றமாக இயங்கியது.

**9. நீர்வள நாகரிகத்தின் பொருளாதார அமைப்பு எவ்வாறிருந்தது?**

(அ) சேனைப்பயிர்ச்செய்கை முக்கியம் பெற்றிருந்தது. காடுகளை வெட்டிக்கொளுத்தி, மழையை நம்பிச் செய்யும் பயிர்ச்செய்கை

அதுவாகும்.உளுந்து,பயறு, குரக்கன், சோளம், கடுகு, எள், காய்கறிகள் சேனைகளில் பயிரிடப்பட்டன. கரும்புச்செய்கையும் நடைபெற்றது.

(ஆ) நெற்செய்கை பிரதான சீவனோபாயமாக விளங்கியது. மானாவாரியாகவும் நீர்ப்பாசனத்துடனும் நெற்செய்கை நடைபெற்று வந்தது. வீட்டுத் தோட்டங்களில் காய்கறிவகைகள், வத்தாளை, இஞ்சி, வெற்றிலை, பாக்கு, மிளகு, புளி, தோடை, மா,வாழை, தென்னை, கித்துள் முதலானவை பயிரிடப்பட்டன.



(இ) குல அடிப்படையில் கைவினைத் தொழில்கள் புராதன இராச்சியத்தில் கைக்கொள்ளப் பட்டன. களிமண் கொண்டு சட்டிபானைகள் வனைதல், உலோகமும் மரமும் கொண்டு வீட்டு உபகரணங்கள் செய்தல், பொன், வெள்ளி, சங்கு, மணிகள் கொண்டு ஆபரணங்கள் செய்தல், நெசவு செய்தல், பல்லக்கு, வண்டி என்பன செய்தலென பல தொழில்கள் இயங்கிவந்தன.


(ஈ) செங்கல், ஓட்டுக்கைத்தொழில் நன்கு விருத்தியடைந்தநிலையில் இருந்துள்ளது. பாரிய தாதுகோபங்கள், கட்டிடங்கள் கட்டப்பயன்பட்ட செங்கற்கள் இன்றும் நல்ல நிலையிலுள்ளன. புடவைக்கைத்தொழில் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்துள்ளது. உலோகங்கள் உருக்கப்பட்டு சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன. மரவேலைகள் சிறப்பாக நடந்துள்ளன.

**10. அக்காலத்தில் வர்த்தக நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?**

(அ) உள்நாட்டு வர்த்தகம் பண்ட மாற்றாக விளங்கியது. தன்னிட முள்ள ஒரு பொருளைக் கொடுத்து தனக்குத் தேவையான ஒரு பொருளைக் கொள்வனவு செய்தல் பண்டமாற்று எனப்படும். கடவை, ஆயவரி அறவிடப்பட்டன. நிறுத்தல், அளத்தல் ஆகிய முறைகளிருந்தன.

(ஆ) இரத்தினக்கல், வாசனைத் திரவியங்கள், சங்குகள், யானைத் தந்தம், ஆமைஓடு முதலான பொருட்கள் இந்தியா, கிரேக்கம், உரோமாபுரி, சீனா முதலான நாடுகளுக்கு விற்கப்பட்டன. பட்டுத்துணிகள், வாசனைப்பொருட்கள், ஆபரணங்கள், மட்பாண்டங்கள், குதிரைகள் என்பன இறக்குமதியாகின. மாதோட்டம் (மஹாதீர்த்தம்), ஊராத்தோட்டை, ஜம்புக்கோளப்பட்டினம், கோகர்ணம், கல்யாணி என்பன இலங்கையின் புராதன துறைமுகங்களாகும்.

(இ) பிராமிக்கல்வெட்டுகளில் (அம்பாறை, அம்பாந்தோட்டை) வாணிப, வாணிஜ என்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேலேயே வாணிபம் நடந்து வந்துள்ளது. உபதிஸ்ஸகமத்தில் அந்தராப்பன என்றொரு சந்தை இருந்ததை பூஜாவழியிலிருந்து அறியலாம். அக்காலத்தில் நிகம அல்லது நியம்கம என்ற சிறு வர்த்தக நிலையங்கள் நகரங்களில் இருந்துள்ளன. பணப்பரிமாற்றம் இருந்து வந்துள்ளது.



**11. நீர்வளநாகரிகத்தில் சமயநிலைகள் எவ்வாறிருந்தன?**

1. மகிந்ததேரர் வருவதற்கு முன் இலங்கையில் இந்து சமய வழிபாடுகள் இருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. இயற்கை வழிபாடுகள் இருந்துள்ளன. சூரியன், இடி, மின்னல், மரங்கள், ஆவி, பாறைகள் என்பனவும் வழிபடப்பட்டன. பௌத்தம், சமணம் என்பனவும் வழக்கத்தில் இருந்துள்ளன.

**2.** தேவநம்பியதீச மன்னன் காலத்தில், மகிந்ததேரர் இலங்கையில் பௌத்தத்தை அறிமுகப்படுத்தி வைத்தார். மன்னர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றினர். மக்களும் ஏற்றுக் கொண்டனர். விகாரைகள் அமைக்கப்பட்டன. பௌத்த சமயத்தின் மத்திய நிலையமாக மகாவிகாரை விளங்கியது. அதனைத் தொடர்ந்து அபயகிரி விகாரை, ஜேத்தவனவிகாரை என்பன பௌத்த சமயத்தின் பிரிவுகளை முன் எடுத்துப் பரப்பின.


**3. மகாவிகாரை குறித்துச் சுருக்கமாக விபரிக்க.**


1. அனுராதபுரத்தில் மகாமேகவனம் என்ற பூங்காவை அமைத்த மன்னன் மூத்தசிவன் ஆவான். அனுராபுரத்தின் மத்தியில் அமைந்திருந்த ஒரு பரந்த நந்தவனம் இது. அனுராதபுரத்திற்கு மகிந்ததேரரை அழைத்து வந்த தேவநம்பியதீசன், அவரையும் அவரது குழுவினரையும் இந்த மகாமேகவனத்தில் இருத்தினான்.

2. பௌத்த சாசனத்தைப் போதிக்கப் பௌத்த நிலையம் ஒன்று தேவைப்பட்டது. ஆதனால் மகிந்ததேரரின் ஆலோசனைப்படி ஆராமம் (ஆச்சிரமம்) ஒன்று மகாமேகவனத்தில் அமைக்கப்பட்டது. இந்த ஆராமமே பின்னர் 'மகாவிகாரை' எனப் பெயர் பெற்றது. மகாவிகாரையின் எல்லை

வகுக்கப்பட்டது. மல்வத்துஓயாவின் கரையிலிருந்து, பதுமம், குஞ்சரம் என்ற இரு யானைகள் ஏர் ஒன்றில் பூட்டப்பட்டன. அவை நகரைச்சுற்றி வட்டமிட்டுத் தொடங்கிய இடத்திற்கு மீண்டன. அந்தப் பரப்பு மகாவிகாரையின் பரப்பாக எல்லையிடப்பட்டது.

3. மகாவிகாரை என்பது பல்வேறு சமயக் கட்டிடங்களின் தொகுதியாகும். இது வடக்கே அபயகிரி விகாரையையும், கிழக்கே பட்டமகத் தாதுகோபத்தையும், தெற்கே மகாபோதி மரத்தையும், தென்மேற்கே மிரிசுட்டி தாதுகோபத்தையும், மேற்கே வண்டால கிராமத்தையும் கொண்டமைந்தது. மகாவிகாரைப் பகுதிக்குள், ஸ்ரீமகாபோதி (வெள்ளரசு மரம்), தூபராம, ருவான்வெலிசாயா (மகாதூபி), லோவாமகாபாயா (ஆயிரங்கால் மண்டபம்) என்பனவும் சமயக்கட்டிடங்கள், தடாகங்கள் என்பனவும் அமைந்தன.







ஸ்ரீ மகாபோதி (வெள்ளரசு)

4. மகாதூபிக்குத் தெற்கே சங்கமித்தையால் நாட்டப்பட்ட வெள்ளரசு மரம் உள்ளது. இது ஸ்ரீ மகாபோதி எனப்படும். இது புத்தர் ஞானம் பெற்ற வேளை அமர்ந்திருந்த வெள்ளரசு மரத்தின் வலது பக்கக் கிளையாகும். இது பௌத்தர்களின் புனித விருட்சமாகும்.

5. தூபராம தாதுகோபம், தேவநம்பியதீசனால் முதன் முதலில் கட்டப்பட்டதாகும். இது மகாவிகாரையின் இது வடக்கே பசவக்


குளத்திற்கு அருகில் அமைந்துள்ளது. புத்தரின் வலது பக்கத் தாடை எலும்பை வைத்து இது கட்டப்பட்டது. இது வட்ட வடிவமானது. ஆதனால் தூபராம வட்டதாகே எனப்பட்டது. ஆரம்பத்தில் மூடிய கூரையைக் கொண்டிருந்தது.



தூபராம

6. ருவான்வெலிசாயாத் தாதுகோபம் மகாதூபி எனப்படும். மகாவிகாரைக் கட்டிடத் தொகுதில் மிக முக்கியமானது. மகாவிகாரையின் மத்தியில் அமைந்துள்ளது. இது துட்டகைமுனுவால் கி.மு. 137 இல் கட்டப்பட்டது. எனினும் இத்தூபி கட்டப்பட்டு முடிக்கு முன்னரே துட்டகைமுனு மரணமடைந்ததால் இதனை அவனது சகோதரனான சதாதீசன் கட்டி முடித்தான். மகாதூபியின் நான்கு மூலைகளிலும் சிறிய தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன. யானை சிற்ப மதில்களைக் கொண்டுள்ளது. நான்கு புறமும் வாகல்கட எனும் நுழைவாயில்களைக் கொண்டுள்ளது. பௌத்த சமயத்தின் முக்கிய பிரிவான தேரவாத பௌத்தத்தின் (ஹீனயான) ஒரே மத்திய நிலையமாக இது விளங்கியது.

7. லோவாமகாபாயா எனும் ஆயிரங்கால் மண்டபமும் துட்டகைமுனுவால் அமைக்கப்பட்டது. இது 1000 தூண்களையும் 100 அறைகளையும் 9 மாடிகளையும் கொண்டது. கட்டிடத்தின் மத்தியில் ஒரு பொன் மண்டபம் இருந்தது. செம்பு ஓடுகளினால் இது வேயப்பட்டிருந்ததால் லோவாமகாபாயா




ருவான்வெலிசாயா




லோவாமகாபாயா

எனப்பட்டது. பிக்குமார் தங்கிச் சமயக்கிரியைகள் செய்யும் மண்டபம் இதுவாகும். இன்று கற்றூண்கள் மட்டும் எஞ்சியுள்ளன.


அபயகிரி விகாரை

8. இலங்கையில் இரு பௌத்தமதப்பிரிவுகள் இருந்தன. அவை தேரவாத பௌத்தம் (ஹீனயான), மகாஜான பௌத்தம் என்பனவாம். மகாவிகாரைப் பிக்குகள் தேரவாத பௌத்தத்தை ஆதரித்தனர். அபயகிரி விகாரை, ஜேத்தவனராமய ஆகிய இரு விகாரைகளின் பிக்குகள் மகாஜான பௌத்தத்தை ஆதரித்தனர்.


ஜெத்தவனராமயா

9. அபயகிரி விகாரை கி.மு. 89 இலிருந்து 77 வரை ஆட்சி செய்த வலகம்பாகு மன்னால் கட்டப்பட்டது. அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஐந்து தமிழர்கள் தொடர்ந்து ஆண்டனர். அவர்களைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற வலகம்பாகுவுக்கு மகாவிகாரையைச் சேர்ந்த குப்பிகலதிஸ்ஸ என்ற தேரர் உதவினார். அதற்கு நன்றியாக வலகம்பாகு, அபயகிரி விகாரையைக் கட்டி திஸ்ஸதேரருக்குத் தனிப்பட்ட தானமாக வழங்கினான். அதனால் ஒழுங்கு மீறியதாகக் கருதி மகாவிகாரை அவரை விலக்கிவிட்டது. அவரும் 500 க்கு மேற்பட்ட சீடர்களும் மகாவிகாரையை விட்டு வெளியேறி அபயகிரியில் வசித்தனர். மகாஜான பௌத்தத்தை ஆரம்பித்தனர். இலங்கையில் பௌத்தம் இரண்டாகப் பிரிந்தது.

10. மகாவிகாரை வளாகத்தில் கட்டப்பட்ட இன்னொரு விகாரை ஜெத்தவனராமயா ஆகும். அதனை மகாசேனன் கட்டுவித்தான். மகாசேனனின் ஆசிரியரான சங்கமித்ததேரர் மகாஜான பௌத்தர். அவரின் போதனைகளால் கவரப்பட்ட மகாசேனன், ஜெத்தவனராமயா விகாரையைக் கட்டி அவருக்குத் தானமாக வழங்கினான். அத்துடன் மகாவிகாரைப் பிக்குகளுக்கு மக்கள் தானம் வழங்கக் கூடாது எனத் தடை செய்தான். இதனால் மகாவிகாரைப்

பிக்குகள் உருகுணைக்கும் மலைநாட்டிற்கும் தப்பியோடினர். மகாவிகாரை முற்றாக அழிக்கப்பட்டது.

11. அபயகிரி விகாரை பிரதான கல்வி நிலையமாக விளங்கியுள்ளது. 5000 பிக்கு மாணவர்கள் அங்கு கற்றுள்ளனர். இந்தியா, ஜாவா, சீனா ஆகிய நாடுகளுடன் சமயத் தொடர்பு அபயகிரிக்கு இருந்தது. இலங்கையிலிருந்து பிக்குணிகள் சாசனம் சீனாவுக்கு அனுப்பப்பட்டது.

12. அனுராதபுர யுகத்தில் இந்து சமயம் இங்கு நிலை கொண்டிருந்தது. பண்டுகாபயன், பண்டுலன் என்ற பிராமணனிடம் கல்வி கற்றுள்ளான். வலகம்பாகுவின் காலத்தில் தீயன் என்ற பிராமணன் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்தியுள்ளான். சிவன், விஷ்ணு, பத்தினி, கந்தன் ஆகிய தெய்வங்களுக்கு இங்கு தேவ பூசைகள் இருந்துள்ளன. இலங்கையில் மகாதீர்த்தம் (மாந்தை), கோகர்ணம் (திருகோணமலை), நகுலேஸ்வரம் (யாழ்ப்பாணம்), முன்னேஸ்வரம் (சிலாபம்), தொண்டேஸ்வரம் (மாத்தறை - தேவேந்திராமுனை)) ஆகிய ஐந்து இடங்களில் சிவதேவாலயங்கள் இருந்துள்ளன. அவை முறையே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம் என வழங்கப்பட்டன. சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளுக்கு வழிபாடு செய்தல் இருந்துள்ளது. கஜபாகு என்ற மன்னன் பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் தொடக்கி வைத்தான்.


**13. புராதன இலங்கையில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, செதுக்கற்கலை, ஓவியக்கலை என்பனவற்றின் வளர்ச் சியைச்சுருக்கமாக விபரிக்க.**

1. அதிகமான கட்டிடங்கள் சமய தேவைகளுக்காகவும், மன்னனுக் காகவுமே கட்டப்பட்டிருந்தன. பௌத்தமதத்தேவைக்காக தாதுகோபங்கள், போயமனை, வைத்தியசாலை, தடாகம் என்பன அமைக்கப்பட்டன. சுட்ட செங்கற்களும், பொளிந்த கருங்கற்களும் இவற்றிற்கு பயன்படுத்தப்பட்டன. அழகான வேலைப்பாடுகளையுடைய கற்றூண்கள் உபயோகித்தனர்.

2. சிற்பக்கலை புராதன இலங்கையில் வளர்ச்சி பெற்றிருந்தது. பல்வேறு விதமான புத்தர்சிலைகள் உருவாக்கப்பட்டன. கருங்கற்களிலும், வன் சுண்ணக்கற்களிலும் இவை சிற்பிகளால் செதுக்கப்பட்டன.





**கற்றூண்கள்**




**புத்தர் சிலைகள்**

சிற்பக்கலைக்கு உதாரணங்களாக காவற்கணங்களைக் குறிப்பிடலாம்.



**காவற் கணங்கள்**

இசுருமுனியாக் கோயிலினுள்ள இரண்டு சிற்பங்கள் சிற்பக்கலைக்கு எடுத்துக் காட்டுகளாகவுள்ளன.



**குதிரையும் வீரனும்**



**சிவ சக்தி**

3. **செதுக்கல்கலை:** இராசரட்டைகாலச் செதுக்கல் கலைக்குப் பல எடுத்துக்காட்டுகளுள்ளன. கட்டிடங்களின் படிக்கட்டு வரிசையின் அடியில்



சந்திர வட்டக்கல்

காணப்படும் சந்திரவட்டக்கல் தக்க உதாரணமாகும். பெரும்பாலான கட்டிடங்களில் செதுக்கல் வேலைப்பாடுகளைக் காணலாம்.

4. கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட சிகிரியாச்சுவர் ஓவியங்கள் இன்றும் புராதன இலங்கையின் ஓவியக்கலைச் சிறப்பினைக் காட்டி நிற்கின்றன. மிகிந்தலை விகாரையிலும் ஓவியங்களுள்ளன.



சிகிரியா ஓவியம்

14. **புராதன இலங்கையின் கல்விநிலை எவ்வாறிருந்தது?**

பௌத்த கோயில்களை (பன்சல) மையமாகக் கொண்டு கல்வி நிலையங்கள் சிங்கள தேசத்தில் அமைந்திருந்தன. மகாவிகாரை, அபயகிரி விகாரை, ஜேத்தவனராம விகாரை என்பன இவ்வாறு விளங்கிய கல்வி நிலையங்களாகும். இவை சமயக்கல்வியையும் ஒழுக்கக் கல்வியையும் போதித்தன. மூன்று வகையான பிரிவேணாக்களாக இவை விளங்கியமையால் பௌத்தமதக்கல்வியில் வேறுபாடுகளிருந்துள்ளன. தமிழ்ப் பிரதேசங்களில் குருகுலக்கல்வி நடைபெற்று வந்துள்ளது.

15. **புராதன இலங்கையில் சுகாதார நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?**

வைத்தியக்கல்வி பெருவிருத்தி எய்தியிருந்தது. வைத்தியசாலைகள் இருந்தமைக்கான கட்டிட அடையாளங்கள் உள்ளன. வைத்திய சிகிச்சைக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மிகிந்தலை வைத்தியசாலை இடிபாடுகள் இன்றுமுள்ளன. புத்ததாசன் (கி.பி. 337- 465) என்ற மன்னன்

சிறந்த வைத்தியனாக விளங்கியுள்ளான். இலங்கை முழுவதும் ஒவ்வொரு பத்துக்கிராமங்களுக்கும் ஒரு வைத்தியரை நியமித்திருந்தான். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வைத்தியசாலை அமைப்பித்தான். மிருகங்களுக்கும் வைத்தியம் பார்க்கப்பட்டுள்ளது.

**16. புராதன இலங்கையில் மொழியும் இலக்கியமும் எவ்வாறிருந்தன?**

(அ) இலங்கையில் தமிழும் தமிழிலக்கியமும் செழுமை பெற்றிருந்தன. தென்னிந்தியத் தமிழிலக்கியம் இலங்கையிலும் பயிலப்பட்டு வந்துள்ளது. ஆனால், சிங்களமொழி உருவாக நீண்டகாலம் எடுத்தது. இலங்கையில் சிங்கள மொழியின் மூலமாக இங்கு மக்களால் பேசப்பட்ட ஹெலமொழி இருந்துள்ளது. ஹெல மொழியில் திரிபீடகம் எழுதப்பட்டது. பின்னர் பாளி மொழி பரிச்சயமானது. அதில் மொழி பெயர்க்கப்பட்டது. பிராமி எழுத்தும் நடைமுறையிலிருந்துள்ளது. படிப்படியாகச் சிங்கள மொழி உருவாகியது.

(ஆ) மனனம் செய்யப்பட்டு வந்த திரிபீடகம், கி.பி.முதலாம் நூற்றாண்டில் நூல்வடிவில் தொகுக்கப்பட்டன. சிகிரியாக் குன்றில் எழுதப்பட்டிருக்கும் கிறுக்கல் கவிதைகள் அக்கால இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டு. ஜானகிகணை, சசதாவத, சங்கரஹய, ஜாதககதா சன்னய, அமாவதுர முதலான இலக்கிய நூல்கள் அக்காலத்தில் எழுதப்பட்டுள்ளன.

**பயிற்சி - 1**

1. சிறிய குளங்களை அமைத்த மன்னர்களின் எவர்?
   (அ) வசபன், உபதீசன்
   (ஆ) பண்டுகாபயன், தேவநம்பியதீசன்
   (இ) தாதுசேனன், முகலன், அக்கிரபோதி மன்னர்கள்
2. நடுத்தரக் குளங்களை அமைத்த மன்னர்கள்
   (அ) வசபன், உபதீசன்
   (ஆ) பண்டுகாபயன், தேவநம்பியதீசன்
   (இ) மகாசேனன், தாதுசேனன், மகரன், அக்கிரபோதி
3. பாரிய குளங்களை அமைத்த மன்னர்கள்
   (அ) வசபன், உபதீசன்
   (ஆ) பண்டுகாபயன், தேவநம்பியதீசன்
   (இ) மகாசேனன், தாதுசேனன், முகலன், அக்கிரபோதி
4. நீர்ப்பாசனக்குளங்களை அமைக்க வேண்டிய காரணமல்லாதது
   (அ) சனத்தொகை அதிகரிப்பும் விவசாய அபிவிருத்தியும்
   (ஆ) போதியளவு மழையின்மையும் மழையின் நிச்சயமற்ற தன்மையும்
   (இ) நீண்ட வறட்சியும் பஞ்சமும்
   (ஈ) வெள்ளப்பெருக்கும் மலேரியாவும்

5. கிராமியக்குளங்களை அமைத்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   (அ) கமிகன், பருமகன், உத்தரன், அடித்தரன்
   (ஆ) அனுராத, விஜித, உபதீச
   (இ) கிரி, சோம, சேரு
   (ஈ) மகாநாகன், கோதபாயன், தீசன்
6. மின்னேரிய தெய்யோ யார்?
   (அ) தாதுசேனன் (ஆ) மகாசேனன்
   (இ) வசபன் (ஈ) அக்கபோதி
7. 'இதுவே என் பொக்கிஷம்' என காலவாவி நீரை அள்ளிக் காட்டிய மன்னன் யார்?
   (அ) தாதுசேனன் (ஆ) மகாசேனன்
   (இ) தேவநம்பியதீசன் (இ) வசபன்
8. A நிரலில் உள்ளவற்றை B நிரலில் உள்ளவற்றுடன் இணைக்க.

| A நிரல் | B நிரல் |
|---|---|
| 1. வசபன் | (அ) தாதுசேனன் |
| 2. மின்னேரியா | (ஆ) கந்தளாய்க்குளம் |
| 3. தாதுசேனன் | (இ) ஜயவாவி |
| 4. முதலாம் அக்கிரபோதி | (ஈ) நொச்சிப்பொத்தானைக்குளம் |
| 5. கிரித்தலைவாவி | (உ) மகாசேனன் |
| 6. இரண்டாம் முகிலன் | (ஊ) ஜயகங்கை |
| 7. மினிப்பே அணை | (எ) குருலுவாவி |
| 8. குளக்கோட்டன் | (ஏ) 2ம் அக்கிரபோதி |
| 9. காலவாவி | (ஐ) நச்சடுவாக்குளம் |
| 10. பண்டுகாபயன் | (ஒ) 1ம் அக்கிரபோதி |

(விடைகள்: 1 (ஆ), 2 (அ), 3 (இ), 4 (ஈ), 5 (அ), 6 (ஆ), 7 (அ), 8 1 (ஈ),
2 (உ), 3 (ஊ), 4 (எ), 5 ( ஏ), 6 (ஐ), 7 ( ஒ), 8 (ஆ), 9 (அ), 10 (இ).

**பயிற்சி – 2**

1. இலங்கையில் பௌத்தம் நிலை கொண்டமைக்கான காரணங்கள்
   (அ) அசோகனுக்கும் தேவநம்பிய தீசனுக்கும் இடையிலான நட்பு
   (ஆ) மகிந்ததேரரின் வருகை
   (இ) மன்னனதும் மக்களினதும் ஆதரவு
   (ஈ) இவை அனைத்தும்
2. மகாமேகவனத்தை அமைத்த மன்னன் யார்?
   (அ) தேவநம்பியதீசன் (ஆ) மூத்தசிவன்
   (இ) மகாசேனன் (ஈ) தாதுசேனன்

3. மகாவிகாரை என்பது யாது?

(அ) மகாமேகவனத்திலுள்ள ஒரு கட்டிடம்

(ஆ) ஒரு விகாரை (இ) ஒரு தாதுகோபம்

(ஈ) பௌத்த மதக் கட்டிடங்களின் தொகுதி

4. மகாவிகாரையுள் அடங்கும் பௌத்த கட்டிடங்கள்

(அ) ருவான்வெலிசாய, லோவாமகாபாயா, ஸ்ரீமகாபோதி

(ஆ) அரண்மனை, தடாகம், மயானம்

(இ) தூபராம, மிரிசுட்டி தூபி, அபயகிரி

(ஈ) குட்டன் தடாகம், இசுருமுனியா, ஜேத்தவனராம

5. 1000 தூண்கள், 100 அறைகள், 9 மாடிகள் கொண்ட சமயக்கட்டிடம்

(அ) மகாதூபி (ஆ) தூபராம

(இ) லோவாமகாபாயா (இ) தூபராம வட்டதாகே

6.தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றிய சங்கத்தினர்

(அ) அபயகிரி விகாரையைச் சேர்ந்தவர்கள்

(ஆ) மகாவிகாரையைச் சேர்ந்தவர்கள்

(இ) ஜேத்தவனராமய விகாரையைச் சேர்ந்தவர்கள்

(ஈ) தூபராம விகாரையைச் சேர்ந்தவர்கள்

7.அபயகிரி விகாரைப் பிக்குகள் பின்பற்றிய பௌத்தப் பிரிவு யாது?

(அ) மகாயானம் (ஆ) தேரவாதம்

(இ) ஹீனயானம் (இ) இவை எதுவுமல்ல.

8.அபயகிரி விகாரையைக் கட்டிய வலகம்பாகு அதனை எப்பிக்குவுக்குத் தானம் செய்தான்?

(அ) மகிந்ததேருக்கு (ஆ) குப்பிகலதிஸ்ஸதேருக்கு

(இ) கொஹொன்திஸ்ஸதேருக்கு (இ) பஹயமஸ்ஸதேருக்கு

9.அனுராதபுர ஆட்சியிலிருந்து ஐந்து தமிழர்களின் ஆட்சியை அகற்றிய அரசன் யார்?

(அ) மகாசேனன் (ஆ) வலகம்பாகு

(இ) துட்டகைமுனு (இ) சதாதீசன்

10.ஸ்ரீமகாபோதி எனக் குறிப்பிடுவது யாது?

(அ) துட்டகைமுனு கட்டிய மகாதூபியை

(ஆ) சங்கமித்தை நாட்டிய வெள்ளரசுமரக் கோயிலை

(இ) தேவநம்பியதீசன் கட்டிய தூபராமயவை

(ஈ) மூத்தசிவன் அமைத்த மகாமேகவனத்தை

11.மகாவிகாரைப் பிக்குகளை உருகுணைக்கு ஓடச்செய்த மன்னன் யார்?

(அ) மகாசேனன் (ஆ) மூத்தசிவன்

(இ) துட்டகைமுனு (ஈ) வலகம்பாகு

12.பண்டுலன், தீயன் ஆகியோர்

(அ) சமணர் (ஆ) பிராமணர்

(இ) பௌத்தர் (ஈ) சைவர்

13. இலங்கையில் அக்காலத்தில் இருந்த சிவதேவாலயம் அல்லாதது யாது?

(அ) தான்தோன்றி ஈஸ்வரர் (ஆ) முன்னேஸ்வரம்

(இ) திருக்கேதீஸ்வரம் (ஈ) நகுலேஸ்வரம்

14.பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்திய மன்னன்

(அ) கஜபாகு (ஆ) வலகம்பாகு

(இ) மகாசேனன் (ஈ) தேவநம்பியதீசன்

15. அனுராதபுர யுகத்தில் பிரதான கல்வி நிலையமாக விளங்கிய விகாரை

(அ) மகாவிகாரை (ஆ) அபயகிரி

(இ) ஜேத்தவனராமயா (ஈ) தூபராம

**(விடைகள்:** 1 (ஈ), 2 (ஆ), 3 (ஈ), 4 (அ), 5 (இ), 6 (ஆ), 7 (அ), 8 (ஆ), 9 (ஆ), 10 (ஆ), 11 (அ), 12 (ஆ), 13 (அ), 14 (அ), 15 (ஆ).

## அத்தியாயம் 5

# 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் பதினாறாம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை

**1.இராசரட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான நிலமைகளை விபரிக்க.**

(அ)1197 தொட்டு 1215 வரையிலான காலகட்டம் இலங்கை வரலாற்றில் குழப்பானதாக விளங்கியது. அரசியல் விவகாரங்களில் சேனாதிபதிகள் கூடுதலாகத் தலையிட்டமையே பிரதான காரணமாகும். கீர்த்தி, ஆயஸ்மந்தன் ஆகிய சேனாதிபதிகள் தாம் விரும்பிய எண்ணப்படி லீலாவதி, கல்யாணவதி ஆகிய பெண்களை ஆட்சியாளராக்கினர். லீலாவதியை மூன்று தடவைகள் சிம்மாசனத்தில் சேனாதிபதியே அமாத்தினான். கலிங்கவம்சவழி வந்தவர்களும் பாண்டிய வம்சவழி வந்தவர்களும் அரசுரிமைக்காக பிணக்குப்பட்டனர். இலங்கை மன்னர்களுக்கும் கலிங்க, பாண்டிய அரசிகளுக்கும் பிறந்த பிள்ளைகள், அவர்கள் வழிவந்த பேரப்பிள்ளைகள் என்போர் அரச உரிமைகோரினர். கலிங்கமாகன் என்பான் இலங்கையைக் கைப்பற்றும் வரை இக்குழப்பநிலை நிலவியது.

(ஆ) 1215 ஆம் ஆண்டு 24 ஆயிரம் கேரளப்படையுடன் இலங்கை வந்த கலிங்கமாகன் இலங்கையைக் கைப்பற்றி 21 வருடங்கள் பொலநறுவையிலிருந்து ஆட்சி செலுத்தினான். பொலநறுவை அரசியலில் நிலவிய குழப்பங்கள் அவனுக்குச் சாதகமாக விருந்தன.

(இ) சிங்களவரால் தமிழரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வயல்கள், நிலங்கள், சொத்துக்கள் என்பனவற்றினை இவன் மீளப்பெற்று தமிழருக்குக் கொடுத்தான் எனவும், தமிழர் பிரதேசங்களைச் சிங்களவர் ஆதிக்கத்திலிருந்து மீட்டதுடன், சிங்கள ஆக்கிரமிப்பாளர்களைத் தென்புலம் நோக்கிப் பெயர வைத்தான் எனவும் தமிழ் வரலாற்றாசிரியர்கள் கருதுவர்.


(ஈ) 'கலிங்கமாகன் தமிழரிடம் விசேஷமாக அன்பு பாராட்டி அவர்களுக்கு வயல்களும், புற்றரைகளும், வீடுகளும், தோட்டங்களும், பணியாட்களும், மாடுகளும், எருமைகளும் தொகுத்துக் கூறுவதாயின் சிங்களவரின் உடைமைகள் யாவற்றையும் கொடுத்தான். 'அந்தோ காலனின் பூதங்கள் போன்ற அந்தத் தமிழ்ப்பூதங்கள் இப்படியே சிங்கள இலக்கியத்தையும் சமயத்தையும் அழித்தனர்.' எனச் சூளவம்சம் எனும் சிங்கள நூல் கூறும்.

(உ) கலிங்கமாகனின் ஆட்சியில் சிங்கள மக்களும் பௌத்தமதமும் பெரிதும் பாதிப்புற்றனர். ஆதரவை இழந்தனரெனக் கொள்ளலாம். அவர்களைப் பொறுத்தளவில் மாகன் பெருங்கொடுங்கோலனாக விளங்கினான். விகாரைகள்,

பிரிவெனாக்கள், இலக்கியநூல்கள் என்பன மாகனின் படையெடுப்பால் அழிந்துபோயின என்பர்.

(ஊ) மாகனின் படையெடுப்புடன் மக்கள் வரண்ட பிரதேசத்தைவிட்டு தென்புலமாக இடம் பெயர்ந்தனர். அதனால் வயல் வெளிகளும் குளங்களும் காடடர்ந்து போயின. மலேரியா நோய் பரவியது. இராஜரட்டை, மக்கள் வாழ உவப்பற்ற பிரதேசமாக மாறியது. கலிங்கமாகனின் ஆட்சிக்குப்பின் தெற்கே தம்பதேனியா தலைநகரமாக மாறியது.

(எ) மாகனின் ஆட்சி பெரும்பாலும் போர்த்தன்மை கொண்டதாக இருந்தது. பொலநறுவை, கவுடுல்ல, பதவியா, மன்னார், ஊர்காவற்றுறை முதலான பகுதிகளில் போர் அரண்களை அமைத்திருந்தான்.




**2. கலிங்கத்துமாகனின் படையெடுப்பை அடுத்து யாது நிகழ்ந்தது?**

பொலநறுவை இராச்சியத்தை மீட்டு அதனைக்கட்டியெழுப்பக் கூடிய ஒரு தலைமைத்துவம் உருவாகவில்லை. பிராந்திய அரசுகள் காணப்பட்டன. குன்றுகளின் உச்சிகளில் கோட்டைகளை அமைத்துக் கொண்டு மக்களையும் பௌத்தத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சித்தனர். கோவிந்தகல,யாப்பஹூவ, மினிப்பே, தம்பதேனியா முதலான பகுதிகளில் தம் ஆட்சியை அமைத்துக் கொண்டனர். வன்னியிலும் ஒரு பிரதேச ஆட்சி நிலவியது. இலங்கையின் தலைநகர்கள் தென்புலம் இடம் மாறின.

**3. மாகன் இராசரட்டையை ஆட்சி செய்த காலத்தில் இலங்கையின் வேறு பிரதேசங்களில் இருந்த பிராந்திய அரசர்கள் யார்?**

1.தம்பதேனியா, யாப்பகுவை, உருகுணை, மலைய ரட்டை, மினிப்பே முதலான பிரதேசங்களைப் பிராந்திய ஆட்சியாளர்கள் ஆண்டனர்.

2.தம்பதேனியாவில் விஜயபாகு, யாப்பகுவையில் சுப, உறுகுணையில் புவனேகபாகு, மினிப்பேயில் சங்க என்போர் பிராந்திய ஆட்சியாளர்களாக விளங்கினர். இவர்கள் மாகனுக்கு எதிராகப் படைதிரட்டுவதில் ஈடுபட்டனர்.

3.இப்பிராந்திய மன்னர்களால் இராஜரட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் தம்தமது பிரதேச மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தனர்.

4.இந்த மன்னர்களுள் விஜயபாகு மக்களின் ஆதரவினைப் பெற்றிருந்தான். அவன் மூன்றாம் விஜயபாகு என்ற பெயருடன் தம்பதேனியா இராச்சியத்தின் மன்னனாகினான்.

**4. மூன்றாம் விஜயபாகுவின் அரசியற் செயற்பாடுகளையும் சமயச் செயற்பாடுகளையும் சுருக்கமாக விபரிக்க.**

(1) மாயரட்டையிலிருந்த ஏனைய பிராந்திய அரசர்களை வெற்றி கொண்ட மூன்றாம் விஜயபாகு தம்பதேனியாவைத் தலைநகராக்கி அதன் மன்னனாக முடிசூடிக்கொண்டான்.

(2) இவனை வன்னி மன்னன் என்பர். இவன் மாயரட்டையிலிருந்த மாகனின் படைகளைப் பொலநறுவை வரை துரத்தி விட்டான்.

(3) இராசரட்டையிலிருந்து மாகனைத் துரத்த முடியாவிட்டாலும் தம்பதேனியாவை எதிரிகளுக்கு எதிராக எழுந்து நிற்கும் வல்லமை பொருந்திய ஒரு நகரமாக மாற்றினான்.

(4) தம்பதேனியா இயற்கைப் பாதுகாப்பு நிறைந்த பிரதேசம். அத்துடன் கோட்டை கொத்தளங்களையும் அமைத்து வலிதாக்கினான்.

(5) இவனுடைய ஆட்சியை மக்கள் கூடுதலாக மதித்தமைக்கு இன்னொரு காரணம் புத்தரின் புனித தந்ததாது, (பற்சின்னம்), புனித பிச்சாபாத்திரம் என்பன இவன் வசமிருந்தமையுமாகும். பெலிகலையில் அமைக்கப்பட்ட தந்ததாது மாளிகையில் இவற்றினை வைத்துப் பாதுகாத்தான். சாதாரண மக்களும் குருபீடத்தினரும் அதனால் இவனை மதித்தனர்.

(6) தம்பதேனியாவில் லிஜயசுந்தரராமயா, வத்தளையில் விஜயபாகு விகாரை என்பனவற்றினைக் கட்டுவித்தான்.

(7) யுத்தத்தினால் பாதிப்புற்ற பௌத்த நூல்களை எழுதுவித்தான். புத்தகுருமாரின் மதஞானத்தை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுத்தான்.

(8) 1232 இலிருந்து 1236 வரை தம்பதேனியாவிலிருந்து ஆட்சி புரிந்தான்.

**5. விஜயபாகுவின் பின்னர் அரசனான அவனது மகன் இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிச் சிறப்புகளைச் சுருக்கமாக விபரிக்க.**

(1) கலிங்கத்து மாகனை இவனது படைகள் வெற்றி கொண்டன. மாகனுடைய நாற்பது ஆண்டு கால ஆட்சியை இம்மன்னன் அழித்தான்.

(2) யாவா தேசத்து (தாமுறலிங்க) மன்னன் சந்திரபானுவின் படையெடுப்பினை பராக்கிரமபாகு தன் மருமகனாகிய வீரபாகுவைக் கொண்டு முறியடித்தான். சந்திரபானுவின் இரண்டாம் படையெடுப்பினையும் இம்மன்னன் முறியடித் தான்.

(3) மகா கதிகாவத, தம்பதேனிய கதிகாவத எனும் புத்தபிக்குகளின் ஒழுக்க விதிகளடங்கிய இரண்டு நூல்களை எழுதுவித்தான்.

(4) சங்கராஜ மகாதேரரின் தலைமையில் உபசம்பதா விழாவை வருடா வருடம் கொண்டாடினான்.

(5) வெளிநாடுகளிலிருந்து ஒழுக்க சீலர்களான பிக்குகளை வரவழைத்தான்.

(6) விசுத்திமார்க்க சன்னய, கவிசிளுமின ஆகிய நூல்களை இம்மன்னனே ஆக்கினான். அதனால் இவனை 'கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டித' என்று போற்றினர்.

6. **தம்பதேனியாவிலிருந்து தலைநகரம் யாப்பகுவைக்கு மாறியதற்கான சூழலைச் சுருக்கமாக விபரிக்கவும்.**

(1) இரண்டாம் பராக்கிரமபாகுவின் மரணத்தின் பின்னர் அவனது மகனான நான்காம் விஜயபாகு (போசத் விஜயபாகு) அரசனானான்.

(2) இவன் இரண்டு ஆண்டுகளே ஆட்சி செய்ய முடிந்தது. அரண்மனையில் தீட்டப்பட்ட சதியில் மரணமடைய நேர்ந்தது.

(3) அதன் பின்னர் விஜயபாகுவின் சகோதரனான முதலாம் புவனேகபாகு 1272 இல் அரசனானான்.

(4) இவனுக்கு நாலாதிக்குகளிலுமிருந்து அரசியற் சவால்கள் விடப்பட்டன. விஜயபாகுவிற்குச் சார்பான வன்னித் தலைவர்கள் இவனுக்கு எதிராக எழுந்தனர்.

(5) சோழகங்கன், காலிங்கராயர் என்பவர்களின் தலைமையில் தமிழர் படையெடுப்பு நடந்தது. இதனைப் புவனேகபாகு முறியடித்தான்.

(6) இலங்கையின் யாழ்ப்பாண அரசன் சென்தமேன்(சிங்கை ஆரியன்) பாண்டியரின் உதவியுடன் தன்னைத் தாக்கக் கூடுமென்ற பயம் புவனேகபாகுவிற்கு இருந்தது.

(7) இவை காரணமாக மலைகளாலும் காடுகளாலும் சூழப்பட்ட பாதுகாப்பான இடத்திலிருந்த யாப்பகுவைக்குத் தனது தலைநகரை மாற்றிக் கொண்டான்.



**யாப்பகுவை**

(ஏ) யாப்பகுவை கடல் மட்டத்திலிருந்து 300 மீற்றர் உயரமான மலைக்குன்றாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது பெருந்தொகையான சீன நாணயங்கள் அகப்பட்டன. இவை சீனாவுடனான தொடர்பைக் காட்டுகின்றன. அத்துடன் எகிப்திய சுல்தானுக்கும் ஒரு தூதுக்குழுவை அனுப்பி வைத்ததாக அறியமுடிகின்றது.

(ஏ) முதலாம் புவனேகபாகுவின் பின்னர் அவனது சகோதரனான 3 ஆம் பராக்கிரமபாகு மன்னனானான். அவனின் பின்னர் முதலாம் புவனேகபாகுவின் மகனான இரண்டாம் புவனேகபாகு அரசனானான். அவன் சிறிது காலம் யாப்பகுவையிலிருந்து அரசாண்டபின்னர் 1300 இல் குருநாகலையை இராசதானியாக்கிக் கொண்டான். இவன் இறந்ததும் 4 ஆம் பராக்கிரமபாகு ஆட்சிக்கு வந்தான்.

7. **நான்காம் பராக்கிரபாகுவின் சமய சேவைகளை விபரிக்க.**

(1) புவனேகபாகுவின் பின்னர் அவனது மகனான நான்காம் பராக்கிரமபாகு ஆட்சியில் அமர்ந்தான்.

(2) அவன் குருநாகலில் ஒரு தலதா மாளிகையைக் கட்டி அதில் புத்த புனித தாதுக்களை வைப்பித்தான்.

(3) இவற்றினைப் பேணுவதற்காகக் கிராமங்களை நன்கொடையாக வழங்கினான்.

(4) புனித பற்சின்னத்திற்குப் பூசை செய்யும் முறைகள் குறித்து 'தலதாசிறித்' என்ற நூலை எழுதுவித்தான்.

(5) வீதாகம ஸ்ரீ குணானந்த பிரவேனாவுக்கும் தொட்டகமு விஜயபாகு பிரிவேனாவுக்கும் ஆதரவு பொருளாக வழங்கினான்.

(6) கண்டியில் அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தான்.

(7) ஜாதகக்கதைகளை 'பன்சிய பணஸ் ஜாதகம' எனச் சிங்களத்தில் மொழிபெயர்ப்புச் செய்வித்தான்.

(8) சிங்கள போதி வம்ச, அனகதா வம்ச போன்ற நூல்கள் இம்மன்னன் காலத்திலேயே எழுதப்பட்டன.

(9) சமயத்துறைக்கும் இலக்கியத்துறைக்கும் இம்மன்னன் அளப்பரிய சேவைகள் செய்துள்ளான்.

(10) கிபி. 1326 இல் குருநாகல் காலம் நிறைவுற்றது.

**8. கம்பளை இராச்சியத்தினதும் இறய்கம இராச்சியத்தினதும் அரசியற் செயற்பாடுகளை விபரிக்க.**

(1) குருநாகலையில் நான்காம் பராக்கிரமபாகு அரசனாக இருந்தபோது, புவனேகபாகு என்பான் கம்பளையின் யுவராஜனாக விளங்கினான். பராக்கிரமபாகு மரணமடைந்ததும் அரசகட்டிலேறிய புவனேகபாகு (நான்காம்) கம்பளையையே தலைநகராக்கிப் கொண்டான்.



கடலாதெனிய

(2) இம்மன்னன் காலத்தில் தெவனகலவனரத்னதேரர் என்பவர் தலைமையில் 1351 ஆம் ஆண்டு புத்தசாசனம் திருத்தி எழுதப்பட்டது. இச்செயற்பாட்டிற்குச் சேனாதிலங்கார செனரத் என்ற மந்திரி முக்கிய காரணியாகவிருந்தான்.

(3) நான்காம் புவுனேகபாகு காலத்தில் கம்பளை இலங்காதிலக விகாரையும் கடலாதெனிய விகாரையும் கட்டப்பட்டன.

(4) நான்காம் புவனேகபாகுவிற்குப் பின்னர் அவனுடைய மகனான பராக்கிரமபாகு (ஐந்தாவது) அரசனானான். கிபி 1360 இல் இவனைத் துரத்திவிட்டு விக்கிரமபாகு (ஐந்தாவது) கம்பளை இராச்சியத்தின் அரசனானான்.

(5) இது வரை காலமும் கம்பளை இராச்சியத்தின் அமைச்சு சேனாதிலங்கார பரம்பரைக்கு உரியதாக இருந்தது. விக்கிரமபாகு காலத்தில் அமைச்சுரிமை அழகக்கோனார் பரம்பரைக்குரியதாகியது. அதனால் அரசனின் முதல் அமைச்சனாக நிஸ்ஸங்க அழகக்கோனார் நியமிக்கப்பட்டான்.

(6) நிஸ்ஸங்க அழகக்கோனார் பிரபு ராசா என்றழைக்கப் பட்டான். அத்துடன் அரசனுக்குப் பதிலாக ஆட்சி செய்யும் தலைவனான்.

(7) விக்கிரமபாகு காலத்தில் யாழ்ப்பாண ஆரியச் சக்கிரவர்த்தியான ஜயவீரசிங்கை ஆரியன் கம்பளை இராச்சியத்தின் மீது படையெடுத்து வெற்றி கொண்டு வரியும் அறவிட்டான். சிலாபம், நிர்கொழும்பு, வத்தளை, கொழும்பு ஆகிய இடங்களில் படையரண்களை நிறுவி இத்துறைமுகங்களின் இறக்குமதி வருமானங்களையும் பெற்று வந்தனர்.

(8) இவற்றினைப் பொறுக்க முடியாத நிஸ்ஸங்க அழகக் கோனார் கோட்டை என்ற பகுதியை உகந்த இடமாகத் தெரிவு செய்தான். அங்கிருந்து படை திரட்டி ஆரியச்சக்கிர வர்த்தியின் படைகளைத் துரத்தி வெற்றி கண்டான். துறைமுகங்களின் வருமானங்களை மீண்டும் விக்கிரமபாகு அரசன் பெற வழி வகுத்தான். இவற்றினால் அழகக் கோனார் பரம்பரை அரசியலில் முக்கியம் பெறலாயிற்று.

(9) விக்கிரமபாகுவிற்குப் பின்னர் கம்பளை அரசின் ஆட்சியினை ஐந்தாம் புவனேகபாகு ஏற்றுக் கொண்டான்.

(10) நிஸ்ஸங்க அழகக்கோனாரின் மக்களான அழகேஸ்வரன், தேவமந்திரி, அர்த்தநாயக்கன் எனும் மூன்று சகோதரர்கள் அமைச்சர்களாக இருந்தனர். இவர்களின் பிறந்த இடம் இறய்கம ஆகும்.

(11) புவனேகபாகு மறைந்ததும் வீரவாகு என்பவன் அரசனானான். அவன் காலத்தில் இறய்கமவில் வீரஅழகேஸ்வரன் என்பவன் அரசனாக இருந்தான்.


(12) இந்த அரசர்கள் காலத்தில் சீனாவின் யுங்லோ என்ற பேரரசன் செங்கோ என்ற சேனபதிபதி தலைமையில் ஒரு கப்பற் படையை கிபி 1405 இல் இலங்கைக்கு அனுப்பினான். இவனை கம்பளை மன்னன் உபசரித்தான். இறய்கம அரசன் வீர அழகேஸ்வரன் வரவேற்கவில்லை. கம்பளை அரசனுக்கும் பிரமுகர்களுக்கும் கம்பளையிலிருந்த வணக்கத்தலங்களுக்கும் வெகுமதிகளைக் கொடுத்த செங்கோ, மிகுதியை தேவேந்திரா முனையில் முன்னர் அமைந்திருந்த விஷ்ணு தேவாலயமான 'தெவுந்தர உபுல்வன்' தேவாலயத்திற்கு அன்பளிப்புச் செய்து விட்டு மீண்டான்.

(13) கிபி 1411 இல் மீண்டும் பெரும் கப்பற்படையுடன் இலங்கைக்கு வந்த செங்கோ, இறயகம அரசன் வீர அழகேஸ்வரனையும் பெருந்தொகையானோரையும் சிறைக் கைதிகளாக்கிக் கொண்டு சீனா சென்றான். சீனப் பேரரசன் அவர்களை மன்னித்துத் திருப்பி அனுப்பி வைத்தான்.

9. **கோட்டை இராச்சியத்தின் அரசியற் செயற்பாடுகளைச் சுருக்கமாக விபரிக்க**

1.பிரபுராசா என்ற அழைக்கப்பட்ட நிஸ்ஸங்க அழகக்கோனாரே கோட்டை இராச்சியத்தினை உருவாக்கினான். கோட்டை இராச்சியத்தின் நகரைத் திட்டமிட்டு அமைத்தவன் அவனே.

2.ஆரியச் சக்கிரவர்த்திகளின் ஆதிக்கம் சிங்கள மன்னர்களுடைய பகுதிகளுக்குப் பரவாது தடுப்பதற்காகவே அழகக்கோனார் கோட்டை நகரை நிர்மாணித்தான்.




3.கிபி 1415 இல் கோட்டை இராச்சியத்தின் முதல் மன்னனாக ஆறாம் பராக்கிரமபாகு அரசனானான்.

4.விஜயநகரத்து மன்னன் (அவன் பெயர் கண்டி) இலங்கையை ஆக்கிரமிக்க எடுத்த படையெடுப்பினை பராக்கிரமபாகு முறியடித்தான்.

5.அதிராமபட்டினத்திற்கு வியாபாரத்திற்காகச் சென்ற பராக்கிரமபாகுவின் கப்பலை, ராஜன் மலவராயன் என்பான் தந்திரமாகக் கைப்பற்றிக் கொண்டான். அதனால் கப்பற் படையுடன் சென்ற 6 ஆம் பராக்கிரமபாகு அத்துறை முகத்தினைக் கைப்பற்றி கப்பலை மீட்டுப் பெரும் செல்வத்துடன் மீண்டான்.

7.தனது வளர்ப்புப் புதல்வனான சப்புமல்குமரய (செண்பகப்பெருமாள்) என்பானைப் பெரும் படையுடன் அனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினான். ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்ற நாமத்துடன் சப்புமல்குமரய யாழ்ப்பாண இராச்சியத்தை 17 ஆண்டுகள் ஆண்டான்.

8.மலையகத்தில் எழுந்த கிளர்ச்சியை தனது இன்னொரு வளர்ப்புப் புதல்வனான அம்புலுகலகுமரயவைப் படையுடன் அனுப்பி அடக்குவித்தான்.

9.பராக்கிரமபாகு காலத்தில் இலக்கிய நூல்கள் பல வெளிவந்தன. கிராசந்தேசிய, சலலிஹிணி சந்தேசய எனும் தூது நூல்களும், குத்திலகாவிய, புதுகுண அலங்காரய, சத்தர்ம ரத்னா வலிய, காவியசேகர, பஞ்சிகா பிறதீபய முதலான இலக்கிய நூல்களும் இம்மன்னன் காலத்தில் எழுதப்பட்டவை.

10.கல்வி வளாச்சிக்காகப் பத்மாவதி பிரிவெனா, சுனேத்திரா தேவி பிரிவெனா என்பனவற்றினை நிறுவினான்.

11.இந்து மதத்துக்கு அனுசரணையாகக் கோட்டைக்குள் ஒரு சிவன்கோயிலையும் கட்டுவித்தான்

12.ஆறாம் பராக்கிரமபாகு இறந்ததும் அவனது பேரனான ஜயபாகு முடிதரித்துக் கொண்டான். ஆனால் யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து பெரும்படையுடன் வந்த புவனேகபாகு அவனைக் கொன்றுவிட்டு 1469 இல் அரசனானான்.

13.இவனுக்கு எதிராகக் குரகமதேரர் தலைமையில் ஒரு பெரிய குழுவினர் சதி செய்தனர். சத்தகோறளையிலிருந்த அம்புகலகுமரயவின் உதவியுடன் இக்கிளர்ச்சி அடக்கப்பட்டது. குரகமதேரரும் ஏனையோரும் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

**10. கலிங்கத்துமாகனின் ஆக்கிரமிப்பிற்குப்பின்னர் மக்களும் இராசதானிகளும் தென்புலம் பெயர்ந்தனர். அதனால் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள் யாவை?**

(அ) இராசரட்டையின் வீழ்ச்சியை அடுத்து உண்ணாட்டுப் பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. யுத்தங்கள் காரணமாக, முக்கியமாகக் கலிங்கத்துமாகனின் படையெடுப்பால் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை அழிந்து போயின. விவசாயம் சிரமமானது. பட்டினி நிலை ஏற்பட்டது.

(ஆ) ஆற்றல் மிக்க தலைமைத்துவம் இல்லாதிருந்தது. பிராந்தியத்தலைவர்கள் கலிங்கத்துமாகனின் கட்டளைக்குப் பணிந்து செயற்படநேர்ந்தது. புல தொல்லைகளை எதிர்நோக்கநேர்ந்தது. பொருளாதாரத்துக்கு வலுவூட்டக்கூடிய மனித வளம் பாரிய எண்ணிக்கையில் மரணித்தமை, ஊனமுற்றமை விவசாயப்பொருளாதார முறையைப் பாதித்தது.

(இ) உலர் வலய நீர்நிலைகளைச் சூழ்ந்திருந்த குடியிருப்புகள் ஈரவலயத்தை நோக்கி இடம் பெயர்ந்தன. மக்கள் பதிய சூழலுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள நேர்ந்தது.

(ஈ) மக்கள் பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வாசனைத்திரவியங்கள் முக்கிய வர்த்தகப்பொருள்களாகின. 1344 இல் கறுவா வியாபாரம் குறித்து இபன்பத்தூதா குறிப்பிட்டுள்ளார். களுத்துறை, பெந்தோட்டை ஆகிய கரையோரங்களில் தெங்குச்செய்கையும் ஆரம்பிக்கப்பட்டது.

11. இக்காலகட்டத்தில் சமயம், இலக்கியம், கலை, கட்டிடக்கலை என்பன எவ்வாறிருந்தன?

(அ) மன்னர்கள் பௌத்தத்தையும் புத்தசாசனத்தையும் பாதுகாப்பதில் கவனமாக இருந்தனர். புனித தந்ததாதுவைத் தம்பொறுப்பில் வைத்திருக்கவும் பாதுகாக்கவும் முயன்றனர்.

(ஆ) இராசரட்டையைவிட்டு வெளியேறி மலைநாட்டிலும் உருகுணையிலும் தஞ்சம் புகுந்திருந்த பிக்குகளை 3 ஆம் விஜயபாகு தம்பதேனியாவில் நிர்மானித்த விஜயசுந்தர விகாரையில் ஒன்று கூட்டி புத்தசாசனத்தைத் தூய்மைப்படுத்தினான்.

(இ) முதலாம் புவனேகபாகு யாப்பகுவையில் அழகான தலதா மாளிகை ஒன்றை அமைப்பித்தான். தாதுவை அங்கு வைத்தான். கண்டி அஸ்கிரிய விகாரையை அமைப்பித்தான்.

(ஈ) கோட்டையுகத்தில் சமயநடவடிக்கைகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டது. விகாரைகளிலும் ஓவியங்களிலும் தமிழரின் செல்வாக்குகள் காணப்பட்டன. பெருந்தொகையான தமிழ் நூல்களும் எழுதப்பட்டன. தூதுவிடும் காவியங்கள் முக்கியமானவை. கோட்டையில் தமிழ் மொழியில் தோத்திரப்பாடல்கள் பாடப்பட்ட ஒரு இந்துக்கோயில் இருந்துள்ளது.

சீதாவாக்கை மன்னன் முதலாம் இராஜசிங்கன் சைவ சமயத்தைத் தழுவியிருந்தான். சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த பரண்டிக் கோயிலின் இடிபாடுகளை சீதாவாக்கையில் காணலாம்.

(உ) இக்காலத்தில் கரையோரப்பிரதேசங்களில் முஸ்லீம் குடியிருப்புகள் காணப்பட்டன. அராபியர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். கோணநகரில் பள்ளிவாசல் ஒன்று காணப்பட்டதாக இபன்பத்தூதா குறித்துள்ளார். சிவனொளிபாதமலையில் ஆதாம்பாதச்சுவடு இருப்பதாக முஸ்லீம்கள் மத்தியில் நம்பிக்கையுள்ளது.

(ஊ) மாகனின் படையெடுப்பால் இலக்கிய ஓலைச்சுவடுகள் அழிவுற்றன என்பர். எனினும் தம்பதேனிய காலத்தில் கவிசிலுமின, விசுத்திமார்க்கயசன்னத, பூஜாவலிய, சித்தசங்கராவ முதலான நூல்கள் எழுதப்பட்டன. குருநாகல் காலத்தில் பன்சீயபனஸ் ஜாதகய, உம்மக்கஜாதகய, சிங்கள போதிவம்ச, சத்தர்மாலங்கார முதலான உரைநடை நூல்கள் எழுதப்பட்டன. கம்பளைக்காலத்தில் திரசசந்தேச, மயூரசந்தேச, பாறம்சதகத, சதகசந்தேச முதலான தூதுவிடும் காவியங்கள் எழுதப்பட்டன. கோட்மைகாலம் இலக்கிய பொற்காலமாகும். காவியசேகர, வைத்தியசிந்தாமணி, குத்திலகாவிய, சரசோதிமாலை, இரகுவம்சம் முதலான நூல்கள் எழுதப்பட்டன.

(எ) யாப்பகுவைப்படிக்கட்டுகள், லங்காதிலகவிகாரை, கடலாதெனிய விகாரை என்பனவற்றில் தென்னிந்தியக் கட்டிடச் செல்வாக்கினை அவதானிக்கலாம்.

பயிற்சி – 1

1. **கலிங்கத்து மாகனின் ஆட்சி இலங்கையில் எத்தனை ஆண்டுகள் நீடித்தது?**

(1) 44 ஆண்டுகள் (2) 24 ஆண்டுகள்

(3) 21 ஆண்டுகள் (4) 20 ஆண்டுகள்

2.. **'சத்மகால் பிரசாதய' என்பது யாது?**

(1) ஒரு விகாரை (2) அரசமாளிகை

(3) ஏழடுக்குமாளிகை (4) தடாகம்

**3. 'வாகல்கட'என்பது யாது?**

(1) ஒரு தூபியின் முன் முகப்பு

(2) தூபியின் நான்கு பக்கங்களிலும் காணப்படும் நுழைவாயில் போன்ற கட்டிடம்

(3) கோமுகி என்ற கட்டடைப்பு

(4) வட்டதாமனையின் மறுபெயர்

4 **பின் வரும் விலங்குகளில் பொலநறுவைக்காலச் சந்திரவட்டக் கல்லில் எவ்விலங்கு காணப்படுவதில்லை?**

(1) சிங்கம் (2) எருது (3) யானை (4) குதிரை

5. **கலிங்கத்துமாகன் காலப் பிராந்திய மன்னர்களுள் அடங்காத மன்னன் யார் ?**

(1) விஜயபாகு (2) புவனேகபாகு

(3) சுப (4) சங்கிலி செகராசசேகரன்

6. **அனுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு மாறிய தலைநகரம் தென் மேற்குத்திசை நோக்கிப் புலம்பெயர்ந்தமைக்கு உடனடிக் காரணமாகக் கூறப்படுவது யாது?**

1.கலிங்கத்து மாகனுடைய படையெடுப்பும் ஆட்சியும்

2.பொலநறுவையில் சோழரின் ஆட்சி

3.யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சி

4.சிங்கள் மன்னர்களிடையே சிங்காசனம் காரணமாக ஏற்பட்ட தகராறுகள்

7. **தம்பதேனிய இராச்சியத்தினைத் தலைநகராக்கிய மன்னன் யார்?**

(1) சுப (2) விஜயபாகு

(3) புவனேகபாகு (4) சங்க

8. **வர்த்தக உறவுகளை ஏற்படுத்தி, இந்நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள விரும்பிய புவனேகபாகு எந்த நாட்டு மன்னருக்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பினான்?**

(1) சீனதேசத்து மன்னருடன். (2) எகிப்திய சுல்தான்களுடன்

(3) பர்மிய மன்னர்களுடன் (4) பாண்டிய மன்னர்களுடன்

9. **குருநாகல் இராச்சியத்தை ஆரம்பித்தவன் யார்?**

(1) இரண்டாம் புவுனேகபாகு (2) நான்காம் பராக்கிரமபாகு

(3) மூன்றாம் விஜயபாகு (4) கலிங்கத்து மாகன்

10. **யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது சிங்கை ஆரிய மன்னன் யார்?**

(1) உக்கிரசிங்கன் (2) விஜயகாலிங்கன்

(3) குலவீரன் (4) ஜயவீரன்

11. **இரண்டாம் பராக்கிரமபாகுவால் துரத்தியடிக்கப்பட்ட சந்திர பானுவை வெற்றிகொண்ட மன்னன் யாா.?**

(1) விரோதய சிங்கைஆரியன் (2) சுந்தர பாண்டியன்

(3) பராக்கிரமபாகு (4) விஜயகாலிங்கச் சிங்கை ஆரியன்

12. **முத்துக் குளித்தல் சம்பந்தமாக எழுந்த போரில் தென் னிலங்கை மன்னனை வெற்றி கொண்டு 12 வருடங்கள் திறை பெற்ற யாழ்ப்பாண அரசன் யார்?**

(1) ஜயவீர சிங்கை ஆரியன் (2) குலோத்துங்கசிங்கை ஆரியன்

(3) வரோதய சிங்கை ஆரியன் (4) கனகசூரிய சிங்கை ஆரியன்

13. **யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட சிங்கள மன்னன் யார்?**

(1) ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு (2) நான்காம் பராக்கிரமபாகு

(3) சந்தரபாணு (4) சுந்தரபாண்டியன்

**14. ஆரியச்சக்கிரவர்த்தியிடம் கப்பற்படை இருப்பதாகக் கூறிய சஞ்சாரி யார்?**

(1) பாகியான் (2) இபன் பத்தூதா

(3) மார்க்கோப்போலோ (4) வாஸ்கொடகாமா

15. **கம்பளையைத் தலைநகராக்கிய அரசன் யார்?**

(1) நான்காம் பராக்கிரமபாகு (2) நான்காம் புவனேகபாகு

(3) நிஸ்ஸங்க அழகக்கோனார் (4) வீர அழகேஸ்வரன்

**16. சேனாதிலங்கார பரம்பரை அமைச்சுரிமையை இழந்து அழகக்கோனார் பரம்பரை அமைச்சுரிமையை எந்த மன்னன் காலத்தில் பெற்றது?**

(1) மூன்றாம் விக்கிரமபாகு (2) நான்காம் பராக்கிரமபாகு

(3) நான்காம் புவனேகபாகு (4) வீரவாகு

**17. இலங்காதிலக விகாரையும் கடலதெனிய விகாரையும் எவர் காலத்தில் கட்டப்பட்டன?**

(1) நான்காம் புவனேகபாகு (2) நான்காம் பராக்கிரமபாகு

(3) மூன்றாம் விக்கிரமபாகு (4) வீரவாகு

**18.கம்பளையைக் கைப்பற்றி வெற்றி பெற்ற ஆரியச்சக்கிரவர்த்தியை போரில் வெற்றி கண்டவன் யார்?**

(1) வீர அழகேஸ்வரன் (2) நிஸ்ஸங்க அழகக்கோனார்

(3) தேவ மந்திரி (4) அர்த்தநாயக்கன்

**19.இறய்கமவின் முதல் அரசன் யார்?**

(1) புவனேகபாகு (2) வீரவாகு

(3) வீர அழகேஸ்வரன் (4) பராக்கரமபாகு

**20.இலங்கை மீது கப்பற் படையுடன் வந்திறங்கிய செங்கோ சேனாதிபதி எந்த நாட்டினைச் சேர்ந்தவன்?**

(1) சீனா (2) யப்பான் (3) யாவா (4) பர்மா

**21.**'தெவுந்தர உபுல்வன்' எத் தேவாலயம்?

(1) புத்த விகாரை. (2) சிவதேவாலயம்

(3) விஷ்னு தேவாலயம் (4) விநாயகர் கோயில்

22 **கோட்டை நகரத்தினை நிர்மாணித்தவன் யார்?**

(1) பிரபுராசா (2) வீர அழகேஸ்வரன்

(3) சப்புமல் குமரய (4) ஆறாம் பராக்கரமபாகு

**23.ஆறாம் பராக்கிரமபாகுவின் பிரதான படையெடுப்புகள் எவை?**

1. விஜயநகர மன்னனின் படைகளைத் தோற்கடித்தான்.
2. யாழ்ப்பாண இராச்சியத்தினைப் படையனுப்பிக் கைப்பற்றினான்.
3. அதிவீரராமப்பட்டினத்தைக் கைப்பற்றினான்.
4. இவை அனைத்தும்.

**24.ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்புப் புத்திரர்கள் அல்லாதவர் யார்?**

(1) சப்புமல்குமரய (2) ஜயபாகு

(3) அம்புலுகலகுமரய (4) இவர்கள் மூவரும்

**25.பின்வரும் இலக்கிய நூல்களில் தூதுப்பிரபந்தங்கள் எவை?**

1.கிரா சந்தேசய, சலலிஹிணி சந்தேசய.

2.குத்தில காவிய, புதுகுண அலங்காரய.

3.சத்தர்ம ரத்னாவலிய, காவிய சேகர.

4.பஞ்சிகா பிறதீபய, விசுத்தி மாக்கசன்னய.

**26.ஆறாம் பராக்கிரமபாகுவின் பின்னர் அரசகட்டிலேறியவன் யார்?**

(1) ஆறாம் புவனேகபாகு (2) ஜயபாகு

(3) அம்புலுகல குமரய (4) சப்புமல்குமரய.

**27.குரகமதேரர் யார்?**

1.பௌத்த நெறிகளை ஒழுங்குபடுத்தியவர்


2.ஆறாம் பராக்கிரமபாகுவிற்கு எதிராகச் சதி செய்தவர்

3.சலலஹிணி சந்தேசய என்ற நூலை எழுதியவர்.

4.கோட்டை இராதானியின் முதலமைச்சர்.

28 **தரப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தில் இலக்கமிடப்பட்டவை பின்வருவனவற்றில் எவை எனக் காண்க.**

அனுராதபுரம், பொலநறுவை, தம்பதேனியா, குருநாகல், கம்பளை, கோட்டை, கண்டி, யாப்பகுவை




(1)..................................

(2)..................................

(3) ................................

(4)..................................

(5)..................................

(6)..................................

(7)..................................

(8)..................................

29 **தம்பதேனியகாலத் தமிழ் இலக்கிய நூல் எது?**

(1) பூஜாவலிய

(2) சரஜோதி மாலை

(3) விகாரை வமிசம்

(4) சிங்களபோதி வம்சம்

(விடைகள் ☞ 1 (3), 2 (1), 3 (1), 4 (1), 5 (4), 6 (1), 7 (2), 8 (3), 9 (2), 10 (2), 11 (2) 12 (1), 13 (2), 14 (2), 15 (2), 16 (1), 17 91), 18 (2), 19 (3), 20 (1), 21 (3), 22 (1), 23 (4), 24 (4), 25 (1), 26 (2), 27 (2). 28 (1) தம்பதேனியா (2) அனுராதபுரம், (3) கம்பளை, (4) கோட்டை (5) குருநாகல், (6) கண்டி, (7) பொலநறுவை, (8) யாப்பகுவை, 29 (2),

## அத்தியாயம் - 6

# மத்தியகால ஆசியா

**1. முஸ்லீம்பேரரசு குறித்து விபரிக்க.**

(அ) முஸ்லீம் பேரரசு மத்திய கால ஆசியாவில் பலம் பொருந்திய பேரரசாக விளங்கியது. சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, மெஸப்பெத்தேமியா, பாரசீகம், கிழக்குப்பிரதேச அரசுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. வடமேல் கைபர் கணவாயூடாக இந்தியா நோக்கியும் இஸ்லாமிய இராச்சியம் விரிவடைந்தது.

(ஈ) அரேபியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பட்டுப்பாதை எனப்படும் வர்த்தகப்பாதையில் இடைநடுவில் இந்தியா செயற்பட்டது. வர்த்தகத்தை முழுமையாகத் தம் கைகளில் எடுத்துக்கொள்ள இஸ்லாமியர் விரும்பினர். அராபியர்கள், துருக்கியர்கள், ஆப்கானிஸ்தானியர்கள் ஆகிய முஸ்லீம்கள் இந்தியாவின் சிந்து, பஞ்சாப் முதலான பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

**2. இந்தியாவில் இஸ்லாமியச் செல்வாக்கினை வரலாற்றடிப்படையில் விபரிக்க.**

(1) முஸ்லீம்கள் ஆக்கிரமிப்பாளர்களாகவே இந்தியாவிற்கு வந்தார்கள். இந்தியாவின் செல்வங்களைச் சூறையாடுவதும் இஸ்லாம் மதத்தைப் பரப்புவதுமே அவர்கள் நோக்கமாக இருந்தது.


(2) ஆப்கானிஸ்தானில் கஸ்னி என்றொரு இராச்சியம் இருந்தது. அதன் ஆட்சியாளனாக விளங்கிய சபுக்ஷிஜின் என்பான் மேற்கு இந்தியாவிலும் வடமேற்கு இந்தியாவிலும் முஸ்லீம்களின் அதிகாரத்தைப்பரப்ப விரும்பினான்.

(3) அவனுடைய விருப்பத்தினை நிறைவேற்றியவன் அவனது மகனான கஜனி முகம்மது ஆவான். கஜனி சிறந்த போர் வீரன். பெசாவார், முல்தான், லாகூர் ஆகிய பகுதிகளைத் தன் வசமாக்கிக் கொண்டான்.

(4) இந்தியாவில் இஸ்லாமிய சமயத்தையும் முஸ்லீம் ஆட்சி அதிகாரத்தையும் நிலைநாட்டுவதிலும் இந்தியாவின் செல்வங்களைக் கொள்ளையிடுவதில் கஜனி முகமது விருப்புடையவனாக இருந்தான். கிபி 1026 இல் இந்தியாவின் சோமநாதர் கோயிலைத் தாக்கி ஏராளமான செல்வங்களைச் சூறையாடினான்.

(5) கிபி 1326 வரை இஸ்லாத்தினைத் தழுவிய அரசகுடும்பங்கள் டில்லி இராச்சியத்தினை ஆட்சிசெய்தனர். டில்லியின் இராசபுத்திர அரசனான பிருதிவிராசனைத் தோற்கடித்த கூர்கி முகம்மது டில்லியின் அரசன் ஆகினான்.

(6) அவன் மரணத்தின் பின்னர் டில்லியை குதுபுதீன் ஐபெக் ஆட்சிக்கு வந்தான். இவன் டில்லியைச் சேர்ந்த சில அரசுகளைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் டில்லி சுல்தானாகினான். அவன் பின்னர் இல்டுட்டிமிடிஸ் என்பான் அரசனானான். டில்லிலுள்ள குதுபுமினார் கட்டிடம் இவனால் கட்டப்பட்டது.




(7) டில்லிப்பேரரசின் அரசர்களில் அலாவுதீன் கல்ஜி முக்கியமானவன். இவனுடைய காலத்தில் முஸ்லீம்களின் ஆதிக்கம் தெற்கே தக்கணம் (டெக்கான்) வரை பரவியிருந்தது. (படம்)

(8) கிபி 1325 இல் டில்லி சுல்தானாக விளங்கியவன் மொஹமட் பின் துக்ளக் என்பவனாவான். இவன் டில்லியிலிருந்து தலைநகரை தேவகிரிக்கு இடம்மாற்றினான். இவனுடைய தூரநோக்கற்ற ஆட்சி சுல்தான் பேரரசு வீழச்சியடையக் காரணமாயிற்று.

(9) இந்தியாவில் குடியேறிய முஸ்லீம் அறிஞர்கள் இந்து மத நூல்களைக் கற்றார்கள். இந்து மத அறிஞர்கள் இஸ்லாமிய மெய்யியலைக் கற்றார்கள். இந்து முஸ்லீம் உறவு வளர்ந்தது. உருது என்ற புதியதொரு மொழி உருவாகியது.



குதுபுமினார்

(10) டில்லி சுல்தானின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆங்காங்கு சிறிய அரசுகள் தோன்றின. தக்கணத்தில் பஹாமினி இராச்சியம் தோன்றியது. நசீர் உத்தீன் ஷா, ஹாஸன், முசாபர் அலா உத்தீன் (பஹாமன் ஷா) என்பவர்கள் இந்த அரசின் முக்கியமான மன்னர்கள். குல்பர்கா நகரம் இந்த அரசின் தலை நகரமாக விளங்கியது.

(11) அக்காலத்தில் இந்தியாவின் தென்பகுதியில் விஜயநகர இராச்சியம் விளங்கியது. இரு அரசுகளுக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தது. அதனால் பஹாமினி அரசில் உள் நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டன. அமைதி நிலவவில்லை.


(12) கிபி 1527 இல் பஹாமினி இராச்சியம் வீழ்ச்சியடைந்தது.

**3. மொகலாயப்பேரரசு குறித்து விளக்குக.**

(அ) துருக்கி இனத்தவரான பாபர் என்ற மன்னர் டில்லியைக் கைப்பற்றி 1526 இல் மொகலாயர்களின் ஆட்சியை நிறுவினார். டில்லி சுல்தான் சாம்ராச்சியத்தின் வீழ்ச்சி பாபரின் வெற்றியாகியது. 48 ஆண்டுகள் பாபரின் ஆட்சி நிலவியது. இந்தியாமீது அவன் படையெடுத்தபோது இந்தியா எண்ணிறைந்த அரசுகளாகப் பிரிந்திருந்தது.

(ஆ) பாபரால் நிறுவப்பட்ட மொகலாயப் பேரரசில் 1526 தொட்டு 1707 வரை ஆட்சி செய்தவர்களில் பாபர், ஹுமாயூன், அக்பர், ஜகாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகிய 6 மன்னர்கள் முக்கியமானவர்கள்.

(இ) பாபரின் பேரனான அக்பர் 1556 இல் டில்லி ஆட்சியில் அமர்ந்தான். தென்னிந்தியாவும் தக்கணமும் தவிர இந்தியா முழுவதும் அக்பரின் ஆட்சியின் கீழ் இருந்தது. அசோகச் சக்கிரவர்த்தியின் பின்னர் இந்தியாவை ஆண்ட அன்னர்களில் அக்பர் முக்கியமானவன். இந்து சமயம் குறித்து ஒரு அனுசரனைப் போக்கினைக் கொண்டிருந்தான்.




**தாஜ்மகால்**

(ஈ) அக்பரின் பேரனான ஷாஜகான் ஆட்சிக்காலத்தில் மொகலாய அரசு மேலும் சிறப்புற்றது. உலக அற்புதங்களில் ஒன்றாகிய தாஜ்மகால் என்ற மாளிகையைத் தன் காதல் மனைவியின் நினைவாக யமுனை நதிக்கரையில் அமைத்தான்.

(உ) ஷாஜகானின் புத்திரர்களில் ஒருவனான ஔரங்கசீப் அடுத்து மன்னனானான். அவன் காலத்தில் இப்பேரரசு சற்று தெற்கே விரிவடைந்தது. ஔரங்கசீப்பின் பின்னர் மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**4. இஸ்லாம் சமயத்தின் பரவல் இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கங்களை விபரிக்க.**



மொகலாயயுகத்தின் கட்டிடம்

(அ) வடஇந்தியாவில் மொழி, இலக்கியம், சமயம், கலைகள் போன்ற துறைகளில் பாரசீகச் செல்வாககு ஏற்பட்டது.

(ஆ) இராமாயணம்,மகாபாரதம், ராஜதரங்கினி, பஞ்சதந்திரம் போன்ற இலக்கியப்படைப்புக்கள் பாரசீகமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

(இ) பாரசீகக் கட்டக்கலை இந்தியாவில் அறிமுகமாகியது.

(ஈ) தேசிய இசையும் பாரசிக கஸல் இசையும் சேர்ந்த ஓர் இசை பிரபல்யமடைந்தது.

**5. விஜயநகர அரசு குறித்துச் சுருக்கமாக விபரிக்க.**

(அ) துங்கபத்திரை நதி தொடக்கம் காவேரி நதி வரையிலான பிரதேசம் விஜயநகர இராச்சியமாகும். 1336 இல் அஸ்தினாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஹரிஹரன் விஜயநகர ஆட்சியிலிருந்தான். இக்காலத்தில் இந்து சமயத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

(ஆ) இந்த அரசில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி ஆகிய மொழிகள் நடைமுறையிலிருந்தன. கோவா துறைமுகம் வர்த்தகவிருத்திக்குத் தூண்டுகோலாகவிருந்தது. அராபியாவிலிருந்து குதிரைகளும், சீனாவிலிருந்து பட்டும் இறக்குமதியாகின. அரிசி, தேங்காய், முத்துக்கள், சாயவகைகள், பருத்தித்துணி என்பன ஏற்றுமதியாகின. இக்காலத்தில் நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன.

(இ) வைணவசமயத்தவர்களும் சமணசமயத்தவர்களும் இந்த அரசில் ஒற்றுமையாக வாழ்ந்தனர். பாரியகருங்கற்களைக் கொண்டு திராவிடப்பாணிக் கோயில்கள் கட்டப்பட்டன. உதாரணம் இராமேஸ்வரம் கோயில்.


(ஈ) விஜயநகர இராச்சியம் வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தது. அதனால் செல்வச் செழிப்பான அரசாக விளங்கியது.

(உ) வாசனைத் திரவியங்கள், துணிவகைகள், இரத்தினக்கற்கள் என்பனவற்றின் வர்த்தகத்தின் மூலமும் விவசாயத்தின் மூலமும் வளர்ச்சி பெற்றிருந்தது.

(ஊ) அரசாகள் பிராமணர்களுககு மதிப்புக் கொடுத்தார்கள். கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் மூடப்பழக்கம் வழக்கத்தில் இருந்தது.

(எ) இலக்கியத்துறை விஜயநகர இராச்சியத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது. அரச சபையில் கவிஞர்கள் பலர் இருந்தார்கள். அரசனான கிருஷ்ணதேவராயர் ‘ஆமுக்க மால்யதா’ என்றொரு இலக்கிய நூலைத் தெலுங்கில் ஆக்கியிருந்தார்.

(ஏ) கட்டிடக்கலை, சிற்பக்கலை என்பன உன்னத நிலையில் இருந்தன. விட்டலகோயில் விஜயநகர இந்துக்கட்டிடக் கலைக்குத் தக்க உதாரணம்.




(ஐ) விஜயநகரத்தை சங்கம, துளுவ, ஆறவீது எனப்பட்ட அரசபரம்பரைகள் ஆட்சி செய்தன.

(ஒ) விஜயநகர அரசின் சங்க அரச பரம்பரையைச் சேர்ந்த புத்த மன்னன் முஸ்லிம் பிரதேசங்கள் பலவற்றினைத் தனதாக்கிக் கொண்டான்.


(ஓ) இலங்கைக்கும் விஜயநகரத்திற்கும் இடையில் அரசியல் தொடர்புகள் இருந்துள்ளன. இரண்டாம் ஹரிஹர மன்னன் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் விஜயநகரத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. 6 ஆம் பராக்கிரமபாகு காலத்தில் கடல் வர்த்தகம் சம்பந்தமான பிணக்குகள் இருந்துள்ளன.

(எ) கிபி 1520 இல் முதலாம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜயநகர இராச்சியம் முன்னரைவிடப் பலமானதாக விளங்கியது.

(ஏ) தொடர்ந்து தெக்கான் முஸ்லீம் அரசர்கள் விஜயநகரத்தின் மீது படையெடுப்புக்களை நடாத்தினர். கிபி 1565 இல் விஜயநகர இராச்சியத்தை முஸ்லீம் அரசு கைப்பற்றிக் கொண்டது.


6. **ஆசியாவில் புத்த மதம் பரவிய நாடுகளை விபரிக்க.**

(1) புத்த சமயம் இந்தியாவிலிருந்து மத்திய ஆசியநாடுகளுக்கும் சீனாவிற்கும், பர்மா (மியான்மார்), சீயம் (தாய்லாந்து), கம்போடியா (கம்பூச்சியா), யாவா, சுமாத்திரா,



பாமியன் புத்தர் சிலை

போர்னியோ முதலான நாடுகளுக்கும் பரவியது.. சீனாவிலிருந்து கொரியாவுக்கும் யப்பானுக்கும் அறிமுகமானது. இந்நாடுகளில் பௌத்தம் இன்று வாழ்கின்ற சமயமாகவுள்ளது.



ஸ்வேதகோன் தூபி

(2) இஸ்லாம் பரவுவதற்கு முன்னரே ஆப்கானிஸ்தானில் புத்தசமயம் அங்கு பரவி நிலைத்திருந்தது. அங்கு காணப்படும் உலகப்பிரசித்தி பெற்ற பாமியன் புத்தர் சிலை எடுத்துக் காட்டாகவுள்ளது. புத்தர் சிலைகளுள் மிகவுயர்ந்தது இதுவே.



தலாய்லாமா

(3) பர்மாவின் தலைநகரமான ரங்கூனில் 'ஸ்வேதகோன் தூபி அடங்கிய விகாரை மிகமுக்கியமானது. யாவாவில் 'பொறோபுதூர்' பௌத்த தூபியும் விகாரைத் தொகுதியும் இன்றுமுள்ளன. இது முழுப்பௌத்த உலகின் மதிப்பைப்பெற்ற தாதுகோபமாகும். விஜயபாகு, பராக்கிரமபாகு மன்னர்கள் பர்மாவுடன் தொடர்பு கொண்டிருந்துள்ளார்கள். பர்மாவின் கின்யா மன்னன் ஒரு தூபிளை அமைக்க புனிதவஸ்து பெற்றுக்கொள்ள இலங்கைக்குத் தூது அனுப்பிவைத்துள்ளான். யாவா நகரின் ஆட்சியாளன் 1456 இல் தலதா மாளிகைக்கு தங்கம், வைரக்கற்கள் அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளான்.

(ஈ) மொங்கோலியக் குகை ஓவியங்களில் புத்தர், அவலோகிதேஷ்வர எனக்குறிப்பிடப்பட்டுள்ளார். சீனாவில் போதிசத்துவர்களை வழிபடுகின்றனர். திபெத்திலும் அவ்வாறே. அங்கு தலாய் லாமா எதிர்காலத்தில் பரிநிர்வாணம் அடையும் போதிசத்துவராக மதிக்கப்படுகின்றார்.

பயிற்சிகள்

1 **முஸ்லீம் அரசினை இந்தியாவின் மேற்கு, வடமேற்குப் பகுதிகளில் விஸ்தரித்த மன்னன் யார்?**

(1) சபுக்ஷிஜின் (2) கஜனி முகமது

(3) மொஹமட் பின் துக்ளக் (4) அலாவுதீன் கல்ஜி

2 **முதன் முதல் டில்லி சுல்தான் என அழைக்கப்பட்டவன் எவன்?**

(1) குதுபுதுதீன் ஐபெக் (2) கூர்கி முகமது

(3) இல்டுமிட்டிமிஸ் (4) பின் துக்ளக்

**3. குதுபுமினார் என்ற அழகுக் கோபுரத்தினை டில்லியில் அமைத்தவன் யார்?**

(1) குதுபுதீன் ஐபெக் (2) இல்டுமிட்டிமிஸ்
(3) ஹசான் (4) கூர்கி முகமது

**4. தேவகிரியைத் தலைநகராக்கிய மன்னன் யார்?**

(1) கஜனி முகமது (2) மொஹமட பின் துக்ளக்
(3) கூர்கி முகமது (4) நசீர் உத்தீன்

**5. முஸ்லீம்களின் வருகையால் புதிதாகத் தோன்றிய மொழி யாது?**

(1) அராபிக் (2) வங்காளி
(3) உருது (4) கன்னடம்

**6. தக்கணத்தில் தோன்றிய இராச்சியம் எது?**

(1) விஜயநகர அரசு (2) பஹாமினி அரசு
(3) கஸ்னி அரசு (4) இராசபுத்ர அரசு

**7. குல்பர்க்கா நகரத்தினைத் தலைநகராக மாற்றிய மன்னன் யார்?**

(1) அலா உத்தீன் பஹமன் ஷா (2) ஹாசன்
(3) நசீர் உத்தீன் ஷா (4) மொஹமட் பின் துக்ளக்

**8. தென்னிந்தியாவில் அக்காலகட்டத்தில் முக்கியம் பெற்றிருந்த இராச்சியம் எது?**

(1) பாண்டிய அரசு (2) சோழ அரசு
(3) சேர அரசு (4) விஜயநகரஅரசு

**9. ஆசியாவில் புத்த சமயம் பரவியிருந்த நாடுகளின் தொகுதி எது?**

(1) சீனா, பர்மா, சீயம் (2) அராபியா, யாவா, ஈரான்
(3) எகிப்து, பிரான்ஸ், பர்மா (4) சுமாத்திரா, வங்காளதேசம், பாகிஸ்தான்

**10. பின்வரும் A நிரலில் தரப்பட்டவற்றினை B நிரலுடன் சரியாக இணைக்கவும்.**

| **A நிரல்** | **B நிரல்** |
|---|---|
| 1. அங்கோவார்ட் | (அ) புத்த கோயில் |
| 2. சைலேந்திரன் | (ஆ) புத்தர் சிலை |
| 3. பொறாபுதூர் | (இ) இந்துக்கோயில் |
| 4. ஸ்வேதகோன் | (ஈ) தூபியும் விகாரையும் |
| 5. பாமியன் | (உ) ஓர் அரசன் |

11.தரப்பட்ட ஆசியாப்படத்தில் பர்மா, சீயம், யாவா, போர்னியோ, சுமாத்திரா, மலாயாக்குடாநாடு என்பன எழுத்திடப் பட்டுள்ளன. அவை எவை என இனங்காண்க.

A____________________


B____________________

C____________________

D____________________

E____________________

F____________________




12. ஆசியாவில் புத்த சமயம் பரவியிருந்த நாடுகளின் தொகுதி எது?

(1) சீனா, பர்மா, சீயம்

(2) அராபியா, யாவா, ஈரான்

(3) எகிப்து, பிரான்ஸ், பர்மா

(4) சுமாத்திரா, வங்காளதேசம், பாகிஸ்தான்

(விடைகள் - 1 (2), 2 (1), 3 (2), 4 (2), 5 (3), 6 2), 7 (3), 8 (4), 9 (1), 10 (1) (இ), (2) (உ), (3) (ஈ), (4) (அ), (5) (ஆ)

## அத்தியாயம் 7

# மத்தியகால ஐரோப்பாவின் அரசியல் பொருளாதார, கலாசார வளர்ச்சி

**1. மானியமுறை என்றால் என்ன?**

(அ) 'மன்னன் தொடக்கம் அடிமட்டத்திலிருந்து வரும் பிரஜைவரையில் நிலத்தை அனுபவித்துவருவது தொடர்பாக நிறைவேற்றி வைக்கும் பொறுப்புகளுடன் இணைந்த சமூக ஒழுங்கே மானியமுறையாகும்' என்பார் ஸ்டப்ஸ். மானியமுறையில் நிலத்தின் பயனை ஒரு உயர்மட்டம் அனுபவித்துவரும். நிலமானியமுறை என்பது அரசனுக்குச் செய்து வரும் சேவைகளுக்காக பிரபுக்கள், மற்றையோருக்கு வழங்கிய காணிகளைக் குறிக்கும்.

(ஆ) நிலத்தின் அடிப்படையில் நிலமானிய முறைச் சமூகம் உருவாகியது.அரசன் அடங்கலாக அனைவரினதும் அதிகாரம், அரசசேவை, பொறுப்புக்கள், உரிமைகள் ஆகிய அனைத்தும் நிலத்துடன் சம்பந்தப்பட்டிருந்தன. நாட்டின் நிலம் முழுவதும் அரசனுக்குச் சொந்தம் அரசனாலேயே மற்றவர்களுக்கு நிலவுரிமை வழங்கப்பட்டது. அரசநிர்வாகிகள், மக்கள், மதகுருமார் அனைவரும் தமது சேவைகளுக்குப் பணமின்றி நிலத்தையே பெற்றனர். அது நிந்தகம் எனப்பட்டது. அரசனிடமிருந்து பெற்ற நிலங்களை அதன் உடைமை யாளர்கள் அடிமைகளுக்கு வழங்கினர். அந்நிலச் சொந்தக்காரர்களுக்காக அடிமைகள் உழைத்தனர். தந்தைக்குப் பின் மகன் நிலவுடைமையாளனாகினான். பயிரிடுதல், மந்தை வளர்த்தல், போர்ப்படையிற் பணி புரிதல் என்பன அடிமைகள் கடமைகளாயின. இந்நிலங்களில் வேலை செய்த விவசாயிகள் தம் வருமானத்தில் பெரும்பகுதியை நிலச்சொந்தக்காரனுக்கு வழங்க நேர்ந்தது. நிலமானிய முறைச் சமூகத்தில் அரசன் - உயர்குடிப் பிரபுக்கள் - விவசாய அடிமைகள் என மூன்று பிரிவினர் இருந்தனர். உழைப்போர், உழைக்காது உண்போர் என இரு வர்க்கம் இருந்தது. உழைக்காது உண்போரைச் சுரண்டுவோர் என்பர். நிலமானிய முறையில் ஓர் எளிமையான தன்னிறைவுப் பொருளாதார முறை இருந்தது.

**2. மானிய முறையின் பொருளாதார, சமூகக் கட்டமைப்புகள் எவ்வாறிருந்தது?**

(அ) மானியமுறையின் பொருளாதாரம் விவசாயமாகும். காணிகள் விவசாயிகளுக்கும் நிலமானிய அடிமைகளுக்கும் நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

(ஆ) சுயதேவைப்பொருளாதாரம் நிலவியது. பண்டமாற்றுமுறை இருந்தது. நாணயப்புழக்கமும் இருந்தது. வர்த்தகநடவடிக்கைகள் நடைபெற்றன. உப்பு, வாசனைத்திரவியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

**2. மானியமுறை சமூகம் எவ்வாறிருந்தது?**

(அ) மன்னர், மதகுரு, பிரபுக்கள், நிலத்தைச்சொந்தமாக வைத்திருக்கும் சாதாரணமக்கள், நிலமானிய அடிமைகள் என சமூகம் விளங்கியது.

(ஆ) அடிமைகள்- சுதந்திரப்பிரஜைகள், சேவகர்கள், நிலமானிய அடிமைகள் என இருபிரிவினராக விளங்கினர். இவர்களில் அடிமைகளின் வாழ்க்கை மிகத் துயரமானது. உணவாகக் கஞ்சியும் அல்லது மரக்கறிகளும் கிடைத்தன. குடிசைகளில் வாழ்ந்தனர். அரசன், மதகுருமார், பிரபுக்கள் என்போரின் காணிகளில் உழைக்க வேண்டியிருந்தது.

**3. நிலமானியமுறையின் சிதைவுக்கும் விழ்ச்சிக்கும் எவை காரணமாயின?**

(அ) சிலுவைப்போர்கள் - இப்போர்களில் பங்கு பற்றுவதற்காக அடிமைகளைப் போர் வீரர்களாக்கினர்.

(ஆ) வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் விரிவடைந்தமை – வர்த்தக வளர்ச்சி மானியமுறை சமூகத்தின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது.

(இ) பணப்பாவனை, நகரங்கள் உருவாகியமை. – அடிமைகள் பணத்தை வழங்கித் தம்மை விடுவித்துக் கொண்டனர்.

(ஈ) கொள்ளைநோய்கள் - பிளேக் நோயால் ஐரோப்பிய மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் மரணித்தனர். ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டது.

(உ) தேசிய அரசுகளின் தோற்றம்

(ஊ) சமயசீர்திருத்த இயக்கம்

(எ) நாடுகாண் பயணங்கள். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின.

**4. சிலுவைப்போரின் பின்னணியை விபரிக்க**

1. கிறிஸ்து சமயத்தவரின் புனித தேசமாகக் கருதப்பட்ட பாலஸ்தீனத்தை (பெத்தலகேம்) முஸ்லீம்களிடமிருந்து மீட்பதற்காக நடந்த யுத்தமே சிலுவைப் போர்களாகும்.

2.பாலஸ்தீனம் ஏழாம் நூற்றாண்டளவில் அராபியர் வசமாகியது. அவ்வாறிருந்தும் கிறஸ்தவர்கள் பாலஸ்தீனத்திற்குச் சென்று வழிபாடு செய்து வந்தனர்.

3. 11 ஆம் நூற்றாண்டில் செல்ஜிக் துருக்கியர் அராபியரை வென்று பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்களின் ஆதிக்கம் சின்ன ஆசியா, அனட்டோலியா முதலான நாடுகளிலும் நிலவியது. கொன்சாந்திநோபிளையும் கைப்பற்ற முயன்றார்கள்.

4.செல்ஜிக் துருக்கியர் பாலஸ்தீனத்திற்கு வழிபாடு செய்யச்சென்ற கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தனர். கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் கொன்சாந்திநோபிளைப் பாதுகாக்கும்பொருட்டும் பைசாந்திய மன்னன் அர்பன், பாப்பாண்டவரிடம் உதவி கோரினான். இஸ்லாமியருக்கு எதிராக ஒன்று சேருமாறு பாப்பாண்டவர் அனுமதியளித்தார்.

5. கிறிஸ்தவர்கள் தங்கள் உடைகளில் சிலுவை அடையாளத்தை அணிந்து கொண்டு போரிட்டனர். அதனால் அது சிலுவை யுத்தம் எனப்பட்டது. 1096 உக்கும் 1291 உக்கும் இடையில் துருக்கியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கு மிடையில் பல சிலுவைப்போர்கள் நடந்தன.

6. முதலாவது சிலுவை போரில் ஜேருசலம் கிறிஸ்தவர்களால் கைப்பற்றப்பட்டது. இரண்டாவது போரில் அது துருக்கியர் வசமாகியது. கிறிஸ்தவர்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மை, வலுக்குன்றிய ஆட்சி என்பன காரணமாக கொன்சாந்திநோபிளையும் பலம் வாய்ந்த ஓடோமன் துருக்கியர் தமதாக்கிக் கொண்டனர். ஓடோமன் பேரரசு 500 வருடங்கள் நிலவியது.

7. துருக்கியர் கொன்சாந்திநோபிளைக் கைப்பற்றியதும் அங்கிருந்த அறிஞர்கள் அங்கிருந்த கிரேக்க, உரோம நூல்களுடன் ஐரோப்பிய நாடுகளுக்கு வெளியேறினர். அந்நூல்களால் ஐரோப்பாவில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டது.

**5.சிலுவைப்போரில் ஈடுபட்டவர்களுக்குப் பாப்பாண்டவர் வழங்கிள வாக்குறுதிகள் எவை?**

(அ) அனைவரினதும் பாவங்கள் மன்னிக்கப்படும்
(ஆ) இறப்பவர்கள் விண்ணுலகம் செல்வார்கள்
(இ) இறப்பவரின் சொத்துக்கள், குடும்பம் என்பனவற்றிற்குத் திருச்சபை பாதுகாப்பு வழங்கும்
(ஈ) கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்
(உ) குற்றவாளிகளாயின் தண்டனைகள் நீக்கப்படும்

**6. சிலுவைப்போர்களின் விளைவுகள் எவை?**

(அ) போர்கலை தொடர்பாகக் கற்றுக்கொண்டனர்
(ஆ) புறாக்களைக் கொண்டு தகவல் பரிமாறிக்கொண்டனர்.
(இ) வெடிபொருட்களின் உபயோகம் அறியப்பட்டது
(ஈ) அரசர்களின் அதிகாரம் அதிகரித்தது.
(உ) இத்தாலியில் நகரங்கள் வளர்ச்சியடைந்தன.
(ஊ) கீழைத்தேய உற்பத்திப்பொருட்களுக்குக்கிராக்கி தோன்றியது.

**7. மறுமலர்ச்சி என்றால் என்ன?**

(1) மறுமலர்ச்சி என்பதற்கு மீண்டும் மலர்தல் அல்லது மீள் உதித்தல் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. கல்வி மறுமலர்ச்சி எனவும் கூறலாம்.
(2) கிபி 1300 களில் இத்தாலியில் ஏற்பட்ட கலாசார முன்னெடுப்பு இதுவாகும். இத்தாலியிலிருந்து கிபி 1400 களில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின் முதலான நாடுகளுக்கு இது பரவியது. கிபி 1600 அளவில் மறுமலர்ச்சிக் காலம் முற்றுப் பெற்றது.
(3) மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பிய அறிஞர்கள் குறிப்பாக இத்தாலிய அறிஞர்கள் பண்டைய கிரேக்க, உரோமக் கலைகளைக் கற்பதில் ஆர்வம் காட்டினர். சிலுவை யுத்தங்கள் காரணமாகத் துருக்கியர்கள் கொன்சாந்தி நோபிளைக் கைப்பற்றியதும் அங்கிருந்த அறிஞர்கள் அங்கிருந்த கிரேக்க, உரோம நூல்களை எடுத்துக் கொண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்தனர் என ஏற்கனவே கற்றுள்ளோம்.

(4) ஐரோப்பிய அறிஞர்கள் தங்களது கலை, இலக்கிய, தத்துவத் துறைகளில் கிரேக்க, உரோமக் கலைகளை மீளக் கொண்டு வர விரும்பினர்.

(5) அராபியர்கள் தாம் கொன்சாந்திநோபிளிலிருந்து எடுத்துக் கொண்ட இவ்வாறான நூல்களிலிருந்து அறிவியல் சிந்தனைகளை வெளியிட்டனர்.

(6) மத்திய காலத்தில் நிலவிய கருத்துக்கள் பலவற்றையும் மறுமலர்ச்சியாளர்கள் நிராகரித்தனர். மத்திய காலத்தின் முக்கிய கருத்தாக மக்களது பிரதான பணி கடவுளை வழிபடுவதும் ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திப்பதுமாக இருந்தது. மறுமலர்ச்சிக் காலத்தில் நாகரிக மக்களது கடமை மூட நம்பிக்கைகளைத் தகர்ப்பதாக இருந்தது.

(7) மத்திய காலத்தில் இறையியல் பற்றியதாக இருந்த படிப்புகள் மானிடம் பற்றியதாக மாறியது. மனித உலக வாழ்க்கைச் சிந்தனைகள் அவர்களது ஆய்வுகளில் முக்கியம் பெற்றன.

(8) மறுமலர்ச்சிக் கால ஓவியங்களிலும் சிற்பங்களிலும் கடவுளருக்குப் பதிலாக மனிதரின் அழகு சித்திரிக்கப்பட்டது.

(8) அக்காலத்தில் உன்னத நிலையிலிருந்த பல்கலைகழகங்களான பிரான்சின் பாரிஸ், இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், இத்தாலியின் நேபள்ஸ் என்பன விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், வானியல், மெய்யியல், சட்டம் என்பன பற்றி ஆராய்ந்தன.

(9) இக்காலப்பகுதியில் தோன்றிய விஞ்ஞானிகளின் புதிய கண்டு பிடிப்புகள் ஒரு துறையைச் சார்ந்ததாக மட்டும் இருக்கவில்லை. அவர்கள் புவியையும் ஏனைய வான்பொருட்களையும் பற்றி ஆராய்ந்தார்கள்.

(10) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைகளும் கட்டிடத்துறையும் உன்னத நிலையில் இருந்தன. லியனாடோ டாவின்சி என்பவர் கலைத்துறையில்



**இறையியல் சிந்தனை**



**மானிடச் சிந்தனை**


பெரிய விற்பன்னராகத் திகழ்ந்தார். அவர் சிறந்த ஓவியர், கட்டிடக்கலைஞர், கணக்கியலாளர், இசைக் கலைஞர். இவருடைய மோனலிசா சித்திரம் உலகப் புகழ் பெற்றது.

(11) மறுமலர்ச்சிக் காலத்தில் மைக்கல் அஞ்சலோ ஒரு சிறந்த சிற்பக் கலைஞர். விவிலியத்திலுள்ள தாவீதையும் மோசஸ்சையும் சிறப்பான சிலைகளாகச செதுக்கியுள்ளார்.

(12) டொனடெலோ என்பவரும் அக்காலத்தின் சிற்பிகளில் ஒருவர். புளோரன்ஸ் நகரிலுள்ள புனித ஜோர்ஜின் சிலையை செதுக்கியுள்ளார்.




மோனலிசா




தாவீதும் மோசசும்

(13) வட்டவில்வளைவு, உயரிய தூண்கள், அரைக்கோள வடிவ உச்சி என்பன மறுமலர்ச்சிக் காலக் கட்டிடக்கலையின் சிறப்பு அம்சங்களாகும். உரோமிலுள்ள புனித பேதுரு தேவாலயம், உரோமிலுள்ள அதென்ஸ் மாளிகை என்பன தக்க உதாரணங்களாகும்.



அதென்ஸ் மாளிகை



கலிலியோ கலிலி



நிக்கலஸ் கொப்பனிகஸ்

(14) மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானிகளில் நிக்கலஸ் கொப்பனிகஸ் தற்கால வானியியலின் தந்தை எனக் கருதப்படுகிறார். புவி தன் அச்சில் சுழல்கின்றது என்பதையும் கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றனவென்பதையும் கூறியவர் இவராவார்.

(15) அக்கால விஞ்ஞானிகளில் கலிலியோ கலிலி முக்கியமானவர். வேறுபட்ட நிறையுடைய இரு பொருட்களை ஓர் உயர்ந்த இடத்திலிருந்து ஒரே நேரத்தில் போட்டால் அவை இரண்டும் ஒரே நேரத்தில் நிலத்தில் படியும் என்ற கருத்தினை நிரூபித்தார். சந்திரனில் மேடு பள்ளங்கள் இருக்கின்றன, சூரியனில்



ஐசாக் நியூட்டன்



கெப்லர்

கரும் புள்ளிகள் இருக்கின்றன, புவியானது சூரியனைச் சுற்றி வருகின்றது, வியாழக்கோளைச் சுற்றித் துணைக்கோள்கள் சுற்றுகின்றன எனும் கருத்துக்களை இவரே வெளியிட்டார்.


(16) புவியும் கோள்களும் ஒரு நீள் வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன என்ற கருத்தினை வெளியிட்டவர் ஜொகனஸ் கெப்லர் என்பவராவார்.

(17) புவியீர்ப்புக் காரணமாக எந்தப் பொருளும் மேலிருந்து கீழே விழுகின்றனவென்பதை சேர் ஐசாக் நியூட்டன் என்பவர் கண்டறிந்தார்.


**8.மறுமலர்ச்சியின் பல்வேறு துறைகள் எவை?**

(அ) கலாசார மறுமலர்ச்சி, விஞ்ஞான மறுமலர்ச்சி என இரண்டு துறைகளாக வகுக்கலாம்.

(ஆ) நூல்கள், சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டிடநிர்மாணக்கலை என்பன கலாசார மறுமலர்ச்சியில் அடங்கும். இக்காலத்தில் தாந்தே, ஹோமர், தோமஸ் மூர், பிரான்சிஸ் பேக்கன், வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர் போன்ற நூலாசிரியர்கள் இருந்தனர். லியனாடோ டாவின்சி, மைக்கல் ஏஞ்சலோ என்போர் உலகப்புகழ்பெற்ற ஓவியர்கள். டாவின்சியின் மோனலிசா, இறுதி இராப்போசனவிருந்து என்பன புகழ் பெற்ற ஓவியங்கள். டொனடெலோ, மைக்கல் ஏஞ்சல் ஆகியோர் சிற்பக் கலைஞர்களுமாவர்.




(இ)கொபர்னிக்கஸ் (பிரபஞ்சமையம்சூரியன்), கலிலியோ (தொலைகாட்டி), ஐசெக் நியூட்டன் (ஈர்ப்பு), வில்லியம் ஹார்வே (குருதிச்சுற்றோட்டம்), சரசரல் பயஸ் (மருத்துவத்துறை) முதலானோர் மறுமலர்ச்சிக் கால விஞ்ஞானிகளாவர்.



இராப்போசனவிருந்து


(ஈ) சூரியனைச் சுற்றி பூமி உட்படக் கோள்கள் பயனிக்கின்றன என நிக்கலஸ் கொப்பனிக்கஸ் (1473 – 1543) தெளிவு படுத்தினார். இவர் போலாந்து கிராவெச் பல்கலைக்கழகத்தின் கணித விரிவுரையாளர். 30 வருடங்களாக வான் பொருட்களின் சுழற்சியை ஆராய்ந்து நூல் வெளியிட்டார்.

(உ) சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதையில் கோள்கள் சுற்றுகின்றன என்பதை ஜொஹென்னஸ் கெப்லர் (1571 – 1680) தெரிய வைத்தார். ஜேர்மனியைச் சேர்ந்த இவர், விண்ணியல் நிபுணராவார்.

(ஊ) மனித உடலின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியை வில்லியம் ஹார்வே (1578- 1657) தெரிய வைத்தார்.

(எ) புவியீர்ப்புசக்தியை ஐசெக் நியூட்டன் (1642 – 1727) கண்டறிவித்தார். ஆப்பிள் பழமொன்று மரத்திலிருந்து நிலத்தில் விழும் முறையைப் பார்த்து அதன் பிரகாரம் புவியீர்ப்பைக் கண்டறிவித்தார். சூரிய ஒளியில் 7 வர்ணங்கள் இருப்பதையும் முதன் முதல் தெரிவித்தவர் இவரே. நுண்கணிதவியல் முறையை அறிமுகப்படுத்தியவர் இவரே.

(ஏ) தொலைகாட்டியைக் கண்டறிவித்து வானியலில் பெரும் மாற்றத்தைக் கலிலியோ கலிலி (1564 – 1642) ஏற்படுத்தினார். பைசாப் பல்கலைக்கழகத்தில் கற்றார். பைசாக்கோபுரத்தின் மீது ஏறி வெவ்வேறு நிறை கொண்ட இரண்டு பொருட்களைக் கிழே போட்டு இரண்டும் ஒரே நேரத்தில் தரையை அடையுமென நிருபித்தார்.அவரது கண்டுபிடிப்புகள் கத்தோலிக்க மதக்கருத்துகளுக்கு மாறுபட்டிருந்தன. அதனால் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலும் ஆராய்ச்சிகளை அவர் கைவிடவில்லை.



கலிலியோவின் தொலைகாட்டி


**9. பண்டைய வர்த்தகப்பாதைகளின் முக்கியத்துவத்தினை விபரிக்க.**

(1) ஐரோப்பிய நாடுகளில் ஆசிய நாடுகளின் பொருட்களுக்கான தேவை அதிகரித்தது. அதனால் வர்த்தக நடவடிக்கைகள் விருத்தியடைந்தன.

(2) வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பத்தில் தரை மார்க்கமானதாக இருந்தது. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையில் மூன்று தரை மார்க்கங்கள் இருந்தன. அவை-

(அ) கொன்சாந்திநோபிளூடான பட்டுப்பாதை- சீனா,மத்திய ஆசியா, பாரசீகம், கொன்சாந்திநோபிள், ஐரோப்பா.

(ஆ) இந்திய மேற்குக்கரை - கொன்சாந்திநோபிள் பாதை. இது இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள டியுவிலிருந்து பாரசிக வளைகுடா, ஏடின், அலெக்சாந்திரியா, அனட்டோலியா, கொன்சாந்திநோபிள்.



(இ) இந்தியாவிலிருந்து பராசிக வளைகுடா வழியாக மஸ்கெற், ஓமிஸ், பஸ்றா, பாக்தாத், கொன்சாந்திநோபிள்.

(1) கொன்சாந்திநோபிளை மையமாகக் கொண்டு வர்த்தகம் நடைபெற்றது. முஸ்லீம் வர்த்தகர்களிடம் இருந்து இத்தாலிய வர்த்தகர்கள் பொருட்களைக் கொன்சாந்திநோபிளில் கொள்வனவு செய்து பாரவண்டிகளில் ஐரோப்பா எங்கும் விற்றனர். வாசனைத் திரவியங்கள், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், பட்டுத்துணிகள் முதலானவை வர்த்தகப் பொருட்களாக இருந்தன.

(2) வெனிஸ், ஜெனோவா என்பன வர்த்தக நகரங்களாக விருத்தியடைந்தன.

(3) கொன்சாந்திநோபிளைத் துருக்கியர் கைப்பற்றியதும் தரை மார்க்கமான வர்த்தகப் பாதைகள் தடைப்பட்டன. இதனால் ஆசியாவை அடைவதற்குப் புதிய கடல் மார்க்கங்கள் கண்டுபிடிப்பதில் ஐரோப்பியர் ஆர்வம் கொண்டனர்.

**10. நாடுகாண் பயணங்கள் குறித்துச் சுருக்கமாக விபரிக்க.**

(1) தரை மார்க்கமான வர்த்தக நடவடிக்கைகளுக்கு மையவிடமாக விளங்கிய கொன்சாந்திநோபிளைத் துருக்கியர் கைப்பற்றியதும் ஆசியநாடுகளிலிருந்து தேவையான பொருட்களை வருவிக்கக் கடல் மார்க்கங்களைக் கண்டுபிடிக்கும் தேவை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டது.

(2) மேற்கு ஐரோப்பிய விஞ்ஞானக்கண்டு பிடிப்புகள் நாடுகாண் பயணங்களுக்குத் தூண்டுதலாகின. திசையறிகருவி, வடமீன் கணிப்புக்கருவி, பாதுகாப்பான கப்பல்கள், கடற்பிரயாணப் பயிற்சிகள் என்பன கடற்பயணங்களுக்கு வாய்ப்பாக அமைந்தன.

(3) கடற்பிரயாணம் பற்றிக் கற்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் போர்த்துக்கல்லில் மாலுமி ஹென்றியினால் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதனால் அதில் பயிற்சி பெற்ற மாலுமிகள் உருவானார்கள்.

(4) நாடுகாண் பயணங்கள் மூலம் புதியநாடுகளைக் கண்டு பிடித்து தமது ஆட்சிப் பரப்பினை விரிவுபடுத்தலாம் எனவும் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பலாமெனவும் மன்னர்கள் எண்ணினார்கள். வர்த்தக நடவடிக்கைகள் மூலம் அதிக இலாபத்தினை ஈட்டலாமென வியாபாரிகள் எண்ணினார்கள்.

(5) நாடு காண் பயணங்களில் பார்தலோமியோ டயஸ், கிறிஸ்ரோபர் கொலம்பஸ், வஸ்கொடகாமா, பேடினட் மகலன், பல்போவா, ஜோன் கபட், ஜேக்விஸ் காடியர், ஜேம்ஸ் குக் முதலானோர் ஈடுபட்டு புதிய கடற்பாதைகளையும் ஐரோப்பியருக்கு முன்னர் அறிமுகமாகாத நாடுகளையும் கண்டு பிடித்தனர்.

(6) கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஜெனோவா நகரில் பிறந்தார். ஸ்பெயின் மன்னன் பேடினட், இராணி இசபெல்லா ஆகியோரின் அனுசரணையுடன் 1492 இல் அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாகத் தன் கடற்பயணத்தை ஆரம்பித்தார். அமெரிக்கக் கரையிலுள்ள பஹாமாத் தீவை அடைந்தார். தான் இந்தியாவின் கரையோரத்தை அடைந்து விட்டதாகக் கருதினார். இந்தப் பயணத்தின் போது இவர் அமெரிக்கக் கரையிலுள்ள கியுபா, கெயிட்டி தீவுகளைக் கண்டுபிடித்தார். 1493, 1498, 1503 ஆம் ஆண்டுகளிலும் இப்பிரதேசங்களுக்குப் பயணங்களை மேற்கொண்டு பல கரீபியன் தீவுகளைக் கண்டுபிடித்தார்.


வாஸ்கொடகாமா


கொலம்பஸ்




மகலன்

(7) அமெரிக்காவிற்கு முதன் முதல் வந்திறங்கிய அமெரிக்க வெஸ்புசு என்பவரின் பெயரால் அமெரிக்கா பெயரிடப்பட்டது. எனினும் அமெரிக்காவைக் கண்டுபிடித்த பெருமை கொலம்பசுக்குரியதாக உள்ளது.

(8) 1497 இல் ஜோன் கபட் என்பார் இங்கிலாந்தின் பிறிஸ்ரல் நகரிலிருந்து கப்பலேறி அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து நியூபவுண்லாந்துக்கு அண்மையிலுள்ள கேப் பிரிட்டன் தீவைச் சென்றடைந்தார். இதனை அவர் சீனாவென நம்பினார்.

(8) 1487 இல் பார்தலோமியோ டயஸ் என்பார் போர்த்துக்கல்லிருந்து இந்தியாவிற்கு வழிகாணப் பயணப்பட்டு புயல் முனை எனும் நன்னம்பிக்கை முனையை அடைந்தார்.

(9) 1497 இல் வஸ்கொடகாமா என்பார் போர்த்துக்கல்லின் மன்னன் இமானுவேலின் அனுசரணையுடன் பயணப்பட்டு நன்னம்பிக்கை முனையைக் கடந்து கிபி 1498 இல் தென்னிந்தியாவின் கலிகட் துறைமுகத்தை



வந்தடைந்தார். இந்தியாவிற்கு வழி கண்டுபிடித்தவர் வாஸ்கொடகாமா ஆவார். ‘கிறிஸ்து மதம், வாசனைத்திரவியங்கள் ஆகியவற்றின் பொருட்டே தாங்கள் இந்தியாவிற்கு வந்ததாக’ வாஸ்கொடகாமா குறிப்பிட்டார்.

(10) 1599 இல் போர்த்துக்கேய பேடினன் மகலன் என்பவன் ஸ்பெயின் மன்னனின் உதவியுடன் உலகப் பயணத்தை ஆரம்பித்தார். விக்டோறியா என்ற கப்பலில் புறப்பட்டுத் தென் அமெரிக்காவின் தென் முனையூடாக பசுபிக் சமுத்திரத்தினுள் பிரவேசித்தார். அங்கிருந்து பிலிப்பைன் தீவுகளை அடைந்தார். அங்கு சுதேசிகளால் கொல்லப்பட்டார். அதன் பின்னர் டெல்கானோ எனப்பட்ட மாலுமி விக்டோரியாக் கப்பலுடன் இந்து சமுத்திரத்தைக் கடந்து அத்திலாந்திக் சமுத்திரத்தினுள் பிரவேசித்து ஸ்பெயினை வந்தடைந்தார். எனவே முதன் முதல் உலகினைச் சுற்றி வந்த பெருமை மகலனுக்குரியது.

**11. 16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய சீர்திருத்தங்களை சுருக்கமாக விபரிக்க.**

(அ) கிறிஸ்தவ திருச்சபையானது கடவுளின் பெயரால் செய்த துர்க்காரியங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சமயசீர்திருத்தங்கள் எனப்படும்.

(ஆ) மதச்சீர்திருத்தம் 3 பிரதான நோக்கங்களைக் கொண்டது. அவை:
(1) சமய ஊழல்களை ஒழித்து கிறிஸ்தவ திருச்சபையின் புனிதத்தைப் பேணல்.
(2) பாப்பாண்டவரின் உண்ணாட்டுத் தலையீடுகளை நீக்கல்.
(3) கிறிஸ்தவ திருச்சபை சேகரித்து வைத்திருந்த திரண்ட செல்வங்களை அபகரிக்க மன்னர்களுக்கிருந்த பேராசை.

(இ) மறுமலர்ச்சியின் விளைவாக கல்விமான்கள் சமய ஊழல்களைச் சுதந்திரமாக விமர்சித்தனர். ஜோன் வைக்லீப் என்பார் லத்தீன் மொழியிலிருந்த பைபிளை இலகு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மக்கள் அனைவரும் அறிய வழி வகுத்தார்.

(ஈ) பாப்பாண்டவரும் போதகர்களும் நிலபுலன்களைச் சேர்த்திருந்தனர். குடும்பம் நடாத்தினர். சமய வழக்குகளை நடாத்த இலஞ்சம் பெற்றனர். செல்வந்தர்களுக்குப் பட்டம் பதவிகளை விற்றனர். இவற்றை ஜோன் வைக்லீப், ஜோன் கஸ், ஜோன் கெல்வின், மார்ட்டின் லூதர், உல்ரிச் சுவிங்லி முதலானோர் கிறிஸ்தவ சபையின் முறைகேடுகளை விமர்சித்தனர்.

(உ) இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உருவாகிக் கொண்டிருந்தன. திருச்சபையின் தலையீடு இந்நாடுகளின் பொருளாதார கட்டமைப்பிற்குத் தடையாக இருந்தது. ஆதனால் மன்னர்கள் சீர்திருத்தவாதிகளை ஆதரித்தனர்.

(ஊ) சமயசீர்திருத்தமானது ஜேர்மனியில் ஆரம்பமாகியது. மார்ட்டின் லூதர் அதற்குத் தலைமை வகித்தார். இம்முயற்சி புரட்டஸ்தாந்து என்றழைக்கப்பட்டது. பாப்பாண்டவரின் தலைமையில் இயங்கி வந்த கிறிஸ்தவ

திருச்சபை தனது பெயரை ரோமன் கத்தோலிக்க திருச்சபை என மாற்றிக் கொண்டது. கிறிஸ்தவ சமயம் பிரிவுற்றது. கத்தோலிக்கத்துக்கு எதிராகப் புரட்டஸ்தாந்து சமயத்தில் பலர் இணைந்து கொண்டனர்.

(எ) அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலை பாப்பாண்டவருக்கு ஏற்பட்டது. அதனால் சினட் மாநாடு பாப்பாண்டவரால் கூட்டப்பட்டது. நெறி தவறிய போதகர்கள் மதத்திலிருந்து நீக்கப்பட்டனர். போதகர்களைப் பைபிளின்படி நடந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

(ஏ) இக்னேசியஸ் லோயலா என்பவரின் தலைமையில் கத்தோலிக்க மதத்தைப் போதிக்க மிஷனரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**பயிற்சி 1**

**1. நிலமானிய முறை என்பதற்குப் பொருத்தமான கூற்று யாது?**

(1) அரசன் முதல் கீழ்மட்ட நிலச்சொந்தக்காரர் உட்பட அடிமைகள் வரை ஏற்படுத்தப்பட்ட ஒரு கட்டுப்பாட்டுச் சமூக அமைப்பு முறை.

(2) நிலத்தின் பயன் யாவருக்கும் சமவுரிமையானது என்பது நிலமானிய முறை எனப்படும்.

(3) பாரம்பரிய அடிமைகள் நிலச்சொந்தக்காரர்களுக்குத் தாம் விளைவித்த விளைச்சலில் விரும்பிய பங்கினைக் கொடுப்பது நிலமானிய முறை எனப்படும்.

(4) இவை அனைத்தும்.

**2. கிறிஸ்தவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையிலான சிலுவைப் போர் எந்தப் புனிதப்பிரதேசத்தினைக் கைப்பற்றுவதற்காக நிகழ்ந்தது?**

(1) கொன்சாந்திநோபிள் (2) பாலஸ்தீனம்

(3) பைசாந்தியா (4) ஜேருசலம்

**3.சிலுவைப்போர் ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை?**

1.பாலஸ்தீனத்திற்கு வழிபாடியற்றச் சென்ற கிறிஸ்தவர் களைத் துருக்கியர் துன்புறுத்தியமை.

2.கொன்சாந்திநோபிளைக் கைப்பற்றத் துருக்கியர் திட்ட மிட்டமை.

3.புதிதாக இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய செல்ஜிக் துருக்கியரின் மதவெறி

4.இவை அனைத்தும்.

**4.ஓட்டோமன் துருக்கியர் கொன்சாந்திநோபிளைக் கைப்பற்றியதால் ஏற்பட்ட நற்பயன்கள் யாவை?**

1.கிரேக்க, உரோம நூல்களுடன் அறிஞர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஓடிச்சென்றமை.

2.அதனால் அந்நூல்களை ஆராய ஐரோப்பிய அறிஞர்களுக்கு வாய்ப்பு கிடைத்தமை.

3 விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டமை.

4.இவை அனைத்தும்.

5. **மறுமலர்ச்சி முதன் முதல் எந்த நாட்டில் ஏற்பட்டது?**

(1) ஜேர்மனி (2) இத்தாலி

(4) பிரான்ஸ் (4) இங்கிலாந்து

6. **மறுமலர்ச்சிக் காலம் எனக்கொள்ளப்படுவது யாது?**

(1) கிபி 1300 தொட்டு 1600 வரை (2) கிபி 1300 தொட்டு 1400 வரை

(3) கிபி 1300 தொட்டு 1500 வரை(4) கிபி 1200 தொட்டு 1600 வரை

7. **மறுமலர்ச்சி ஆரம்பமாவதற்கு அடிப்படையாக இருந்தது?**

(1) சிலுவை யுத்தம் (2) கொன்சாந்திநோபிளைத் துருக்கியர் கைப்பற்றியமை

(3) பண்டைய கிரேக்க, உரோம நூல்கள் (4) இவை அனைத்தும்

8. **மறுமலர்ச்சிக் கால சித்திரங்களும் சிற்பங்களும் எவற்றினைப் பற்றிப் பேசின**

(1) கடவுளரைப்பற்றி (2) கிறிஸ்துவைப்பற்றி

(3) மானிடனைப்பற்றி (4) கலையழகைப்பற்றி

9. **அக்காலத்தின் பல்கலைக்கழகங்கள் எவை?**

(1) பாரிஸ் (2) கேம்பிரிட்ஜ்

(3) நேப்பிள்ஸ் (4) இவை அனைத்தும்

10. **A நிரலையும் B நிரலையும் சரிவரப் பொருத்தமாக இணைக்க.**

| A நிரல் | B நிரல் |
|---|---|
| (1) லியனாடோ டாவின்ஸி | (அ) புகழ்மிக்க ஓவியம் |
| (2) மைக்கல் அஞ்சலே | (ஆ) வானியலின் தந்தை |
| (3) டொனடெலா | (இ) ஜோர்ஜின் சிலை |
| (4) மோனலிசா | (ஈ) பல்துறைக்கலைஞர் |
| (5) நிக்கலஸ் கொப்பனிகஸ் | (உ) சிற்ப |

11. **சூரியனில் கரும் புள்ளிகள் இருக்கின்றன எனக் கூறியவர் யார்?**

(1) கலிலியோ கலிலி (2) ஜொகனஸ் கெப்லர்

(3) ஐசாக் நியூட்டன் (4) நிக்கலஸ் கொப்பனிகஸ்

12. **புவி ஈர்ப்பினை நிறுவியவர் யார்?**

(1) லியனாடோ டாவின்சி (2) சேர் ஐசெக் நியூட்டன்

(3) கலிலியோ கலிலி (4) கொப்பனிகஸ்


13. **வர்த்தகப் பாதை தரை மார்க்கமானதாக இருந்தது. தரை மார்க்கத்தின் முக்கியமான மையம் எது?**

(1) வெனிஸ் (2) கொன்சாந்திநோபிள்

(3) பாரசீகம் (4) ஜெனோவா

14. **தரப்பட்ட ஆசியப்புறவுருவப்படத்தில் பின்வரும் எழுத்துக்கள் குறிக்கும் நகரங்கள் எவை?**

(கொன்சாந்திநோபிள், பாக்தாத், கஸ்ரா, ஓமிஸ், கராச்சி, டியு, மஸ்கட், தெகிரான், காபுல், கோஸ்கார், தக்சீலா, டுங்குவாங், கிவங்க, குவங்க, லோகங்க)




A______________ B______________

C______________ D______________

E______________ F______________

G______________ H______________

I______________ J______________

K______________ L______________

M______________ N______________

O______________

**15 கடற்பாதைகளைக் கண்டுபிடிக்கத் தூண்டிய உடனடிக் காரணம் யாது?**

(1) தரைமார்க்கமான வர்த்தகப்பாதை தடைப்பட்டமை. (2) திசையறிகருவி கண்டுபிடிக்கப்பட்டமை

(3) கப்பல்கள் கட்டப்பட்டமை (4) மாலுமிகள் உருவாகியமை.

**16. கப்பற் பயணங்களைத் தூண்டிய காரணிகள் எவை?**

(1) திசையறிகருவி (2) வடமீன் கணிப்புக்கருவி

(3) பாதுகாப்பான கப்பல்கள் (4) இவை அனைத்தும்

**17 நாடுகாண் பயணங்கள் மூலம் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கில் ஏற்படும் பயன் யாது?**

(1) ஆட்சிப்பரப்பினை அதிகரிக்கலாம் (2) கிறிஸ்தவ மதத்தினைப் பரப்பலாம்

(3) வர்த்தகத்தின் மூலம் இலாபம் பெறலாம் (4) இவை அனைத்தும்

**18 A நிரலில் உள்ளவர்களுடன் தொடர்புடையது B நிரலில் உள்ளது. சரியாக இணைக்கவும்.**

| A | B |
|---|---|
| (1) மாலுமி ஹென்றி | (அ) இந்தியப்பாதை |
| (2) கிறிஸ்தோபர் கொலம்பஸ் | (ஆ) கேப் பிரிட்டன் |
| (3) பார்தலோமியோ டயஸ் | (இ) கடற்பயண ஆராய்ச்சி |
| (4) வஸ்கொடகாமா | (ஈ) கரீபியன் தீவுகள் |
| (5) ஜோன் கபட் | (உ) நன்னம்பிக்கை முனை |

**19. இந்தியாவிற்கான கடல் வழியைக் கண்டு பிடித்தவன் யார்?**

(1) மகலன் (2) வஸ்கொடகாமா

(3) கொலம்பஸ் (4) ஜோன் கபட்

**20 முதன் முதல் கடற் பயணத்தின் மூலம் உலகம் உருண்டையென நிரூபித்தவன் யார்?**

(1) வாஸ்கொடகாமா (2) கொலம்பஸ்


(3) மகலன் (4) ஜேம்ஸ் குக்

**21. பின்வரும் உலகப்படத்தில் A ,B, C என்பன எவரெவருடைய கடற் பயணப் பாதைகள்?**

(1) A________________

(2) B________________

(3) C________________




(விடைகள் - 1 (4), 2 (2), 3 (4), 4 (4), 5 (1). 6 (1). 7 (4). 8 (3), 9 (4), 10 (1) ஈ, (2) உ, (3) இ, (4) அ, (5) ஆ, 11 (1), 12 (2), 13 (2), 14 A லோகசங்க, B குவங்க, C இவங்க, D டுங்குவாங், E தக்கசீலம், F கோஸ்காரி, G காபுல், H தெகிரான். 15 (1), 16 (4), 17 (4), 18 (1) இ, (2) ஈ, (3) உ (4) அ, (5) ஆ, 19 (2), 20 (3), 21 A மகெலன், B கொலம்பஸ், C வாஸ்கொடகாமா)

# ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றம்

**1. ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உருவாகியமையை விபரிக்க.**

(அ) குறித்ததேச எல்லைகளைக் கொண்ட சுயாதீன, அதிகாரமுள்ள, சுதந்திரமான ஓர் அரசியல் அலகைத் தேசிய அரசு என்பர். ஐரோப்பியாவில் பின்வருவனவற்றில் ஏற்பட்ட மறுமலர்ச்சி தேசிய அரசுகள் தோன்றக் காரணமாகியது:

1. மறுமலர்ச்சி தோன்றுவதற்கு முன்னர் நாடுகளில் மானிய முறைமை நிலவியது. மன்னர்களிலும் பார்க்க பாப்பரசரும் போதகர்களும் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். மன்னனின் அதிகாரம் பெரிதும் கட்டுப்பட்டிருந்தது.

2. மறுமலர்ச்சியின் பின்னர் சிலவிடயங்கள் காரணமாக பிரதேச ஆட்சி அலகுகள் அனைத்தும் ஒரே ஆட்சியின் கீழ் ஒன்று படுத்தப்பட்டன. பரம்பரையாக நிலங்களை வைத்திருந்த வம்சத்தலைவர்களின் செல்வாக்குக் குறைந்தது.

3. நாடுகாண் பயணங்களால் வியாபாரம் மேலோங்கியது. பணப்புழக்கம் அதிகரித்தது.

4. சமயச்சீர்திருத்த இயக்கங்கள் காரணமாக பாப்பரசரினதும் குருமாரினதும் செல்வாக்குக் குறைந்தது.

5.புதிதாகத் தோன்றிய அரசியற் கருத்துக்கள் மன்னரின் அளவற்ற அதிக்காரத்தை அங்கீகரித்தன.

**2. அக்கால அரசியல் தத்துவங்கள் எவ்வாறிருந்தன?**

(அ) அரசியல் அதிகாரம் மன்னனிடம் இருந்தது. சமய அதிகாரம் பாப்பரசர் உட்பட போதகர்களிடம் இருந்தது. மக்கள் இவ்வதிகாரங்களுக்குக் கட்டுப்படவேண்டியிருந்தது.

(ஆ) தெய்வீகக் கோட்பாட்டின்படி மன்னன் இணையற்ற ஒருவனாக விளங்கினான்.

(இ) மன்னனின் அதிகாரப்பலம் நாட்டின் சிறந்த ஆட்சிக்கு அவசியம் என உறுதிப்படுத்தும் அரசியல் கருத்துக்களை மாக்கியவல்லி வெளியிட்டார். எல்லாவற்றிலும் அரசே பிரதானமானது என்ற கருத்தினை ஜீன் போடாங் தெரிவித்தார்.


(ஈ) அரசர்களின் சர்வாதிகாரப் பலத்தை இவை கட்டியெழுப்பின. சமய சீர்திருத்தவாதிகளின் தூண்டுதல் இதற்கு உதவியது. இங்கிலாந்தின் இரண்டாம் ஜேம்ஸ், பிரான்சின் 14 வது லூயி முதலானோர் சர்வாதிகாரிகளாயினர்.

(உ) மன்னர்களின் சர்வாதிகார ஆட்சியின் விளைவாக மக்கள் விரும்பிய புதியதோர் அரசியல் தத்துவம் உருவாகியது. ஆதன்படி அரசானது பொதுநலனுக்காக மக்கள் கட்டி எழுப்பிய ஓர் ஒப்பந்தம் என ஜோன் லொக் கருத்து வெளியிட்டார். இச்சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் மக்களே அரச அதிகாரத்தின் ஊற்று என்று கூறப்பட்டுள்ளது. இது மக்களின் இறைமை எனப்படும்.

(ஊ) இத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு 1688 இல் இங்கிலாந்தில் உருவாகிய புரட்சியால் அரசனிடமிருந்த அதிகாரங்கள் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்திற்குரியதாகியது.

**3. ஐரோப்பாவில் தேசிய அரசுகள் எங்கெங்கு தோன்றின?**

(அ) ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி முதலான நாடுகளில் தோன்றின. முதலில் தோன்றிய தேசிய அரசு ஸ்பானியா ஆகும். ஸ்பானியாவின் தனித்துவ அமைப்பு, ஆரம்பத்திலிருந்தே நாடுகாண் பயணங்களில் செலுத்தி அக்கறை இந்நாட்டினைச் செல்வம் மிக்க தேசிய அரசாக்கின. மன்னன் பேர்டினன்டும் அரசி இசெபெல்லாவும் தேசிய அரசின் முதலாவது ஆட்சியாளர்களாவர். நாடுகாண் பயணங்களால் ஸ்பானியா கரீபியன் தீவகள், மெக்சிக்கோவைச் சூழவுள்ள நாடுகள், தென்னமெரிக்காவின் பல அரசுகளை உள்ளடக்கி பாரிய சாம்ராச்சியமாக விளங்கியது.



தேசிய அரசுகள்

(ஆ) நாடுகாண் பயணங்களால் சிறப்படைந்த இன்னொரு நாடு போர்த்துக்கல்லாகும். கடலோடி ஹென்றி மன்னன் இந்நாட்டின் சிறப்பிற்குக் காரணமானான். கப்பல் கட்டுந் தொழில், திசையறி கருவிப்பயிற்சி, பார்தலோமியோ டயஸ் போன்ற கடற்பயணிகள் போர்த்துக்கலலை விருத்தியுற வைத்தனர். இலங்கை போர்த்துக்கல்லின் குடியேற்ற நாடாக விருந்தது.


(இ) ஸ்பானியாவின் ஒரு பகுதியாக விளங்கிய ஒல்லாந்து (நெதர்லாந்து) பிற்காலத்தில் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவியதுடன், தேசிய அரசாகவும் பிரகடணப்படுத்திக் கொண்டது. கடல் மார்க்கமாகக் கிழைத்தேச வர்த்தகத்தில் ஈடுபட்டு முன்னேறினர். இலங்கை ஒல்லாந்தின் குடியேற்ற நாடாக விளங்கியது.

(ஈ) ஐரோப்பாவிலிருந்து பிரிந்திருந்த தனித் தீவான இங்கிலாந்து தேசிய அரசாக மாறியது. இத்தேசிய அரசு 7 ம் ஹென்றியின் ஆட்சியில் அமைந்தது.

கத்தோலிக்கத்தோடு புரட்டஸ்தாந்தும் இந்நாட்டில் பரவியது. ஹென்றி பாப்பாண்டவரோடு முரண்பட்டு புரட்டஸ்தாந்தைத் தழுவியிருந்தான். இலங்கையையும் தம் குடியேற்ற நாடாக இங்கிலாந்து வைத்திருந்தது.

**4. கிறிஸ்தவ மதத்தின் பரவலை ஆராய்க.**

(அ) உரோமப்பேரசின் அரச மதம் கிறிஸ்தவமாகும். அது கத்தோலிக்க சமயமாக விளங்கியது. உரோமப்பேரரசு வீழ்ச்சி அடைந்தாலும் உலகின் பல பாகங்களிலும் கிறிஸ்தவ மதம் நிலைத்திருந்தது. பாப்பாண்டவரும் திருச்சபையும் இம்மதத்தின் காவலராக விளங்கினர். மன்னனும் மக்களும் திருச்சபையின் கட்டளைகளுக்கு உட்பட்டிருந்தனர்.



**வத்திக்கான்**

(ஆ) நிலமானியமுறைச் சமூக அமைப்பு மாற்றமும், சமய மறுமலர்ச்சியும், நாடுகாண் பயணங்களும் கத்தோலிக்க மதத்தில் மாற்றங்களை ஏற்படுத்தின. பாப்பாண்டவரினதும் திருச்சபையினதும் கட்டுப்பாடுகளுக்கும் ஊழல்களுக்கும் எதிராக நிலவிய கருத்துக்களைப் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் விமர்சித்தது. அதனால் மேற்கு ஐரோப்பாவில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் பரவியது.

(இ) சமய மறுமலர்ச்சி புலட்டஸ்தாந்து கிறிஸ்தவம் தோன்றக் காரணமாகியது. மார்டின் லூதர் கிங், ஜோன்கட்டன்பேர்க். ஜோன்கல்வின், சுவிங்லி போன்றோர் புரட்டஸ்தாந்து சமயத்தை ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, சுவிடன், பிரான்ஸ், இங்கிலாந்து முதலான நாடுகளில் பரப்பினர். பின்னர் நாடு காண் பயணங்களால் கீழைத்தேச நாடுகளிலும் பரவி நிலைத்தது.

**பயிற்சிகள்:**

1. சமயச்சீர்திருத்தம் ஏற்பட்டமைக்கான காரணம்:
   (அ) கிறிஸ்தவ திருச்சபையின் பெயரால் நடந்த ஊழல்களைக் களைய.
   (ஆ) உண்ணாட்டடு விவகாரங்களில் பாப்பரசரின் தலையீடுகள்
   (இ) திருச்சபை முறைக்கேடாகச் சேகரித்த பெருந்தொகைச்செல்வம்
   (ஈ) இவை எல்லாம்

2. பாப்பரசரும் சிலபோதகர்களும் கிறிஸ்தவ சபைக்கு மாறாகச் செயற்பட்ட முறை:
   (அ) நிலபுலன்களைச் சேகரித்தனர்
   (ஆ) சமய வழக்குகளை விசாரிக்க இலஞ்சம் பெற்றனர்
   (இ) செல்வந்தர்களுக்குப் பட்டம் பதவிகளை விற்றனர்.
   (ஈ) இவை அனைத்தும்

3. சமய சீர்திருத்த இயக்கங்கள் உருவாகுவதற்கான பொருளாதாரக் காரணிகள்:

(அ) கிறிஸ்துவ சபையிடம் பெருந்தொகையான காணிகள் இருந்தமை

(ஆ) பாவமீட்சிப்பத்திரங்களை விற்றும், செல்வந்தர்களுக்குப் பட்டம் வழங்கியும், தண்டனை பெற்ற கைதிகளுக்கு அபயம் அளித்தும் பெற்ற ஏராளமான பணத்தைக் கிறிஸ்தவ திருச்சபை திரட்டியிருந்தது.

(இ) சகலநாடுகளிலும் நிலத்திலிருந்து பெறப்பட்ட வருவாயில் ஒரு தொகையும், மக்களிடமிருந்து அறவிட்ட வரிப்பணமும் ரோமாபுரிக்கு அனுப்ப வேண்டியிருந்தது.

(ஈ) இவை அனைத்தும்

4. சமயக்கிளர்ச்சியால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

(அ) கிறிஸ்துவ சமயம் பல பிரிவுகளாகப் பிரிந்தது

(ஆ) மிஷனரி நடவடிக்கைகள் ஆரம்பித்தமை

(இ) ரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சீர்திருத்த சினட் மாநாடு கூடியமை

(ஈ) இவை அனைத்தும்

5.. தேசிய அரசு என்பது:

(அ) குறித்த தேச எல்லைகளைக் கொண்டது

(ஆ) சுயாதீனமானது

(இ) சுதந்திரமானது

(ஈ) இவை அனைத்தும்

6. தேசிய அரசுகள் தோன்றுவதற்குத் தூண்டுதல்களாக அமைந்த காரணிகள்:

(அ) மானிய முறை வீழ்ச்சியும் புதிய அரசியற் சிந்தனைகளும்

(ஆ) வர்த்கம் மேலோங்கி பணப்புழக்கம் அதிகரித்தமை

(இ) சமயச் சீர்திருத்த இயக்கம் காரணமாக பாப்பரசரினது போதகர்களினதும் செல்வாக்குக் குறைந்தமை

(ஈ) இவை அனைத்தும்

**7. தேசிய அரசுகளின் பிரதான இயல்புகள் யாவை?**

(1) அது ஒரு புதிய மன்னராட்சி முறையாகும். சட்டவாக்கம், நீதி, நிர்வாகம் என்பன அனைத்தும் மன்னரிடம் இருந்தன. மட்டில்லா அதிகாரம் கொண்டவராக மன்னர் இருந்தனர்.

(2) சம்பளம் பெறும் இராணுவம் உருவாகியது. படைப்பலம் அதிகரித்தது. நிர்வாகிகளும் ஆலோசகர்களும் சம்பளம் பெறுபவர்களாயினர்.

(3) மத்தியதர வகுப்பினர் ஆட்சி நிர்வாகத்தில் பங்கு கொள்ளத் தொடங்கினர்.(வணிகவாதம், குடியேற்ற நாடுகள், பணப்புழக்கம், சந்தைப் பெருக்கம் என்பன உருவாகின. வாய்ப்பான நிலுவை வைத்திருத்தல் முக்கியமானதாக இருந்தது. பொன்,வெள்ளி ஒதுக்கம் நாடுகளில் காணப்பட்டது.

(4) இவை அனைத்தும்

**8.. ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் எவை?**

(1) ஸ்பெயினில் முதன் முதல் உருவாகியது.பேர்டினன் மன்னனும் இசெபெல்லா ராணியும் இணைந்து தேசிய அரசைத் தோற்றுவித்தனர்.

(2) இங்கிலாந்தில் 7 வது ஹென்றி மன்னன் 1485 இல் தேசிய அரசினைப்பிரகடணப்படுத்தினான்.

(3) 1516 இல் பிரான்சில் 4 வது ஹென்றி அரசியல் அரசினை அமைத்தான். ஜேர்மனியிலும் இத்தாலியிலும் பின்னர் அமைந்தன.

(4) இவை அனைத்தும்

**9. லத்தீன் மொழியிலிருந்த பைபிளை எளிமையான ஆங்கில மொழியில் எழுதியவர்:**

(அ) ஜோன் வைக்லீப் (ஆ) மார்ட்டின் லூதர்

(இ) ஜீன் போடாங் (ஈ) மாக்கியவல்லி

**10 A, B நிரல்களைப்பொருத்துக.**

| A | B |
|---|---|
| 1. இசெபெல்லா | (அ) வத்திக்கான் |
| 2. புரட்டஸ்தாந்து மதம் | (ஆ) பிரான்ஸ் |
| 3. நோர்மன் வம்சம் | (இ) ஸ்பானியா |
| 4. பாப்பரசர் | (ஈ) மார்டின் லூதர் |
| 5. கோல் தேசம் | (உ) இங்கிலாந்து |

**விடைகள்:**

1 (ஈ), 2 (ஈ), 3 (ஈ), 4 (ஈ), 5 ( ஈ), 6 (ஈ) 7 (4), 8 (4), 9 (அ), 10 (1) இ, (2) ஈ. (3) உ, (4) அ, (5) ஆ. )


# இலங்கையும் மேலைத்தேசநாடுகளும்

**1. 1. 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் அரசியல் நிலை எவ்வாறிருந்தது?**

(அ) 16 ஆம் நூற்றாண்டின்போது இலங்கை பிரதான மூன்று இராச்சியப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை:

1. கோட்டை இராச்சியம்
2. கண்டி இராச்சியம்
3. யாழ்ப்பாண இராச்சியம்

(ஆ) இவை தவிர வன்னிச் சிற்றரசுகளும் இருந்தன.





**2. கோட்டை இராச்சியத்தின் தோற்றம், வளர்ச்சி நிலைமைகள் என்பனவற்றினை விபரிக்க.**

(அ) **கோட்டை இராச்சியம்** - 16 ஆம் நூற்றண்டில் கோட்டை இராச்சியம் பரப்பில் பெரியதாகவும், செல்வத்தில் மேம்பட்டதாகவும், அதிகாரத்தில் சக்தி மிக்கதாகவும் விளங்கியது. இந்த அரசு வடக்கே காலஓயாவிலிருந்து தெற்கே வளவை கங்கை வரை, கிழக்கே மலைநாட்டின் மேற்குச் சரிவுப்பகுதியிலிருந்து கிழக்கே இந்து சமுத்திரம் வரை இலங்கையின் தென் மேற்குப் பகுதியை அடக்கியிருந்தது.

(ஆ) இக்கோட்டை இராச்சியம் பல மாகாணத்துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஏழு கோறளை, நான்கு கோறளை, மூன்று கோறளை, இரண்டு கோறளை, இறைய்கமம், மாத்தறை என்பனவாம் இவை ஒவ்வொரு தலைவனால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இவை அனைத்தையும் கோட்டை மன்னன் ஆட்சி செய்து வந்தான். 16 ஆம் நூற்றாண்டில் (1484 – 1509) கோட்டை இராச்சியத்தின் மன்னனாக 8 ஆம் வீரபராக்கிரமபாகு விளங்கினான். இவன் திரி சிங்களதீஸ்வர, ஸ்ரீலங்காதீஸ்வர, சக்கிரவர்த்தி என்ற

பட்டப்பெயர்களாலும் அழைக்கப் பட்டான். கோட்டை மன்னனுக்கு ஏனைய இராச்சியங்கள் கப்பம் செலுத்தின என்று அறியப் படுகின்றது. கோட்டை இராச்சியத்தின் பிரதான வியாபாரப் பொருட்களாக பாக்கு, மிளகு, யானைத்தந்தங்கள், முத்துக்கள், மாணிக்கக்கற்கள், கறுவா, யானைகள் என்பன விளங்கின. வர்த்தகத் துறையில் முஸ்லீம்கள் ஏகபோகம் கொண்டிருந்தனர். 8 ஆம் வீரபராக்கிமபாகுவின் பின் கோட்டை மன்னனாக 6 ஆம் விஜயபாகு அரசனாகினான். இம்மன்னனுக்குப் புவனேகபாகு, மாயாதுன்னை, மதுமபண்டாரா என்ற மூன்று மக்கள் இருந்தார்கள். விஜயபாகுவின் பின்னர் கோட்டை இராச்சியம் புவனேகபாகுவிற்கே சேர வேண்டும். ஆனால் அரசனின் இரண்டாவது மனைவி கீரவல்லியின் ஒரு மகனான தேவராஜன் என்பானுக்கு அரசுரிமையை வழங்க அரசன் விரும்பியதை அறிந்து கொண்ட புதல்வர்கள் மூவரும் ஒரு சூழ்ச்சியின் மூலம் தந்தையைக் கொன்றனர். இச்செயலை வரலாற்று ஆசிரியர்கள் ‘விஜயபாகு கொள்ளை’ என் வருணிப்பர்.




(ஈ) கோட்டை அரசு அது தோன்றிய 1415 இலிருந்து 1521 வரை ஒரே இராச்சியமாக இருந்தது. 1521 இல் ஏற்பட்ட விஜயபாகு கொள்ளையின் பின்னர் அதனை மூன்று அரசுகளாகப் புதல்வர்கள் பிரித்தெடுத்துக் கொண்டனர். அவை:

1. கோட்டை அரசு – புவனேகபாகு
2. சீதாவாக்கை அரசு – மாயாதுன்னை
3. இறைகம் அரசு – மதும பண்டாரா (பின்னர் இறைகம் பண்டாரா எனப்பட்டான்).

**3. சீதாவாக்கை அரசு குறித்துச் சுருக்கமாக விபரிக்கவும்.**

(அ) 1523 இல் நிகழ்ந்த விஜயபாகு கொள்ளையின் பின்னர் பிளவுற்ற மூன்று கோட்டை இராச்சியங்களில் ஒன்று சீதாவாக்கையாகும். ஆதன் அரசனாக மாயாதுன்னை விளங்கினான். 1538 இல் இறைகம் பண்டாரா இறக்க, இறைகமவும் சீதாவாக்கையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 40 வருட ஓட்டத்தில் ஒரு பலமிக்க அரசாக விளங்கியது.

(ஆ) 1523 இன் பின்னர் கோட்டை அரசின் காவலர்களாகப் போர்த்துக்கேயர் இருந்தனர். கோட்டை மன்னன் புவனேகபாகு, சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையின் மீது கொண்டிருந்த அச்சம் காரணமாகப் போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்திருந்தான். தம் வர்த்தகத்திற்குப் பெரும் தடையாக விளங்கிய முஸ்லீம்களின் இருப்பைப் போர்த்துக்கேயர் விரும்பவில்லை. அதனால் முஸ்லீம்களைப் போர்த்துக்கேயர் இந்நாட்டின் வியாபாரத்திலிருந்து அகற்ற எடுத்த முயற்சிகளுக்குத் தடையாகச் சீதாவாக்கை மன்னன் விளங்கியதோடு, அவர்களுக்கு நியாயம் வழங்கவும் முயன்றான்.

(இ) 1527 இல் கோட்டை அரசிலிருந்து முஸ்லீம்கள் துரத்தப்பட்டபோது அவர்களுக்கு ஆதரவு வழங்கியதுடன், கோட்டை மீது படையெடுத்தான். கள்ளிக்கோட்டை முஸ்லீம் அரசனான சமேரியனின் படை உதவியையும் பெற்றுக் கொண்டான். ஆனால் போர்த்துக்கேயரின் படை உதவியைக் கோட்டை மன்னன் கொண்டிருந்தமையால் கோட்டையைக் கைப்பற்றமுடியவில்லை.

(ஈ) சீதாவாக்கை மன்னனுக்கு டிக்கிரி பண்டாரன் என்ற இராஜசிங்கன் என்பான் மகனாக விளங்கினான்.

**4. சிங்களப் பிரதானிகளின் ஆதரவு மாயாதுன்னைக்கு எச்சந்தர்ப்பத்தில் கிடைத்தது?**

(அ) 1557 இல் கோட்டை இளவரசன் தர்மபாலன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக்கொண்டான். அதனால் கோட்டையிலிருந்த பிக்குகளினதும் பிரதானிகளினதும் ஆதரவு மாதுன்னைக்குக் கிடைத்தது. மாயாதுன்னையுடன் அணிசேர்ந்தனர். தியவதன நிலாமையாக இருந்த ஹிரிப்பிட்டியநிலமே, கோட்டையிலிருந்த புனிததந்ததாதுவை எடுத்துச்சென்று மாயாதுன்னையிடம் ஒப்படைத்தான். தெல்கமுவ விகாரையில் அப்புனித தந்த தாது வைக்கப்பட்டது.

(ஆ) கோட்டை இராசதானியிலிருந்த பிக்குகளும் சிங்களப்பிரதானிகளும் படிப்படியாகச் சீதாவாக்கைக்குச் சென்று குடியேறினர். பௌத்தத்தின் பாதுகாவலனாக மாயாதுன்னையைக் கருதி புனிததந்த தாதுவையும் அவனிடம் ஒப்படைத்தனர்.

**5. போர்த்துக்கேய – சீதாவாக்கை யுத்தத்தை விபரிக்க.**

(அ) மாயாதுன்னையின் மகன் டிக்கிரி பண்டாரா கோட்டையைக் கைப்பற்றும் ஆவலுடனும், போர்த்துக்கேயரை இங்கிருந்து துரத்தும் அவாவுடனும் இருந்தான். தர்மபாலன் இளவரசனைத் தூண்டி சிதாவாக்கை அரசினின் மீது படையெடுத்து அதனை ஆக்கிரமிக்கப் போர்த்துக்கேயர் விரும்பினர். அதனால் 1562 இல் அல்பென்சோ டி சூசா என்ற போர்த்துக்கேயத் தளபதியின் தலைமையில் சீதாவாக்கை மீது படையெடுப்பு நிகழ்ந்தது.

(ஆ) டிக்கரிபண்டாரன் பெரும் சேனையைத் திரட்டிக் கொண்டு அப்படையை எதிர்கொண்டான். முல்லேரியா என்றவிடத்தில் கடும் சமர் நடந்தது. இச்சண்டையில் போர்த்துக்கேயப்படை கடும் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

போர்த்துக்கேயர் ஆசியாவில் பெற்ற கடும் தோல்வியாக இது கருதப்படுகின்றது. மாயாதுன்னையினதும் அவன் மகன் டிக்கிரிபண்டாரனினதும் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத தர்மபாலனும் போர்த்துக்கேயரும் ஜயவர்த்னபுரக்கோட்டையைக் கைவிட்டு, கொழும்புக் கோட்டைக்குள் தஞ்சம் புகுந்து கொண்டனர். முதன் முதலாகக் கொழும்பு தலைநகராக மாறியது.

**6. டிக்கரிபண்டாரனின் ஆட்சிக்காலத்தில் சில காலம் தன் ஆட்சிப்பரப்பை எவ்வாறு விரிவு படுத்திக் கொண்டான் என்பதைச் சுருக்கமாக விபரிக்க.**

(அ) 1581 இல் மாதுன்னை மரணமடைய சீதாவாக்கையின் ஆட்சிப் பொறுப்பை டிக்கிரிபண்டாரன், முதலாம் இராஜசிங்கன் என்ற பெயருடன் ஏற்றுக் கொண்டான்.

(ஆ) 1582 இல் முதலாம் இராஜசிங்கன் கண்டி அரசின் மீது படையெடுத்துச் சென்று, அதனை ஆக்கிரமித்துக் கொண்டான்.

(இ) 1587 இல் கோட்டைமீது தண்டெடுத்து அதில் வெற்றி கண்டு, கோட்டை அரசின் கரையோரம் தவிர்ந்த பகுதிகளை டிக்கிரிபண்டாரன் சீதாவாக்கையுடன் சேர்த்துக் கொண்டான்.

(உ) மாயாதுன்னை, சகோதரர்களின் அரசுகளைக் கைப்பற்றும் ஆர்வம் கொண்டிருந்தான். அதனால் புவனேகபாகு மன்னன் ஆரம்பத்திலிருந்தே தனது இராச்சியத்தின் பாதுகாப்புக்கெனப் போர்த்துக்கேயரின் உதவியைப் பெற்றிருந்தான். சகோதரர்களிடையே ஏற்பட்ட அரசியல் மோதல்களால் அந்நியரான போர்த்துக்கேயர் எமது நாட்டு அரசியலில் தலையிட வாய்ப்பேற்பட்டது. இறைகம் பண்டாரா திடீரென மரணமடைய நேர்ந்தது. உடனே மாயாதுன்னை இறைகம் அரசினை சீதாவாக்கையுடன் இணைத்துக் கொண்டான்.

(ஊ) கோட்டை அரசனான புவனேகபாகுவுக்குப் புத்திரர்கள் இருக்கவில்லை. அதனால் தனக்குப் பின்னர் தன் மகள் சமுத்திராதேவியின் மகனான தர்மபாலனை அரசனாக்க முடிவு செய்தான். அதனால் தர்மபாலனின் உருவச்சிலை ஒன்றினைப் பொன்னால் செய்து போர்த்துக்கல்லிற்கு அனுப்பி வைத்தான். போர்த்துக்கல் மன்னன் அச்சிலைக்கு முடிசூட்டி இலங்கைக்கு அனுப்பி வைத்தான். புவனேகபாகு தற்செயலாக நடந்த துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைய நேர்ந்தது. தர்மபாலன் அதன் பின்னர் 1557 இல் தொன் யுவான் தர்மபாலன் என்ற பெயரில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டு, ஆட்சியை ஏற்றுக் கொண்டான். கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய முதல் மன்னன் தர்மபாலனே. 1597 இல் தர்மபாலன் காலமாகினான். அதன் பின்னர் கோட்டை அரசு போர்த்துக்கேயர் வசமாகியது

**7. போர்த்துக்கேயர் நேரடி ஆதிக்கத்தின் கீழ் கோட்டை எவ்வாறு வந்தடைந்தது?**

(அ) புவனேகபாகுவின் அகால மரணத்தின் பின்னர் அவனுடைய மகள் சமுத்திராதேவியினதும் மருமகன் விதியபண்டாராவினதும் ஏழு வயது

மகனான தர்மபாலனுக்கு அரசுரிமை கிடைத்தது. தர்மபாலனின் உருவத்தைத் தங்கத்தில் செய்து அதனைப் போர்த்துக்கல் மன்னனிடம் அனுப்பி, அதற்கு முடி சூட்டி, போர்த்துக்கேயரின் பாதுகாப்பின் கீழ் கோட்டை ஆட்சி மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) தர்மபாலன், டொன்யுவான் தர்மபாலன் எனத் தன் பெயரை மாற்றிக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டான். இலங்கையின் முதலாவது கத்தோலிக்கமன்னன் தர்மபாலன் ஆவான். போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகத் தர்மபாலன் செயற்பட்டான். அதற்கு இடைஞ்சலாக விளங்கிய தந்தை விதியபண்டாராவைக் கைது செய்ய முயன்றபோது அவன் தலைமறைவாகி யாழ்ப்பாண இராச்சியத்திற்குத்தப்பி ஓடிப்போனான். அங்கு நிகழ்ந்த விபத்தொன்றில் அகால மரணமானான்.

(இ) கோட்டை மன்னன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியதும் கோட்டை அரசிற்குள் சமயத்தைப் பிரச்சாரம் செய்வதும், தேவாலயங்கள் அமைப்பதும் துரிதமாக நடைபெற்றது. இவற்றை எதிர்க்கும் பலம் தர்மபாலனிடம் இருக்கவில்லை. 1580 இல் தர்மபாலன் தன் மரணத்தின் பின்னர் கோட்டையின் அரசுரிமையைப் போர்த்துக்கேயருக்குத் தருவதாக கொடை உறுதி ஒன்றை எழுதிப் போர்த்துக்கேயரிடம் கையளித்தான். 1597 இல் தர்மபாலன் இறந்ததும் போர்த்துக்கேயர் கோட்டை அரசின் உரிமையாளராக மாறினர்.

(ஈ) போர்த்துக்கேயத் தளபதி சிங்களப் பிரதானிகளை மல்வானைக்கு அழைத்து 'மல்வானை ஒப்பந்தம்' செய்துகொண்டான். கொடை உறுதியின்படி இனி மேல் கோட்டையின் ஆட்சியுரிமை தமக்குரியதெனவும், போர்த்துக்கல் மன்னனுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டுமெனவும் தெரிவித்தான். நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு இணங்க நிர்வாகம் நடைபெற வேண்டுமெனச் சிங்களப்பிரதானிகள் கேட்டுக்கொண்டனர். ஒப்புக்கொள்ளப்பட்டது.

**8. 16 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தின் நிலைமைகளை விளக்குக.**

(அ) காலஓயாவுக்கும் யான் ஓயாவுக்கும் வடக்கே யாழ்ப்பாண இராச்சியம் அமைந்திருந்தது. சில காலங்களில் யாழ்ப்பாண ஆரியச் சக்கிரவர்த்தியின் ஆதிக்கம் மேற்குக் கரையோரம் கோட்டை வரையும் கிழக்கே பாணமை வரையும் பரந்திருந்தது. இந்த இராச்சியம் 1478 இலிருந்து 1514 வரை பரராசசேகரனால் ஆளப்பட்டது.

**9. போர்த்துக்கேயரின் கவனத்தை ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் ஏன் ஈர்க்காமைக்கும் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்த விரும்பியமைக்கும் காரணம் யாது?**

போர்த்துக்கேயரின் முதல் நோக்கமாகவிருந்தது வர்த்தகமாகும். கறுவா, மிளகு போன்ற வியாபாரப் பொருட்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. அதனால் முதலில் யாழ்ப்பாணத்தில் தொடர்பு ஏற்படுத்த விருப்பிருக்கவில்லை. பின்னர் யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த விரும்பியமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. அவை:

(அ) போர்த்துக்கேயரின் கப்பல்கள் பாக்குத் தொடுகடலில் கற்பாறைகளில் மோதி அடிக்கடி விபத்திற்குள்ளானது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அக்கப்பல்களையும் அவற்றிலிருந்த பொருட்களையும் யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் தமதுடைமையாக்கி வந்தனர்.

(ஆ) யாழ்ப்பாணப்பிரதேசத்தில் தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்பப் போர்த்துக்கேய மதகுருமார் விருப்புற்றனர்.

**10. யாழ்ப்பாண அரசியல் நிலமை அக்காலத்தில் எவ்வாறிருந்தது?**

(அ) யாழ்ப்பாணத்தின் மன்னனாக சங்கிலி செகராசசேகரன் விளங்கினான். சங்கிலியின் மூத்த சகோதரனான பரநிருபசிங்கன், யாழ்ப்பாண அரசின் உரிமையைப் பெற்றுக் கொள்ளப் போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். கப்பம் செலுத்தவும், கத்தோலிக்க மதத்தைப் பரப்ப அனுமதிப்பதாகவும் ஒப்புக் கொண்டான்.

(ஆ) போர்த்துக்கேயர் கரையோரப்பிரதேசங்களில் கொண்டிருந்த செல்வாக்கினைக் குறைக்கச் சங்கிலி சில நடவடிக்கைகள் எடுத்தான். அவை:

1. போர்த்துக்கேயரின் நாசகாரநடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தான்.
2. தென்னிந்திய தஞ்சாவூர் ஆட்சியாளரின் உதவியைப் பெற்றுக் கொண்டான்.
3. சீதாவாக்கை ஆட்சியாளருடன் நட்புப் பாராட்டினான்.
4. தனது அரசின் படைக்கலங்களை அதிகரித்துக் கொண்டான்.
5. தலைநகரான நல்லூரில் கோட்டை ஒன்றினை அமைத்துக் கொண்டான்.

**11. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்ட வரலாற்றினை விபரிக்க.**

(அ) 1545 இல் முதன் முதலாக அபோன்ஸ் சூசாவின் தலைமையில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தினை ஆக்கிரமித்தனர். இந்த ஆக்கிரமிப்பிற்கு முகம் கொடுக்க முடியாத சங்கிலி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். கப்பமாக 5000 பகார்களை வழங்குவதாகவும் 2 யானைகளைத் தருவதாகவும் ஒப்புக்கொண்டான். அத்துடன் கத்தோலிக்க மதத்தை இங்கு பரப்ப அனுமதியும் வழங்கினான்.

(ஆ) பின்னர் மன்னாரில் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களுக்டகுச் சங்கிலி மரண தண்டனை விதித்தான். அதனால் கொன்ஸ்தைன் தீசா என்பவன் தலைமையில் போர்த்துக்கேயர் மீண்டும் படை எடுத்தனர். சுங்கிலி மன்னன் முதலில் தப்பி ஓடிப் பின்னர் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டான். போர்த்துக்கேயர் சங்கிலியின் மகனைப் பிணையாக எடுத்துக் கொண்டனர். மன்னாரில் கோட்டை ஒன்றையும் அமைத்துக் கொண்டனர்.

(இ) சங்கிலியின் பின்னர் அவனது மகனான புவிராசபண்டாரன் அரசனானான். அவனும் போர்த்துக்கேய எதிர்ப்பாளனாக விளங்கினான். அதனால் போர்த்துக்கேயர் 1591 இல் மொண்டென்ஸா என்பவனின் தலைமையில் பெரும் படை ஒன்றினை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினர். நல்லூர் கொள்ளையிடப்பட்டது. இந்தக் கோயில்கள் அழிக்கப்பட்டன.

(ஈ) அதன் பின்னர் போர்த்துக்கேயருக்கு விசுவாசமாக இருக்க ஒப்புக்கொண்ட எதிர்மன்னசிங்கன் என்பவன் யாழ்ப்பாணத்தின் அரசனானான். எனினும் மலைநாட்டு ஆட்சியாளர், சீதாவாக்கை ஆட்சியாளர் யாழ்ப்பாண மன்னனுடன் கொண்டிருந்த உறவுகளும், ஒல்லாந்தரின் இலங்கை வருகையும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவையைப் போர்த்துக்கேயருக்கு ஏற்படுத்தியது. அதனால் 1619 இல் பிலிப் தே ஒலிவேரா என்பவன் தலைமையில் வந்த படை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

(இ) பராசசேகரனின் மகனான சங்கிலி செகராசசேகரன் 1519 இல் சூழ்ச்சி செய்து யாழ்ப்பாணத்தின் மன்னனாகினான். 1661 வரை அவன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்ததுடன் போர்த்துக்கேயருக்கும் சவாலாக விளங்கினான். 1543 இல் யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் ஆக்கிரமிப்புச் செய்தனர். அவர்களின் ஆக்கிரமிப்பினை எதிர் கொள்ள முடியாத மன்னன், போர்த்துக்கேயருக்குக் கப்பம் வழங்கவும் அவர்கள் கத்தோலிக்க மதத்தை இங்கு பரப்பவும் அனுமதித்தான். எனினும் சங்கிலி செகராசசேகரனின் ஆட்சியில் திருப்தியடையாத போர்த்துக்கேயர் மூன்றாம் முறையாகப் படையெடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். புவிராசபண்டாரன் என்பானை அரசனாக்கினர். அவன் சில காலத்தின் பின்னர் போர்த்துக்கேயருக்கு விரோதியாகினான். அவனை ஆட்சியிலிருந்து அகற்றிய போர்த்துக்கேயர், எதிர்மன்னசிங்கன் என்பானை அரசனாக்கினர். 1621 இல் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயத் தளபதியான பிலிப் தே ஒலிவேரா என்பானால் முற்றாகக் கைப்பற்றப்பட்டது.

**12. வன்னி ஆட்சியாளர்களின் சிற்றரசுகள் எங்கிருந்தன?**

யாழ்ப்பாண இராச்சியத்திலும் கண்டி இராச்சியத்திலும் வன்னிச்சிற்றரசுகள் இருந்தன. வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களுக்குரிய வன்னி, நுவரகலாவிய, தமன்கடுவை, கொட்டியாரம், பாளுகமம், யால, பானமை ஆகிய பிரதேசங்களும் வன்னி ஆட்சியாளர்களால் ஆளப்பட்டன. இவற்றில் சில யாழ்ப்பாண இராச்சியத்திற்கும், சில கண்டி இராச்சியத்திற்கும் திறை செலுத்தி வந்துள்ளன.

**13. கண்டி இராச்சியத்தின் ஆட்சி உரிமைகள் பற்றி சுருக்கமாக விபரந்தருக.**

(அ) 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கண்டி மலையக இராச்சியத்தின் ஆட்சியாளனாகச் சேனா சம்மத விக்கிரமபாகு என்பான் விளங்கினான். விக்கிரமபாகுவின் பின்னர் அவனது மகனான ஜயவீரபண்டாரன் கண்டி அரசின் அரசனானான். அதன் பின்னர் 1514 இல் இரண்டாம் ஜயவீரன் என்பவனும், 1542 இல் வீரவிக்கிரமபாகு என்பவனும் கண்டியின் ஆட்சியாளர்களாக விளங்கினர். 1580 இல் இரண்டாம் ஜயவீரனின் மகனான கரலியட்ட பண்டாரன் என்பவன் கண்டியின் அரசனாகினான். அக்காலத்தில் சீதாவாக்கையின் மன்னனாக இராஜசிங்கன் விளங்கினான். 1582 இல் அவன் கண்டிமீது படையெடுத்து கண்டியைக்

கைப்பற்றி சீதாவாக்கையுடன் சேர்த்துக் கொண்டான். கரலியட்ட பண்டாரனும் அவன் மகள் குசுமாசனாதேவியும், மருமகன் யமசிங்கனும் திருகோணமலைக்குத் தப்பி ஓடினர்.

(ஆ) கண்டியைக் கைப்பற்றுவதற்கு இராஜசிங்கனுக்கு கம்பளையைச் சேர்ந்த வீரசுந்தரபண்டாரன் என்பவன் உதவினான். ஒரு கட்டத்தில் வீரசுந்தரன் மீது சந்தேகம் கொண்ட இராஜசிங்கன், வீரசுந்தரபண்டாரனைச் சீதாவாக்கைக்கு அழைத்து கொலை செய்வித்தான். மலையகத்தினை இராஜசிங்கன் தன்னாட்சிக் காலத்தில் மலையகத்தில் தனது அடக்கு முறையைப் பயன்படுத்தியதாலும் உதவி புரிந்த வீரசுந்தரபண்டாராவை கொலை செய்வித்ததாலும் சிங்களப்பிரதானிகளின் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டான். இராஜசிங்கன் தன் பிற்காலத்தில் இந்து சமயத்தைத் தழுவியதால் பௌத்த மக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டான்.

(இ) கோட்டை அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர் கண்டி அரசுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். கரலியட்டபண்டாரனின் மகளும் மருமகனும் தம்மிடம் உதவி கோரி அடைக்கலம் புகுந்திருப்பது சாதகமாக அமைந்தது. இவ்விருவரும் கத்தோலிக்கர்களாக மாறியும் கொண்டனர். மலைநாட்டுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு போர்த்துக்கேயருக்கு மூன்று நோக்கங்கள் இருந்தன. மலைநாட்டில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பலாம், வாசனைப் பொருட்கள் உட்பட வியாபாரப் பொருட்களைப் பெறலாம், மலைநாட்டைத் தமக்கு பணிந்த அரசாக்கிக் கொள்ளலாம் என்பனவாம்.

(ஈ) சீதாவாக்கை மன்னனான இராஜசிங்கனால் தன் தந்தை கொலை செய்யப்பட்டமைக்காகப் பழிவாங்குவதற்காக கோணப்பு பண்டாரன் போர்த்துக்கேயருடன் சேர்ந்து கொண்டான். கிறிஸ்வத மதத்தைத் தழுவியதோடு யுத்த பயிற்சியும் பெற்றுக் கொண்டான். இராஜசிங்கனுக்கு எதிராக மலைநாட்டில் கலவரம் ஏற்பட்ட போது போர்த்துக்கேயர் கோணப்பு பண்டாரன் தலைமையில் ஒரு படையை அனுப்பிக் கண்டியைக் கைப்பற்றிக் கொண்டனர். தமது பொறுப்பில் அடைக்கலம் புகுந்திருந்த தொன்பிலிப் யமசிங்கபண்டாரனை அரசனாக்கினர். ஆனால் நீண்ட காலம் செல்லும் முன்,1592 இல் கோணப்புபண்டாரன் கண்டியைத் தனதாக்கி கொண்டான். முதலாம் விமலதர்மசூரியன் என்ற பெயரோடு முடிபுனைந்தும் கொண்டான். அதன் பின்னர் போர்த்துக்கேயரின் பலம் மிக்க எதிரியாக மாறினான். கண்டியைச் சுதந்திர அரசாகப் பிரகடணப்படுத்தினான்.

**14. கண்டி மன்னன் முதலாம் விமலதர்மசூரியன் குறித்து சுருக்கமாக விபரிக்க.**

(அ) விமலதர்மசூரியனின் இயற்பெயர் கோணப்பு பண்டாரன் ஆகும். இவன் முதலில் போர்த்துக்கேயரின் ஆதரவைக்கோரி அவர்களுடன் சேர்ந்திருந்தான். ஆனால் போர்த்துக்கேயர் யமசிங்க பண்டார என்ற தொன்

பிலிபிடம் மலைநாட்டின் ஆட்சியை ஒப்படைத்தபோது போர்த்தக்கேயரின் கபடம் கோணப்பு பண்டாரவிற்குப் புரிந்தது. யமசிங்கவின் மறைவிற்குப்பின்னர் மலைநாட்டின் ஆட்சிப்பொறுப்பினை அவன் பெற்றுக் கொண்டான். சிங்களப்பிரதானிகளும் ஆதரவளித்தனர். விமலதர்மசூரியன் என்ற பெயரோடு அரசகட்டில் ஏறினான்.

(ஆ) 1592 இல் சீதாவாக்கை மன்னன் இராஜசிங்கனின் மறைவுடன் அந்த அரசு வீழ்ச்சியடைந்தது. அதனால் சீதாவாக்கையின் ஏழு கோறளை, நான்கு கோறளை, சப்பிரகமுவா ஆகிய பிரதேசங்களை விமலதர்மசூரியன் கைப்பற்றிக் கொண்டான். முன்னர் சீதாவாக்கை தெல்கமுவ விகாரையில் வைத்துப் பாதுகாக்கப்பட்ட தந்ததாதுவை தருவித்து கண்டி தலாதா மாளிகையில் பிரதிஸ்டை செய்தான்.அதனால் சிங்கள மக்களிடையே தன் ஆட்சி உரிமையை திடப்படுத்திக் கொண்டான்.

(இ) 1594 ஆம் ஆண்டு பெரோலோபஸ் டி சூசா என்பவன் தலைமையில் போர்த்துக்கேயர் விமலதர்மனுக்கு எதிராகப்படை எடுத்தனர். கண்டி அரசிற்கு உரிமையான குசுமானதேவியையும் தம்முடன் அழைத்து வந்தனர். மலைநாட்டுப்படைக்கும் போர்த்துக்கேயப் படைக்கும் தந்துரை என்றவிடத்தில் நடந்த சண்டையில் போர்த்தக்கேயர் தோல்வி கண்டனர். கண்டி இராச்சியத்தின் உரிமையாளியான குசுமனாதேவி என்ற தோனா கதரினாவை விமலதர்மசூரியன் திருமணம் செய்து கொண்டான். அதன் மூலம் தன் ஆட்சி உரிமையை மீண்டும் திடப்படுத்திக் கொண்டான்.

(ஈ) கண்டி இராச்சியம் போர்த்துக்கேயருக்குப் பெரும் தலையிடியாக விளங்கியது. போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டிவிட விமலதர்மசூரியன் விரும்பிச் செயற்பட்டான். 1602 இல் மலைநாட்டிற்கு வந்த ஒல்லாந்தனான ஸ்பில் பேர்ஜன் என்பானுடனும் அதேவருடம் சீ போல்ட் த சாட் என்பானுடனும் கலந்து பேசினான். இதனை அறிந்த போர்த்துக்கேயத் தளபதி ஜெரனிமோ த அல்மேது பெரும் படை ஒன்றினை மலைநாட்டிற்கு அனுப்பினான். பலனை என்றவிடத்தில் அப்படை தோல்வியடைந்தது.


(உ) விமலதர்மசூரியன் ஆரம்பத்தில் போர்த்துக்கேயருடன் இருக்கும்போது டொன் யுவான் என்ற பெயருடன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியிருந்தான். விமலதர்மசூரியன் என்ற பெயரோடு கண்டிக்கு அரசனானபோது மீண்டும் பௌத்தசமயத்தைத் தழுவிக்கொண்டான். புனிததந்த தாதுவை கண்டியில் தலதாமாளிகையைக் கட்டுவித்து அங்கு வைப்பித்தவன் இவனே. பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா சடங்கை உருவாக்கினான். அதவனகல விகாரை, லங்காதிலக விகாரை, கடலதெனிய விகாரை, தெகல்தொருவ, ரிதிவிகாரை போன்றவற்றினைப் புனருத்தாரணம் செய்வித்தான்.1592 தொட்டு 1604 வரை மலைநாட்டை சிறப்பாக ஆட்சி செய்த மன்னனாக விமலதர்மசூரியன் விளங்கினான்.

**15. கண்டி அரசன் இரண்டாம் இராஜசிங்கன் குறித்துச் சுருக்கமாக விளக்குக.**

(அ) விமலதர்மசூரியனின் மறைவிற்குப்பின்னர், செனரத் என்பான் அரசனானான். இவனுடைய மகன் அஸ்தான, 1630 இல் போர்த்துக்கேயரோடு றன்தெனிகலவில் நிகழ்ந்த யுத்தத்தில் அவர்களைத் தோற்கடித்துப் புகழ் பெற்றிருந்தான். 1635 இல் செனரத் காலமானதும் இளவரசன் அஸ்தான இரண்டாம் இராஜசிங்கன் என்ற பெயரோடு கண்டி இராச்சியத்தின் அரசனானான்.

(ஆ) இரண்டாம் இராஜசிங்கனுக்கு மூன்று மக்கள் இருந்தனர். தனது இராச்சியத்தை மூன்றாகப் பிரித்து மூன்று பிள்ளைகளிடமும் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்திருந்தான். மாத்தளைப்பிரதேசத்தை விஜயபாலாவிடமும், ஊவாப்பிர தேசத்தை குமாரசிங்காவிடமும், எஞ்சிய கண்டிப்பிரதேசத்தை இராஜசிங்கனிடமும் ஒப்படைத்தான். செனரத் மன்னன் இறந்த சில தினங்களில் குமாரசிங்கன் இறந்து போனான். அதனால் ஊவாப்பிரதேசத்தை இராஜசிங்கன் தன் அரசுடன் சேர்த்துக் கொண்டான். விஜயபாலவுக்கும் இராஜசிங்கனுக்கும் மோதல்கள் ஏற்பட்டன. அதனால் பயமடைந்த விஜயபால போர்த்துக்கேயரிடம் சரணடைந்தான். மலைநாடு முழுவதும் இராஜசிங்கன் வசமாகியது.

(இ) இராஜசிங்கன் தன்னை 'திரிசிங்களாதீஸ்வர' என்றழைத்துக் கொண்டான். 1630 இலும் 1638 இலும் அவன் போர்த்துக்கேயருக்கு எதிராகப் புரிந்த இரண்டு யுத்தங்கள் பிரசித்தமானவை. போர்த்துக்கேயர் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் கண்டி அரசனின் அனுமதியின்றிக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டனர். அதனால் அவர்கள் மீது 1630 இல் இராஜசிங்கன் படை எடுத்தான். போர்த்துக்கேயப்படைக்கு கொன்ஸ்தைந்திசா என்பான் தலைமை வகித்தான். றன்தெனிகல என்றவிடத்தில் இராஜசிங்கனால், போர்த்துக்கேயப்படை நிர்மூலமாக்கப்பட்டது.




(ஈ) 1638 இல் போர்த்துக்கேயர் மீண்டும் கண்டிமீது படையெடுத்தனர். இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று வெற்றிகரமாக நிறைவேறியதை அறிந்த போர்த்துக்கேயர், தியாகு த மெல்லோ என்பான் தலைமையில் கண்டி மீது படையெடுத்தனர்.

இப்படையை கன்னொருவை என்றவிடத்தில் இராஜசிங்கன் தோற்கடித்தான். இவ்வெற்றிகளுக்கு மலைநாட்டின் மலை அரண்களும், நீர் அரண்களும், காட்டு அரண்களும் பெரும் உதவியாக அமைந்தன.

(உ) ஒல்லாந்தப்பிரதிநிதி வெஸ்டர்வோல்ட்டுக்கும் இராஜசிங்கனும் இடையில் நடந்த ஒப்பந்தம் 1638 இல் கைச்சாத்தானது. போர்த்துக்கேயரை இங்கிருந்து வலைப்பதாயின் கடற் பலம் தேவை என்பதை இராஜசிங்கன் அறிவான். அதனால் போர்த்துக்கேயரிலும் பார்க்க வலிமையான கடற்பலம் கொண்டிருந்த ஒல்லாந்தரின் உதவியை நாடிப்பெற்றான். அதனால் போர்த்துக்கேயரை இந்த நாட்டிலிருந்து விரட்டுவதில் மன்னன் வெற்றி கண்டான். போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களில் காலி, மாத்தறை, நீர்கொழும்பு தவிர்ந்த பகுதிகளை ஒல்லாந்தர் கண்டி மன்னனிடம் ஒப்படைத்தனர். இலங்கை முழுவதும் சட்டப்படி அரசனுக்குரியது என்பதையும் ஒப்புக் கொண்டனர்.

(ஊ) விமலதர்மசூரியன் கண்டியின் ஆட்சிக்கு வந்ததும் போர்த்துக்கேயரும், சீதாவாக்கை இராஜசிங்கனும் திகிலடைந்தனர். அவன் கத்தோலிக்க சமயத்தைக் கைவிட்டு மீண்டும் பௌத்தனாக மாறி மக்களின் அபிமானத்தையும் பெற்றுக் கொண்டான். எனினும் 1594 இல் போர்த்துக்கேயத் தளபதி பேரோபஸ் சூசா என்பவன் தலைமையில் கண்டிக்கு ஒரு படையை அனுப்பிவைத்தனர் சூசா தங்களிடம் அடைக்கலம் புகுந்திருந்த தொன்கதரினா என்ற குசுமானதேவியை கண்டியின் அரசியாக்கும் நோக்குடன் படையெடுத்தான். இப்படையெடுப்பில் தந்துரே என்றவிடத்தில் போர்த்துக்கேயர் தோல்வியைத் தழுவிக்கொண்டனர். விமலதர்மசூரியன், அரசுரிமையுடைய குசுமானதேவியை மணந்து ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டான்.

(எ) விமலதாத்மசூரியனைப் பழிவாங்கப் போர்த்துக்கேயர் எடுத்த படையெடுப்புகள் தோல்வியில் முடிந்தன. இறுதியாகப் போர்த்துக்கேயர் ஜெனரல் ஜெனரிமோ டி அல்விடோ என்பவன் தலைமையில் ஒரு படையை அனுப்பினர். 'பலனைப்போர்' என்று வர்ணிக்கப்படும் இந்த யுத்தமும் தோல்வியில் முடிவடைந்தது. அதன் பின்னர் போர்த்துக்கெயருக்கும் மலைநாட்டிற்குமிடையில் மோதல்கள் நிகழவில்லை.

(ஏ) 1604 இல் விமலதர்மசூரியன் காலமானதும் அவனது ஒன்றுவிட்ட சகோதரன் செனரத் என்பான் கண்டியின் அரசனாகினான்.

**17. கண்டி அரசிற்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுவதை உணர்ந்த போர்த்துக்கேயர் தம் அதிகாரத்தை நிலை நாட்ட எடுத்த நடவடிக்கைகள் உவை?**

(அ) போர்த்துக்கேயர் முதலில் காலிக்கோட்டையை சீர்திருத்தி அமைத்துக் கொண்டனர். கொழும்பைச் சுற்றி மதில் அமைத்துப் பீரங்கிகள் பூட்டினர். பேரே வாவிக்கு அண்மையில் வெடி மருந்துத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொண்டனர்.

(ஆ) 1623 இல் திருகோணமலையில் கோட்டை ஒன்றினை அமைத்துக் கொண்டனர். 1628 இல் மட்டக்களப்பிலும் ஒரு கோட்டை நிறுவிக் கொண்டனர்.

தாழ்நிலப் பிரதேசங்களிலிருந்து மலைநாட்டிற்குச் செல்லும் வழியில் மணிகடவர எனுமிடத்தில் இருந்த கோட்டையைத் திருத்திக் கொண்டனர்.

(இ) இவை அனைத்திற்கும் மேலாக 1625 இல் வத்தளைக்கும் மோதரைக்கும் அண்மையில் குடியிருப்பு ஒன்றை அமைத்தனர். போர்த்துக் கேயரின் படையிலிருந்த சிங்கள அதிகாரிகளுக்காக இக்குடியிருப்பு அமைக்கப்பட்டது. இராணுவத்தைவிட்டு சிங்கள அதிகாரிகள் தப்பி ஓடாதிருக்க அவர்களது மனைவி மக்களைப் பிணையாக வைத்திருப்பதற்கு இக்குடியிருப்புகள் உதவின.

(ஈ) எனினும் கண்டி அரசர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் சண்டைகள் நிகழ்ந்தன. 1630 இல் ரன்தெனிகல என்றவிடத்தில் போர்த்துக்கேயருடன் சண்டை நடந்தது. அதிலும் போர்த்துக்கேயர் தோல்வி கண்டனர். 1634 இல் செனரத் மன்னனுடன் போர்த்துக்கேயர் சமாதான சூழலை உருவாக்க வேண்டி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதனை அட்டாபிட்டிய ஒப்பந்தம் என்பர். 1638 இல் மீண்டும் போர்த்துக்கேயர் மலைநாட்டின் மீது படையெடுத்துத் தோல்வி அடைய நேர்ந்தது. இச்சண்டை கண்ணொருவாவில் நடந்தது.

**18. ஒல்லாந்தர் இலங்கை வருவதற்கான காரணங்கள் எவை?**

(அ) இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளிலிருந்து கறுவா, ஏலம், மிளகு, கராம்பு முதலான வாசனைத்திரவியங்களை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பதன் மூலம்போர்த்துக்கேயர் பெரும் இலாபம் ஈட்டினர். கீழைத்தேய நாடுகளுக்கான கடல் மார்க்கத்தை மறைத்து வைத்திருந்ததோடு வர்த்தகத்தில் ஏகபோகம் வகித்து வந்தனர். போர்த்துக்கேயரின் ஏக போகத்தை முறியடித்து, கீழைத்தேய வர்த்தகத்தில் ஒல்லாந்தர் பங்கு கொள்ள விரும்பினர்.

(ஆ) போர்த்துக்கேயக் கடற்படையில் பணியாற்றிய ஒல்லாந்த நாட்டவரான லின்ஷோட்டன் என்பவர் வெளியிட்ட கீழைத் தேசநாடுகளுக்கு வருவதற்கான வரைப்படமும், நூல்களும் ஒல்லாந்தருக்கு தூண்டுதலாக அமைந்தன.

(இ) ஒல்லாந்த அரசினால் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஒன்று அமைக்கப்பட்டது. கீழைத்தேய நாடுகளுடன் தொடர்பு கொண்டு வர்த்தகக் களஞ்சியங்களை நிறுவவும், கோட்டைகளை அமைக்கவும், படைகளைத் தங்க வைக்கவும், அந்நாட்டு மன்னர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

(ஈ) கிறிஸ்தவ புரட்டஸ்தாந்து சமயத்தைக் கீழைத்தேயங்களில் போதிப்பதான எண்ணமும் இருந்தது.

(உ) ஏற்கனவே ஒல்லாந்தத் துறைமுகமான அம்ஸ்டர்டாம் முக்கியமான கப்பல் துறைமுகமாகவும், வர்த்தக மையமாகவும் விளங்கியது. கடற் பயணங்களை ஒல்லாந்தர் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தன.

**19. இலங்கையில் ஒல்லாந்தர் நிலை கொள்ள வைத்த காரணிகள் எவை?**

(அ) 1602 இல் யாவாத்தீவின் பத்தேவியாவில் தமது நிலையைத் திடப்படுத்திக் கொண்ட ஒல்லாந்தர், பின்னர் போர்த்துக்கேயரின் செல்வாக்கிருந்த இலங்கை போன்ற ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்ற முயன்றனர்.

(ஆ) கண்டி அரசன் 2 ஆம் இராஜசிங்கன் ஒல்லாந்தரின் உதவியை நாடினான். போர்த்துக்கேயரிடமிருந்து தன் இராச்சியத்தைக் காப்பாற்ற இந்த கோரிக்கை அவசியமாயிற்று.

(இ) கிழைத்தேய வர்த்தகத்தின் முக்கிய வர்த்தகப்பொருளான கறுவா தரமானதாக இலங்கையிலேயே கிடைத்தது.

(ஈ) கீழைத்தேய நாடுகளின் கடற்பலத்தை உறுதிப்படுத்த வாய்ப்பான துறைமுகங்கள் இங்கிருந்தன. திருகோணமலை, கொழும்பு, காலி, நீர்கொழும்பு, கற்பிட்டி, மாத்தறை, மட்டக்களப்பு என்பன அவையாம்.

**20. 1638 இல் இரண்டாம் இராஜசிங்கன் ஒல்லாந்தரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் அரசியல் நிலை எவ்வாறிருந்தது?**

(அ) கரையோரப்பிரதேசங்கள், மலைநாட்டு இராச்சியம் என இரண்டு இராச்சியப்பிரிவுகள் இருந்தன. கரையோரப்பிரதேசங்கள் போர்த்துக்கேயரின் ஆளுகைக்கும் மலைநாடு சுதந்திர மன்னனின் ஆளுகைக்கும் உட்பட்டிருந்தது.

(ஆ) கரையோரப்பிரதேசங்களில் யாழ்ப்பாணம், அயற்றீவுகள், மன்னார், ஏழு கோறளை, நான்கு கோறளை, சப்பிரகமுவா, கோட்டை, மாத்தறை என்பன அடங்கின. மலைநாட்டு இராச்சியத்தில் நுவரகலாவிய, தமன்கடுவை, ஹரிஸ்பத்துவ, உடுநுவர, யட்டிநுவர, தும்பறை, ஹேவாகெட்ட, வெல்லஸ்ஸ, பின்தன்ன, யாலை, பானம, திருகோணமலை, மட்டக்களப்பு என்பன அடங்கின. திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் போர்த்துக்கேயரின் கப்பல்கள் வந்து தங்கிச் சென்றன.

**21. மலைநாட்டு மன்னன் 1638 இல் ஒல்லாந்தரோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் யாவை?**

(அ) போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு ஒல்லாந்தர் உதவ வேண்டும். போர்ச் செலவை கண்டி மன்னன் ஏற்பான்.

(ஆ) போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளை அரசனிடம் ஒப்படைக்க வேண்டும். அக்கோட்டைகளில் அரசன் விரும்பினால் மாத்திரம் ஒல்லாந்தப்படை தங்கலாம்.

(இ) இலங்கையின் வர்த்தகத் தனியுரிமையை ஒல்லாந்தருக்குக் கையளிக்க வேண்டும்.

**22. ஒப்பந்தத்தின் பின்னர் யாது நிகழ்ந்தது?**

(அ) ஒல்லாந்தத் தளபதி வெஸ்டர் வோல்ட் ஒரு கப்பற்படையுடன் மட்டக்களப்புக்கு வந்தான். இராஜசிங்க மன்னனும் 15000 மக்களுடன் மட்டக்களப்புக்கு அண்மையில் முகாமிட்டான்

(ஆ) மட்டக்களப்புக் கோட்டை போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்பட்டு கண்டி மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ) 1639 இல் திருகோணமலை கைப்பற்றப்பட்டு மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஈ) 1640 இல் நீர்கொழும்பும், 1640 இல் காலியும் போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டன. ஆனால் அவை கண்டி மன்னனிடம் ஒப்படைக்கப் படவில்லை. ஆராய்ந்தபோது மன்னனது ஒப்பந்தப்பிரதிக்கும் ஒல்லாந்தரது ஒப்பந்தப்பிரதிக்கும் முரண்பாடுகள் இருப்பது தெரிய வந்தது. மன்னன் விரும்பினால் கைப்பற்றப்பட்ட கோட்டைகளில் ஒல்லாந்தப்போர் வீரர் நிறுத்தப்படலாம் என்ற வாசகம், கைப்பற்றப்பட்ட கோட்டைகளில் பாதுகாப்பிற்காக ஒல்லாந்தப் போர் வீரர் நிற்கலாமென மாற்றப்பட்டிருந்தது.

(உ) 1642 தொட்டு 1652 வரை போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் பத்தாண்டுச் சமாதானம் நிலவியது. ஆதன் பின்னர் ஒல்லாந்தர் இலங்கையில் போர்த்துக்கேயர் வசமிருந்த பிரதேசங்களைத் தாக்கித் தம் வசப்படுத்திக் கொண்டனர். மன்னனிடம் கோட்டைகளை ஒப்படைக்கவில்லை.

(ஊ) 1652 இல் களுத்துறை, அங்குருவாத்தோட்டை கோட்டைகளும், 1656 இல் கொழும்புக் கோட்டையும், 1658 இல் மன்னார், யாழ்ப்பாணக் கோட்டைகளும் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டன.

**23. ஒப்பந்தப்படி கோட்டைகளை ஒப்படைக்கும்படி மன்னன் கேட்டபோது யாது நடந்தது?**

(அ) ஒப்பந்தப்படி ஒப்படைக்கத் தேவையில்லையென முதலில் ஒல்லாந்தர் மறுத்தனர்.

(ஆ) பின்னர் யுத்தச்செலவினங்களைச் செலுத்தில் தருவதாகக் கூறினர். செலவு விபரம் கேட்போது பன்மடங்கு செலவுப்பட்டியல் முன்வைக்கப்பட்டது.

(இ) அப்பெருந்தொகைப் பணம் அரசனால் தரமுடியவில்லை. அதுவரை கோட்டைகள் தம் வசமிருக்குமெனத் தெரிவித்தனர்.

**24.ஒல்லாந்தர் மலைநாட்டு இராசதானியோடு கொண்டிருந்த தொடர்புகளின் இயல்புகளை விபரிக்க.**

(அ) 1658 இல் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றிவிட்டுத் தம் ஆதிக்கத்தை இலங்கையின் கரையோரங்களில் ஒல்லாந்தர் நிலைநிறுத்திக் கொண்டனர். போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றிவிட்டு இலங்கை முழுமைக்கும் சிங்களதீஸ்வர என்ற சக்கிரவர்த்தியாக வர கண்டி மன்னன் விரும்பினான் ஆனால் ஒல்லாந்தரோ தாம் கைப்பற்றிய கோட்டைகளில் முக்கியமானவற்றை ஒப்படைக்காது அவற்றில் தம் படைப்பலத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர். கறுவா முதலான வாசனைப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய பிரதேசங்களைக் கண்டி மன்னனிடம் ஒப்படைக்க ஒல்லாந்தர் விரும்பவில்லை.

(ஆ) 1656 இல் கண்டிப்படைகளை விரட்டியடித்துக் கொழும்புப்பகுதியின் அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டனர். 2 ஆம் இராஜசிங்கனின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை.

(இ) ஒப்பந்தம் மீறப்பட்டதால் கண்டி மன்னன் ஒல்லாந்தருக்கு எதிராகப்பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தான்: ஒல்லாந்தப் பிரதேசத்திலிருந்த கறுவாக்காடுகளைத் தீக்கிரையாக்கினான். அப்பிரதேசங்களிலிருந்த கறுவா உரிப்போரைக் கட்டாயமாக மலைநாட்டில் குடியேற வைத்தான். ஒல்லாந்தருக்கு எதிராக தாழ்நில மக்களைத் தூண்டிவிட்டான். எல்லைப்புறங்களில் தன் படை முகாம்களை நிறுவினான்.

(ஈ) 1670 இல் இரண்டாம் இராஜசிங்கன் ஒல்லாந்தரின் பிரதேசங்களைத் தாக்கிக் கணிசமான பிரதேசங்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டான்.

(உ) 1675இல் ஒல்லாந்தர் ஒல்லாந்தரின் ஆட்சிப்பிரதேசங்களாகத் தென்மேல் ஒடுங்கிள கரையோரமும் யாழ்ப்பாணமும் வன்னியும் அடங்கின. அதன் பின்னர் கூடியவரை மலைநாட்டுடன் முரண்படுவதை ஒல்லாந்தர் தவிர்த்துக் கொண்டனர்.

(ஊ) இந்த அமைதி இடையிடையே 75 வருடங்களாகக் குறைந்தது. 1760 ஆம் ஆண்டு கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் படையெடுத்து, தாழ்நிலக்காரருடன் சேர்ந்து, ஒல்லாந்தர் வசமிருந்த பிரதேசங்களைக் மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

(எ) 1762 இல் ஒல்லாந்தர் மலைநாட்டைத்தாக்கி 1760 தாம் இழந்த பிரதேசங்களை மீட்டுக் கொண்டனர். 1765 இல் மீண்டும் மலைநாட்டை ஒல்லாந்தர் தாக்கினர். அதற்குத் தாக்குப்பிடிக்க முடியாது போன கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 1766 இல் ஒல்லாந்தருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்தது.

**25. 1766 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் பொழிப்பு யாது?**

(அ) மலையக இராச்சியத்தின் கரையோரப்பிரதேசங்களை ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தல்

(ஆ) ஒல்லாந்தருக்கு வரி செலுத்தாது கரையோர உப்பளங்களிலிருந்து கண்டி அரசு உப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

(இ) அலையகத்திற்குச்சொந்தமான ஏழு கொறளை, நான்கு கோறளை, சப்பிரகமுவாப் பகுதிகளிலிருந்து கறுவா உரிக்கும் உரிமையை ஒல்லாந்தருக்கு வழங்கல்.


(ஈ) இரு இராச்சிய எல்லைகளிலிருந்தும் தப்பி ஓடியவர்களை அவரவர் முன்னைய பிரதேசங்களில் குடியமர்த்தல்.

**26 இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் ஒல்லாந்தரின் ஆட்சி முறை எவ்வாறிருந்தது?**

(அ) கீழைத்தேசத்தில் ஒல்லாந்தரின் தலைமைப்பீடம் பத்தேவியாவில் இருந்தது. ஆங்கிருந்த ஆள்பதிகளின் பணிப்புக்கு அமைய இலங்கையிலிருந்த கவனர்கள் ஆட்சி செய்தனர்.

(ஆ) ஒல்லாந்தர் வசமிருந்த கரையோரப்பிரதேசங்கள் மூன்று ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை:

1. கொழும்புக் கொமாண்டரி
2. காலிக் கொமாண்டரி
3. யாழ்ப்பாணக் கொமாண்டரி - இது இன்றைய வட மாகாணம், கிழக்கு மாகாணம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.




(இ) இக்கொமாண்டரிகளில் பிரதான நகரங்களும் கோட்டைகளும் அமைந்திருந்தன. இவை திசாவணிகளாகவும், கோறளைகளாகவும், பற்றுக்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

(ஈ) கொழும்புக் கொமாண்டரி ஒல்லாந்தக் கவனராலும் ஆலோசனை சபையாலும் நிர்வகிக்கப்பட்டது. காலி, யாழ்ப்பாணக் கொமாண்டரிகள் பிரதான தளபதிகளாலும் ஆலோசனை சபைகளாலும் நிர்வகிக்கப்பட்டன.

(உ) உள்நாட்டு அதிகாரிகள் நிர்வாகத்தில் பங்கு கொண்டாலும் உயர் அதிகாரிகளாக ஒல்லாந்தரே இருந்தனர். திசாவைகள், கோறளைகள் (முதலியார்கள்), அத்துக்கோறளைகள் (உடையார்கள்), விதானைகள் முதலான பதவிகள் உள்ளூர் அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டன.

**27 கண்டி இராச்சியத்தில் நாயக்க வம்சம் நிலை கொண்ட வரலாற்றினை விபரிக்க.**

(அ) கண்டி மன்னன் செனரத் தன் மூத்த இரண்டு புதல்வர்களுக்கும் தென்னிந்திய நாயக்கர் வம்ச இளவரசிகளை மணம் முடித்து வைத்தான். இரண்டாம் இராஜசிங்கனும் நாயக்க இளவரசியையே மணந்தான். அவன் பின் அவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன், அவன் மகன் வீரபராக்கிரமநரேந்திரசிங்கன் ஆகியோரும் நாயக்கர் பெண்களையே மணம் முடித்திருந்தனர். இவ்வாறு கண்டி அரச பரம்பரை மணவினைத் தொடர்புகளை நாயக்கர்களுடன் கொண்டிருந்தது.

(ஆ) வீரபராக்கிரம நரேந்திரனுக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் தன் நாயக்க மனைவியின் சகோதரனான ஸ்ரீவிஜயராஜசிங்கனை தனக்குப் பின் பட்டத்திற்குரியவனாகக் நியமித்தான். அவன் பின்னர் நாயக்க அரச பரம்பரை ஒன்று மலையக இராச்சியத்தில் உருவாகியது. தென்னிந்திய இளவரசிகளுடன் வந்த உறவினர்கள் அரச சபையில் இருந்தனர்.

(இ) நாயக்கவம்ச ஆட்சி கண்டியில் 1739 தொட்டு 1815 வரை 75 ஆண்டுகள் நிலைத்திருந்தது. முதலாவது அரசனாக ஸ்ரீவிஜயராஜசிங்கன் விளங்கினான். இந்தியாவுடன் வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தப் போர்த்துக்கேயர் துறைமுகங்களை விடவில்லை. அத்துடன் ஒல்லாந்தருடன் முரண்பட்டு நின்றான்.1747 இல் மரணமானான்.

(ஈ) அடுத்து அவனது மனைவியின் சகோதரனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் அரசனானான். இவன் வெலிவிட்ட சரணங்க தேரரிடம் பௌத்த கல்வி கற்றான். இடையிடையே ஒல்லாந்தப்பிரதேசங்களைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டான். 1761 இல் ஒல்லாந்தருக்குச் சொந்தமான கட்டுவன கொட்டை, ஹக்மன, தங்காலை முதலான பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டான். 1762 இல் இப்பிரதேசங்களை ஒல்லாந்தர் மீட்டுக்கொண்டனர். கண்டி அரசிற்குள் உண்ணாட்டுக் கலவரங்கள் உருவாகியமையால் ஒல்லாந்தருடன் 1766 இல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான்.

**28. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் ஆட்சி எவ்வாறிருந்தது?**

(அ) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் பின்னர் அவனது சகோதரனான ராஜாதி ராஜசிங்கன் முடிதரித்துக் கொண்டான். 1798 வரை அரசாண்டான். அவனின் பின்னர் இளவரசன் கந்தசாமி என்பான் 1789 இல் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் என்ற பெயருடன் கண்டிக்கு அரசனாகினான். மகா அதிகாரமாக விளங்கிய பிலிமத்தலாவை தன் எண்ணப்படி இந்த அரசன் நடப்பான் என்பதால் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனை மன்னனாக்கினான்.

(ஆ) 1803 ஆங்கிலேயருக்கும் கண்டிக்கும் நடந்த யுத்தத்தில் பிலிமத்தலாவை நடந்துகொண்ட முறை ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அத்துடன் பிலிமத்தலாவை அரசனுக்கு எதிராகச் சதி செய்து அகப்பட்டு 1812 இல் மரணதண்டனைக்குள்ளாகினான்.

(இ) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் மலைநாட்டு சிங்களத் தலைவர்களின் அதிருப்தியைப் பெற்றுக் கொண்டான். தனக்கு எதிராகப் பிலமத்தலாவையுடன் இணைந்து சதி செய்வதாகக் கருதிச் சிங்களத் தலைவர்களுக்குக் கடுந்தண்டனைகள் விதித்தான். அத்தலைவர்கள் வகித்த பதவிகளைத் தன் நாயக்க உறவினர்களுக்கு வழங்கினான். சில பிரதானிகளிடையே காணப்பட்ட முரண்பாடுகளைத் தனது நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டான். எகலப்பொலை என்பவனுக்கு மகா அதிகாரம் என்ற பதவியை வழங்கினான். ஒருவருக்கொருவர் எதிரான இரண்டு சிங்களத் தலைவர்களுக்கு ஒரே பிரதேசத்தின் நிர்வாகத்தைப் பகிர்ந்து அளித்தான். அரச சபையில் இருந்த அதிகாரம் என்ற பதவிகள் இரண்டினை மூன்றாக்கினான். இவை அனைத்தும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு எதிராக மக்களையும் சிங்களத் தலைவர்களையும் தூண்விட்டன.

(ஈ) மகாஅதிகாரம் பதவியைப் பெற்ற எகலப்பொல சப்பிரகமுவாவில் அரசனுக்கு எதிராகக் கலகம் ஒன்றினை ஆரம்பித்தான். கலகம் தோல்வி

கண்டது. எகலப்பொல ஆங்கிலேயரிடம் தப்பிச் சென்றான். ஆத்திரமுற்ற மன்னன் எகலப்பொலவின் மனைவியையும் புத்திரர்களையும் கைது செய்து கொடும் சித்திரவதைக் குள்ளாக்கியதோடு, அவர்களுக்கு மரண தண்டனையும் வழங்கினான். கலகத்தில் ஈடுபட்ட அனேகருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இத்தண்டனைகள் தலதா மாளிகைக்கு அருகில் தேவசங்கிந்த என்றவிடத்தில் நிறைவேற்றப்பட்டன.



(உ) இவை அனைத்தாலும் பிக்குகளினதும் பிரதானிகளினதும் மக்களினதும் ஆதரவை மன்னன் இழக்க நேர்ந்தது. கண்டி மத்தியில் போமுரே கல்லா வத்தே என்ற உடுப்பிடடிய ஆராய்ச்சியின் வீட்டில் இருக்கும் போது எக் நெலிகொட நிலாமேயினால் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் கைது செய்யப்பட்டான். ஆங்கிலேயரிடம் ஒப்டைக்கப்பட்டான்.

**29. இலங்கையின் கரையோரங்களில் போர்த்துக்கேயரின் ஆட்சி முறை எவ்வாறிருந்தது?**

(அ) இலங்கையின் கிழக்குக் கரையோரப்பிரதேசங்களின் ஆட்சியாளனாக கோவாவின் வைஸ்ராய் விளங்கினான்.

(ஆ) அவனின் கீழ் இலங்கையை ஒரு போர்த்துக்கேயத் தளபதி நிர்வகித்தான்.

(இ) கரையோரப்பிரதேசங்கள் திசாவனிகளாகவும், அவை கோறளைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. விதோர் த பசென்தா என்ற வருமான சேகரிப்புப் பிரிவுகள் இருந்தன.

(ஈ) கோறளைகள், உப விதோர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. உப விதோர்கள, கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. உப விதோர்களை நீதிபதிகளும, கிராமங்களை விதானைமாரும் நிர்வகித்து வந்தனர்.

(உ) ஒவ்வொரு திசாவனியிலும் ஒவ்வொரு உள்நாட்டு அதிகாரிகளின் சபை ஒன்றிருந்தது. வரி அறவிடுதல், படைகளை வைத்திருத்தல், நீதிமன்ற நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு இச்சபை பொறுப்பாகவிருந்தது. இச்சபையில் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் உயர் பதவி வகித்தனர்.

**30. போர்த்துக்கேயர் காலச் சமயநிலை எவ்வாறிருந்தது?**

(அ) பௌத்தமதம் பெரும்பான்மைச் சிங்கள மக்களால் கைக்கொள்ளப்பட்டிருந்தது. இந்துமதத்தைச் சார்ந்தவர்கள் யாழ்ப்பாண அரசிலிலும் கண்டி அரசிலும் வாழ்ந்தனர். இஸ்லாமியர்கள் கரையோரங்களில் காணப்பட்டனர்.

(ஆ) போர்த்துக்கேயரின் ரோமன் கத்தோலிக்க சமயத்தை இலங்கை மக்கள் பலர் தழுவிக் கொண்டனர். 1543 இல் கத்தோலிக்க குருமார் இலங்கைக்கு வந்தனர். கோட்டை மன்னன் தர்மபாலன் கத்தோலிக்கனாக மாறி இலங்கையில் இச்சமயம் பரவ வழிவகுத்தான். கல்விக்காகவும் பதவிகளுக்காகவும் பலர் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்காக பௌத்த, இந்து வழிபாட்டுத் தலங்கள் பலவும் அழிக்கப்பட்டன.

(இ) கிறிஸ்தவர்களில் கத்தோலிக்கர்களே இலங்கையில் அதிகமாவர். கத்தோலிக்க சமயத்தைப் போதிப்பதற்காகப் பரிஷ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தேவாலயங்களுக்கு அருகில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. லத்தீன், கணிதம், சங்கீதம் என்பன போதிக்கப்பட்டன.

**31. ஒல்லாந்தரின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளை ஆராய்க.**

(அ) சகல காணி விபரங்களையும் தோம்பு என்ற பதிவேட்டில் பதிவு செய்தனர்.

(ஆ) சிங்கள-போர்த்துக்கேயக் கலப்பு வம்சம், தமிழ் போர்த்துக்கேயக்கலப்பு வம்சம் (பறங்கியர்) ஒல்லாந்தராட்சிக்கு உதவியாகவிருந்தனர்.

(இ) மிளகு, கரும்பு, தென்னை, கோப்பி, பருத்தி ஆகிய பயிர்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்தனர். நெல் உற்பத்திக்காக கந்தளாய், யோதகண்டிய குளங்களைச் சீர்ப்படுத்தினர். போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக வீதிகளும் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. மாத்தறை - மன்னார்வீதி, புத்தளம் கால்வாய், பொல்கொட கால்வாய் என்பன இவர்களால் அமைக்கப்பட்டன.

(ஈ) புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவிக்கொண்ட பிள்ளைகளுக்காகப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். பல கிராமங்களுக்கு ஒரு பாடசாலை என்ற வீதத்தில் அமைக்கப்படடன. பாடசாலைகளைப் பரிபாலிக்க ஸ்கொலால் என்ற கமிஷன் இருந்தது.

(உ) 1739 இல் சிங்கள, தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் நோக்குடன் அச்சுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டது. பைபிள் சிங்களத்தில் அச்சிடப்பட்டது.

(ஊ) ரோமன் டச்சுச் சட்டம் இலங்கைக்கு அறிமுகமானது. அதுஇலங்கைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது. ஊதாரணமாக யாழ்ப்பாணத்துத் தேசவழமை இச்சட்டத்தோடு கைக்கொள்ளப்பட்டது.

(எ) ஒல்லாந்தக் கட்டிடக்கலை அறிமுகமானது.

(ஏ) புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவியவர்களுக்கு முதலி, முகாந்திரம் போன்ற பதவிகள் வழங்கப்பட்டன. இதனால் இதுவரை நிலவிவந்த சமூக அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஸ்தோப்பு, ஸ்குறுப்பு, தக்சோறு, கொகிஸ், பொஸ்தொரக்க, ஒறுலோஸ், கந்தோர் முதலான ஒல்லாந்தச் சொற்கள் நமது மொழிகளுடன் கலந்தன.

**பயிற்சி – 1**

1. 16 ஆம் நூற்றாண்டின் முக்கிய இராச்சியங்களின் தொகுதி:
   (அ) கோட்டை, இறைகம், சீதாவாக்கை
   (ஆ) கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம்,
   (இ) கோட்டை, வன்னி, சீதாவாக்கை
   (ஈ) கோட்டை, இறைகம், யாழ்ப்பாணம்
2. ஜயவர்த்தனபுரக்கோட்டையை அமைத்தவன் யார்?
   (அ) நிசங்க அழகக்கோணார்
   (ஆ) 3 ஆம் விக்கிரமபாகு
   (இ) புவனேகபாகு
   (ஈ) மாயாதுன்னை
3. A நிரலில் உள்ளவற்றினை B நிரலுடன் சரிவர இணைக்குக.

| A நிரல் | B நிரல் |
|---|---|
| 1. கோட்டை இராச்சியம் | (அ) நுவரகலாவிய் |
| 2. புவனேகபாகு | (ஆ) கண்டி |
| 3. இறைகம் | (இ) சீதாவாக்கை |
| 4. மாயாதுன்னை | (ஈ) மதுமபண்டாரா |
| 5. தர்மபாலன் | (உ) யாழ்ப்பாண இராச்சியம் |
| 6. சேன சம்மத விக்கிரமபாகு | (ஊ) கோட்டை |
| 7. பரராஜசேகரன் | (எ) முதலாவது கிறிஸ்தவ மன்னன் |
| 8. வன்னிமை | (ஏ) அழகக்கோனார் |
| 9. பிலிப் தே ஒலிவேரா | (ஐ) சப்புமல் குமாரய |
| 10. 6 ஆம் பராக்கிரமபாகு | (ஒ) போர்த்துக்கேயத் தளபதி |

4. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி என்றும் தவறாயின் பிழை என்றும் எழுதுக.
   (அ) கோட்டை இராச்சியம் மூன்று பிள்ளைகளால் துண்டாடப்பட்டது. (.........)
   (ஆ) சீதாவாக்கையின் அரசனான மதுமபண்டாரா அமைந்தான். (,,,,,,,,,,,,,,)
   (இ) சீதாவாக்கையுடன் இறைகமம் பின்னர் இணைந்து ஒரே இராச்சியமாக மாறியது. (,,,,,,,,,,,,,)
   (ஈ) விஜயபாகுவின் கொலையையே ‘விஜயபாகு கொள்ளை’ என்பர். (,,,,,,,,,,,)

(உ) சீதாவாக்கை மன்னன் மீதிருந்த பயத்தினால் கோட்டை அரசனும் கண்டி அரசனும் போர்த்துக்கேயரின் துணையை நாடினர். (,,,,,,,,,,)

(ஊ) யாழ்ப்பாண இராச்சியத்தினை பராக்கிரமபாகு கைப்பற்றிக் கொண்டான். (,,,,,,,,,,)


(எ) யாழ்ப்பாணத்தை 14 ஆண்டுகள் செண்பகப்பெருமாள் ஆண்டான். (,,,,,,,,,,,,)

(ஏ) ஆரியச்சக்கிரவர்த்தியின் பரம்பரையில் வந்தவன் பரராசசேகரன். (,,,,,,,,,,)

(ஐ) கோணப்பு பண்டாரனே முதலாவது விமலதர்மசூரியனாவான். (,,,,,,,,,,,)

(ஒ) சீதாவாக்கை மன்னன் இராஜசிங்கன் சில காலம் கண்டி இராச்சியத்தினைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்தான். (,,,,,,,,,,,,)

5. தரப்பட்ட இலங்கைப்படத்தில் இலக்கமிடப்பட்டவற்றினை இனங்காண்க.




(அ) 1 என்ற இலக்கம் குறிக்கும் இராச்சியம்:
(1) கோட்டை (2) யாழ்ப்பாணம் (3) கண்டி

(ஆ) 2 இலக்கம் குறிக்கும் இராச்சியம்:
(1) கோட்டை (2) யாழ்ப்பாணம் (3) கண்டி

(இ) 3 என்ற இலக்கம் குறிக்கும் இராச்சியம்:
(1) யாழ்ப்பாணம் (2) கண்டி (3) கோட்டை

(ஈ) 4 இலக்கம் குறிக்கும் நதி:
(1) மல்வத்து ஓயா (2) கால ஓயா (3) வளவை கங்கை

(உ) வளவை கங்கையைக் குறிக்கும் இலக்கம்:
(1) 5 (2) 6 (3) 8

(ஊ) 7 என்ற இலக்கம் குறிக்கும் துறை:
(1) முல்லைத்தீவு
(2) திருகோணமலை
(3) காலி

(எ) 9 என்ற இலக்கம் குறிக்கும் வன்னிச் சிற்றரசு:
(1) பானமம் (2) உடரட்ட (3) நுவரகலாவிய

(ஏ) கண்டி (செங்கடகல) குறிக்கும் இலக்கம்:
(1) 9 (2) 10 (3) 11

(விடைகள் - 1 (ஆ), 2 (அ), 3 – 1 (ஏ), 2 (ஊ), 3 (ஈ), 4 (இ), 5 (எ), 6 (ஆ), 7 (உ), 8 (அ), 9 (ஒ), 10 (ஐ). 4 –(அ) சரி, (ஆ) தவறு, (இ) சரி, (ஈ) சரி, (உ) சரி, (ஊ) தவறு, (எ) சரி, (ஏ) சரி, (ஐ) சரி, (ஒ) சரி. 5 – (அ) 2, (ஆ) 1, (இ) 2, (ஈ) 2, (உ) 2, (ஊ) 2, (எ) 3, (ஏ) 3,

**பயிற்சி – 2**

1. முதன்முதல் காலித் துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துக்கேயன்:
   (அ) அல்பூகர்க் (ஆ) லொறேன்ஸ் டி அல்மேடா
   (இ) வாஸ்கொடகாமா (ஈ) ஹென்றி
2. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இந்நாட்டில் இருந்த இராச்சியங்கள்:
   (அ) கோட்டை (ஆ) யாழ்ப்பாணம்
   (இ) கண்டி (ஈ) இவை அனைத்தும்

**3. பின்வரும் வாக்கியங்களில் கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை இட்டு நிரப்புக.**

(1) விக்கிரமபாகு, (2) வீர பராக்கிரமபாகு, (3) பரராசசேகரன், (4) விஜயபாகு, (5)சங்கிலிசெகராசசேகரன், (6) தர்மபராக்கிரமபாகு,

(அ) யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக 16 ஆம் நூற்றாண்டில் ………………….. விளங்கினான்.

(ஆ) கண்டி இராச்சியத்தின் அரசனான ………………… இருந்தான்.

(இ) கோட்டை இராச்சியத்தின் அரசனாக ………………. விளங்கினான்.

(ஈ) யாழ்ப்பாண இராச்சியத்தின் அரியணையைச் சூழ்ச்சியால் கவர்ந்து ………… மன்னனாகினான்.

(உ) ………………… தந்தையின் பின்னர் கோட்டை அரசனாகினான்.

**4. பின் வரும் கூற்று யார் யாருக்குக் கூறியவை?**

'அவர்கள் சிறுகற்களைத்தின்று குருதியைக் குடிக்கின்றனர்.'

(அ) சுதேசிகள் மன்னனுக்குக் கூறியவை.

(ஆ) போர்த்துக்கேயர் மன்னனுக்குக் கூறியவை

(இ) சிங்களவர் தாம் கடற்கரையில் கண்ட காட்சியைக் கண்டி மன்னனுக்குக் கூறினர்.

**5. பின்வரும் கூற்று யார் யாருக்குக் கூறியது?**

'நாங்கள் 400 பகார் கறுவாவை உங்களுக்கு வழங்குவோம். நீங்கள் கரையோரங்களைப் பாதுகாத்துத்தரவேண்டும்.'

(அ) போர்த்துக்கேயர் பராக்கிரபாகுவுக்குக் கூறியமை

(ஆ) பராக்கிரமபாகு போர்த்துக்கேயருக்கக் கூறியமை

(இ) கண்டி மன்னன் போர்த்துக்கேயருக்குக் கூறியமை

(விடைகள் - 1 (அ), 2 (ஈ), 3 (அ) பரராசசேகரன் (ஆ) விக்கிரமபாகு, (இ) விஜயபாகு,(ஈ) சங்கிலிசெகராசசேகரன், (உ) தர்மபராக்கிரமபாகு, 4 (அ), 5 (ஆ)

**பயிற்சி – 3**

1. முதன்முதல் காலித் துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துக்கேயன்:
   (அ) அல்பூகர்க் (ஆ) லொறேன்ஸ் டி அல்மேடா
   (இ) வாஸ்கொடகாமா (ஈ) ஹென்றி

2. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இந்நாட்டில் இருந்த இராச்சியங்கள்:
   (அ) கோட்டை (ஆ) யாழ்ப்பாணம்
   (இ) கண்டி (ஈ) இவை அனைத்தும்

**3. பின்வரும் வாக்கியங்கள் சரியா, தவறா?**

(அ) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டையின் மன்னனாக விளங்கியவன் வீரபராக்கிமபாகு ஆவான். (,,,,,,,,,,,,,,,,,,,)

(ஆ) கோட்டை மன்னன் வயோதிபனாகவும் நேயாளியாகவும் இருந்ததால் கோட்டை இராச்சியத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பங்கிட்டு தன் நான்கு புதல்வர்களிடமும் வழங்கியிருந்தான். (,,,,,,,,,,,,,,,,,)

(இ) கோட்டையின் அரசனான விஜயபாகுவை அவனது மூன்று புதல்வர்களும் இணைந்து சதி செய்து கொன்றதை' விஜயபாகு கொள்ளை' என்பர். (,,,,,,,,,,,,,,,)

(ஈ) மாயாதுன்னைக்குப் போர்த்துக்கேயர் படையுதவி புரிந்தனர். (,,,,,,,,,,,,,,,)

(உ) புவனேகபாகுவுக்குக் கள்ளிக்கோட்டை மன்னன் சமேரியன் படை தந்து மாயாதுன்னைக்கு எதிராக உதவினான். (,,,,,,,,,,,,,,,,)

(ஊ) மதுமபண்டாராவின் மரணத்துடன் இறைகமம் சீதாவாக்கையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. (,,,,,,,,,,,,,,,)

(எ) போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக விளங்கியவன் இலங்கையின் முதலாவது கத்தோலிக்க மன்னனான டொன் யுவான் தர்மபாலன் ஆவான். (,,,,,,,,,,,,,,,,)

(ஏ) தனக்குப் பின்னர் கோட்டையின் ஆட்சியுரிமை போர்த்துக்கேயருக்குரியது என தர்மபாலன் கொடை உறுதி எழுதி வழங்கினான். (...,,,,,,,,,,,,)

(ஐ) சிங்களப்பிரதானிகளுக்கும் போர்த்துக்கேயத் தளபதி ஜெரனிமோ தே அஸவேதுக்கும் மல்வானை ஒப்பந்தம் நடந்தது. (,,,,,,,,,,,,,,,)

(ஒ) புவனேகபாகுவின் தவறும், சகோதரர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் அந்நியரான போர்த்துக்கேயர் இலங்கையில் காலூன்ற வழிவகுத்தது. (,,,,,,,,,,,,,,,,)

(4) கோட்டை மன்னன் விஜயபாகுவின் மக்கள் அல்லாதவன்:
   (1) தர்மபாலன் (2) புவனேகபாகு
   (3) மாயாதுன்னை (4) இறைகம் பண்டாரா

(5) விஜயபாகு கொள்ளை என்பது:

(1) விஜயபாகுவின் திரவியங்கள் கொள்ளை போனமை
(2) விஜயபாகுவைக் கொல்வதற்கான சதி
(3) விஜயபாகு கோட்டை மன்னனானமை

(6) போர்த்துக்கேயர் புவனேகபாகுவிற்கு உதவ முன்வந்தமைக்குப் பிரதான காரணங்கள்:

(1) இலங்கையில் கால்களை ஊன்ற ஒரு சந்தர்ப்பம்
(2) தங்கள் வியாபாரப் போட்டியாளர்களான முஸ்லீம்களை இங்கிருந்து அகற்றல்
(3) கத்தோலிக்க மதத்தைப் பரப்ப வாய்ப்பான சந்தர்ப்பம்
(4) இவை அனைத்தும்

(7) தர்மபாலன் கத்தோலிக்கனாக மாறியதால் மாயாதுன்னைக்குக் கிடைத்த நன்மைகள்:

(1) கோட்டையிலிருந்த சிங்களப்பிரதானிகள் சீதமாவாக்கைக்குச் சென்றனர்.

(2) கோட்டையிலிருந்த புத்த தந்ததாது சீதாவாக்கைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தெல்கமுவ விகாரையில் வைக்கப்பட்டது.

(3) போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்தும் திறமை மாயாதுன்னையிடம் இருப்பதாகச் சிங்களப்பிரதானிகள் கருதினர்.

(4) இவை அனைத்தும்.

(8) சீதாவாக்கை மன்னன் இராஜசிங்கன் கண்டி மீது படையெடுத்தபோது கண்டி அரசன்:

(1) டிக்கிரி பண்டாரா (2) கரலியத்த பண்டாரா
(3) கோணப்பு பண்டாரா (4) வீரசுந்தரபண்டாரா

(9) தொன் ஜுவான், டொனா கதரினா, டொன் பிலிப் என்ற ஞானஸ்தானப் பெயர்களைச் சூடியவர்கள் முறையே:

(1) கோணப்பு பண்டாரன், குசுமானதேவி, யமசிங்க பண்டாரன்
(2) யமசிங்க பண்டாரன், கோணப்பு பண்டாரன், குசுமானதேவி
(3) யமசிங்க பண்டாரன், குசுமானதேவி, கோணப்பு பண்டாரன்
(4) குசுமானதேவி, கோணப்பு பண்டாரன், யமசிங்க பண்டாரன்

10. பின் வரும் கூற்றுக்கள் சரியா, தவறா?

(அ) 1538 இல் இறைகமம் அரசு சீதாவாக்கையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. (........)

(ஆ) கோட்டை அரசன் புவனேகபாகுவுக்குப் போர்த்துக்கேயரின் ஆதரவு இருந்தது போல சீதாவாக்கை அரசன் மாயாதுன்னைக்குக் கள்ளிக்கோட்டை அரசனின் ஆதரவு இருந்தது. (.............)

(இ) 1557 இல் தர்மபாலன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டதும் கோட்டையிலிருந்த தந்ததாது மாயாதுன்னைக்குக் கிடைக்க வாய்ப்பானது. (,,,,,,,,,,,,,)

(ஈ) முல்லேரியா, தந்துரே, பலனை, றன்தெனிகல ஆகியவிடங்களில் நிகழ்ந்தவிடங்களில் நடந்து யுத்தங்களில் போர்த்துக்கெயர் தோல்வி கண்டனர். (,........)

(உ) அட்டாபிட்டிய ஒப்பந்தம் செனரத் மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் நிகழ்ந்தது. (,..........)

(விடைகள் - 1 (ஆ), 2 (ஈ), 3 (அ) சரி, (ஆ) சரி, (இ) சரி, (ஈ) தவறு, (உ) சரி, (ஊ) சரி, (எ) சரி, (ஏ) சரி, (ஐ) சரி, (ஒ) சரி, 4 (1), 5 (2), 6 (4), 7 (4), 8 (2), 9 (1), 10 (அ) சரி, (ஆ) சரி, (இ) சரி, (ஈ) சரி, (உ) சரி )

**பயிற்சி - 4**

1. யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் தம் வசமாக்க ஏன் எண்ணினர்?
   (அ) யாழ்ப்பாணக்கடற் பரப்பில் கற்பாறைகளில் மோதி விபத்துக்குள்ளாகும் தம் கப்பல்களை யாழ்ப்பாண அரசர் தமதுடைமையாக்கி வந்தனர்.
   (ஆ) அக்கப்பல்களிலிருந்த வியாபாரப்பொருட்களைக் தமதாக்கிக் கொண்டனர்.
   (இ) கத்தோலிக்க மதத்தைப் பரப்ப விரும்பினர்.
   (ஈ) இவை அனைத்தும்

2. சங்கிலி செகராசசேகரன் யாழ்ப்பாணத்தின் அரசனாக முடி புனைந்த ஆண்டு:
   (அ) 1591 (ஆ) 1519
   (இ) 1545 (ஈ) 1621

3.போர்த்துக்கேயருக்கு எதிராக சங்கிலி மன்னன் எடுத்த நடவடிக்கைகள் யாவை?
   (அ) படைப்பலத்தை அதிகரித்தமை
   (ஆ) நல்லூரில் கோட்டை அமைத்தமை
   (இ) போர்த்துக்கெயருக்கு எதிரான மன்னர்களுடன் தொடர்பு வைத்தமை
   (ஈ) இவை அனைத்தும்

4. யாழ்ப்பாணத்தின் மீது நடந்த முதலாவது போர்த்துக்கேயப் படையெடுப்பிற்குத் தலைமை வகித்தவன்:
   (அ) பிலிப் தே ஒலிவேரா (ஆ) கொன்ஸ்தைன் தீ சா
   (இ) அபோன்ஸ் சூசா (ஈ) மென்டோன் சா

5. போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது யாழப்பாணத்தின் கடைசிமன்னன்:

(அ) எதிர்மன்னசிங்கன் (ஆ) சங்கிலிசெகராசசெகரன்

(இ) புவிராசபண்டாரன் (ஈ) பரநிருபசிங்கன்

6. இலங்கையின் கரையோரங்களை ஆட்சி செய்த போர்த்துக்கேயத் தளபதி:

(அ) ஜெனரிடோ த அசவிடோ (ஆ) பிலிப் ஒலிவேரா

(இ) அபோன்ஸ் சூசா (ஈ) கொன்ஸ்சைன் த சா

7. கத்தோலிக்க சமயத்தைப் பரப்பப் போர்த்துக்கெயர் கையாண்ட உபாயங்கள் எவை?

(அ) பரிஸ் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

(ஆ) லத்தீன், கணிதம் கற்பிக்கப்பட்டன.

(இ) கல்விவசதி, பதவிகள் என்பன வழங்கப்பட்டன.

(ஈ) இவை எல்லாம்.

8. முதலாம் விமலதர்மசூரியனுக்குப் பொருத்தமான கூற்று:

(அ) தொலைநோக்கும் உபாயமுறைகளும் அறிந்தவன்.

(ஆ) புதியதொரு அரசபரம்பரையைத் தோற்றுவித்த வீரன்.

(இ) புத்த சாதனத்தைப் பாதுகாத்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவன்

(ஈ) இவை எல்லாம்.

9. 1602 இல் பலனை என்றவிடத்தில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த கண்டி மன்னன்:

(அ) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (ஆ) விமலதர்மசூரியன்

(இ) இரண்டாம் இராஜசிங்கன் (ஈ) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்

10. முதலாம் விலமலதர்மசூரியனின் சமய சேவைகளெனக் குறிப்பிடலாம்:

(அ) புனிததந்த தாதை தெல்கமுவ விகாரையிலிருந்து தலதா மாளிகைக்குக் கொண்டு வந்தான்.

(ஆ) பர்மா தேசத்திலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பத விழாவை நடாத்தினான்.

(இ) தெவனகல, லங்காதிலக முதலான விகாரைகளைப் புனரமைத்தான்.

(ஈ) இவை அனைத்தும்.

11. இரண்டாம் இராஜசிங்கன் அஸ்தான இளவரசனாக இருந்தபோது போர்த்துக்கேயரை ரன்தெனிகலவில் வெற்றி கொண்ட வருடம்:

(அ) 1638 (ஆ) 1630

(இ) 1602 (ஈ) 1635

125. போர்த்துக்கேயருக்கும் கண்டி மன்னனுக்கும் நிகழ்ந்த கன்னொருவப் போர் நிகழ்ந்த வருடம்:

(அ) 1638 (ஆ) 1630

(இ) 1602 (ஈ) 1630

13. 75 வருட கால (1739 – 1815) நாயக்கர் ஆட்சி கண்டியில் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள்:

(அ) சிங்களப்பிரதானிகளுக்கும் அரசனுக்கும் இடையிலான முரண்பாடுகள்

(ஆ) அரச சபையில் நாயக்கர் வம்சத்தினரின் அதிகாரம் அதிகரித்தமை

(இ) மன்னனுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள்

(ஈ) இவை அனைத்தும்

14. பிலிமத்தலாவைக்கு மரணதண்டனையும் எகலப்பொரவின் மனைவி மக்களுக்குக் கொடூரமான தண்டனைகளும் வழங்கிய நாயக்க மன்னன்:

(அ) கிர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (ஆ) ராஜாதி ராஜ சிங்கன்

(இ) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் (ஈ) ஸ்ரீவிஜயராஜசிங்கன்

15. போர்த்துக்கேயருடன் நடந்த முக்கிய போர்

(அ) 1602 இல் பலனைப்போர்

(ஆ) 1630 இல் ரன்தெனிகலபோர்

(இ) 1638 கன்னொருவப்போர்

(ஈ) இவை அனைத்தும்

16. மலைநாட்டைப் போர்த்துக்கேயரால் கைப்பற்ற முடியாமைக்கான காரணம்:

(அ) மலை அரண், காட்டு அரண், நீர் அரண் முதலான இயற்கை அரண்கள்

(ஆ) கண்டி வீரர்கள் மேற்கொண்டகெரில்லா சண்டை முறைகள்

(இ) போர்த்துக்கேயப்படையில் இருந்த சிங்களக் கூலிப்படை வீரர்கள் (லஸ்கிஞ்ஞு) மலைநாட்டுச் சிங்களப்படையுடன் இணைந்து கொண்டமை

(ஈ) இவை அனைத்தும்

17. ஒல்லாந்தத் தளபதி சீ போர்ட் த வாட்டிற்கும் விமலதர்மசூரியனுக்கும் இருந்த உறவுகள் முறிந்தமைக்கான காரணங்கள்:

(அ) இருவருக்குமிடையிலான ஒப்பந்தப்படி கைப்பற்றிய போர்த்துக்கேயக் கப்பல்களை விமலதர்மசூரியனிடம் ஒப்படைக்கத் தவறியமை

(ஆ) அரசனைத் தரக்குறைவாகப் பேசியதால் த வாட் அரசனின் ஒற்றர்களால் கொல்லப்பட்டமை

(இ) போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளை ஒப்படைக்காமை

(ஈ) இவை அனைத்தும்

18. பின்வரும் கூற்றுக்கள் சரியெனவும் பிழையாயின் தவறு என்றும் எழுதுக.

(அ) செனரெத் மன்னனுக்கு மூன்று புதல்வர்கள். அவர்களுக்கு கண்டி இராச்சியத்தைப் பங்கிட்டு வழங்கினான். (,,,,,,,,,,,)

(ஆ) 1638 இல் நிகழ்ந்த கன்னொருவாப் போரில் போர்த்துக்கேயத் தளபதியாக தியோகு த மெலோ இருந்தான். (,,,,,,,,,,,,,,,,)

(இ) இரண்டாம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தப்பிரதிநிதி வெஸ்டர் வோல்ட்டுக்கும் 1638 இல் ஓர் ஒப்பந்தம் நடந்தது. (,,,,,,,,,,,,,,,,,,)

(ஈ) கீர்த்தி ஶ்ரீ ராஜசிங்கன் வெலிவட்ட சரணங்கர தேரரிடம் பௌத்த கல்வி கற்றான். (,,,,,,,,,,,)

(உ) ஶ்ரீ விக்கிரமராஜசிங்கனின் இயற் பெயர் கந்தசாமி ஆகும். (,,,,,,,,,,,,)

(ஊ) கண்டி நிர்வாகத்தில் இரண்டாகவிருந்த அதிகாரம் என்ற பதவியணியை மூன்றாக்கியவன் ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆவான் (,,,,,,,,,,,)

(எ) கந்தசாமியை அரசனாக்கியவன் பிலிமத்தலாவை ஆவான் (,,,,,,,,,)

19. A இலுள்ள வருடங்களுக்குப் பொருத்தமான சம்பவங்களை B இலிலிருந்து தெரிவு செய்க.

| A | | B |
|---|---|---|
| 1. | 1594 | (அ) பலனைப்போர் |
| 2. | 1602 | (ஆ) தந்துரே போர் |
| 3. | 1638 | (இ) ரன்தெனிகல போர் |
| 4. | 1630 | (ஈ) கன்னொருப்போர் |
| 5. | 1635 | (உ) ஶ்ரீவிக்கிரமராஜசிங்கன் அரசனாதல் |
| 6 | 1798 | (ஊ) இரண்டாம் இராஜசிங்கன் அரசனாதல் |

**விடைகள்:**

1 (ஈ), 2 (ஆ), 3 (ஈ), 4 (இ), 5 (அ), 6 (அ), 7 (ஈ), 8 (ஈ), 9 (ஆ), 10 (ஈ), 11 (ஆ), 12 (அ), 13 (ஈ), 14 (இ), 15 (ஈ), 16 (ஈ), 17 (ஈ),18 (அ) சரி, (ஆ) சரி (இ) சரி (ஈ) சரி (உ) சரி, (ஊ) சரி, (எ) சரி, (ஏ) சரி. 19 1 (ஆ), 2 (அ), 3 (ஈ), 4 (இ), 5 (ஊ), 6 (உ)

**பயிற்சி - 7**

1. போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளில் கண்டி மன்னனிடம் கையளிக்கப்படாத கோட்டைகள்:

(அ) மட்டக்களப்பு (ஆ) திருகோணமலை
(இ) கொழும்பு (ஈ) காலி

2. 1638 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஒல்லாந்தர் தமக்கு சாதமாக திருத்திக் கொண்ட வாசகங்கள்:

(அ) ஒல்லாந்தர் பிடிக்கும் கோட்டைகளைக் கண்டி மன்னனிடம் ஒப்படைக்க வேண்டும்.

(ஆ) கண்டி மன்னன் விரும்பினால் மட்டுமே ஒல்லாந்தர் அக்கோட்டைகளுள் படை வைத்திருக்கலாம்

(இ) கோட்டைகளைக் கைப்பற்றுவதற்கான செலவுகளைக் கண்டி மன்னன் தரல் வேண்டும்.

(ஈ) கைப்பற்றும் கோட்டைகளுள் பாதுகாப்பிற்காக ஒல்லாந்தர் படை வீரர்களை வைத்திருக்கலாம்.

3. கண்டி மன்னனிடம் ஒப்டைக்கப்பட்ட கோட்டை:

(அ) மட்டக்களப்பு (ஆ)களுத்துறை

(இ) மன்னார் (ஈ0 யாழ்ப்பாணம்

4. ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்களின் முக்கியமில்லாத குறிக்கோள்:

(அ) ஆட்சிப் பாதுகாப்பிற்காகக் கோட்டைகளை வைத்திருத்தல்

(ஆ) வியாபாரப் பொருட்களின் ஏகபோக உரிமையைப் பெறல்

(இ) யாழ்ப்பாண மன்னனுக்கு உதவுதல்

(ஈ) வாசனைப்பொருட்களை உற்பத்தி செய்யும் பிரதேசங்களைத் தம் ஆதிக்கத்துள் வைத்திருத்தல்

5. கண்டி அரசர்கள் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள்?

(அ) சிங்கள அரச வம்சம்

(ஆ) நாயக்கர் அரச வம்சம்

(இ) சிங்கள வம்சமும் நாயக்கர் வம்சமும்

(ஈ) திராவிட வம்சம்

6. களுத்துறை, கொழும்பு, யாழ்ப்பாணம் கோட்டைகளை ஒல்லாந்தர் கைப்பற்றிய வருடங்கள் ஒழுங்கு வரிசையில்:

(அ) 1652, 1656, 1658 (ஆ) 1658, 1656, 1652

(இ) 1656, 1652, 1658 (ஈ) 1652, 1658, 1656

7. 1760 ஆம் ஆண்டு யுத்தத்தில் நடந்தவை:

(அ) தாழ்நிலக் கறுவா பறிப்போர் ஒல்லாந்தருக்கு எதிராகக் கலகம் ஒன்றினைச் செய்தனர்

(ஆ) மலையகப்படையும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது

(இ) ஒல்லாந்தர் வசமிருந்த சில பிரதேசங்கள் கண்டியுடன் இணைக்கப்பட்டன

(ஈ) இவை அனைத்தும்

8. ஒல்லாந்தர் ஆட்சியால் இலங்கைக்குக் கிடைத்தவை:

(அ) புரட்டஸ்தாந்து சமயமும் அச்சுக்கலையும்

(ஆ) ரோமன் டச்சுச்சட்டமும் தேசவழமைச்சட்டமும்

(இ) தோம்புகளும் பறங்கியர்களும்

(ஈ) இவை அனைத்தும்

**விடைகள்:**

1 (இ, ஈ), 2 (ஈ), 3 (அ), 4 (இ), 5 (இ), 6 (அ), 7 (ஈ), 8 (ஈ)

### அத்தியாயம் 10

# கைத்தொழிற்புரட்சி

**1. கைத்தொழிற்புரட்சி என்றால் என்ன?**



ஆர்னோல்ட் டொயின்பி

(அ) கைகளால் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக இயந்திர உபகரணங் களைக்கொண்டு பொருட்களை உற்பத்திசெய்யத் தொடங்கிய மாபெரும் மாற்றத்தைக் கைத்தொழிற் புரட்சி என்பர்.

(ஆ) மானியமுறைச் சமூக அமைப்பில் குடிசைக் கைத்தொழிலாகச் சுயதேவைக்கு உற்பத்தியாகிய பொருட்கள் இயந்திரங்களின் உதவி கொண்டு பெரிய அளவில் சந்தைகளுக்காக உற்பத்தியாகத் தொடங்கின.

(இ) 1700 களிலும் 1800 களின் ஆரம்பத்திலும் மக்களின் வாழ்க்கையிலும் தொழில் முறைகளிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. கைத்தொழிலாக்கங்களின் விருத்தியே இப்புரட்சிகர மாற்றத்தைத் தோற்றுவித்தன. இச்சமூக பொருளாதார மாற்றத்தை ஆர்னோல்ட் டொயின்பி என்பார் 'கைத்தொழிற் புரட்சி' எனப்பெயரிட்டார்.

**2. ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழிற்புரட்சி ஏற்படுவதற்கான சூழல்யாது?,**

(அ) ஐரோப்பாவின் கல்வி மறுமலர்ச்சி

(ஆ) தேசிய அரசுகளின் தோற்றம்

(இ) சமயமறுமலர்ச்சி

(ஈ) நாடுகாண் பயணங்கள்

(உ) மானியமுறை அழிவு

(ஊ) வர்த்தக விருத்தி – சந்தை வாய்ப்புகள் அதிகரித்தமை,

(எ) குடியேற்ற நாடுகள்

**3.கைத்தொழிற்புரட்சி பெரிய பிரித்தானியாவில் முதன் முதல் தோன்றியமைக்கான ஏதுக்கள் யாவை?**

(அ) 1700 களில் பெரியபிரித்தானியாவிலேயே கைத்தொழிற் புரட்சி எற்பட்டது. அதன் பின்னரே 1800 களில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் வடஅமெரிக்காவுக்கும் பரவியது.

(ஆ) பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்படுவதற்கான பொருளாதாரக்காரணங்களும் சமூகக் காரணங்களும் சாதகமாகவிருந்தன.

(இ) பொருளாதாரக் காரணங்களாக பிரித்தானியாவில் வர்த்தகம் விருத்தியடைந்திருந்தது. கடல் வணிகம் பெருகியிருந்தது. இங்கிலாந்தின் விவசாயத்துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. சிறிய நிலங்கள் இணைக்கப்பட்டு பெரிய விளைநிலங்களாக்கப்பட்டன. நிலமிழந்த விவசாயிகள் நகரங்களுக்கு வேலை தேடி வந்தனர். கைத்தொழிற்சாலைகளில் வேலை செய்ய ஊழியர் படை இருந்தது. கைத்தொழிற்புரட்சியைத் துரிதப்படுத்தக் கூடிய வளங்கள் இங்கிலாந்தில் இருந்தன.

(ஈ) சமூகக் காரணங்களாக இங்கிலாந்தின் சனத்தொகை அதிகரித்திருந்தமையால் சந்தை வாய்ப்பு கூடியமை, அறிவுத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டிருந்தமை, நிலமானிய முறை ஒழிந்து குடியானவர்கள் விடுதலை பெற்றிருந்தமை என்பன விளங்கின.

**4. கைத்தொழிற்புரட்சியின் விளைவுகள் எவை?,**

(அ) கைத்தொழிற் புரட்சியினால் பல்வேறு பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது. வலுவினால் இயங்கும் இயந்திர அறிமுகமும் தொழிற்சாலை அமைப்பும் பொருட்களின் அதிக உற்பத்திக்குத் தூண்டுதலாகின. வீடுகளில் குடிசைக்கைத்தொழிலாக இயங்கியவை, வேலைத்தளங்'களாக மாறின. மக்கள் வீடுகளைவிட்டு வேலைத்தளங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் வரத்தொடங்கினர்.

(ஆ) தனியார் முதலீடு அதிகரித்தது. அதனால் முதலாளிகள் (முதலாளித்துவம்) என்றொரு வகுப்பு உருவாகியது. மேற்கு உலகின் கிராமிய விவசாய சமூகம், நகர்ப்புற கைத்தொழிற் சமூகமாக மாறியது.

(இ) பொருள் உற்பத்தி அதிகரித்தமையால் ஐரோப்பியநாடுகளிடையே குடியேற்ற நாடுகளைப் பெற்றுக் கொள்வதில் போட்டிகள் நிலவின. கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் தேவைப்பட்டன. உற்பத்தியாகிய முடிவுப்பொருட்களை விற்பதற்குச் சந்தைகள் தேவைப்பட்டன. அதனால் நாடுகளிடையே குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றுவதில் அதிகாரப்போட்டிகள் நிகழ்ந்தன.

(ஈ) வர்த்தகத்தின் மூலமும் கைத்தொழில்கள் மூலமும் ஈட்டிக்கொண்ட செல்வத்தை முதலீடு செய்ய வேண்டிய தேவை முதலாளிகளுக்கு ஏற்பட்டது. அதனால் வேறு நாடுகளில் முதலீடு செய்ய முன்வந்தனர்.

(உ) சமூகத்தில் தொழிற்பிரிவுகள் தோன்றின. உழைப்பை விற்பனை செய்யும் ஊழியர்படை தோன்றியது.

**5. எக்கைத்தொழில் துறைகளில் பாரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டன?**

(அ) புடவைக் கைத்தொழில், நிலக்கரிக்கைத்தொழில், இரும்புருக்குக் கைத்தொழில், போக்குவரத்துத் துறை என்பனவற்றில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன.

(ஆ) புடவை நெசவுக்கைத்தொழிலில் இயந்திரத்தறிகளின் அறிமுகம் மிக முக்கியமானது. முதன் முதல் இங்கிலாந்திலும் ஸ்கொட்லாந்திலும்

1750 உக்கும் 1800 உக்குமிடையில் இம்மாற்றங்கள் ஏற்பட்டன. கைத்தறி நெசவு படிப்படியாக யந்திர நெசவாக மாறியது.

(இ) முதல் பட்சமாக நூல் நூற்கும் யந்திரம் அறிமுகமாகியது. 1738 இல் லூயிஸ்போல், ஜோன்வையாட் என்போர் நூல் நூற்கும் யந்திரமொன்றைக் கண்டுபிடித்தனர். 1767 இல் ஜேம்ஸ் என்பாரும் கிறிவ்ஸ் என்பாரும் இன்னொரு நூல்நூற்கும் யந்திரத்தைச் செப்பமாகக் கண்டு பிடித்தனர். 1769 இல் ஜோன் அக்ரைட் என்பவர் சக்கரங்களை நீரின் மூலம் சுழல வைப்பதன் மூலம் விசை பெறலாம் எனக்கண்டறிந்தார்.

(ஈ) 1733 இல் ஜோன்கே என்பவர் புடவை நெய்யும் ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்தார். நீராவி யந்திரத்தைக்கொண்டு இயங்கும் நெசவு யந்திரங்கள் காலகதியில் அறிமுகமாயின. 1835 இல் பெரிய பிரித்தானியாவில் மட்டும் 120000 வலு நெசவுத்தறிகள் இருந்தன. பருத்தி நெசவில் இவை ஈடுபட்டிருந்தன.

(உ) கைத்தொழிற்புரட்சியில் வலுவாக விளங்கின நீர்ச்சக்கரத்திற்குப் பதிலாக நீராவி கண்டுபிடிக்கப்பட்டமை பெரும் மாற்றமாகவிருந்தது.1698 இல் முதலாவது நீராவி யந்திரத்தை தோமஸ் சவேரி என்பார் அறிமகப்படுத்தினார். 1712 இல் தோமஸ் நியூகொமன் என்பவர் இந்த யந்திரத்தைச் செப்பமாக்கினார். 1785 இல் ஜேம்ஸ் வாட் என்பவர் மிக்சிறப்பான நீராவி யந்திரத்தை அறிமுகப்படுத்தினார்.

(ஊ) நிலக்கரியும் இரும்புத்தாதும் இருந்திருக்காவிடில் கைத்தொழிற்புரட்சி சாத்தியமாகியிருக்காது. நீராவியந்திரங்கள் இயங்குவதற்கு நிலக்கரியே அடிப்படையாகியது. இரும்புத்தாதை உருக்குவதற்கும் நிலக்கரி வலுப்பொருளாகியது. இரும்புருக்கு இல்லாவிடில் யந்திரங்கள் செய்யமுடியாது. பாலங்கள், கப்பல்கள் கட்டமுடியாது.நிலக்கரியும் இரும்புத்தாதுமே பிரித்தானியாவை உலகின் முதலாவது கைத்தொழில் நாடாக்கின. 1735 இல் நியூகொமனின் நீர் இறைக்கும் யந்திரமும், 1812 இல் ஹம்ரிடெட்ட என்பாரின் பாதுகாப்பான விளக்கும் சுரங்கத் தொழிலுக்கு உதவின. கைத்தொழிற் புரட்சியை முன் எடுத்துச்சென்றன.

**6. போக்குவரத்துத் துறைகளில் கைத்தொழிற் புரட்சியின் பங்களிப்பு யாது?**

(அ) மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளுக்கு எடுத்து வருவதற்கும் முடிவுப்பொருட்களைச் சந்தைகளுக்கு எடுத்துச்செல்லவும் போக்குவரத்துப்பாதைகளும் சாதனங்களும் அவசியமாகின்றன. கைத்தொழிற் புரட்சியில் நீர்ப்போக்குவரத்து, கப்பல்கள் முக்கியம் பெற்றிருந்தன. தார் வீதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டன.

(ஆ) 1814 இல் ஜோர்ஜ் ஸ்டிவின்சன் நீராவி யந்திரத்தைக் கண்டு பிடித்ததும் புகையிரதப் போக்குவரத்து முக்கியம் பெறலாயிற்று. 1801 இல் ஜேம்ஸ்வாட் புகைபோக்கிக் கப்பலை உருவாக்கினார். 1876 இல் அலெக்சாண்டர் கிரெகம்பெல் தொலைபேசியையும், 1895 இல் மார்க்கோனி

வானொலியையும், 1903 இல் ரைட்சகோதரர்கள் ஆகாய விமானத்தையும் உருவாக்கினர்.இவை கைத்தொழிற் புரட்சியைத் துரிதப்படுத்தின.

**7.கைத்தொழிற் புரட்சி ஏற்படுத்திய சமூக வாழ்க்கை எவ்வாறிருந்தது?**

(அ) வேலைசெய்யும் பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கியது. பணம் படைத்த முதலாளிகளை உருவாக்கியது.

(ஆ) தொழிற்சாலைக் கூலி மிகக்குறைவாக இருந்தது. சிறுவர் தொழிலாளர் இக்காலத்தில் காணப்பட்டனர்.

(இ) கைத்தொழில் நகரங்கள் உருவாகின. கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகரப் புறங்களில் குடியேறினர். சேரிப்புறங்கள் உருவாகின. சுகாதாரக் கேமகள் தோன்றின.

(ஈ) 1750 இல் பிரித்தானியாவின் சனத்தொகை ஆறரை மில்லியனாக இருந்தது. ஆனால் 1830 இல் 14 மில்லியனாக உயர்ந்தது.

(உ) பெரிய பிரித்தானியாவிலிருந்து தொழில் வல்லுநர்கள், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பெல்லியம், ஜேர்மனி முதலான நாடுகளுக்கு குடிபெயர்ந்து அந்நாடுகளில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தனர்.

(ஊ) சுற்றுச் சூழல் மாசடைதல் தொழில் வளர்ச்சியின் இன்றைய பெரும் அச்சுறுத்தலாகும்.

**பயிற்சிகள்:**

1. கைத்தொழிற் புரட்சி என்பதற்குரிய சரியான விளக்கம்
   (1) தேயைான பொருட்களைக் குடிசைக் கைத்தொழிலாக உற்பத்தி செய்வது
   (2) பொருட்களை உற்பத்தி செய்வதற்கு யந்திரங்களைப் பயன்படுத்துவது
   (3) நெசவுத்துறையில் கைத்தறிகள் யந்திரத்தறிகளாக மாறியமை
   (4) நிலக்கரி இரும்புருக்கு என்பனவற்றின் உபயோகம்
2. கைத்தொழிற் புரட்சி செயற்பட்ட காலம்:
   (1) 1600 – 1750 (2) 1700 – 1750
   (3) 1700 – 1800 (4) 1750 – 1850
3. கைத்தொழிற் புரட்சியை உருவாக்கிய சூழல்:
   (1) நிலமானிய முறை ஆழிவும் தேசிய அரசுகளின் தோற்றமும்
   (2) கல்வி மறுமலர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும்
   (3) நாடுகாண் பயணங்களும் வர்த்தக விருத்தியும்
   (4) இவை அனைத்தும்
4. பெரியபிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சி முதன் முதல் ஏற்பட்டமைக்கான காரணங்கள்:
   (1) வெளிநாட்டு வர்த்தகம் விருத்தியடைந்தமை
   (2) குடியேற்ற நாடுகளின் சந்தை
   (3) அறிவுத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் ஏற்பட்ட வளர்ச்சி
   (4) இவை அனைத்தும்

**5. கைத்தொழிற்புரட்சியின் உடனடி விளைவு யாது.'.**

(1) சமூக, பொருளாதார அமைப்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டது

(2) சிறுவர் தொழிலாளர் உருவாகியமை

(3) முதலாளிகள், தொழிலாளிகள் என்ற பாகுபாடு தோன்றியமை

(4) குடியேற்ற நாடுகளுக்கான போட்டி

**6. புடவை நெசவில் நூல்நூற்கும் விசைத்தறியைக் கண்டறிந்து புரட்சி நெய்தவர்கள்:**

(1) ஜோன் வையாட் (2) லூயிஸ் போல்

(3) கிறிஸ்சும் ஜேம்சும் (4) இவர்கள் அனைவரும்

**7. ஜோன்கே யின் கண்டு பிடிப்பு யாது?**

(1) புடவை நெய்யும் யந்திரம்

(2) நூல் நூற்கும் யந்திரம்

(3) நீராவி யந்திரம்

(4) பாதுகாப்பான விளக்கு

**8. கைத்தொழிற் புரட்சியில் பாரிய விருத்தியை ஏற்படுத்தியது**

(1) நீர்ச்சக்கரம் (2) நீராவி யந்திரம்

(3) நிலக்கரி (3) புகையிரதம்

**9. கைத்தொழிற் புரட்சிக்கு மேலும் உதவியவை:**

(1) ஜோர் ஸ்வின்சனின் நீராவி யந்திரமும் புகையிரதங்களும்

(2) ஜேம்ஸ்வாட்டின் புகைபோக்கிக் கப்பலும் கிரகெம்பெல்லின் தொலைபேசியும்

(3) மார்க்கோனியின் வானொலியும் ரைட்சகோதரர்களின் ஆகாயவிமானமும்

(4) இவை அனைத்தும்

**10. கைத்தொழிற் புரட்சியால் வந்துற்ற கேடு யாது?**

(1) நகரப்புறங்களில் சேரிகள் உருவாகியமை

(2) சுற்றுச் சூழல் மாசடைந்தமை

(3) மூலப்பொருட்கள் அருகி வருகின்றமை

(4) அபரிமிதமான முடிவுப்பொருட்களின் உற்பத்தி

(விடைகள் - 1 (2), 2 (3), 3 (4), 4 (4), 5 (1), 6 (4), 7 (1), 8 (2), 9 (4), 10 (2)

## அத்தியாயம் 11

# ஐரோப்பாவில் புதிய அரசியற் சிந்தனையில் ஏற்பட்ட வளர்ச்சி

**1. பிரான்சியப் புரட்சி குறித்து விளக்குக.**

(அ) பிரான்சிய சமூகத்திலும் அரசியலிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய பெரும் போராட்டமே பிரான்சியப் புரட்சியாகும். 1789 தொடக்கம் 1799 வரை பிரான்சில் இப்புரட்சி நிகழ்ந்தது. இப்புரட்சி ஐரோப்பாவிலும் உலக நாடுகளிலும் சமூக அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திய போராட்டமாகும்.

(ஆ) இப்புரட்சியால் அளவற்ற அதிகாரம் கொண்டிருந்த பிரான்சிய மன்னர்களின் அதிகாரம் பறிக்கப்பட்டு. மத்திய வகுப்பினரின் அதிகாரம் மேலோங்கியது. இப்புரட்சி தொடங்கிய பின்னர் எந்தவொரு ஐரோப்பிய அரசரும் மக்களது நியாயமான **வரலாறு 10** 148
சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் மதிக்காதுவிடவில்லை.




**லூயி மன்னன்**

(இ) பிரான்சியப் புரட்சி தோன்றுவதற்குப் பல்வேறு சமூக, அரசியற், பொருளாதாரக் காரணிகள் உள்ளன. மன்னராட்சியும் நிலமானியமுறையும் இயங்கிய பிரான்சிய சமூக அமைப்பில் மதகுருமார் முதல் தரத்தினராகவும், பிரபுக்கள் அடுத்த உயர் தரத்தினராகவும் விளங்கினர். ஏனைய மக்கள் மூன்றாந்தரப்பிரசைகளாக விளங்கினர். மூன்றாந்தர வகுப்பில் விவசாயிகள்,தொழிலாளர்கள், மத்தியதர வகுப்பினரான வியாபாரிகள், சட்டத்தரணிகள், அரச ஊழியர்கள் இருந்தனர். அரசனுக்கு மதகுருமாரும் பிரபுக்களும் அதிக வரி கட்டத்தேவையில்லை. மூன்றாம் வகுப்பினரே அதிகவரி கட்டநேர்ந்தது.

(ஈ) கடவுளின் பிரதிநிதியாக மன்னன் தன்னைக் கூறிக்கொண்டான். மன்னன் கடவுளின் வரம்பெற்றவன் என எண்ணப்பட்டான். மன்னன், மதகுருமார், பிரபுக்கள் அகியோர் சுகபோக வாழ்வை அனுபவித்தனர். நீதி நியாயமின்றி தனக்கெதிரானவர்களை பஸ்தில என்ற சிறையிலடைத்தான். இவர்கள் சுமார் 4 சதவீதத்தினராவர். மிகுதி பெரும்பான்மை மக்கள் வரிச்சுமையால் பெரும் சிரமங்களை அனுபவித்தனர்.

(உ) பிரான்சியப் புரட்சி தோன்றிய காலத்தில் பிரான்சின் அரசனாக 16 ஆம் லூயி இருந்தான்.அத்தோடு அக்காலத்தில் வர்த்தகம், கைத்தொழில் என்பன விருத்தியடைந்திருந்ததால் அதன் விளைவாக உருவாகிய மத்திய


பஸ்தில் சிறைச்சாலை

தர வகுப்பினர் வர்த்தகர்களாவும் கல்விமான்களாகவும் சட்டத்தரணிகளாகவும் சிந்தனையாளர்களாகவும் விளங்கினர். மொன்டெஸ்கியு, வோல்ரயர், ரூசோ முதலான சிந்தனையாளர்கள் சாதாரண மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைச் சுட்டிக்காட்டினர்.சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலான சனநாயகக் கருத்துக்கள் மக்களிடையே வலுவடைந்தன.

(ஊ) 1756 – 1763 கால யுத்தங்களினால் பிரான்சிய அரசு வங்கிறோத்துக்குள்ளாகியிருந்தது. மதகுருமாரும் பிரபுக்களும் வரிகளை அதிகரிக்குமாறு மன்னனிடம் கோரியிருந்தனர். அதற்காக 175 வருடங்களாகக் கூட்டப்படாதிருந்த ஸ்ரேற்ஜெனரல் என்ற பாராளுமன்றத்தை மன்னன் கூட்டினான். இந்த மன்றத்தில் 1000 அங்கத்தவர்கள் இருந்தனர். அதில் 600 பேர் மூன்றாம் வகுப்பினராவர். மதகுருமாரும் பிரபுக்களும் மன்னனிடம் கூறி மூன்றாம் வகுப்பினரை பாராளுமன்றத்துக்கு வெளியே தடுத்து வைத்தனர். இதனால் அவர்கள் மஜராபோ என்பவனின் தலைமையில் அருகிலுள்ள டெனிஸ் மைதானத்தில் சுமார் 30 ஆயிரம்பேர் குழுமினர். டெனிஸ் மைதானத்தில் ஒரு சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர். அவ்விடத்தில் புரட்சி வெடித்தது.

(எ) தொழிலாளர்களும் சாதாரண பொதுமக்களும் கைகளில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு புரட்சியிலீடுபட்டனர். 1789 ஜூலை 14 ஆம் திகதி இப்புரட்சி வெடித்தது. முதல் காரியமாக பஸ்சில் சிறைச்சாலை கைப்பற்றப்பட்டு துவம்சம் செய்யப்பட்டது. 16 ஆம்லூயி மன்னனும் அரசியும் கொல்லப்பட்டனர். மதகுருமாரும் பிரபுக்களும் எதிரானவர்களுமாக 18000 பெர் வரை தலைகள் துண்டிக்கப்பட்டன. 'கிலற்றின்' என்ற தலை துண்டிக்கும் கருவி, வண்டிகளால் பிடித்து ஏற்றிவரும் இவர்களை ஈவிரக்கமின்றி வெட்டித் தள்ளியது.

**2.பிரான்சியப்புரட்சி உலகிற்குத் தந்த மனித உரிமைகள் யாவை?**

(அ) ஒவ்வொரு மனிதனும் ஒரு சுதந்திர மனிதனாகவே பிறக்கிறான்.

(ஆ) சமூகத்தில் வாழும் அனைவருக்கும் சமமான வித்தில் உரிமைகள் கிடைக்க வேண்டும்.

(இ) பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் அல்லது ஒர பிரதிநிதிக்கு ஊடாகச் சட்டவாக்கத்தில் பங்கேற்க வேண்டும்.

(ஈ) சட்டமொன்றின் கீழ் மட்டும் ஒருவர் கைதுசெய்யப்பட வேண்டும்.

(உ)அனைத்துப் பிரசைகளுக்கும் தமது கருத்தைக் கூறும் சுதந்திரம் உண்டு.

(ஊ)ஒவ்வொருவரும் தாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

**3.பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் எவை?**

(அ) 1791 இல் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான ஆவணம் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடியதாக அமைந்தது.

(ஆ) நிலமானிய முறைப் பொருளாதார அமைப்பு முற்றாக வீழ்ச்சியடைந்தது.

(இ) ஒரு முதலாலித்துவ பொருளாதார அமைப்பு உருவாகியது.

(ஈ) விவசாய, தொழிலாள வர்க்கம் ஒன்று பிரான்சிய அரசில் வலிமையானதாகாக மாறியது.

(உ) உரிமைகள், நிர்வாக உரிமைகள் பெற்ற ஒரு மத்தியதர வர்க்கம் தோன்றியது.

(ஊ) சுதந்திரம், சமத்துவம், சதோதரத்துவம் என்ற கருத்துக்கள் மன்னராட்சி நிலவிய ஏனைய நாடுகளிலும் பரவின. அதனால் சமூக, பொருளாதார,அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன.

**4. இத்தாலி ஒற்றுமைப்பட்ட வரலாற்றினை விபரிக்க.**

(அ) இத்தாலி என்ற குடாநாடு 19 ஆம் நூற்றாண்டின்போது பல அரசுகளாகப் பிரிந்திருந்தது. வெவ்வேறு வெளிநாட்டு ஆதிக்கங்களின் கீழ் இருந்தது.

(1) நேபிள்ஸ், சிசிலித்தீவுகள் பிரான்சிய பூபன் வம்சத்துக்குச் சொந்தமாக இருந்தது.

(2) மத்திய இத்தாலி பாப்பாண்டவரின் கீழ் இருந்தது.

(3) டஸ்கனி, மொடனா, வெனிசியா, லோம்பாடி என்பன ஆஸ்திரியாவின் வசம் இருந்தது.

(4) பிளட்மண்ட், மற்றும் சாடினியா தீவுகள் இத்தாலியின் சவோய் அரச வம்சத்துக்கு உரித்தாக இருந்தது.

(5) இத்தாலியின் பல சிறிய பிரதேசங்களை இத்தாலிய பிரதானிகள் ஆண்டனர்.

(ஆ) பாப்பரசர் கொண்டிருந்த அதிகாரம் இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதற்கு எதிராகவிருந்தது. அத்தோடு இத்தாலிய மக்களிடையே ஒருமைப்படும் தேசிய உணர்வுகள் தோன்றவில்லை.

(இ) பிளவுபட்டிருந்த இத்தாலியை ஒற்றுமைப்படத்தியவர்களில் நெப்போலியன், ஜோசெப் மசினி, கவுண்ட கபூர், கரிபால்டி டின்போர் முக்கியமானவர்கள். இவர்களே மக்களுக்குத் தேசிய உணர்வை ஊட்டினர்.

(ஈ) 176 இல் பிரான்ஸின் ஆட்சியதிகாரம் நெப்போலியன் பொனபாட் என்பானுக்குக் கிடைத்தது. ஆவன் இத்தாலியின் பல பிரதேசங்களை ஆக்கிரமித்தான். 1797 இல் வட இத்தாலியையும், 1807 இல் பாப்பரசரின் கீழிருந்த பிரதேசத்தையும், 1809 இல் நேபிள்ஸ், சிசிலி பிரதேசங்களையும் கைப்பற்றினான். அதனால் இத்தாலி பிராந்திய அரசுகளின் எண்ணிக்கை இரண்டாகக் குறைந்தது.

(உ) 1815 இல் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டான். வியன்னா உடன்படிக்கை ஒன்று எற்பட்டது. அந்த உடன்பாட்டின்படி இத்தாலி மீண்டும் பின்வருமாறு துண்டாடப்பட்டது.

(1) பிரான்சிய பூபன் அரச வம்சத்துக்கு நேபிள்ஸ், சிசிலி.
(2) பாப்பரசருக்கு மத்திய இத்தாலி
(3) ஆஸ்திரியாவுக்கு பார்மா, மொடனா, டஸ்கனி
(4) ஆஸ்திரியா ஹஸ்பேர்க் வம்சத்துக்கு லொம்பாடி, வெனிசியா.
(5) சாடினியா அரசனுக்கு சாடினியா

(ஊ) மீண்டும் துண்டாடப்பபடட இத்தாலியிலிருந்து அதிக செல்வத்தைப் பிரான்சும் ஆஸ்திரியாவும் பெற்று அனுபவித்தன. 1815 இன் பின்னர் அனைத்து அரசுகளிலும் எதேச்சாதிகாரம் இடம்பெற்றது. மக்களின் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டது.

(எ) இந்நிலையில் மாஜினி, கபூர், கரிபால்டி ஆகிய மூவரும் தேசிய உணர்வுகளை இரகசிய சங்கங்கள் ஊடாக மக்களுக்கு ஊட்டினர். மாஜினி தேசிய உணர்வூட்டும் உரைகளை நிகழ்த்தினார். கவுண்ட் கபூர் மக்களுக்குத் தலைமைத்துவத்தை ஏற்படுத்தினார் கரிபால்டி போர்க்களத்தை நெறிப்படுத்தினார்.

(ஏ) 1830 இல் இத்தாலியின் சுதந்திரப் போராட்டம் மீண்டும் ஆரம்பித்தது. காபனாரி என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் ஐக்கிய சுதந்திரம் என்ற இளைஞர் சங்கம் உருவாக்கப்பட்டது. மாஜினி இத்தாலியிலிருந்து சாடினியாவுக்குத் தப்பி ஓடி, அங்கிருந்து பிரான்சுக்கு ஓடி, பின்னர் இங்கிலாந்தில் இருந்தவாறு இச்சுதந்திர ஐக்கியத்துக்காகப் பாடுபட்டார். ஈஸ்திரியா இத்தாலியின் ஐக்கியத்துக்கு பெரிதும் எதிர்ப்பாக இருந்தது.

(ஒ) 1849 இல் ஆஸ்திரியா இத்தாலியப் புரட்சியை அடக்கியது. அதேவேளை சார்ள்ஸ்அல்பேட் என்ற மன்னன், சாடினிய அரசனை வெற்றி கொண்டு தனது மகன் இமானுவேல் என்பானை அதன் அரசனாக்கினார். 1859 இல் சாடினிய மன்னனும் பிரான்சும் இணைந்து ஆஸ்திரியாப்படைகளை இத்தாலியிலிருந்து கிழக்குப் புறமாக துரத்திவிட்டனர். இமானுவேல் மன்னனிடம் இத்தாலியை மீட்டு ஒப்படைப்பதில் கரிபோல்டி மிகுந்த பங்கு வகித்தான். ஆஸ்திரியாவுக்கு எதிரான போரில் பங்கேற்று வெற்றி பெற்றான். ரோம் தவிர்ந்த இத்தாலி ஐக்கியப்படுத்தப்பட்டது. ஆஸ்திரியாவுக்கு உதவிய இத்தாலிய தேசியப் பிரபுக்கள் புரட்சிக்காரர்களால் கொலை செய்யப்பட்டனர். 1870 இல் பாப்பரசரின் ரோமும் இத்தாலியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

(ஓ) முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் இத்தாலியர் தம் அரசில் அதிருப்தியடைந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் தொழிலற்றிருந்தனர். இத்தருணத்தை முசோலினி என்பான் பயன்படுத்திக்கொண்டான். முசோலினி பாசிச இயக்கத்தைச் சேர்ந்த ஒரு கெரில்லாப் போராளி. இவனது கோரிக்கைளுக்கு இணங்கிய இமானுவேல் மன்னன் முசோலினியை

இத்தாலியின் பிரதமராக்கினார். இத்தாலி சுபீட்சமடையக் கூடிய திட்டங்களை இவன் வகுத்தான். 1929 இல் பாப்பரசரின் வேண்டுகோளுக்கிணங்க சுமார் ஒன்றரைச் சதுர மைல் கொண்ட வத்திக்கான் அவரிடம் முசோலினியால் ஒப்படைக்கப்பட்டது.

**5. ஜேர்மனி ஒற்றுமைப்பட்ட வரலாற்றினைச் சுருக்கமாக விபரிக்க.**

(அ)19ஆம்நூற்றாண்டில் ஜேர்மனி என்ற பெயரில் ஓரரசு இருக்கவில்லை. ஜேர்மன் மொழியைப் பேசிய 369 அரசுப்பிரிவுகள் இருந்தன.

(ஆ) 1806 இல் ஜேர்மன் பிரதேசங்கள் மீது ஆக்கிரமித்த பிரான்சிய நெப்போலியன் ஆஸ்திரியாவையும் பிரஸ்யாவையும் கைப்பற்றிக்கொண்டான். வலுவிழந்த பழைய சட்டங்களுக்குப் பதிலாக நெப்போலியன் நியாயமான வரி முறைகொண்ட புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தினான். ஜேர்மனியப் பிரதேசங்களில் தேசிய உணர்வுகள் களர்ந்தன.

(இ)நெப்போலியன் தோல்விக்குப்பின்னர் உருவாக்கப்பட்ட வியன்னா உடன்பாடு ஜேர்மனியை 39 அரசுகளாக்கியது. இவை ஜேர்மன் கூட்டாட்சி என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பை உருவாக்கின.

(ஈ) அதேவேளை பிரஸ்யாவில் சில உள்ளக மாற்றங்கள் ஏற்பட்டன. அந்நாட்டில் நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது. அந்நாட்டிலிருந்த யூதர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

(உ) சொல்வரின் என்ற தீர்வை முறை பிரஸ்யாவை வெளி வர்த்தகத்தில் விருத்தியடைய வைத்தது. மத்திய' தரவர்க்கத்தைச் சேர்ந்த கல்விமான்கள் ஜேர்மனி ஒருமைப்படுவதற்கான தலைமைத்துவத்தை வழங்கினர். பிரடரிக் வில்லியம் என்ற பிரஸ்யாவின் மன்னன் இதற்கு ஆதரவாக இருந்தான். தாராளவாத பாராளுமன்றம் ஒன்றை அமைத்தான்.



பிஸ்மார்க்

(ஊ) அனைத்து ஜேர்மனிய அரசுகளிலிருந்தும் 500 பிரதிநிதிகள் இப்பாராளுமன்றத்தில் பங்கேற்றனர். இது பிராங்போர்ட் பாராளுமன்றம் எனப்பட்டது.இதன் முயற்சிகள் தோல்வி கண்டன.

(எ) ஜேர்மனியை ஒற்றுமைப்படுத்தும் இயக்கத்திற்கு அடுத்ததாக தலைமை ஏற்றவன் பிஸ்மார்க் ஆவான். ஆஸ்திரியா அவனது முயற்சிகளுக்கு எதிராகவிருந்தது. அதனை உணர்ந்த பிரஸ்ய மன்னன் வில்லியம், பிஸ்மார்க்கை சான்சலாராக்கினான்.

(ஏ) பிஸ்மார்க் தாராளவாதப்பராளுமன்றத்தைக் கலைத்ததுடன், பிரஸ்ய இராணுவத்தைப் பலப்படுத்தினான். டென்மார்க்கைக் கைப்பற்றிய பிஸ்மார்க், ருசியா, பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து முதலான நாடுகளை நடுநிலை வகிக்கும் நிலைமையைத் தோற்றுவித்தபின்னர், 1866 இல் ஆஸ்திரியாவைப் போரில் தோற்கடித்தான்.

(ஐ) பவேரியா, வூட்டர்பேர்க். பேர்டன் ஆகிய தென்பிரதேச அரசுகளை ஜேர்மனியக் கூட்டாட்சியுடன் இணைத்துக்கொண்டான். ஆத்துடன் ஆஸ்திரியாவின் தோல்வியுடன் செல்ஸ்விச்ட, கொல்ஸ்டைன், ஹனோவர், நசொ, பிராங்போர்ட், ஹெசே ஆகிய பிரதேசங்கள் கூட்டாட்சியில் இணைந்தன. 1870 இல் பிரான்சும் தோற்கடிக்கப்பட்டது.

(ஒ) 1871 இல் ஜேர்மனியின் மன்னனாக பிரஸ்யாவின் மன்னன் பிரகடணப்படுத்தப்பட்டான். ஆதன் பின்னர் ஜேர்மனி ஒற்றுமைப்பட்டது. ஒரு நாடாக வந்தது.

**6. இரஷ்யப் புரட்சி உருவான வரலாற்றினைச் சுருக்கமாக விபரிக்க.**

(அ) மத்தியகாலத்தில் ரஷ்யாவில் நிலமானிய முறைநிலவியது. பிரபுக்களினதும் பிரதானிகளினதும் அதிகாரம் மேலோங்கியிருந்தது. அரசு பலவீனமாகக் காணப்பட்டது.

(ஆ) சார்க் மன்னர்களின் எதேச்சாதிகாரத்தால், கடும் வறுமை நிலவியது. உலகின் மொத்த நிலப்பரப்பில் விரிந்திருந்த ரஷ்யா சாம்ராச்சியத்தில், 97 சதவீதமானமக்கள் வறுமைப்பிடியில் தவித்தனர். 54 சதவீதமானமக்கள் பிரபுக்களின் கொத்தடிமைகளாகச் சகல உரிமைகளையும் இழந்திருந்தனர். நாட்டின் மொத்த வருமானத்தில் மூன்றிலொரு பகுதி தேவாலயத்திற்குச் சொந்தமானது. நாட்டின் வளங்களில் பெரும் பகுதியை மொத்தச்சனத்தொகையில் ஒரு சதவீதமான பிரபுக்களும் மதகுருமாரும் அனுபவித்தனர்.

(இ) 19 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில்கள் விருத்தியடைந்தன. மொஸ்கோ, பீட்டர்ஸ்பேக், வொல்கா என்பன கைத்தொழில் நகரங்களாகின. 3000 தொழிற்சாலைகள் தொழிற்பட்டன. இவற்றில் 8 இலட்சம் மக்கள் தொழிலாளராக வேலை செய்தனர்.



**லெனின்**

(ஈ) தேசிய வருமானத்தில் 46 சதவீதம் இராணுவத்துக்கும் 32 சதவீதம் அரச ஊழியர்களுக்கும் செலவாகின. சுமூகத்தில் பிரபுக்கள் வர்க்கம், மத்தியவர்க்கம், தொழிலாளர் வர்க்கம் என பிரிவுகளாகக் தெளிவாகக் காணப்பட்டன. 97 சதவீதமக்களுக்கு எதுவத உரிமைகளும் கிடைக்கவில்லை.

(உ) இந்நிலைமையில் ரோல்ஸ்ரோய், துர்க்கனேவ் போன்ற எழுத்தாளர்கள் நில அடிமை முறையை எதிர்த்துக் குரல் தந்தனர். அதனால் அலெக்சாண்டர் மன்னன் அடிமைகளுக்கு விடுதலை தரநேர்ந்தது. வறுமை, பட்டினி, சுரண்டல்கள், அடக்கு முறைகள், அராஜகம் என்பன காரணமாக புரட்சி வெடித்தது. புரட்சிகரக்கருத்துக்கள் கொண்ட 150000 பேர் சிறையிலடைக்கப்பட்டனர்.

(ஊ) செம்படை என்ற பெயரில் இரகசிய இயக்கம் ஒன்று தோன்றியது. 2ம் அலெக்சாண்டர் மன்னனை இவர்கள் கொலை செய்தனர். அதன் பின்னர் ஆட்சியிலேறிய 3ம் அலெக்சாண்டர் கொடுங்கோலனாக விளங்கினான். மனித

உரிமைகள் மறுக்கப்பட்டன. கடும்போராட்டம் வெடித்தது. பிளக்கனோவ், லெனின், ட்ரொஸ்கி என்போர் புரட்சிக்குத் தலைமை தாங்கினர்.

(எ) 1904 இல் சார் மன்னனுக்கு எதிராக மக்கள் அணி திரண்டனர். மன்னனின் குதிரைப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஆயிரக்கணக்கானோர் மரணமடைந்தனர். பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைக் கொண்டுவரும் பொருட்டு லெனின் போல்ஷ்விக் என்ற கட்சியை தாபித்தார்.

(ஏ) 1913 இல் 12 இலட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். முதலாம் உலகப்போரும் தொடங்கியது. ரஷ்யாவில் பஞ்சம் தலைவிரித்தாடியது. இராணுவமும் இப்பஞ்சத்தால் பாதிப்படைந்து. 1917 இல் புரட்சி நடந்தது. மக்கள், இராணுவம் அனைத்தும் இப்புரட்சியில் ஈடுபட்டனர். சார் மன்னின் ஆட்சிவீழ்ந்தது. புரட்சிகர அரசு உருவாக்கப்பட்டது. சோவியத் ஒன்றியம் தோன்றியது.

**பயிற்சிகள்:**

1. உலகின் சமூக,பொருளாதார,அரசியல் மாற்றங்களுக்கு வழி வகுத்த புரட்சிகள் எவை:
   (1) பிரான்சியப் புரட்சி (2) இத்தாலிய இயக்கம்
   (3) ஜேர்மனியப் புரட்சி (4) ரஷ்யப்புரட்சி
   (5) இவை அனைத்தும்
2. பொதுவாக இந்த நாடுகளில் புரட்சி தோன்றுவதற்கு மூலகாரணம்:
   (1) மன்னனதும் பிரபுக்களினதும் அதிகார உச்சம்
   (2) விவசாயிகளும் தொழிலாளர்களும் அடிமைகளாக இருந்தமை
   (3) வறுமையும் பஞ்சமும்
   (4) இவை அனைத்தும்
3. A நிரலையும் B நிரலையும் பொருத்தமாக இணைக்குக.

| A நிரல் | B நிரல் |
|---|---|
| (1) மொன்டெஸ்கியு | (அ) பிரான்சியப்பாராளுமன்றம் |
| (2) வோல்ரயர் | (ஆ) பிரான்ஸ் நாட்டவர் |
| (3) ரூசோ | (இ) பிரான்சியச்சிறைச்சாலை |
| (4) ஸ்ரேற்ஜெனரல் | (ஈ) மனித உரிமைகளைக் கூறியவர் |
| (5) பஸ்சில் | (உ) ரஷ்யப் புரட்சியாளன் |
| (6) ஜோசெப் மாஜினி | (உ) ஜேர்மனியப்பாராளுமன்றம் |
| (7) கரிபால்டி | (ஊ) ஜேர்மனியை ஐக்கியப்படுத்தியவன் |
| (8) பிராங்பேர்ட் | (எ) இத்தாலியைஒற்றுமைப்படுத்தியவன் |
| (9) பிஸ்மார்க் | (ஏ) இத்தாலியப்புரடசியாளன் |
| (10) லெனின் | (ஒ) தத்துவஞானி |

1. பிரான்சியப் புரட்சி தோன்றுவதற்கு வழிகோலிய பின்னணியை விபரிக்க.
2. பிரான்சியப் புரட்சியின்விளைவுகள் எவை?
3. ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தில் பிஸ்மார்க்கின் பங்கினை விளக்கக.
4. இத்தாலியை ஐக்கயப்படுத்தும் போராட்டத்தில் மாஜினி, கரிபதல்டி அகியொரின் பங்குகள் யாவை?
5. சார் ஆட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் எவை?
6. சிறுகுறிப்பு எழுதுக. லெனின், பிஸ்மார்க், கரிபால்டி,

(விடைகள் : 1 (5), 2 (4), 3 (1) ஆ, 4 (அ), 5 (இ), 6 (ஏ), 7 (எ), 8 (உ), 9 (ஊ), 10 (உ). )

# தரம் 6, 7, 8, 9, 10க்குரிய
# புதிய பாடத்திட்ட நூல்கள்

* புவியியல் – தரம் 6
* புவியியல் – தரம் 7
* புவியியல் – தரம் 8
* புவியியல் – தரம் 9
* புவியியல் – தரம் 10

ஆசிரியர் – பிரியா பாலேந்திரன்

* வரலாறு – தரம் 6
* வரலாறு – தரம் 7
* வரலாறு – தரம் 8
* வரலாறு – தரம் 9
* வரலாறு – தரம் 10
* குடியியல் – தரம் 7

ஆசிரியர் – கமலா குணராசா

அனைத்து நூல்களின் மீள்பார்வை

**கலாநிதி க. குணராசா**

**கமலம் பதிப்பகம்**
75 / 10A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195